தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

நவம்பர் 2005



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தமிழீழத் தேசியக்கொடி: புலிக்கொடி



தமிழீழத் தேசியப்பூ: கார்த்திகைப்பூ



தமிழீழத் தேசியமரம்: வாகைமரம்



தமிழீழத் தேசியப்பறவை: செண்பகம்



தமிழீழத் தேசியவிலங்கு: சிறுத்தைப்புலி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உள்ளே...

# எரிமலை




## இலங்கைத்தீவின் எதிர்மறைச் சமாதானம்




நேர்காணல்: பற்றிமாகரன்




களத்தில் வீழ்ந்த கவிதைகள்

### கட்டுரைகள்


| | |
|---|---|
| நாதன் | 04 |
| பே.சுகந்தன் | 16 |
| நாகேஸ் | 23 |
| மு.பொன்னம்பலம் | 40 |
| தாவித் | 45, 60 |
| தூயவன் | 48 |
| ச.வி.கிருபாகரன் | 54 |
| அருள் | 62 |
| க.வாசுதேவன் | 68 |
| தா.பாலகணேசன் | 72 |


### நேர்காணல்


| | |
|---|---|
| யோ.பற்றிமாகரன் | 08 |


### உரையாடல்


| | |
|---|---|
| துளசிச்செல்வன் - சுபாஸ் | 28 |
| கீதன் - சுபாஸ் | 65 |


### சிறுகதை


| | |
|---|---|
| வேணி - கிருபாகரன் | 42 |
| ந.கிருஷ்ணசிங்கம் | 56 |
| நந்தினி சேவியர் | 74 |




### பாடல்கள்


| | |
|---|---|
| சி.அமுதன்(சூட்டி) | 13 |
| கி.இதயராஜ் | 13,18 |
| ஆரணி | 19 |
| சுடர் | 19 |


### கவிதைகள்


| | |
|---|---|
| மா.கி.கிறிஸ்ரியன் | 14 |
| பூங்குழலி வீரன் | 15 |
| ம.சாண்டில்யன் | 22 |
| எ.ஜோய் | 22 |


### உண்மைப்பதிவு


| | |
|---|---|
| மணலாறு விஜயன் | 65 |


### தொகுப்பு


| | |
|---|---|
| பதிவுகள் | 78 |


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






அன்றைய தமிழர் இராச்சியம் வீழ்ச்சியடைந்து, பல நூறு ஆண்டுகள் அந்நியருக்கும், அயலவருக்கும், அடிமைப்பட்டு வாழ்ந்த தமிழீழ தேசம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. இன்று எமது தாயகத்தின் பெருநிலப் பரப்பில் எமது தன்னாட்சி நடைபெறுகிறது. ஒரு நீண்ட, துயரமான, கொடூரமான வரலாற்று இடைவெளியின் பின்பு, மீண்டும் தமிழினத்தின் வீர எழுச்சிச் சின்னமாக, தமிழர் மண்ணிற் புலிக்கொடி பட்டொளிவீசிப் பறக்கிறது. இந்த மாபெரும் வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமிதத்துடன் இன்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லாதவாறு இன்று உலகமயமாகியுள்ளது. பல தசாப்தங்களாகப் பாராமுகம் காட்டி வந்த உலகம் இன்று தனது முழுக் கவனத்தையும் எமது போராட்டத்தின் மீது திருப்பியுள்ளது. ஒரு பலம் வாய்ந்த விடுதலைப் போராட்ட சக்தியாக இன்று உலகரங்கில் நாம் முன்னணி வகித்து நிற்கின்றோம். தர்மத்தின் வழி தழுவி, ஒரு சத்திய இலட்சியத்திற்காகச் செய்யப்படும் தியாகங்கள் என்றுமே வீண் போவதில்லை. எமது தேசத்தின் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை ஒப்பற்றது. உலக விடுதலை வரலாற்றில் நிகரற்றது. இந்த அளப்பரிய ஈகத்தின் ஆன்மீக சக்தி இன்று உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிவிட்டிருக்கிறது. எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சாதி, மதம், வர்க்கம் என்ற வேறுபாடுகளுக்கப்பால், ஒரு விடுதலை இயக்கத்தின் கீழ், ஒரு விடுதலை இலட்சியத்தின் கீழ், ஒன்றுபட்ட சமூகமாக எமது மக்கள் இன்று அணிதிரண்டு நிற்கிறார்கள். வீரம் செறிந்த எமது விடுதலைப் போராட்டமும் அந்த விடுதலைப் போராட்டத்தில் எமது போராளிகள் ஈட்டிய அபாரமான சாதனைகளும் அவர்கள் புரிந்த அற்புதமான தியாகங்களுமே எமது மக்களை எழுச்சியூட்டி, உணர்வூட்டி ஒரே அணியில், ஒரே இனமாக, ஒரே தேசமாக ஒன்றுதிரள வைத்திருக்கின்றன. எமது மாவீரர்களின் மகத்தான தியாகங்களும் அர்ப்பணிப்புகளுமே எமது தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு ஆதாரசக்தியாக விளங்குகின்றன.

............ தமிழீழத் தேசியத் தலைவர்

மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்

2003 ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர்நாள் உரையிலிருந்து...


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






கலை
பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

இருபத்திநான்காம் ஆண்டு
நவம்பர்
2005

திருவள்ளுவர் ஆண்டு 2036

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
பிரான்ஸ்

# மாவீரர் நாள் 2005

மாவீரர் என்றால் யாரென்று ஒவ்வொரு ஈழத்தமிழ் ஆண், பெண், சிறுவர், சிறுமிக்கும் தெரிந்த விடயம். தேசவிடுதலைக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள். இவர்கள் வீரத்தின் இலக்கணமாக திகழ்கின்றனர். எதிரியை அழித்தவர்கள், அஞ்சாது எதிரியின் பாசறைமேல் படைஎடுத்து வெற்றி கண்டவர்கள். உலகவரலாற்றில் எமது மாவீரர்களுக்கு நிகரானவர்கள். வேறு யாருமில்லை. ஆணும் பெண்ணுமாகப் பால் வேறுபாடின்றிப் போரிட்டுச் சாதனை படைத்த மாவீரர்களைத் தமிழீழம் தவிர்ந்த பிறநாட்டில் காண்பது அரிது. கொடியது அகல, விடுதலை கிடைத்திட உடலை உரமிட்டு செங் குருதியால் வரலாறு படைத்த மாவீரர்கள் வணக்கத்துக்குரியவர்கள்.

தமிழீழ மண்ணெங்கும் நினைவுச்சின்னங்களாய், சிலைகளாய், துயிலு மில்லமாக மாவீரர்கள் குடிகொண்டுள்ளனர். அவர்கள் ஈழமண்ணின் விதை யாகவும், ஒளிமயமான சுடர்ஒளியாகவும், எம் இனத்தின் பாதுகாப்பு அரணா கவும் இடம் பெறுகின்றனர். எமது தேசமெங்கும் சர்வவியாபியாகி மாவீரர் நிற் கின்றனர். புலம்பெயர் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமான மாவீரர்கள் வானளாவிக் கால, நேர, இடம், தூர எல்லைகளைக் கடந்து எமது உணர் வோடும் கனவோடும் கலந்துவிட்டனர்.

மாவீரர்நாள் தமிழீழத்தின் தேசியநாள்ளென்பதை யாவரும் அறிவர். அன்று நாம் துயிலும்மில்லம் சென்று மாவீரர் கல்லறைகளுக்கு விளக்கேற்று கிறோம். மனித உடல் கிடக்கும் கல்லறை தெய்வத்தின் இருப்பிடமாகப் பண்டுதொட்டு நம்பப்படுகிறது. பெரும்பாலான வணக்கத்தலங்கள் கல்லறை களாகவே ஆரம்பித்தன. நாளடைவில் அவை கோயில்களாக மாறிவிட்டன. மக்கள் காட்டும் மதிப்பும், மரியாதையும் அவர்கள் கல்லறையில் உறைவோர் மீது இயல்பாக கொண்டுள்ள பாசமும், பரிவும் கோயிலாக கல்லறைகள் மாறுவதற்குக் காரணமாகின்றன.

இப்போது மாவீரர் நாளானது மாவீரர் எழுச்சிநாளாகத் தமிழீழத்திலும், ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் மிகவும் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்படுகின்றது. இன்று தமிழீழத்தின் வட, கிழக்கு மண்பரப்பில் இரு பத்தைந்து மாவீரர் துயிலுமில்லங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 12,635 கல்லறைகளும் 7,365 நினைவுகற்களும் காணப்படுகின்றன. கூட்டுத்தொகை 20,000. இது எப்படியென்றால் வித்துடல் ஒரு இடத்திலும் அதே வித்துடலுக்குரிய நினைவுக்கல் இன்னோர் இடத்திலும் இருப்பதால்தான். உதாரணத்திற்கு தென்தமிழீழ மாவீரருடைய வித்துடல் கோப்பாய் துயிலுமில்லத்திலும், அவரு டைய நினைவுக்கல் அவர் பிறந்த மண் தரவை மட்டக்கிளப்பிலும் இருக்கும். இதன் காரணமாக கூட்டெண் 20,000 ஆக உயாந்துள்ளது. மட்டக்களப்பு மாவீரர் பலருடைய வித்துடல்கள் விசுவமடு, கோப்பாய் போன்ற துயிலு மில்லங்களில் விதைக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய நினைவுக்கற்கள் தென் தமிழீழத்தின் மாவீரர் துயிலுமில்லங்களில் நாட்டப்பட்டுள்ளன. பெரும்பாலும் மாவீரர் குடும்பத்தினரின் விருப்பப்படியே இப்படிச் செய்யப்படுகிறது. இரு துயிலுமில்லங்களிலும் அவர்களுக்கான தீபங்கள் ஏற்றப்படுகின்றன.

மாவீரர் நாட் பாடலின் நான்கு வரிகளை இங்கு தருகின்றோம்.

"உயிர்விடும்போது வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் — அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்"

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இலங்கைத்தீவின் எதிர்மறைச் சமாதானம்

"புலிகள் மீது அழுத்தம் போடும் எதிர்மறைச் சமாதான உத்திகளை நிறுத்தி சாதகமான சமாதான முன்னெடுப்புக் கான நேர்மையை வெளிக்காட்டுமாறு புலத்தமிழர்கள் சர்வ தேசத்தினைக் கேட்கும் காலகட்டம் உருவாகியுள்ளது"

முரண்பாடு களைவு மற்றும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பான சர்வதேச கற்கைநெறிகளில் சமாதானம் தொடர்பான இருவேறு வடிவங்கள் முன்வைக்கப்படு கின்றன. சாதகமான சமாதானம் (Positive peace) மற்றும் எதிர்மறையான சமாதானம் (negative peace) என அவை வகுக்கப்படு கின்றன. சாதகமான சமாதான முன்னெ டுப்பு முயற்சிகள் தனிப்பட்ட வன்முறை களையும், நிறுவனமயப்பட்ட வன்முறை களையும் (structural violence) நிறுத்தியதாக விபரிக்கப்படுகின்றது. இங்கு நிறுவனம யப்பட்ட வன்முறைகள் என்பதை நிறுவன மயப்படுத்தப்பட்ட தேசிய, வர்க்க அல்லது பால்வேறுபாட்டு ஒடுக்குமுறை எனப் புரிந்து கொள்ளலாம். எதிர்மறையான சமாதான நடவடிக்கைகளானது தனிப்பட்ட வன் முறைகளை மட்டும் நிறுத்தியதாக இருக் கும். இங்கு தனிப்பட்ட வன்முறை என்பதை கொலைகள், போர் என்கின்ற நேரிடையான வன்முறைகளாக வரையறுக்கலாம்.

இந்த இருவகை சமாதான முயற்சி களில் சாதகமான சமாதான முன்னெடுப்பு முற்றுமுழுதாகப் போரையும், ஒடுக்கு முறைக்கான காரணங்களையும் களைந்து புதிய வழிகளைத் திறந்து தீர்வுக்கான திசை யில் நடைபோடும். பின்னையது வெறுமனே போரின் பிரதான அடையாளமான தனிப் பட்ட வன்முறைகளை மட்டும் இடைநிறுத் தும். முன்னையது அடிப்படையில் இரு தரப்பு இணக்க அடிப்படையில் இடம் பெறும். பின்னையதை முன்னெடுப்பதற்கு பல்வேறுவகை உத்திகள் (அழுத்தம் கொடுத்தல் உட்பட) பயன்படுத்தப்படுகின் றது.

* * * * *




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இலங்கைத்தீவின் தேசிய இன முரண்பாடு களைவின் முக்கிய கூறாக இருதரப்புக்கும் இடையே ஏற்பட்ட இராணுவச் சமநிலை திகழ்ந்தது. இராணுவச் சமநிலை காரணமாக மட்டுமே சிறீலங்கா அரசு தமிழர்களுடனான போரை நிறுத்த முனைந்தது. அதற்கான வலுவானதொரு போர்நிறுத்த உடன்பாடு செயற்பட்டது.

இந்த இருதரப்பு சமநிலை ஊடாக சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் ஆரம்பமாகியது. ஆறு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன. ஆனால் இந்தப் போர்நிறுத்தத்தின் அடுத்த கட்டமாக, தமிழ் மக்கள் மீது தொடர்ந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட வன்முறைகளை ஒழித்து, மக்களின் இயல்பு வாழ்வினை மீள ஏற்படுத்துவதற்கான இடைக்காலக் கட்டமைப்பினை உருவாக்கும் பேச்சுவார்த்தை முயற்சிகளை முன்னெடுக்க முடியாத இறுக்க நிலைமை ஏற்பட்டது.

சிங்கள அரச அமைப்பின் நிறைவேற்றுத் தலைமையில் போர் நிறுத்த உடன்பாட்டை



எதிர்த்த சந்திரிகா பண்டாரநாயக்க அமர்ந்திருப்பதைக் காரணம் காட்டிய ரணில் தலைமையிலான அரசு பின்னர் வாசிங்டன் மாநாடு, ஒஸ்லோ மாநாடு, டோக்கியோ மாநாடு என்கின்ற தொடர் மாநாடுகளை தனது நலன்களுக்காகப் பாவிக்க முற்பட்டது. சிங்கள நலன்களைப் பாதுகாக்கும் சர்வதேச வலையை ரணில் அரசு ஏற்படுத்த முனைந்தது.

இத்தகைய இறுக்கமான, தேக்கமடைந்த பேரினவாதச் சிந்தனைகள் சாதகமான சமாதானத்தினை நோக்கியதாக இருக்கவில்லை. மாறாக, எதிர்மறை சமாதானத்தினை ஒற்றையாக அமுல்படுத்தும் திசையிலேயே இருந்தன. புலிகளை போர்நிறுத்த உடன்பாட்டில் வைத்துக் கொண்டு ஒடுக்குமுறையின் அனைத்து தாபனவடிவினையும் தொடர்ந்திட சிறீலங்கா முற்பட்டது.

தமிழீழ மக்களின் இயல்பு வாழ்வினிற்கான எதுவித கட்டமைப்புக்களும் உருவாக்கப்படாது இழுத்தடிக்கப்பட்டமை, அவசரகாலசட்டம் மற்றும் பயங்கரவாதச் சட்டம் என்பன இடைநிறுத்தப்பட்ட போதும் ஏற்கனவே அந்தச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் சிறைகளில் வாடியமை, துணைப்படைகள் மற்றும் பிற இராணுவச் செயற்பாடுகள் தொடர்ந்தமை என்பன கடுமையான எதிர்மறை சமாதான சூழலின் வெளிப்பாடாகும்.

இந்தச் சூழலை இணக்க முயற்சிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கான டோக்கியோ இணைத்தலைமை நாடுகள் எனப்படும் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா மற்றும் நோர்வே கணித்த போதும் இலங்கைத்தீவில் அமைதி நிகழ்வது வியூக நலன்சார் தேவையாகிவிட்டதால் சமாதானத்தினை திணிக்கும் முயற்சிகளில் இறங்கியது. இந்த எதிர்மறையான சமாதான முயற்சிகளினுள் இருதரப்பையும் வைத்திருப்பதன் மூலம் 'தீர்வுக்கான' வாய்ப்புக்களை எதிர்காலத்தில் ஏற்படுத்திவிடலாம் என நம்பினார்கள்.

இவ்வாறாக இருதரப்பையும் சமாதானத்தினுள் வைத்திருப்பதற்கான உத்திகள் பலவிதமாக அமைந்துள்ளது. பொருளாதார நெருக்கடிகள் மூலமும், பிறவழி உதவிகள் மூலமாகவும் சிறீலங்கா அரசினை இணைத்தலைமை நாடுகள் சமாதான முயற்சிகளில் வைத்துள்ளது. மறுபுறம், எதிர்மறைச் சமாதான சூழலால் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட விரக்தி மற்றுமொரு போர்ச்சூழலை உருவாக்காது இருப்பதற்குமான வழிவகைகளாகவே புலிகள் மீதான அழுத்தத்தை இணைத்தலைமை நாடுகள் தொடர்ந்து பயன்படுத்துகின்றன. புலிகளின் சர்வதேச பயணங்களுக்கு கொடுக்கப்பட்ட தற்காலிக முட்டுக்கட்டை இந்தவகைப் பட்டதே.

*****

கடந்த செப்.26ல் (தமிழர் விடுதலைப் போர் வரலாற்றின் நாயகர்களில் ஒருவரான மாவீரர் லெப்.கேணல் திலீபன் அவர்களின் நினைவு வணக்க நாளான்று) லங்கா அக்கடமி எனும் சிங்கள நலன்பேண் செய்தித் தளத்தில் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சின் வழிகாட்டலில் இயங்கும் ஊடகவியலாளரான பந்துல ஜெயசேகர என்பவரினால் ஐரோப்பிய யூனியன் தொடர்பிலான ஒரு முக்கிய அறிக்கை செய்தியாக வெளியிடப்பட்டது. பிற எந்த சர்வதேச செய்தித் தாபனங்களும் இச்செய்தியினை அந்த நேரத்தில் வெளியிடவில்லை. தொடர்ச்சியான தேடல்களின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரித்தானிய தலைமையினால் ஐரோப்பிய கவுன்சிலின் சார்பில் புலிகள் இயக்கத்திற்கு எதிராக விடுக்கப்பட்ட கடுமையான விமர்சன அறிக்கை கிடைக்கப்பெற்றது.

பேச்சுவார்த்தைகளிலும், போர்நிறுத்த உடன்பாட்டிலும் தமிழர் தரப்பு தலைமையாகச் செயற்படும் புலிகள் இயக்கத்தினை தடைசெய்வது தொடர்பாக தாங்கள் ஆராய்வதாகவும், தற்காலிகமாகப் புலிகளினை ஐரோப்பிய உறுப்பு நாடுகள் உத்தியோகபூர்வமாக வரவேற்காது எனவும் ஐரோப்பிய ஒன்றியம் அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

தங்களின் ஒருதலைப்பட்சமான முடிவுக்கு காரணங்களாக, இடம்பெறும் கொலைகள் - சிறுவர் விவகாரம் என்பனவற்றை ஐரோப்பிய ஒன்றியம் முன்னிறுத்தியது. இந்த முடிவு புலிகள் இயக்கத் தலைமைக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாது வெறும் அறிக்கை வாயிலாகவே தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிக்கையானது தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளும், ஆச்சரியத்துக்குள்ளும் தள்ளிய அதேவேளை சிங்கள உறுமய, ஜேவிபி உட்பட அனைத்துச் சிங்கள தரப்புக்களையும் புளகாங்கிதம் அடைய வைத்தது. எனினும், சில சிங்கள ஆய்வாளர்கள் இதனை முழு வெற்றியாகக் கருதவில்லை. புலிகள் இயக்கத்தினை முழுமையாக ஐரோப்பாவில் தடை செய்ய வேண்டும் என்பதே சிறீலங்காவின் நிலைப்பாடு எனவும், இந்தப் பயண இடையூறும், தடைபற்றிப் பரிசீலிப்பதும் சிறீலங்காவின் கூர்மைப்படுத்தப்பட்ட வெளிவிவகார நடவடிக்கையொன்றின் வெற்றியை காலதாமதப்படுத்துவதாகவே இவர்கள் கருதினர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சமாதான நோக்கினையும், ஈடுபாட்டையும் உயர்வாக நம்பிய தமிழ் மக்களினால் இது புரிந்து கொள்ள முடியாதவொரு முடிவாகக் கருதப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

> இந்த எதிர்மறைச் சூழல் புலத்தமிழ் சமூகத்தின் முன் மற்றுமொரு பணியினை முன் வைக்கின்றது. ஏனெனில், முன்பு போலல்லாது புலத்தமிழ் மக்கள் வாழும் ஐரோப்பிய, வடஅமெரிக்க மற்றும் அவுஸ்ரேலிய கண்ட நாடுகள் இன்று இலங்கை இனச்சிக்கல் தணிப்பு முயற்சியில் நேரிடையானதொரு பங்குதாரர்களாக மாறிவருகின்றன. இந்த மாற்றமானது பல்வேறு வியூக நோக்கில் அமைந்துள்ளது. இதனால், புலத்தமிழர்கள் இந்த வியூக வகுப்பின் மீது நிறைந்த கொள்கை ரீதியான விவாதங்களையும், தொடர்ச்சியான கேள்விகளையும் எழுப்புதல் வேண்டும். எதிர்மறையான சமாதான முன்னெடுப்பின் தோல்விகளை நாடுகளின் அனைத்து மட்டங்களிலும் எடுத்துச் சொல்வதும், சாதகமான சமாதானத்திற்கு தேவையான கொள்கை வகுப்பினை முன்னெடுக்குமாறு தொடர் செயற்பாடுகள் மூலம் வேண்டுதல் வேண்டும். எதிர்மறை சமாதானத் தேவைகளுக்காகப் தமிழர்களின் தேசிய தலைமையான புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் உத்திகளை இடைநிறுத்துமாறு தொடர்ச்சியாக வாழும் நாடுகளை கேட்டுக் கொள்ளல் வேண்டும்.

பட்டது. சில தமிழ் ஆய்வாளர்களால் இந்த நடவடிக்கையானது தேர்தல் முடியும் வரை புலிகள் மீது அழுத்தத்தை வைத்திருப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என மட்டுமே என்று கருதப்பட்டது. மறுபகுதியினர் இந்த நடவடிக்கையை நேர்மையற்றதொரு நடவடிக்கையாகவும், சமாதான நோக்கினை பலவீனப்படுத்தும் நடவடிக்கையாகவும் கருதினார்கள். ஆனால், சர்வதேச இணக்க முயற்சிகள் தொடர்பான கற்கையில் ஈடுபடுபவர்கள் இலங்கைத்தீவில் முன்னெடுக்கப்படும் எதிர்மறையான சமாதான முயற்சிகளின் வெளிப்பாடு என இதனை விபரிக்கின்றனர்.

* * * * *

ஐரோப்பிய ஒன்றியம் அனைத்துலகரீதியில் நீதியினையும், சமாதானத்தினையும் உருவாக்கும் நோக்கிற்காக உருவாக்கப்பட்ட அறங்காவலர் அமைப்பல்ல. மாறாக, ஐரோப்பிய பிராந்திய நாடுகளின் அரசியல், இராணுவ, இராஜதந்திர மற்றும் பொருளாதார நலன்களை சர்வதேசரீதியாகப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட பிராந்தியக் கூட்டமைப்பாகும். இரண்டாம் உலகப்போரின் பின்னர் தமக்கிடையேயான சச்சரவுகளை களைந்து ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் வலுவான சக்தியாக உலக அமைவில் செயற்படலாம் எனும் நவீன புரிதலின் அடிப்படையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் உருவாகியது.

இந்த ஐரோப்பிய ஒன்றியமானது வலுவான அமெரிக்கா தலைமையிலான ஒற்றைத்துருவ உலக அமைவை விரும்பவில்லை. அது ஐரோப்பாவின் பொருளாதார, அரசியல் மற்றும் இராணுவ நலன்களைப் பாதிக்கும் என்கின்ற அச்சம் ஐரோப்பாவிற்குண்டு. மறுபுறம், வளர்ச்சிகாணும் ஆசியக் கண்ட நாடுகளின் போட்டிகளை எதிர்கொள்ள வேண்டிய தேவையும், ஐரோப்பிய சந்தைகளையும் - நலன்களையும் பாதுகாக்க வேண்டிய தேவையும் ஐரோப்பிய நாடுகளுக்குண்டு. உலகின் இன்றைய மிக முக்கிய வணிகப்பொருளாகிவிட்ட எண்ணெய் வளம் தொடர்பாக உருவாகிவரும் முரண்பாடுகளில் ஐரோப்பாவின் நலன்களை பாதுகாக்க வேண்டிய தேவையுள்ளது. கிழக்கைரோப்பா, ருஷ்யா மற்றும் அரபு நாடுகள் தொடர்பாக பல்வேறுபட்ட முரண்பட்ட நலன்களை எதிர் கொள்ளும் ஐரோப்பிய நாடுகள் கூட்டான செயற்பாடுகள் மூலம் அவற்றை கையாள முற்படுகின்றனர்.

இலங்கை இனமுரண்பாட்டிற்கான ஐரோப்பிய தரப்பின் ஆதரவும், செயற்பாடுகளும் இவ்வாறானதொரு அச்சின் பாற்பட்டே இயங்கும். இங்கு நீதியும், சட்டங்களும் கொண்டதொரு அளவுகோலுடன் தமிழ் - சிங்கள தேசங்களினை நிறுத்துப் பார்க்க அவை முற்படாது. மாறாக, நலன்களுக்கு இடையேயான அளவீடுகளின் பாற்பட்டே சமாதானத்திற்கான ஆதரவும், செயற்பாடுகளும் அமையும்.

மறுபுறம், இலங்கை இனச்சிக்கலில் தவிர்க்க முடியாத வரலாற்றுத் தொடர்பை ஐரோப்பா கொண்டது. ஐரோப்பிய காலனி நாடுகளின் கீழ்த்தான் தமிழ் மக்கள் தங்கள் இறைமையை இழந்து சிங்களத் தலைமையின் கீழ் துன்புறும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக சிங்கள இன அழிப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த பல்லாயிரம் தமிழர்களை ஐரோப்பிய நாடுகள் அகதிகளாக ஏற்றுக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டது. சிங்கள பேரினவாத ஒடுக்குமுறைகளை தமிழர்கள் எடுத்துச் சொல்வதற்கும், தமிழர்களின் விடுதலைப் போரினை வலுப்படுத்துவதற்குமான வாய்ப்புக்களை இந்த ஐரோப்பிய நாடுகளின் தொடர்புகள் ஊடாக தமிழர்கள் பெற்றனர்.

இலங்கை இனச்சிக்கல் முற்றுமுழுதாக இந்தியாவிடம் அகப்பட்டுக் கிடந்த காலங்களில் தூர இருந்து இணக்க முயற்சிகளை ஆதரித்தவர்களாகவும், தங்கள் நலன்சார் அரசியலை முன்னெடுத்தவர்களாகவும் திகழ்ந்த ஐரோப்பிய நாடுகள் தொண்ணூறுகளில் இணக்க முயற்சிகளில் தமக்கான பங்கினை மெல்ல எடுத்துக் கொள்ளத் தொடங்கினார்கள். சந்திரிகாவின் சமாதானப் பொதி, போர் மூலம் சமாதானம் போன்றன வற்றிற்கான ஆதரவு ஐரோப்பிய நாடுகளால் வழங்கப்பட்டது. குறிப்பாக, பிரித்தானியா சந்திரிகாவின் போர் மூலமான சமாதானம் எனும் விசித்திரமான நோக்கினை பகிரங்கமாகவே ஆதரித்தது. பின்னர், சிங்கள தேசத்தின் போர்நடவடிக்கைகள் தோல்வியுற்றதன் பிற்பாடு ஆரம்பமாகிய நோர்வே இணக்க முயற்சிகளுக்கு ஐரோப்பிய நாடுகள் ஆதரவினை வழங்கியது. இந்த இணக்க முயற்சிகளின் நோக்கிற்காக பெரும் நிதி ஒதுக்கீடுகளையும், பிறவள ஒதுக்கீடுகளையும் ஐரோப்பிய நாடுகளின் சார்பில் அதன் கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டது.

டோக்கியோ நிதிஉதவி மாநாட்டின் இணைத்தலைமை நாடாக திகழும் ஐரோப்பிய ஒன்றியம் தமிழர் தரப்பினைப் பொறுத்தவரை பிற இணைத்தலைமை நாடுகளிலும் பார்க்க வெளித்தோற்ற அளவில் முன்னுரிமையையும், நம்பிக்கையையும் பெற்றதாகத் திகழ்ந்தது. எனினும், செப் - 26 அறிக்கை இந்தத் தோற்றத்தின் மீது பாரியதொரு தாக்கத்தினை செலுத்தியுள்ளது.

* * * * *

இலங்கை இனமுரண்பாட்டினை முடிவுக்குக் கொண்டுவந்து நிலையான அரசினை இலங்கைத்தீவில் உருவாக்குவதன் மூலம்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இந்துசமுத்திரத்தின் கேந்திர முக்கயத்துவம் வாய்ந்தவொரு இடத்தில் வலுவான பிடி யொன்று மேற்குலக நலன்களுக்கு வாய்க்கும் எனும் நம்பிக்கை மேற்குலக ஆய்வாளர் களுக்குண்டு. மலேசியா மற்றும் இந்தோ னேசியா எனும் இருபெரிய நாடுகளின் பிடி யில் உள்ள மலாக்கா கால்வாயை சிங்கப்பூ ரின் உதவியுடன் மேற்குலக நலன்களைப் பேணும் விதத்தில் அமெரிக்கா பாதுகாப்பது போன்று இலங்கைத்தீவு மேற்குலக நலனுக் கான நல்லதொரு கேந்திரவளமாகத் திகழும் என்கின்ற கணிப்பினை பல மேற்குலக ஆய் வாளர்கள் முன்வைத்துள்ளனர். இன்று ஏற்பட்ட ஆச்சே இணக்க உடன்பாடும் அங்கு ஐரோப்பிய இராணுவ கண்காணிப்பாளர் களின் பிரசன்னமும் மலாக்கா போக்குவரத் தின் முக்கியத்துவத்துடன் இணைத்தே வாசிக் கப்படுகின்றது.

இதே போன்றதொரு நோக்கினை அடை யவேண்டுமாயின் இலங்கைத்தீவின் இன முரண்பாடு தீக்கப்படல் வேண்டும் எனும் நிபந்தனை அங்குள்ளது. இந்த தேசிய இன முரண்பாடும், போரும் இலங்கைத்தீவு தொடர்பான மேற்குலகின் நீண்டகால வியூக முதலீடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எனும் கணிப்பு ஆய்வாளர்களுக்குள்ளது.

மறுபுறம், இனச்சிக்கல் தணிப்பின் பின் னான இலங்கைத்தீவு மேற்குலக நலன்களை முன்னெடுக்கும் விதத்தில் அமைய வேண் டும் என்கின்ற எல்லையும் நிலவுகின்றது. ஜேவிபி போன்ற கடும்போக்கு அமைப்புக்கள் மற்றும் தேசியவாத தரப்புக்களின் எழுச்சி, சீனா இந்தியா போன்ற நாடுகளின் பிடி என்பன அகற்றப்பட்டதாகவே இலங்கைத் தீவின் எதிர்காலம் அமைய வேண்டும் என மேற்குலகு எதிர்பார்ப்பதாக கருதப்படுகின் றது. அல்காத்த போன்ற அமைப்புக்கள் வேரூன்றுவதற்கு ஏற்பற்றதாக இலங்கைத் தீவின் எதிர்காலம் அமைய வேண்டும் என்கின்ற எதிர்பார்பும் இருந்தது.

இந்த வியூக வகுப்புடனேயே மேற்குலக இணக்க முயற்சிகள் இலங்கைத்தீவின் கரை களை சென்றடைந்தது என்கின்ற குற்றச் சாட்டு இடதுசாரிகள் முகாம்களில் எழுப்பப் படுகின்றது. அதாவது சமாதானம் என்பது இலங்கைத்தீவின் மக்களுக்கு தேவைப்பட்டது போல் பல்வேறு மேற்குலக தரப்புகளுக்கும் தேவைப்பட்டது என அவர்கள் கருதுகின்றனர். நோர்வேயின் அனுசரணையாளர் பாத்திரம், அமெரிக்கா - ஐரோப்பா - யப்பான் என்பவற் றுடன் நோர்வேயினை இணைத்த டோக் கியோ நிதிவழங்கும் நாடுகளின் இணைத் தலைமை கூட்டமைப்பு என நிறுவனமயப் படுத்தப்பட்ட விதத்தில் இலங்கைத்தீவினுள் மேற்குலக சமாதான முயற்சிகள் கரை தொட்டன.

எனவே, தமக்கானதொரு வியூக வகுப் பினைக் கொண்டதாகவே இலங்கைத்தீவின் இணக்க முயற்சிகளுக்கான ஆதரவு சர்வதேச சமூகம் என்கின்ற குறியீட்டுடன் செயற்படும் வலுநிலைச் சக்திகளினால் வழங்கப்படுகின் றது.

எனினும், இலங்கைத்தீவின் அகச்சூழல் வெறும் மேலைத்தேய நலன்களுடன் பொருந் தவில்லை. சிங்கள தமிழ் தேசியங்களுக்கு இடையேயான முரண்பாடு ஆழ - அகன்று கிடப்பதனால் இணக்க முயற்சிகள் எதிர் மறையான சமாதானமாகவே நிகழ்கின்றது.

* * * * *

இந்த எதிர்மறைச் சமாதானம் தமிழ் மக்களின் நலன்களுக்குப் பாதகமானது. ஏனெனில், சிங்கள பேரினவாதம் இதுவரை காலமும் கட்டியெழுப்பிய எதிரான கட்ட மைப்பு வடிவிலான ஒடுக்குமுறையும் வன் முறையும் நீடிக்கும்.

கொடிய போரினால் உடையுண்டு போன வாழ்வாதரங்களை மீளப் பெறுவதற்கான எது வித கட்டமைப்புக்களும் அற்றவர்களாக தமி ழர் வாழும் காலம் நீடிக்கப்படுகின்றது.

இதுவரை அற்புதமான தியாகங்கள் மூலம் பெற்றுக் கொண்ட அந்தஸ்த்தை தக்க வைக்கும் அரசியல் அங்கீகாரம் அற்றவர் களாக தமிழர்கள் வாழ வேண்டும்.

இவ்வாறு தொடர்ந்தும் துன்புறும் தரப் பாக தமிழ் மக்கள் வாழ்வது புலிகளுக்கு ஏற்புடையதல்ல. காலஓட்டத்தில் இந்த நிலை மக்களை மேலும் பாதித்து பெரும் சிக்கலை விடுதலைப் போரிற்கு ஏற்படுத்தும். இந்த எதிர்மறையான சமாதானச் சூழலைப் பயன் படுத்தி சிறீலங்கா தன்னைப் பலப்படுத்தி இராணுவச் சமநிலையை தனக்கு சாதக மாக்க முனைவதையும், இவ்வாறு பலப்பட்ட சிறீலங்கா மீள தமிழர்களின் விடுதலை எழுச்சியினை போரின் மூலம் நசுக்க முற் பட்டால் இந்த எதிர்மறைச் சமாதான ஆதர வாளர்களாகிய டோக்கியோ இணைத் தலைமைகளால் ஒன்றுமே செய்ய முடியாத வொரு சூழல் உள்ளதையும் புலிகள் கணித்தே வந்துள்ளனர். தென்னாசியப் பிராந்தியச் சூழல் அத்தகையதாகவுள்ளது.

இதனால் இந்த எதிர்மறையான சமா தானத்தினை தமிழர்களின் நலன்களினை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புக்களாகப் புலிகள் பாவிக்கின்றனர். தேசிய கட்டமைப்புக் களை உருவாக்கல், தொடர்ச்சியான மக்கள் எழுச்சிச் செயற்பாடுகள் மற்றும் இராணுவக் கட்டமைப்பினை கூர்மைப்படுத்தும் நடவடிக் கைகளைப் புலிகள் முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறு இணக்க முயற்சிகளின் பங்கு தாரர்களாகிய இருதரப்பும் எதிர்மறையான சமாதானத்தினால் துருவமயமாகிவருவது மேற்குலகின் சமாதான முயற்சிகள் தோல்வியுறுவதை எடுத்துக் காட்டுகின்றது. வெறுமனே இருதரப்புக்குமான இராணுவச் சமநிலை அச்சினை பாவித்து போரற்ற சூழலை ஏற்படுத்தி நீடிக்க வைப்பது இணக்க முயற்சிகளிற்கான புறச்சூழலை ஏற்படுத்தும் என்கின்ற கணிப்பு ஆபத்தான கட்டத்தை அடைவதை மேற்குலகு ஏற்க வேண்டிய நெருக்குதலான காலம் உரு வாகியுள்ளது.

மாறாக, மேற்குலகு இரு தேசியங் களினதும் முரண்பாட்டு நிலைகளை கற்ற றிந்து நீதியானதொரு தீர்வுக்கான முன் னெடுப்பினை முன்னெடுத்தால் அது சாதக மான சமாதானச் சூழலை ஏற்படுத்தும். (இவ்வாறான நேர்மையான தீர்வு இரு இறைமை கொண்ட நாடுகளாக இலங் கைத்தீவு பிரியவேண்டிய கட்டாயத்தை ஏற் படுத்தும் என்பதால் அது பிறிதொரு வியூக வடிவமைப்பினை மேற்குலகிற்கு ஏற்படுத் தும்.)

* * * * *

இந்த எதிர்மறைச் சூழல் புலத்தமிழ் சமூகத்தின் முன் மற்றுமொரு பணியினை முன்வைக்கின்றது. ஏனெனில், முன்பு போலல்லாது புலத்தமிழ் மக்கள் வாழும் ஐரோப்பிய, வடஅமெரிக்க மற்றும் அவுஸ் ரேலிய கண்ட நாடுகள் இன்று இலங்கை இனச்சிக்கல் தணிப்பு முயற்சியில் நேரிடை யானதொரு பங்குதாரர்களாக மாறி வரு கின்றன. இந்த மாற்றமானது பல்வேறு வியூக நோக்கில் அமைந்துள்ளது. இத னால், புலத்தமிழர்கள் இந்த வியூக வகுப் பின் மீது நிறைந்த கொள்கை ரீதியான விவாதங்களையும், தொடர்ச்சியான கேள்வி களையும் எழுப்புதல் வேண்டும். எதிர் மறையான சமாதான முன்னெடுப்பின் தோல்விகளை நாடுகளின் அனைத்து மட் டங்களிலும் எடுத்துச் சொல்வதும், சாதக மான சமாதானத்திற்கு தேவையான கொள்கை வகுப்பினை முன்னெடுக்குமாறு தொடர் செயற்பாடுகள் மூலம் வேண்டுதல் வேண்டும். எதிர்மறை சமாதானத் தேவை களுக்காகப் தமிழர்களின் தேசிய தலைமை யான புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் உத்திகளை இடைநிறுத்துமாறு தொடர்ச்சி யாக வாழும் நாடுகளை கேட்டுக் கொள்ளல் வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் செப்.26 அறிக்கை தொடர்பிலான நேரிடையானதும், சிவில் சமூக தளத்திலுமான அரசியல் வேண்டுகையும், தொடர்ப்பாடலும் தமிழர் களின் சர்வதேச உறவுகளின் மற்றுமொரு புதிய தளத்தினை விரியவைக்கின்றது!.

■ நாதன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# தடைகள் படிக்கற்கள் ஆகுகின்றன

# "எழுக தமிழ்"






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஒளிப்படம்: ரகுபதி - சுவிஸ்

**பெல்ஜியத்தில் ஐரோப்பிய பாராளுமன்ற சதுக்கத்திலே 24.10.2005 அன்று எழுச்சி கொண்ட 'எழுக தமிழ்' நிகழ்வு குறித்து அரசியல் ஆய்வாளர் திரு.யோ.பற்றிமாகரனிடம் களத்திலே பெறப்பட்ட நேர்காணல்**



திரு.யோ.பற்றிமாகரன்

**இந்த நிகழ்வினுடைய அரசியல் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட முடியுமா?**

ஐரோப்பிய பாராளுமன்ற வரலாற்றிலே, இது வரை இந்த சதுக்கத்திலே இடம் பெறாத அளவு அதிகளவில் மக்கள் பங்குகொண்டிருக்கிறார்கள். அதன் மூலமாக தங்களுடைய உணர்ச்சியை தாயகத்தின் மீது தங்களுக்குள்ள பற்றை, தலைவரின் மேல் தங்களுக்குள்ள அன்பை, அந்த பற்றும் அன்பும் சர்வதேச சமுதாயத்தால் சரியான முறையில் எடுத்து நோக்கப்படவில்லை என்கின்ற அந்த கொதிப்பைக் காணக்கூடியதாக இருக்கிறது. மக்கள் திரண்டெழுந்தது மட்டுமல்லாமல் அவர்களுடைய மூச்சாக பேச்சாக பிரபாகரன் என்ற கோஷமும் 'தமிழீழம் எங்கள் தாகம்' என்ற அந்தப் பேச்சும் காற்றிலேயே தொடர்ச்சியாக மூன்று மணித்தியாலங்களுக்கும் மேலாக எழுந்துகொண்டிருப்பதைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. இப்படியானதொரு வரலாற்று நிகழ்வு இந்த ஐரோப்பிய பாராளுமன்றத்தினுடைய வரலாற்றில் - இங்கு பல புரட்சிகளைக் கண்ட இந்த பாராளுமன்ற வரலாற்றில் இடம்பெற்றிருக்கக்கூடுமோ என்று ஐயப்படும்

www.tamileelamarchive.com

அளவிற்கு மிகவும் உணர்ச்சிகரமானதாக இருக்கின்றது. அதே நேரத்திலே கொட்டும் மழை, சிறு குழந்தைகள், வயதானவர்கள் மற்றும் உடல் வலு குறைந்தவர்கள் கூட இங்கே திரண்டிருப்பது - மன உறுதி தங்கள் தேசத் தலைவன் எந்த மன உறுதியை அவருடைய பேச்சாக செயலாக மூச்சாக மாற்றி அமைத்திருக்கின்றானோ அந்த மன உறுதியை வெளிப்படுத்தி இந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான பிழையான தடையை உடனடியாக நீக்கும் படி மக்கள் குமுறிக்கொண்டிருக்கிறார்கள். இதை ஐரோப்பிய ஒன்றியம் புரிந்துகொள்ளும் அதே வேளையிலே சிறீலங்கா அரசாங்கம் இவ்விதமான உண்மைக்கு மாறான பரப்புரைகளைச் செய்து இனிமேலும் சர்வதேச சமூகத்தை ஏமாற்ற புலம் பெயர்ந்த தமிழீழ மக்கள் விட மாட்டார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இங்கு திரண்டிருக்கிற மக்களில் அனைவரிலும் இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்குள் தாங்கள் சுதந்திரமான தமிழீழத் தாயகத்திலே வாழ்ந்தே தீருவோம் வாழ்ந்தே காட்டுவோம் அதை சர்வதேச உலகம் அங்கீகரித்தே ஆகவேண்டும் என்கிற உறுதியைக் காணக்கூடியதாக இருக்கிறது.

**இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வானது தூக்கத்தைக் கலைத்து ஒரு சமாதானத்தையும் நீதியையும் நோக்கி நகர்வதற்கான ஒரு கதவை அல்லது ஒரு பாதையைத் திறக்குமென நீங்கள் நம்புகிறீர்களா?**

மக்களுடைய விருப்பு என்பது இந்த ஜனநாயகத்திற்கு மதிப்புக்கொடுத்துப் பேசுகின்ற இந்த சர்வதேச உலகத்தினுடைய ஒரு முக்கியமான எடுகோளாக இருக்கின்றது. அந்த வகையிலே தமிழீழ மக்கள் உலக மக்கள், சர்வதேச குடி மக்கள் என்றவகையிலே அவர்கள் தங்களுடைய வெளியக சுயநிர்ணய உரிமையை பயன்படுத்தி எழுப்புகின்ற இந்தக் குரலை அவர்கள் மதித்தேயாகவேண்டும். அப்படி அவர்கள் மதிக்கத் தவறினால் தமிழீழ மக்கள் தங்களுடைய பலத்தைக் கொண்டு, தங்களுடைய தேசிய பலத்தை வெளிபடுத்தி, தங்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தி தங்களுடைய மண்ணை மீட்கின்ற அந்தப் பயணத்தை தொடர்கின்ற பொழுது அதனுடைய விளைவுகளை சிறீலங்கா அரசாங்கமும் சர்வதேச உலகமும் கண்டு கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதை இந்த மக்கள் எழுச்சி நிகழ்வு தெளிவாக காட்டி இருக்கின்றது. ஆகவே தமிழீழத் தாயகம் என்பது தற்பொழுது நடை முறை அரசாக அங்கே செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. எங்களுடைய தாயகம் வரலாற்று காலம் முதல் எங்களுடைய பூமியாக இருக்கின்றது இதை யாரும் எங்களிடமிருந்து பிரிக்கவும் முடியாது, பறிக்கவும் அனுமதிக்க மாட்டார்கள். அங்கே நடைபெறுகின்ற அரசியல் நடவடிக்கைகளுக்கு எங்கிருந்தும் ஆணையிட்டுத் தடுக்கிற முயற்சிகளை எடுக்கவும் ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள் என்பதில் தெளிவாக இருக்கிறது. அதுவே நீங்கள் கேட்பது போல இது சர்வதேச உலகத்தினுடைய கண்ணைத் திறக்கும் ஜனநாயக வழியிலே பொது சித்தத்துக்கு மதிப்பளித்து அவர்கள் தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளவேண்டும் இந்த சர்வதேச அங்கீகாரத்தை வழங்கவேண்டும் அப்படி இல்லை என்று சொன்னால் தமிழ் மக்கள் தங்களுடைய தாயகத்தை நிறுவிக்கொள்வதை உலகத்திலே இருக்கிற எந்த சக்திகளாலுமே தடுக்கமுடியாது. அந்தத் தமிழ் மக்களுடைய சக்தியினுடைய மையமாக தமிழீழத்தேசியத் தலைவர் விளங்கிக்கொண்டிருக்கிறார் என்பது உலகறிந்த உண்மை.

**ஏற்கனவே அமெரிக்கா தடை விதித்திருக்கிறது, அவுஸ்ரேலியா தடை விதித்திருக்கிறது,பிரிட்டிஷ் தடை விதித்திருக்கிறது இந்த ஐரோப்பிய தடையானது முக்கியத்துவம் பெற்றதாகவும் மக்கள் எழுச்சி கொண்டு தங்களுடைய கருத்தைத் தெரிவிக்கிற அளவிற்கு இங்கு ஒன்று கூடி நிற்பதின் காரணம் என்ன?**

இந்த சமாதான பேச்சு வார்த்தை என்பது தமிழீழ மக்கள் சிறீலங்கா அரசாங்கத்தின் மேல் நம்பிக்கை கொண்டு தொடங்கிய பேச்சுவார்த்தை அல்ல. சர்வதேசம் ஏற்றுக்கொண்டதற்கு அமைய சர்வதேச குரலுக்கு மதிப்பளித்து, இந்த ஐரோப்பிய ஒன்றியத்துக்கு மதிப்பளித்து, இந்த ஐக்கிய நாடு சபைக்கு மதிப்பளித்து, சர்வதேச நியதிகளுக்கு ஏற்ற முறையில் தங்களுடைய சுயநிர்ணய உரிமையை சர்வதேச உலகு ஏற்றுக்கொள்ள வேண்டும் அதன் வழி தங்களுடைய சமாதானத் தீர்வைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்கிற உறுதியினுடைய அடிப்படையில் பேச்சுவார்த்தையில் இறங்கினார்கள். ஆனால் கடந்த மூன்றரை ஆண்டு காலமாக இந்தப் பேச்சுவார்த்தையை சர்வதேச உலகு தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்கான வழிமுறைகளை ஊக்குவிக்கின்ற வழியிலே இட்டுச் செல்லாது சிறீலங்கா அரசாங்கம் என்கிற காலனித்துவம் உருவாக்கிய சட்ட அரசாங்கத்தை பின்னர் 1972ஆம் ஆண்டு அரசு அமைப்பின் மூலம் தங்களுக்குத் தாங்களே சிங்கள பௌத்த பெரும்பான்மை இனம் உருவாக்கிக்கொண்ட அரசாங்கத்தையும் திருப்திப் படுத்தக் கூடிய முறையில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதனால் மக்கள் தற்பொழுது எந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் மேல் நம்பிக்கை வைத்தார்களோ அந்த ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தங்களுடைய கொதிப்பையும் ஆவேசத்தையும் உணர்ச்சியையும் வெளிக்காட்டிக்கொண்டுவருகிறார்கள். இது எப்படி பிரான்சிலே புரட்சி வெடித்த பொழுது மக்கள் எழுச்சி தோன்றியதோ அத்தகைய ஒரு உணர்ச்சி என்பதை சர்வதேச உலகு இந்த நேரத்திலே கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக இதை ஐரோப்பிய ஒன்றியம் கவனத்தில் கொள்வதன் மூலம் தான் சமாதானத்தின் வழியில் தமிழ் மக்களினுடைய சுயநிர்ணய உரிமையை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கான பாதையை அவர்கள் ஏற்படுத்த முடியும். இல்லையென்றால் தமிழ் மக்கள் தங்களுடைய தாயகத்திலே தங்களுடைய தேசியத்தை தங்களுடைய தன்னாட்சியை நிலை நிறுத்தியே தீர்வார்கள் என்பதுதான் உறுதியாக இருக்கின்றது.

மக்கள் புரட்சியின் அந்த எழுச்சியினுடைய சின்னமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தத் தேசியத் தலைவருக்கும் இந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் ஊறு விளைவிப்போர்கள் யாராக இருந்தாலும் அதனை சரியான முறையில் நோக்காதவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக தமிழ் மக்கள் திரண்டு எழுந்து தங்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்தியே தீர்வார்கள் என்பதேயே எடுத்துக்காட்டுகின்றது.

**புலம் பெயர்ந்த மக்கள் தாங்கள் வாழுகின்ற நாடுகளில் தாங்கள் ஏன் அகதிகளானார்கள் என்ற விடயங்களையும் தங்கள் அரசியல் பிரச்சனைகளையும் வரலாறுகளையும் எடுத்துக் கூறத் தவறியிருக்கிறார்கள் என நீங்கள் உணர்கிறீர்களா?**

இது ஒரு வகையிலே புலம் பெயர்ந்த மக்கள் இந்த நாட்டினுடைய மொழியையும் இந்த நாட்டினுடைய அரசியல் கலாச்சாரத்தையும் தெரிந்து கொள்வதற்கு எடுத்த நீண்ட காலம் என்றுதான் கூறவேண்டும். புலம் பெயர்ந்த மக்களினுடைய மனதிலே அவர்கள் புலம் பெயர்ந்த நாள் முதலே தங்களுடைய தாயகம் மீட்கப் படவேண்டும் தங்களுக்கு இழைக்கப்பட்ட அரச பயங்கரவாதம் உலகுக்கு உணர்த்தப்படவேண்டும் என்று துடிப்பாக இருந்தார்கள்.
ஆனால் அதற்கான வளர்ச்சி அதற்கான மக்கள் ஒருங்கிணைப்பு என்பன வளர்ச்சி பெற தேவையிருந்தது. அதைக்கூட தேசியத் தலைவர் அவர்கள் மிக திறமையான முறையிலே ராஜதந்திர


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




முறையிலே நெறிப்படுத்தி வழிப்படுத்தி அந்தந்த நாட்டினுடைய சட்டத் திட்டங்களை மீறாத வகையில் அதே அளவிலே தமிழ் மக்கள் தங்களுடைய உணர்ச்சியை தங்களுடைய உணர்வை உலகுக்கு வெளிப்படுத்தி வருவதற்கான ஒரு களத்தை இப்பொழுது ஏற்படுத்தியிருக்கின்றார். ராஜதந்திரப் போர்க்களத்திலே எவ்விதமாக களத்திலே போராளிகள் நின்று மக்களைப் பாதுகாத்து இந்தத் தாயகத்தினுடைய மீட்பை முன்னெடுத்துச் செல்கின்றார்களோ சென்றார்களோ அதே போல இந்த புலம் பெயர் மக்களும் இந்த ராஜதந்திர களத்திலே ஒவ்வொருவர் மனதிலும் தாங்கள் ஈடுபட்டு தங்களுடைய அடையாளத்தை தங்களுடைய தாயகத்தினுடைய தனித்துவத்தை தங்களுடைய தேசியத்தின் வலிமையை தலைவனின் பெருமையை உலகுக்கு உணர்த்தவேண்டும் என்கிற அந்த வீறு இப்பொழுது ஒரு இரத்தத்தத் துடிப்பாக எழுந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

**ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்து அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த மக்களின் இன்னும் ஒரு இரண்டாவது தலைமுறையையும் இந்த ஐரோப்பிய நாடுகள் சந்தித்திருக்கிறது. இந்த நிலையில் இந்த மக்கள் குறித்தான கருதுகோள் எவ்வாறு இருந்திருக்கிறது என இந்தப் பயணத்தடை எங்களுக்கு வெளிகாட்டுகிறது?**

தற்போது நீங்கள் பார்த்தீர்களானால் இந்த ‘எழுக தமிழ்’ மேடையிலே உணர்ச்சிகொண்டு எழுந்திருப்பது புலம் பெயர் இளையோர் சமூதாயம். அங்கே அவர்களுடைய அந்த எழுச்சி ஓசையாக, பாட்டாக, ஆடலாக முழங்கிக்கொண்டிருப்பதைக் காண்கின்றோம். அந்த முழக்கத்திலே பக்க வாத்தியங்களாக இசைக்கின்ற வாத்தியங்கள் கூட சிலவேளை செயலிழந்து போகும் அளவிற்கு மக்களினுடைய அந்த கோஷம் தமிழர்களுடைய அந்த உற்சாகம் கரங்களினூடாகக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த இளைய சமுதாயம் தற்பொழுது அரசியல் விழிப்புணர்ச்சி பெற்று எழுந்திருக்கிறது. தங்களுடைய தாய் தந்தையர்கள் எவ்விதமாக அரச பயங்கரவாதத்தால் ஒடுக்கப்பட்டார்கள் என்பதை உணர்த்தியிருக்கின்றது. இந்த இளைய சமுதாயம் இங்கே நிலைகொண்ட ஒரு சமுதாயமாக இருந்தாலும் அங்கே இருக்கின்ற சொந்தங்களுக்கு தங்களுடைய உடன் பிறப்புகளுக்கு தங்களுடைய உற்றார் உறவினர் நண்பர்கள் அயலவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்கிற கொதிப்பு, ஒரு துடிப்பு எழுந்திருக்கிறது. அதே வேளையிலே இளைய சமுதாயம் இங்கே இருக்கின்ற சட்ட திட்டங்களுக்கு அமைய மிகவும் கட்டுப்பாடான முறையிலே செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது இங்கே இருக்கின்ற ஐரோப்பிய அரசாங்கங்களுக்கும் தெரியும். இந்த நிகழ்ச்சியின் போது கூட கொட்டும் மழையிலே மக்கள் இவ்வளவு தூரத்திற்கு திரண்டு பங்கேற்பதற்கு பெல்ஜிய அரசாங்கமும், பெல்ஜிய காவல்துறையும் மிகவும் சிறப்பான முறையில் ஒத்துழைப்பை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.
அரசாங்கமும் காவல்துறையும் தமிழீழ மக்களுடைய உணர்ச்சியை எவ்வளவு தூரத்திற்கு மதிக்கின்றது போற்றுகின்றது என்பதை உணர்ந்துகொள்ளக்கூடியது. அதே போல பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இருந்து வந்த பயணிகளை எடுத்து நோக்கினால் அவர்கள் வருகின்ற பொழுதும் போகின்ற பொழுதும் அவர்கள் ஒரு கடமைக்கு ஒரு வரலாற்றுப் பணியைச் செய்கிறார்கள் என்றதை அங்கே இருக்கின்ற அதிகாரிகள் கூட உணர்ந்த வகையிலே செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

**இன்றைக்கு எழுக தமிழ் நிகழ்வில் இவ்வளவு பெருந்தொகையான மக்கள் திரண்டு வந்து குரல் எழுப்பாதிருந்திருந்தால் அல்லது இந்த செய்தியை நாங்கள் தடைவிதித்த ஐரோப்பியா அரசுகளுக்குத் தெரியப்படுத்தாதுவிட்டிருந்தால்? சிறீலங்கா அரசு தனது இனவாத கடும் போக்கில் தீவிரப்போக்கைக் கடைப்பிடித்து இன அழிப்புக்காகவே அது தனது பாதையை திறக்க ஒரு காரணியாக அமைந்துவிடுமா?**

www.tamileelamarchive.com

இந்தப் பிரயாணத் தடையைக் கொண்டு வந்ததே ஒரு வகையிலே இன அழிப்பைத் தூண்டுவதற்கான முயற்சி அதாவது சமாதான முயற்சிகளின்ர போர்வையிலே ரணில் விக்ரமசிங்காவாக இருந்தால் என்ன, சந்திரிக்கா பண்டாரநாயக்காவாக இருந்தால் என்ன, அல்லது எந்த சிங்களக் கட்சியாக இருந்தால் என்ன தமிழ் ஈழ மக்களுக்கு மேலாக ஒரு யுத்தத் திணிப்புக்கான ஆயத்தங்களைத்தான் செய்துகொண்டிருந்தன. ஒரு நிழல் யுத்தத்தை நடத்திக்கொண்டே இருந்தார்கள். ரணில் விக்ரமசிங்க கூட அங்கே இருந்த பாதுகாப்பு வலையங்களையோ, அல்லது மக்களுடைய வாழ்வு நாளாந்த நிலைமைக்குத் திரும்புவதற்கு அவசியமான விடயங்களையோ எதையுமே செய்யவில்லை. இப்படியே இவர்கள் ஒரு சமாதான போர்வைக்குள்ளே தங்களுடைய சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைப்படுத்திக்கொண்டிருந்தார்கள் என்பதை தற்பொழுது வெளியாகி இருக்கின்ற இரு கட்சிகளினதும் அரச அதிபர் தேர்தலுக்கான கொள்கைத் திரட்டிலே வெளிப்படையாகவே கூறிவிட்டார்கள். ஒற்றை ஆட்சிக்குள் தமிழ் மக்களுடைய சலுகைகளைக் கொடுப்பதென்ன- அந்த நிலை தமிழ் தேசிய கூட்டணியினுடைய தலைவராக விளங்குகின்ற சம்பந்தர் கூறியது போல கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலை - அந்த நிலையை அவர் உருவாக்கி அந்தப் பின்னணியிலே யுத்தம் ஒன்றை திணித்து, தங்களுடைய ஆயுதப் பலத்தைக் கொண்டு தமிழ் மக்களுடைய அரசியல் பணியைப் பெறுவதற்கான ஒரு சூழ்ச்சியைத்தான் செய்துகொண்டிருந்தார்கள். ஆகவே இந்த எழுச்சி இடம் பெற்றிருக்கா விட்டால் அந்த இனப் படுகொலை, யுத்தத் திணிப்பு சர்வதேச உலகைப் பொறுத்தமட்டில் ஒரு சட்ட பூர்வமான அரசாங்கத்தினால் செய்யப்படுகின்ற முயற்சி என்கின்ற நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் அதனை உடைத்தெறிந்து தற்போழுது இந்த முயற்சி என்பது ஒரு யுத்தத்திற்கான அடித்தளம், இனப்படுகொலைக்கான அறிவிப்பு என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.அதன்படி இந்தப் பிரயாணத் தடை என்பது புலத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிற தமிழ் மக்களுக்கும் பெரிய அவமானத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக இருக்கின்றது. அவர்களுடைய பிள்ளைகள் ஒருநாட்டிலிருந்து ஒருநாட்டிற்குச் செல்லும் பொழுது அவர்கள் யாவருமே விடுதலைப் புலிகள் தங்களுடைய உயிராக நேசிக்கின்ற ஒரு சமுதாயம் ஆகவே அவர்களுடைய செயற்பாடுகளை இந்தப் பிரயாணத் தடை முடக்குகின்ற அவர்களுடைய மனித உரிமையை மறுக்கின்ற செயற்பாடாகவே அமையும். அதையும் உடைத்தெறியிற ஒரு தேவை இருக்கிறது. காலத்தினுடைய தேவை. புலத்திலும் தாயகத்திலும் சுதந்திரத்தை நாட்டுவதற்கு சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு சகோதரத்தை வளர்ப்பதற்கு இந்தப் பிரயாணத் தடையை உடைத்தெறிந்து அதன் வழிதான் சமாதான முறையில் பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்குக் கூட ஆயத்தமாகவேண்டும் என்ற உணர்ச்சி இங்கு பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

**நிறையத் தடைகள் இதுவும் ஒரு தடை இவ்வாறான தடைகளை எல்லாம் தாண்டி இந்தப் புலம் பெயர்ந்த தமிழினம் எவ்வாறு இயங்கவேண்டும் என்று நீங்கள் ஒரு அரசியல் ஆய்வாளர் என்ற அடிப்படையில் என்ன கருத்துக்களை முன்வைக்க விரும்புறீர்கள்?**

தடைகளை வெற்றியினுடைய படிகளாக மாற்றுகின்ற வழியை வளத்தை ஏற்படுத்தியவர் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள். ஆகவே எந்தத் தடை வந்தாலும் அந்தத்தடையை தன்னுடைய தாயகத்தினுடைய தன்னுடைய தேசியத்தினுடைய தன்னுடைய தாயகத்தின் மக்களுடைய தன்னாட்சி உடைய பலமாக மாற்றுகின்ற வலிமை இந்தத் தலைவனுக்கு இருக்கின்றது. அதனால் தான் இந்தப் பிரயாணத் தடையை எவ் வளவோ காசு செலவழிச்சு எவ்வளவோ நிபுணர்களை எவ்வளவோ வல்லுனர்களையெல்லாம் அனுப்பி இந்த அரசாங்கம் ஏற்படுத்தியது.
அதே பிரயாணத் தடை இன்றுதமிழ் மக்களுடைய அடையாளத்தை தமிழ் மக்களுடைய தேசியத்தை தமிழ் மக்களுடைய வலிமையை இந்த ஐரோப்பிய ஒன்றியம் உணரக்கூடிய அளவிற்கு செய்திருக்கின்றது.

இதே போன்றுதான் மற்றைய நாடுகள் இதனைக் கண்டு தற்பொழுது உணரக்கூடியதாக இருக்கிறது.
ஆகவே அவர்கள் தடையாகப் போட்டது எங்களுக்கு வெற்றியின் படிக்கல்லாக மாறுகிறது. அதுதான் தேசியத்தலைவரினுடைய வலிமை அந்த வகையிலே இனி எந்தத் தடைகளையும் வென்று தமிழீழத் தாயகத்தை சுதந்திர பூமியாகக் காணுகின்ற காலம் வெகு தூரத்தில் இல்லை.
அதற்கான நேரம் நெருங்கிவிட்டது என்பதைத்தான் இந்த எழுச்சியும் இந்த எழுக தமிழ் உணர்ச்சியும் வெளிபடுத்தியிருந்தது.

**இந்த அடிப்படையிலே சிறீலங்காவினுடைய தேர்தல் விஞ்ஞாபனம் குறித்தும், அது சென்றுகொண்டிருக்கிற திசை குறித்தும், அரசியல் போக்குகள் குறித்தும் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?**

சிறீலங்காவினுடைய அரசுத் தேர்தல் கொள்கை திரட்டு என்பது உண்மையிலே இலங்கையிலே இரு தேசங்கள் இருக்கிறது என்பதை வெளிகாட்டியிருக்கின்றது.
அதாவது அவர்கள் சிங்கள பெரும்பான்மை இனத்தையும் பௌத்தத்தையும் எவ்விதமாக இலங்கை முழுவதும் பரப்பிக் கொள்ளலாம், இலங்கை முழுக்க விஸ்த்தரித்துக் கொள்ளலாம் என்பதற்கான கொள்கைத் திரட்டினை முன்வைத்திருக்கின்றார்கள்.
அதன் வழி அவர்கள் தங்களுடைய தேசத்தையும் தங்களுடைய மக்களையும் பற்றி சிந்திக்கின்றார்கள் என்பதை சர்வதேச உலகத்திற்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றது.
இது எப்படியோ தமிழர்களுக்குத் தெரிந்த விடயம்.
தமிழ் மக்கள் தங்களுடைய தாயகத்தையும் தங்களுடைய மக்களையும் தங்களுடைய அரசையும் மீட்டெடுத்த பகுதிகளிலே உலகே போற்றுகின்ற ஒரு நடைமுறை அரசை நடாத்திக்கொண்டிருக்கிறார்கள்.
அதனை உலகுக்கு வெளிப்படுத்துகின்ற மற்றொரு தன்மையுள்ளதாகத்தான் இந்தத் தேர்தல் அமைகின்றது.
ஆகவே இந்தத் தேர்தலைக் குறித்து எந்த ஒரு தமிழனும் தாயகத்திலோ புலத்திலோ அதிக அக்கறை எடுக்கப்போவதாக முடியாது.
ஏனென்றால் இது சிறீலங்கா நாட்டிற்குரிய தேர்தல் ஆனால் இந்த சிறீலங்கா நாட்டிற்குரிய தேர்தல் காட்டியிருக்கின்ற படிப்பினையை வைத்து சர்வதேச உலகு இந்த சிறீலங்கா அரசாங்கம் தமிழர்களுடைய அரசாங்கம் அல்ல என்பதை உணர்வதற்கும் அதன் வழி தமிழர்களுடைய வெளியக சுயநிர்ணய உரிமையை பயன்படுத்தி அவர்கள் தங்களுடைய அரசியல் எதிர்காலத்தை அமைத்துக்கொள்வதற்கும் இந்தத் தேர்தல் வழிகாட்டும் அதனை அந்த வகையிலே ராஜதந்திர முறையிலே நடாத்திச் செல்வதற்குத் தேசியத் தலைவர் அவர்களால் முடியும் என்பதையும் இந்தத் தேர்தல் வெளிப்படுத்தியே ஆகும்.

**நேர்கண்டவர்கள் : எரிமலை ஆசிரியர் குழுவினர்**

**நேர்காணல் ஒலிப்பதிவு : முரளி**


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காலம் எழுதிச்செல்லும் கரிகாலன்
# விடுதலைக் கவியாய் கவியும் கார்காலன்



மின்னல் அடிக்குது மின்னல் அடிக்குது
மேனி சிலிர்த்திட மின்னல் அடிக்குது
இடி இடிக்குது இடி இடிக்குது
இன்னல் தொலைய இடியிடிக்குது
மழை பொழியிது மழை பொழியுது
மண் குளிர மழை பொழியிது

தலைவன் பார்வையில் மின்னல் வெட்டும்
தனையன் திறனால் பகை நடுங்கும்
மண்ணில் மழையாய் அன்பிருக்கும்
மலையாய் மக்கள் பலம் இருக்கும்

மழை பொழியுது மழை பொழியுது
மண் குளிர மழை பொழியிது

மக்கள் மனங்களில் கார்த்திகை மலரானான்
காத்திடும் நல்ல காவற் கோபுரமானான்
காலம் எழுதிச்செல்லும் கரிகாலன்
விடுதலைக் கவியாய் கவியும் கார்காலன்

மழை பொழியுது மழை பொழியுது
மண் குளிர மழை பொழியிது.

சி.அமுதன் (சூட்டி)

---

செந்தணல் விழி கொண்ட கரிகாலன்
அவன் அஞ்சாப் படைகொண்ட போராளன்
வல்வையில் உதித்த நம் பெரும் சூரியன்
தமிழ் ஈழத்தைக் காத்திடும் பேராளன்

மூத்த முடிமகன் துயர் கண்டான்
தம்பி மூவாறு வயதிலே படைசேர்ந்தான்
ஈழம் எங்களின் மண் என்றான்
இளம் சந்ததி வாழ புலியானான்

உலகத் தமிழ் இனத்தின் ஒளி விளக்கே
சுதந்திர தாகத்தின் சுடர் விளக்கே
உரிமைக்காய் உதித்த நம் பெரு விளக்கே
இருள் அகற்ற எழுந்த விடிவிளக்கே

சிங்கள பேய்களின் கொலை கண்டான்
தம்பி சிறுத்தையின் அணிகொண்டு களம் சென்றான்
எழ எழ எதிரியை வீழ்த்தென்றான்
தமிழீழமே எமது மூச்சென்றான்.

கி.இதயராஜ்

## உலகத் தமிழ் இனத்தின் ஒளி விளக்கே
## சுதந்திர தாகத்தின் சுடர் விளக்கே

www.tamileelamarchive.com



தமிழீழ ஆவணக் காப்பகம்

# கல்லறை கண்டு நிமிர்வோம்

முதல்நாள் இரவு கண்தூங்கும் போது
அம்மா சொன்னாள்
நாளை விடிகாலையில் எழும்போது
மாவீரர் ஈகைச்சுடரில் விழித்தெழும்படா மகனே என்று
அவர் சாவை மிதித்திட
நஞ்சுமாலை நெஞ்சிலாட
வாழ்வை மதித்தவர்
வானம் பிளந்திட கானம் இசைத்திட
வையகம் நடந்தவர்
தாய் நிலம் காப்பதற்காய்
தம்முயிரை ஈகையாக்கி
தளராத துணிவுடன் நடந்துவாடா!
தாயை மிதித்தவன்
தளம்தேடி நடந்தவர்
இனியசாவு

தாலாட்டிய தமிழின் உயிரானவர்
உடல் மண்ணுக்கென்றானவர்
வாழைபோல் பரம்பரையை
விதைத்து வளர்த்திட இரத்தம் பாய்ச்சியவர்
மண்ணின் மைந்தர்கள் உறங்கிடும்
கல்லறையல்ல
செஞ்சூரியனும் துருவ நட்சத்திரங்களுமாய்
ஒளிரும் விண்மீன்கள்
தினம்தொழும் சந்நிதி
பூமலர் கொண்டு
பாமலர்பாடும் அவர் பொன்னடி

அம்மா எனக்குன் துயரம் புரிகிறது
அவர்கள்



எப்படி நடந்ததென
உனக்குத் தெரியுமாடா?
அப்பா எங்கே
அண்ணா எங்கே
அக்கா எங்கே
தங்கை எங்கே....
எதிரிகளம் புகுந்து
உயிர்கொடுத்த உத்தமரது
பொன்னடி தொழுது எழு
விடிவு பிறக்குமடா !
காடும் மலைகளும்
எனத் திரிந்தவர்கள்

அணிந்த ஆடைகளையும்
தூக்கிய கடுபொறிகளையும்
நடந்த பாதைகளையும் நினைக்கிறேன்
தேசத்தை நேசித்துவிட்ட
அனல் மூச்சுக்களையும்
விழித்திருந்த விழிப்பினில்
செம்பொறி ஏறிய கண்களையும் உணர்கிறேன்
கணத்தில் வெடித்திடும்
திடம்கொண்ட தோள்களையும் நானும்
தொட்டிடத் துடிக்கிறேன்.

மா.கி.கிறிஸ்ரியன்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மலரட்டும் தமிழீழம்

மாவீரத் தெய்வங்களே...
ஈழ தேசத்தின்
வரலாற்றில்
உங்களுக்கோர்
அழியாத இடமுண்டு...

மழையை அடுத்த
வானத்தில்தான்
ஒரு தெளிவிருக்கும்...

உங்களை அடுத்த
தமிழீழத்தில்தான்
நாளை விடுதலை
விருட்ச மாகும்!

உங்கள் இறப்புகள்
சாதாரணமானதல்ல...

ஓர்
இனத்தின்
உங்கள்
வாழ்க்கை பேசப்படுகிறது...

நாளை
ஈழ விடியலின்
வெளிச்சம்
எல்லாருக்கும்
வேண்டும் என்று
திசைகளை நீங்களே
தீர்மானித்து
உதிக்கிறீர்கள்...

மரணத்தை சுவாசிக்கும்
மகத்துவம்
புரிந்தவர்கள் நீங்கள்!
மண் விடுதலை
உங்களால் சாத்தியமாகப்
போகிறது...

ஈழ மண்ணுக்குள்



இருப்பிற்காக
தம்மை
அழித்தவர்கள்
நீங்கள்...

நீங்கள் அழிந்தாலும்
உங்கள்
அடையாளங்கள்
என்றும்
அழிந்ததில்லை...

ஆயிரமாயிரம்
தனிமனித வரலாறுகளாய்
வாழ்ந்து
ஓர் இனத்தின்
விடுதலையை
விதைக்கிறீர்கள்!
விதைகள் ஒரு நாள்
விருட்சங்களாகும்...
வேங்கைகள் கனவு
நினைவுகள் ஆகும்...

தேசத்தின்
ஆன்ம பலமாக விளங்கும்
மாவீரர்களே...
நாளை காலத்தின்
கட்டளையாய்
இறப்புகள்
வெல்லும்.

உங்கள் உயிரின்
ஒளியாய்
தமிழீழம் மலரும்...

பூங்குழலி வீரன்.
மலேசியா.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஒளியின் கண்ணீரும் கதையின் கதையும் - 2

கார்த்திகை மாத மழையில் கல்லும் விறைத்து விடும் ஆனால் எம் காவல் தெய்வங்கள் உறங்கும் கல்லறைகள் மட்டும் கம்பீரமாக எழுந்து நிற்கும். பசுமைநிறைந்த மாதத்தில் மாவீரர்களின் தியாகங்கள் பசுமரத்தாணியாய் எல்லோர் நெஞ்சங்களிலும் நிழலாடும். எம் சரித்திர நாயகருக்கென்றே மண்ணில் இருந்து கிளர்த்தெழுந்த கார்த்திகைச்செடி தமிழீழத் தேசிய மலரை பிரசவிக்கும். தமிழீழத்தின் அத்திவாரங்களாய் ஆறடி நிலத்தில் புதைந்து போயுள்ள ஆன்ம விடுதலையின் வித்துக்கள் ஒருகணம் சிலிர்க்கும். எம் தேசத்துத் தலைவனின் மடிமீது உயிர் துறந்து ஈகவரலாற்றை தொடங்கி வைத்த அந்த முதல் வித்தின் நினைவு நாளில் இப்புனித இல்லங்களில் உறங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வீரர்களின் திருமுகங்களையும் சரித்திரமாகிவிட்ட அவர்களின் சாதனையின் உச்சங்களையும் சுடர்விட்டு பிரகாசிக்கும் ஒவ்வொரு தீபங்களிலும் காணமுடியும்.

தமிழர்களின் பாரம்பரியத்தையும், வீரத்தையும் கூறிச் சென்ற சங்க காலம் இன்று மீண்டும் தமிழீழத்தில் மறு பிறப்பெடுத்திக்கின்றது. கால மாற்றங்களாலும் அன்னியப் படையெடுப்புக்களாலும் உறைநிலைக்கு போன சங்ககாலம் எம் தலைவன் மேதகு வே. பிரபாகரனின் விழிசுட்டெரிக்கும் பார்வையினாலும் எம் மாவீரர்களின் வீரத் தியாகங்களினாலும் உருகி இன்று தமிழீழத்தில் ஆறாய் ஒடிக்கொண்டிருக்கிறது. அவ் ஆற்றிலே காதலும் வீரமும் மீண்டும் முக்குளித்து எழுகிறது வீட்டுக்கொருவர் நாட்டைக் காக்க விரைந்ததும் தந்தை போர்க்களத்தில் மடிந்திட பிள்ளை போர்க்கோலம் பூண்ட மரபும், மார்பில் அம்பேந்திய மகனின் வித்துடல் கண்டு மகிழ்ந்த தாயும் என்ற வரலாறு இன்று தமிமீழத்திலேதான் தோன்றியிருக்கிறது.

அடுத்த நாள் கனவுகளை முதல்நாள் உறங்கமுன் சிந்திக்கும் எம்மவர்களிடையே அடுத்தநாள் என் தேசத்திற்காக வெடிக்கப் போகின்றேன் என்று தெரிந்தும் முதல் நாள் கூட முகத்தில் வெண் தாமரையோடு உறுதிபூணும் நெருப்புக்குழந்தைகள். விடுதலைப் பசிக்கு தன் பசியை மறந்து தன்னையே ஆகாரமாக்கிய எம் தேசத்தின் அகிம்சைப்புலிமறவன். கழுத்திலிட்ட திருமண மாலைகளில் உள்ள மலர்கள் உதிரும் முன்னரே உதிர்ந்து போன வீரபுருசர்கள். கெரில்லாப்படையாக எழுந்த எமது படையணியை ஒரு புதிய திருப்பு முனையோடு மரபுப்படையாக மாற்றிய வீரத்தளபதிகள். விடுதலைப்போராட்டம் தவழ்ந்து எடுத்தடி வைக்க வழிகோலிய மூத்த உறுப்பினர்கள். உறுதியான எம் போராட்டத்தில் எம் ஒருவரால் வரும் பாதிப்பை முன்னுணர்ந்து உயிருடன் எதிரியிடம் பிடிபடக்கூடாது என்ற மன வைராக்கியத்துடன் தம்மையே அழித்துக்கொண்ட இலட்சியவாதிகள். ஓங்கி அடிக்கின்ற அலைகளின் நடுவே ஒடி விளையாடிய கடற்புலிமறவர்கள். ஆணுக்கு பெண் சரிநிகர் என ஆழக்கடலடியில் பல மைல்களைக் கடந்து சரித்திரம் படைத்த உத்தமிகளின் உயிர்மூச்சுக்கள். எதிரியின் சிங்கக் குகையினுள்ளே சென்று சிங்கத்தின் பற்களையே எண்ணிப்பார்த்த வேவுப்புலி வீரர்கள். தன் பிள்ளையின் வாழ்வும் அவர்போன்ற சிறார்களின் எதிர்காலமும் போர் என்ற அரக்கனின் கால்களில் நசிபடக்கூடாது என்பதற்காக எல்லைப்படையாகி மாவீரராகிவிட்ட மறத்தமிழர்கள். தன் பிஞ்சு மழலையின் கையில் எதிர்காலம் இயந்திரத்துப்பாக்கியை திணிக்காமல் இருக்க அக்குழந்தையின் கையால் அஞ்சலி பெற்று விதையாகிப் போன தாயும் என்று இன்னும் சொல்லிலடங்கா சாதனையோடு இங்கு விழிமூடித் தூங்குகின்றார்கள். அமைதியாகுங்கள் இவர்கள் எங்கள் உள் மனதுகளில் நிறைந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது ஒலிக்கும் ஆலய மணிகளே நாளை எம் ஈழத்தை சிதைக்கவரும் ஈனர்களுக்கான சாவு மணியாகும். இவர்களுக்கு நாம் ஏற்றும் ஒளி தீபங்களே பெரும் தீயாகி எதிரி படையைச் சுட்டெரிக்கும் எம் தேசியத் தலைவனின் உரை ஏற்று அவன் சுட்டு விரல் காட்டும் திசையில் எம்தேச விடியலினைத் தரிசிப்போம்.




ஒளிப்படம்: தீவகுமார்


www.tamileelamarchive.com



கண்ணிற்கு இமைபோல - எம்
மண்காத்த மாவீரர்
கரம் தனை நான் இழக்க - எனை
தோழ் சுமந்த தோழன் இவன்
மீண்டும் களமாடச் சென்றவனை
கல்லறையில் தரிசிக்கின்றேன் நண்பா
நீ இலையுதிர்காலத்து சருகாய்அல்ல உயர்
இலட்சியத்திற்காய் வீழ்ந்த வித்து
இன்றே முளைவிடு ஈழ மண்ணிற்காய்





தாய் மடியில் தவழ்ந்தவன் - தமிழ்த்
தாய் மடியில் துயில்கின்றான் - அன்னை
அள்ளி வைக்கும் மலர்க்கொத்தில்
அவன் வதனம் காணுகின்றாள்
தாய் அணைப்பு புரிந்து உள்ளே
தனயன் முகம் மலர்ந்திடுவான்

பே.சுகந்தன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




## உயிரால் தமிழ்ப் பண்ணை பாடினீர்களே....................................



உள்ளத்தில் துயில் கொள்ளும் செல்வங்களே - எங்கள்
வாழ்வுக்கு உயிர்தந்த அன்பன்களே
சாவுக்கு அஞ்சாத எம் வீரரே - எங்கள்
மண்ணில் விதையான மொட்டுக்களே

உயிரால் தமிழ்ப் பண்ணை பாடினீர்களே
உன்னதத் தலைவன் வழி சென்றீர்களே
உரிமைக்காய் அனுதினமும் உழைத்தீர்களே - உங்கள்
உடல் உயிரை விடுதலைக்காய் கொடுத்தீர்களே

கல்லறையில் தலைசாய்த்த கண்மணிகாள்
கவலை இன்றி நிம்மதியாய் உறங்குங்கள்
காலத்தால் அழியாத தாரகைகள் - நீங்கள்
ஈழத்தின் விடியலதைக் காண்பீர்கள்

கி. இதயராஜ்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## ஒளிதருவாய் தாரகையே.....



ஒளிதருவாய் தாரகையே
ஒளிதருவாய் தாரகையே
ஒளிரும் அழகை விழிகளால் ரசிப்பதற்கே
ஒளிரும் அழகை விழிகளால் ரசிப்பதற்கே

மண் மலர்ந்து சிரிக்கும் அழகை - நான்
ரசிப்பதற்கே
ஒளிதருவாய் தாரகையே
ஒளிதருவாய் தாரகையே
ஒளிரும் அழகினை - விழிகளால் ரசிக்கவே

என் கண்களையும் காணிக்கையாய் தந்தேன்
என் கண்களையும் காணிக்கையாய் தந்தேன்
பசுமை நிறையும்.... மலர்கள் சொரியும்....
பசுமை நிறையும் மலர்கள் சொரியும் - மணம் பரப்பும்
ஓர்நாள் விடியும்.
மாவீரனின் காவியம் உலகம் அறியும்

எழில்கொஞ்சும் நாடொன்று - இங்கும் தோன்றும்
இன்பத்தமிழ் எங்கும் இனி வேர் ஊன்றும்
அண்ணன் பேச்சில் அதிவேகம் பிறக்கும்
மாவீரனின் கல்லறைகள் மகிழ்ந்தே சிரிக்கும்.

ஆரணி

## வான்முகில்கள் கூடியுங்கள் வீரம் பாடுது
## வண்ணநிலா வந்து உங்கள் கதைகள் பேசுது.....................





வான்முகில்கள் கூடியுங்கள் வீரம் பாடுது
வண்ணநிலா வந்து உங்கள் கதைகள் பேசுது
கடலினிலே கரும்புலிகள் வெடித்ததனை உரைத்தது
கயவர் கப்பல் அழிந்ததென்று புகழாரம் சூடுது

கரும்புலியாய் களம் செல்லும் மகிழ்வுடனே இருந்தீர்
காவியங்கள் படைத்திடவே கடலோடு கரைந்தீர்
கண்களுக்குள் மணிபோல தேசத்தையே காத்தீர்
தலைவனவன் வார்த்தைகளை அமிர்தமாக ஏற்றீர்

இளமையின் கனவுகளை இனத்திற்காய் இழந்தீர்
தாய்மண்ணில் காதல் கொண்டு காலமெல்லாம் வாழ்ந்தீர்
மற்றவர்க்கு தெரியாமல் உணவுர்களை மறைத்தீர்
கரும்புலிகள் வீரத்தினை உலகெலாம் உணரச்செய்தீர்.

சுடர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்







விடுதலையின் பாடலை திசையெட்டும்
எடுத்துச் செல்வதற்கான அடக்கத்தோடு
மாவீரர் துயிலும் இல்லங்களில் நெருப்பின்
தகிப்போடு எரிந்து கொண்டிருக்கிற இசையை
கல்லறையருகே காற்றுக் கோர்க்கிறது
அருகே சென்று மண்டியிட்டுக் கொண்டு
காது கொடுத்துக் கேட்கிறது
கோடையின் அற்புதமான நிறங்களை
உறிஞ்சிக் கனிந்த மனிதர்களின்
இதயங்களுக்குள்ளால் இருந்து வழிகிறது
பேரிசை
காற்று கையில் எடுக்கிறது
ஒளி ஏந்திச் செல்லும் வாழ்க்கையின்
அற்புதமான நடனத்தை
காற்று திசைகள் எட்டும்
நிகழ்த்தத் தொடங்கும் விதமாய்
எழும்பத் தொடங்கிற்று.
காற்றின் நடனம் திசைகளை உலுப்புகிறது.

● தா.பாலகணேசன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## விடுதலைக்கான பறப்பு

எனக்கான வாழ்வு அல்ல
எங்களுக்கான வாழ்வு
உனக்கான வாழ்வு அல்ல
உங்களுக்கான வாழ்வு

வாழும் காலத்தில்
வரலாறு பிறக்கின்றது
ஆளும் காலத்தில்
அதன் அர்த்த பரிமாணம் பிறக்கின்றது
இது வரலாறு
இதுவே வாழ்வுமாகின்றது.

என் விடுதலைக்காய்
என் ஊரின் விடுதலைக்காய்
என் உறவுகளின் விடுதலைக்காய்
தமிழீழத் தேசியப் பறவையின் பின்னால்
என் பறப்பு தொடர்கின்றது.
எங்கள் பறப்புக்களின் தூரம் நீள்கின்றது.

பறப்பு என்பது
சிறகை விரிப்பது என்பதல்ல
விடுதலைக்கான பறப்பு
வாழ்வின் தேடலுக்கான பறப்பு
வாழ்விற்கான பறப்பு
வரும் காலச் சந்ததியின் வாழ்விற்கான
பறப்பு

32 வருடங்களிற்கு முன்னால்
தமிழீழத் தேசியப் பறவை
தன் அழகிய கூட்டில் இருந்து
பறக்கின்றது
தன் தாயின் தாயின் நேசிப்பில்
இருந்து விலகிப் பறக்கின்றது
தமிழீழத் தாயினை நேசித்து பறக்கின்றது
தமிழீழ விடுதலைக்காய் இன்றும்
பறப்புத் தொடர்கின்றது

பறப்பு என்பது
சிறகை விரிப்பதென்பதல்ல
முதலில் பறக்கும் எண்ணம் வேண்டும்
பலமான இறக்கைகள் வேண்டும்
பயணம் நீளுமாயின் பலமான மனவுறுதி
வேண்டும்
பருவகாலத்திற்கேற்ப பறக்க வேண்டும்
பகையிடை வரினும்
அதை யெதிர் கொண்டு
பறக்கும் வல்லமை வேண்டும்
இதுவே விடுதலைக்கான பறப்பு
மாவீரர் கண்ட கனவை நாளை
நனவாக்கிடும் விடுதலைக்கான பறப்பு.

ம. சாண்டில்யன்



## நாடோடிப்பாடல்

வெண்பனி உறையும்
மாய வீதியில்
அலையும் என்
நாடோடிப் பாடல்
நீயும் கேட்டதுண்டோ ?

கண்வழி நிறைந்த
கனவின் சுவடுகள்
கவிதையாய்
கசியும்
கண்ணீர் முத்துக்களை
நீயும் பார்த்ததுண்டோ ?

இருப்புக்கள் அழித்த
பனிப்புல ஏக்கம்
என் அடையாளம் தொலைக்க
பூ மலரும் ஓசை
அருகிருந்து கேட்கும்
அருகதை யானும்
இழந்து போவேனோ ?

எந்தச் சுவரில்
எந்தன் புகைப்படம்
யாரால் மாட்டப்படுமோ?...

வீடற்றவனுக்கு சுவரேது! ?

எந்த வீட்டில்
எந்தன் பிள்ளை
மழலை மொழி கொஞ்சுமோ ?

நிலமற்றவனுக்கு வீடேது! ?

எந்த நிலத்தில்
எந்தன் உடல்
புதைக்கப்படுமோ ?

நாடற்றவனுக்கு நிலமேது! ?

முகவரி தொலைத்த
முகங்களுக்கெல்லாம்
அடையாளம் அளிக்கும்
அபூர்வப் பூவே
உன் மலர்வுக்காய்
கார்த்திகை
காத்துக்கிடக்கிறது.

எ.ஜோய்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# களத்தில் வீழ்ந்த கவிதைகள்

## கஸ்தூரி, வானதி, பாரதி - ஓர் ஆய்வு

நாகேஸ்




'இதயத்தில்
இனத்தின் விடுதலை
கரத்தில்
ஒரு தேசத்தின் வரலாறு
சுதந்திர வாசல்வரை
இவன் சுவடுகள் ஓயாது'

ஒலிவர் என்னும் போராளியால் வரையப்பட்ட ஒரு மாவீரனின் உடலை சுமந்து இன்னும் ஒரு போராளியின் சித்திரத்தின் மீது தனது முதலாவது கவிதையை இப்படிப் பதிக்கின்றார் கஸ்தூரி. வெறும் 7 வரிகளே கொண்டமைந்த இச்சிறு கவிதையை உற்று நோக்கினால் தான் சொல்ல வந்த கருத்தை மிக ஆழமாகவும் உருக்கமாகவும் இச்சிறு கவிதை வடிவத்தின் மூலம் சொல்லி விடுகின்றாள் கஸ்தூரி.

தனது முதல் கவிதைகளிலேயே தனது கவித்துவத்தை புலப்படுத்தி நிற்கும் கஸ்தூரி தொடர்ந்து வெளி வந்த தனது ஒவ்வொரு படைப்புக்களிலும் தனது முத்திரையைப்பதித்து நிற்கின்றாள்.

ஊரெழு என்னும் இடத்தில் பிறந்த வசந்தி கஸ்தூரியாகி ஒரு போராளியாக மிளிர்ந்தவள் விடுதலைப்புலிகள் அமைப்பில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டு தேச மீட்புப் பணிக்காக ஒரு கையிலே ஆயுதத்தை இறுகப்பற்றி இருந்த வேளையில் தன் தேச மக்களின் புதிய வாழ்விற்காய், ஒரு




சமூக மாற்றத்தை வேண்டி மறுகரத்தில் பேனாவை இறுகப்பற்றிக் கொண்டாள்.

தான் வாழ்ந்த சமூகத்தை, போராட்ட வாழ்முறைகளை மிக நுணுக்கமாக நோக்கிய கஸ்தூரி அதன் கவிதை, சிறுகதை என்ற இலக்கிய வடிவங்களின் ஊடாக பிரதிபலித்தாள். அவள் போராட்ட வாழ்வுடன் தன்னை இணைத்துக் கொண்ட பின்னால் களத்தில் வீரமரணத்தை தழுவிக் கொள்ளும் வரையிலும் சுமார் 17 கவிதைகளும் 4 சிறுகதைகளையும் பிரசுவித்திருக்கிறாள். இவை எண்ணிக்கையில் குறைவாக இருந்த போதிலும் அவை சொல்லப்பட்ட முறைமையிலும் கருத்துச் செறிவிலும் மிக ஆழமானதாகவும் உயிர் துடிப்புள்ளதாகவும் அமைந்து காணப்படுகின்றன சத்திய உணர்வோடு தன் எழுத்துக்களை பொறித்த கஸ்தூரி ஒவ்வொரு உயிரையும் மிக ஆழமாகவும் நேசித்தாள் ஒவ்வொரு மரணச் செய்தியும் அவளை உலுப்பியிருககின்றன ஆனாலும் உயிரினும் மேலாக உரிமையை மதித்த கஸ்தூரி.........

'சுதந்திரமே!
உன்னோடு
சொந்தம் கொண்டாடப்
புறப்பட்டதால்
சாவு இங்கே
சாதாரண விலைக்கு
வந்து விட்டது'

என்று எழுதுவதன் மூலம் தன்னை எமக்கு இனம் காட்டுகின்றாள்

www.tamileelamarchive.com

அத்துடன் எமது போராட்ட வாழ்வில் எம்மை விட்டுப் போன மாவீரர்கள் மறைந்து போகக் கூடியவர்கள் அல்ல அவர்கள் மறுபடி மறுபடி உயிர்பெறுவார்கள் என்பதனால்

'மறைந்தவர்களே நீங்கள்
மலடர்கள் அல்ல.
உங்கள் கல்லறைகளும்
கருத்தரிக்கும்....'

என்று எழுதுகின்றாள்

இந்திய ஆமிக்கிரமிப்புக் காலகட்டத்தில் உண்ணாநோன்பு இருந்து உயிர் நீத்த பூபதித்தாயின் மரணம் கஸ்தூரியின் மென்மையான மனதின் அடி ஆளத்தில் அதிகமாகப் பதிந்து அவளை கலங்க வைத்திருக்கின்றது. பூபதித் தாயின் கல்லறை மீது தன் சொல்லறைகளை அடுக்கிய கஸ்தூரி.....

'காலையில் வந்த கதிரவன்
கல்லறை வெளிச்சத்தில்
கண் கூசிக் கைகூப்ப
மாலையில் வந்த
மஞ்சல் நிலவு - அவன்
கல்லறையின் ஒளியை
கடன் கேட்டு நிற்கிறது'

என்று அன்னையின் தியாகத்தினை வியந்து நிற்கிறாள். அதே கவிதையின் அடுத்த பந்தியில்

'தாயே
பிரபஞ்ச வரலாற்றின்
பிரமாண்டமான உச்சியில்
உயிரோட்டத்தோடு
உன்னை நீ
செத்துச் செத்துச்
செதுக்கிக் கொண்டாய் .....'

என்று அன்னைக்கே அவரது தியாகத்தின் உயர்ச்சியை கூறுகின்றார் மேலுள்ள இந்தக் கவிதைகளில் பொதிந்துள்ள இலக்கிய செழுமையின் திறன் கவனத்திற்குரியதாகும்.

கஸ்தூரி தனது எழுத்துக்களில் தனி மனித உணர்வுகளை மட்டும் மையமாக ஊற்றாது முழு உலகத்துக்குமான மானுட வாழ்வின் அவஸ்தைகளை தேவைகளை மறுக்கப்பட்ட உரிமைகளை அநீதிகளை ஆவேசமாக எதிர்த்தும் அவர்களின் விடிவிற்காக ஏக்கமுறும் தன்மைகளையும் இவள் மையாக ஊற்றி இருக்கின்றாள். அடிப்படை உரிமைகளே மறுக்கப்பட்ட நிலையில் அல்லலுறும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களை நினைந்து இவள் மனம் வெந்திருக்கின்றது மலையகப் பெண்களின் விழிப்புணர்வுக்காக ஏங்கும் இவளது மனம் கூடைக் கொழுந்துகள் என்ற கவிதையின் வாயிலாக வெளிப்பட்டு நிற்பதை பாக்கலாம்.

'சுரண்டல் தராசுகளில்
கொழுந்துக் கூடைகளை
கொழுவிவிட்டு
தேனீருக்காக ஏங்கும்
இந்த தேயிலைச் செடிகள்
அக்கினியால் அணிவகுத்து
அவலங்கள்
எரிப்பதென்னாள்'

இன்னும் கஸ்தூரியின் கவிதைத் தளம் விரிந்து கொண்டே போகின்றது. ஏகாதிபத்தியத்தின் இழி செயல்கள் கண்டு வெகுண்டெழுகின்ற கஸ்தூரி.

'உங்கள் வல்லமைகள்
ஆய்வு செய்யப்படுகையில்
வளர்முக நாடுகளே
வாளா வெட்டியாகின்றன
உங்கள் விமான நிலையங்கள்
விஸ்தரிக்கப் படுகையில்
எங்கள்
குடிசைகள் அல்லவா
கொழுத்தப்படுகின்றன'

என நெஞ்சம் குமுறுகின்றாள்.

இப்படியாக கஸ்தூரியின் அனைத்துக் கவிதைகளுமே ஒவ்வொரு நிகழ்வையும் அவளுக்கே உரிய புரட்சிகர விழிப்புணர்வோடு பார்க்கின்றன.

அடுத்து கஸ்தூரியின் கவிதைகள் பற்றி சுருக்கமாக நோக்குவோமாயின் அவரது சிறுகதைகளுமே காலத்தை வென்று நிலைத்திருக்கும் சக்தி வாய்ந்தவை. தான் வாழ்ந்த சமூகத்தில் நடந்த நடக்கின்ற சமூக அநீதிகளையும் ஆக்கிரமிப்பின் கொடுரங்களையும் கருவாகக் கொண்டு கஸ்தூரியின் சிறுகதைகள் வடிவம் பெறுகின்றன. 'நிற்பந்தங்கள்' என்னும் இவரது கதையில் வாசுகி என்கின்ற புரட்சிகர பெண் பாத்திரத்தின் ஊடாக தனது சமூகத்தின் சீரழிவுகளை மிக உன்னிப்பாக நோக்குகின்றாள். ஆண் மேலாதிக்கவாத கருத்துலகம் பெண்கள் அடிமை வாழ்விலிருந்து எழ விடாமல் எப்படியெல்லாம் தடுக்கிறது என்பதை இவரது பேனா கண்டு குமுறி எழுகிறது. அடுத்த மூன்று சிறுகதைகளும் இந்திய ஆக்கிரமிப்பு கரங்களும் அவர்களது அடிவருடிக் குழுக்களும் எமது மக்கள் அனுபவித்த கொடுரங்களின் பிரதியீடாக அமைந்துகாணப்படுகின்றன குறிப்பாக கஸ்தூரியின் 'எமக்கு விடிவதில் விருப்பமில்லையே....' என்ற சிறுகதையிலுள்ள உயிர் துடிப்பும் இதயத்தை அசைத்தி விடும் உருக்கமும் வியக்கத்தக்கன. இந்திய இராணுவத்தால் சிதைக்கப்பட்ட எங்கள் கிராமம் ஒன்றில் முற்றாக அழிக்கப்பட்ட ஒரு குடும்பத்தில் இறுதியாக சாவை அனைத்து கொன்ற ஒரு தாயின் உணர்வலைகளை கஸ்தூரியின் பேனா வடித்திருக்கும் விதம்... அது அந்த மண்ணிலே விளைந்து அந்த மண்ணிலேயே விதையாகிப் போய் விட்ட அவளால் தான் முடிந்திருக்கின்றது.




அடுத்து வானதி..... பத்மசோதி சண்முகநாதபிள்ளை என்னும் இயற் பெயர் கொண்ட வானதி. இவளே ஒரு கவிதைதான். ஒரு உன்னதமான இலட்சியத்துக்காக தன்னை அற்பணித்துக்கொள்கின்ற ஒரு போராளியின் மனம் மிக மென்மையானது. அத்தகைய ஒரு போராளியின் பேனாவிலிருந்து பிறப்பெடுக்கின்ற


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எண்ணங்கள் உயிர்ப்புடையவையாகவே இருக்கும்.

அந்த வகையில் கஸ்தூரியைப் போலவே வானதியின் கவிதைகளும் உயிரோடு உலா வருகின்றது இருவரும் ஒரே பயிற்சிப்பட்டறையில் பயின்று ஒன்றாகவே பல களங்கள் ஆடி ஆனையிறவுப் போரில் ஒரே நாளில் அதாவது 11.07.1991ல் மக்களுக்காக தம்மை தற்கொடையாக்கிக் கொண்டவர்கள் மரணிக்கும் வரையில் வானதி சுமார் 15மேற்பட்ட கவிதைகளை எழுதி மக்கள் உள்ளங்களில் ஒன்றாகிக் கலந்தாள். தான் காணும் நிகழ்வுகள், அனுபவங்களை உடன் பதிவு செய்து தன் எழுச்சிக் கவிதைகளாகப் பொறித்தாள் வானதி.

'மீட்கப்பட்ட எம் மண்ணில்
எங்கள் கல்லறைகள் கட்டப்பட்டால்
அவை உங்கள் கண்ணீர் அஞ்சலிக்காகவோ
அன்றேல், மலர் வளைய மரியாதைக்காவே அல்ல
எம் மண்ணின்
மறு வாழ்விற்கு
உங்கள் மன உறுதி
மகுடம் சூட்ட வேண்டும்
என்பதற்காகவே'

தான் இறந்தாலும் தனது மக்கள், தனது தேசம், உறுதியாக கட்டி எழுப்பப்பட வேண்டும் என்ற வானதியின் உள் உணர்வின் வெளிப்பாடக இக் கவிதை அமைந்து காணப்படுவதை நோக்கலாம்.

'எனது பேனா கூரானது
எனது கைகளில் உள்ள
துப்பாக்கியைப் போல
எந்தக் கலா நிதியுடனும்
எந்த வித்துவானுடனும்
எந்தப் பண்டிதருடனும்
என் கவிதை சவால்விடும்
ஏனெனில்
எனது பேனாவால்
உணர்வுகள் உயிர் உள்ளவை'

இங்கே ஒரு போராளியின் மன உறுதி போல ஒரு இலக்கியவாதியின் மன உறுதியும் அமைந்து காணப்படுவதுடன் தமது வித்துவங்களை பறை சாற்றி நிற்கும் மரபுப்பற்றாளர்கள் மீதான தனது வெறுப்புணர்வினையும் வானதி வெளிக்காட்டி நிற்கின்றாள். இந்திய ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புப் பதிவுகள் கண்டு சினங்கொண்ட வானதி.

'உங்கள் ஆதிக்கக்கரங்கள்
நீங்கள் அகலமாக்கியபோது
அகப்பட்டுக் கொண்டது
எங்கள்
சுதந்திர தாகமும்
விடுதலை வேட்கையும் தானா

எங்கள் மண்ணை
நீங்கள் சிவப்பாக்கியதால்
உங்கள் வரலாறு
கடக்கப்போவது
கறுப்பு ஒற்றைகள் மட்டுமல்ல
அழியாத அவமானத்தையும்
சேர்த்துத்தான்'

என எச்சரிக்கின்றாள்.

ஒரு போராளி மரணத்தை நிச்சயித்துக்கொண்டே போர்க்களம் போகின்றான் ஆனாலும் தன் மரணத்தின் பின் தன் பணி தொடரப்படவேண்டும் என்பதால் அவன் உறுதியாக இருக்கின்றான். இங்கே

'எனது கைகள்
நாளை ஓயலாம்
அன்றி
ஒடியலாம்
ஆனால்
எனது பேனாவோ
ஓயப்போவதில்லை
எமது துப்பாக்கியைப் போல'

என வானதி
தனது எண்ணத்தையும்
எதிர்ப்பையும் பதிவு செய்து கொள்கின்றாள் இப்படியாக வானதியின் அனைத்துக் கவிதைகளும் போராட்ட வாழ்வின் பிரச்சனைகளால் எழுந்து நிற்கின்றன.




இறுதியாக பாரதியின் படைப்புக்களை பற்றி சிறு அலசல் செய்வோம் சத்தியபாமா விஸ்வலிங்கம் என்னும் இயற்பெயர் கொண்ட பாரதி 1986ம் ஆண்டு தனது பல்கலைக்கழக கல்வியை நிறுத்திக் கொண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் பாரதியாக தன்னை இணைத்துக்கொண்டாள் 65ம் ஆண்டு மலர்ந்த பாரதி 07.06.1992ல் மன்னார் சிறு நாவல் குளத்தில் நடைபெற்ற எதிர்பாராத மோதல் ஒன்றில் உதிர்ந்து போனாள். கஸ்தூரி, வானதி வரிசையில் இவளது கரங்களும் பேனாவை பற்றிக்கொண்டது. எதிரி ப்படைகளை நோக்கி இவளது துப்பாக்கிகள் எழுந்து நின்ற அதே வேளை தனது சமூக அழுக்குகளை அகற்றி விடவும் மானிடம் முழுவதுமான விடிவிற்காக இவளது பேனாவும் நிமிர்ந்து நின்றது. இவள் தாய் மண்ணுடன் சங்கமிக்கும் வரையிலும் அவள் 20க்கும் மேற்பட்ட கவிதைகளையும் ஒரே ஒரு சிறுகதையினையும் பல கட்டுரைகளையும் இறப்பற்ற இலக்கிய ஏட்டிலே பதிந்துவிட்டுச் சென்றுள்ளாள்.

'எழுத்துலகில் எனது பெயர் பொறிக்கப்படவேண்டும் என்பதற்காக நான் எழுதவில்லை என் எழுத்துக்கள் நான் வாழும் இந்தச் சமூகத்தில் ஒரு சின்னத் துடிப்பை ஏற்படித்தினால் அதுவே என் எழுத்தின் வெற்றியென நான் உணர்கிறேன்.'

பாரதியின் நாட்குறிப்பில் காணப்பட்ட வாக்கியங்கள் இவை. இவளது கவிதைகள் சற்று வித்தியாசமானவை ஒரு போராளி தான் சார்ந்த இனத்தின் விடுதலையோடு திருப்திப்படக்கூடியவள் அல்ல. ஒடுக்கப்படுகின்ற மக்களுக்காக அவள் தனது குரலை எங்கிருந்தாலும் உயர்த்திக்கொள்வாள். எங்கெங்கு மானிடர் துன்பப் பட்டாலும் அங்கெல்லாம் அவளது குரல் கேட்கும் அந்த வகையில் பாரதியின் கவிக் குரல் சற்று விசாலமானது, வித்தியாசமானது.

www.tamileelamarchive.com



"கஸ்தூரி, வானதி, பாரதி இவர்களின் பேனாக்கள் தமிழீழ மண்ணிலே பல நூற்றுக்கணக்கான போராளிகளை தரமான இலக்கிய கர்த்தாக்களாய் உலாவவிட்டிருக்கின்றன."

'பூபதிக் கோள்' இது பாரதியின் ஒரு கவிதையின் தலைப்பு பூபதி அம்மாவை ஒரு புதிய கோளாய் உருவகப்படுத்திய பாரதியின் தனிச் சிறப்பு.

'காக்கி உடைகளும்
கவச வாகனங்களும்
பிறந்த வாய்மூடாத
பீரங்கிக் குளாய்களும்
அமைதிக் கோளின்
மெய்க்காவலராய்
தாயக மண்ணில்
காலடி வைத்தன'

அன்னையின் வருகை பற்றிய பாரதியின் அபாய ஒலியாய் மேலுள்ள கவிவரிகள்.

'சுதந்திர நாடுகள் மனித உரிமையின்
மகத்துவம் பற்றியும்
பேசிக் கொள்கையில்
அங்கீகரிக்கப்படாத
என் தேசமோ
பூபதி என்ற
புதிய கோளினை
தியாகச் சுடரால்
திரண்டெழச் செய்தது
ஒரு நாள் உலக விடுதலைக் கொடியை ஏற்ற
பூபதிக் கோளை பூமிக்கு வரும் படி
நாடுகள் சேர்ந்தொரு
அழைப்பு விடுக்கும்'

பூபதி அன்னையின் தியாக உயர்வினை இவ்வளவு ஆழமாக அழகாக வேறு யாரால் கூறமுடியும்.

தமிழீழப் பெண்களின் மன மாற்றம் பற்றி பாரதி இங்கே சாற்றுகிறாள்.

'பூவும் பொட்டும்
பொன் தாலி மட்டும்
போதுமென்று தென்றல்கள்
இன்று
புயல்களாய் மாறி
புதுயுகம் காண
புறப்பட்டு விட்டன'

எண்ணியதை எழிமையாக கவியாய் எடுத்தியம்பும் ஆற்றல் இவளுடைய தனித்துவம்.
பாரதி கலந்து கொண்ட கவிதைப் பயிற்சிப் பட்டறை ஒன்றில் அதை நடாத்திய ஆசிரியர் மரபுக் கவிதை பற்றியும் புதுக் கவிதை பற்றியும் அதன் வரையறைகள் பற்றியும் விதந்துரைக்கின்றார் பாரதி எழுந்தாள்.
'ஒரு படைப்பாளியின்ர மன உணர்வுகளை அப்படியே வெளியில் கொண்டு வரக் கூடிய ஆக்கங்கள் எங்களுக்கு இன்றைக்குத் தேவை அதுதான் உண்மையான இலக்கியம் என்று நான் நினைக்கிறேன். எந்த எல்லைகளும் எங்கட உணர்வுகளை கட்டுப்படுத்தக் கூடாது.'
ஆசிரியர் ஆசிரியராக நின்றார். பாரதியோ காலமாற்றத்தோடு இசைந்து புதுமையைத் தேடினாள். பாரதி காணும் காதல் கொண்ட காதலன், அன்னை தேசத் தெருவில் நின்ற இவளின் அன்புக்காய் ஏங்கிய போது

'மன்னித்துக்கொள் நண்பனே
உன் இதயத்தில்
தேடிப்பார்
தேசத்தை பற்றிய
ஏதேனும்
சின்ன நினைவுகள்
இருக்கின்றதா என்று
இருந்தால்
என்னை
எம் தேசம் அழைக்கிறது.
இல்லாவிட்டால்
என் நினைப்புக்களை
அழித்துவிடு
பார்சலில் வருகின்ற
பாவையரோடு
உன் பயணத்தைத் தொடர்ந்து செல்
என் நாட்டின் வரலாறு
என்னைப் பதிவு செய்யும்'

பாரதியின் அப்பழுக்கற்ற தியாக ஓடையிலே அவளது காதலும் கரைந்து விடுகிறது.

அழுகின்ற குழந்தையை நோக்கி எழுந்திட்ட பாரதியின் உணர்வுகள் இது.

'உன் பட்டுக் கன்னங்களில்
ஒட்டிக்கொண்டிருக்கும்
கண்ணீர் பொருக்குகளுக்கு
காரணம் என்ன
மனிதர்கள் வாழும் இந்த மண்ணில்
உணர்வினைச் சொல்ல
உரிமை இல்லை என்கிறாயா'

கஸ்தூரியின் மரணச் செய்தி பாரதியின் காதுகளைத் துளையிட்டபோது...

'கவிதைகளைச் சுமந்த
கருவறையில்
இன்று கல்லறை ஒன்று
சுமக்கிறது
உன்னை
இனங்காணத் தவறிய


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இலக்கிய உலகத்தின்
இதயத்திற்கு
இப்போதாவது தெரிந்திருக்கும்
நீ இமயமென்று

துப்பாக்கி மட்டுமே
தூக்கத்தெரிந்தவர்கள்
என்ற தப்பான
வெற்றுக்கோள்களுக்கு
நீ வெடிகுண்டு
உன் புதுக் கவிதைகள்
போர் முனைக்கு
புறப்பட்டு விட்டன
சிறுகதைகள்
அதிரடித் தாக்குதலுக்கு
அணிவகுத்து விட்டன
காலம் விடுதலை கட்டி இழுத்துவரப்போகிறது'

ஒரு படைப்பாளியின் கல்லறை மீது இன்னொரு படைப்பாளியில் தூவப்பட்ட வெறும் மலர் அர்ச்சனைகள் அல்ல இவை. உறுதிப் பிரகடனங்கள். பாரதியின் அகண்ட பார்வைக்கும் அகப்பட்டுக்கொண்ட ஐ.நா.சபை இவள் முன் தலை குனிந்து நிற்பதைப் பாருங்கள்.

'மேடை மீது ஏறியிருந்து
ஏற்றம் பற்றி பேச்சு நடாத்தும்
தேசத் துரைமாரே
குனிந்து பாருங்கள்
பூவாய் இருக்கும்
கம்பளம் கீழே
புழுவாய் நெளியும்
மனித உடல்கள்
அவை உங்கள்
குறுட்டுக் கண்களை
வெருட்டித் திறக்கும்
கோழியின் செட்டைக்குள்
குஞ்சுகள் தான் பாதுகாக்கப்படும்
ஆனால் இங்கோ பருந்துகள் தானே
பாதுகாக்கப்படுகின்றன.
உலக சமாதானம்
இந்த உன்னத
கோட்பாட்டிற்குள்
தலையை புதைக்கும்
தீக் கோழி நீ'

மிக எழிமையாக ஐ.நா. சபையின் உண்மை சொருபத்தை தோலுரிக்கின்றார் பாரதி சிதறிப்போன சிவப்பு வல்லரசு என்றும் கவிதை மூலம் சோவியத்தின் உடைவுபற்றி பாரதி பார்வை மிக ஆழமானது. உலகின் ஒவ்வொரு அரசியல் நகர்வினையும் உன்னிப்பாக அவதானிக்கும் அவளுடைய திறன் வித்தியாசமானதுதான்.
மிகப் பெரிய மக்கள் புரட்சியை நடாத்தி நிமிர்ந்த ஒரு தேசத்தின் கொடி இறக்கப்பட்டபோது பாரதியால் தாங்க முடியவில்லை

'என் பெரிய தேசம்
விடுவிக்கப்பட்டபோது
வீழ்ந்த வீரர்
சிந்திய இரத்தத்தால்
சிவந்த கொடியல்லவா அது.
இதனால்தான்
உன் கொடி
இறக்கப்பட்டபோது
என் நெஞ்சினுள்ளும் ஏதோ'

பாரதியின் மனதில் ஒரு நெருடல் பிற்கால சோவியத்தின் குறைபாடுகளை ஏற்றுக்கொண்டு அதனை சுட்டி நிற்கும் பாரதியின் சோவியத்தின் உடைவின் போது நடைபெற்ற நிகழ்வுகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

'சுருக்கிடப்பட்ட
லெனினின் சிலையும்
அகற்றப்பட்ட அவரது உடலும்
மறைக்கப்பட்ட மாவீரர் கல்லறையும்
எரிக்கப்பட்ட புத்தகக் குவியல்களும்
அழிந்து போகக் கூடியவை அல்லவே
எங்கெங்கு
மானுடம் மறுதலிக்கப்படுகிறதோ
அங்கெல்லாம் அவை
மறு வாழ்வின் உயிர்க்கருவாய்
உணர்வுபெற்று
எழும் வரும்'

என்று எழுதி தன் மன ஓசையை மௌனமாக மீட்டுகிறார்.

இங்கே மண்ணை மறந்த மைந்தர்களை நோக்கிய பாரதியின் கவிக்கணைகளை பாருங்கள்

'உங்கள் பார்வையில் விடியல் என்பதெல்லாம்
கண்ணைப் பறிக்கும்
வெறும் விளக்கு வெளிச்சங்கள் தான்
நாங்கள் காணத் துடிப்பதெல்லாம்
கிழக்கு வானத்தின்
சிவப்பு விடியல்கள்'

போராட்ட சூழலில் கல்வி பாழடிக்கப்பட்ட மாணவ சமூகத்தை நோக்கியபாரதி அவர்களின் குரலாய் எழுந்து நிற்கிறாள்

'மாணவர்கள் தான் நாம்
ஆனாலும்
மானிட வாழ்வின் மகத்துவம்
மறுக்கப்பட்டவர்கள்
முதலில் மனிதராய் வாழ
முயற்சிகள் செய்வோம்
முடியாவிட்டால் புரட்சிகள் செய்வோம்
அடிப்படை வசதிகள்
அனைவருக்கும் கிடைக்கும்
சமத்துவ பூமியை
நாங்கள் சமைப்போம்.'

மேஜர் பாரதி தமிழீழ மண்ணோடு மக்களோடு தனது மண்ணிலே இருக்கின்ற அல்லது சமூகத்தோடு இருக்கின்ற வித விதமான மனிதர்களோடு உலக இயக்கத்தோடு தனது உறவை எப்படி ஏற்படுத்திக் கொண்டார் அல்லது இவற்றை அவர் எப்படிப் பார்க்க விரும்பினார் என்ற அவரின் உள்ளுணர்வின் வெளிப்பாடுகளே அவரின் கவிதைகளாகும்.

கஸ்தூரி, வானதி, பாரதி இவர்களின் பேனாக்கள் தமிழீழ மண்ணிலே பல நூற்றுக்கணக்கான போராளிகளை தரமான இலக்கிய கர்த்தாக்களாய் உலாவவிட்டிருக்கின்றன என்பதை கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

www.tamileelamarchive.com

# உண்மை மனிதர்களுடன் உரையாடல்

## பன்முகப் போராளி துளசிச்செல்வனுடனான உரையாடல்

"எல்லாமாகி இருக்கின்ற தாயே எனக்குள் எரிகின்ற தீயே" என தலைவர் பற்றி அவர் கவியரங்குகளில் விளித்துக்கொள்வார். எல்லாப் போராளிகளையும் போலவே எல்லாமாகவும், தாயாகவும் உள்ளத்தில் எரிகின்ற விடுதலைத் தீயின் காரணராகவும் அவர் தலைவரை தனக்குள் வரித்துக்கொண்டிருக்கிறார். போராளிகள் மீதும், மக்கள் மீதும் அளவுகடந்த பற்றுதல் கொண்ட ஒரு அருமையான இளம் மனிதன் அவர். உரையாடும் பொழுது கானகத்தின் குளிர்மையும், செழுமையும் படரும் தன்மை மனக் கண்களில் விரிந்தன.

எல்லாவற்றையும் நேசிக்கிறார்.

இவருடனான உரையாடல் பல அதிர்வுகளை எமக்குள் ஏற் படுத்தின. நான் நினைக்கிறேன் வாசகர்களாகிய உங்களுக்குள் ளும் இவரது உரையாடல் ஒரு ஆழமான மனப் பதிவை ஏற்படுத் தும். தமிழன்பன் அவர்களுடன் அருகில் இருந்துகொண்டு அவரின் ஆலோசனையை செவிமடுத்து எரிமலை சஞ்சிகைக்காக ஒருஉரை யாடலை நிகழ்த்துவதற்கான கதவை அவர் அந்தக் கணங்களி லேயே திறந்து வைத்தமைதான் உள்ளத்துள் மலர்கள்சொரிவது போன்ற உணர்வைத் தந்தது.

நவீன தொழில்நுட்பமாக திகழ்கின்ற கணனியின் இந்தத் திரையில் நாங்களும், அந்தத் திரையில் அவர்களுமாக இருந்து உணர்வின் பாலங்கள் ஊடாக பயணம் செய்தோம். அந்தப் பயணத்தின் போது துளசிச் செல்வன் அற்புதமான மனிதனாக எம்முள் உயர்ந்து நின்றார்.

தலைவருடைய விடுதலைப் பாசறையில் ஒளிரும் அழகிய ஆயிரம் ஆயிரம் நட்சத்திரங்களில் அவரும் ஒருவரே. அவர் விடு தலைக்கான செயற்பாடுகளில் பன்முகத்தளங்களில் இயங்கு கின்றவர்.

ஆற்று நடையான பேச்சொழுக்கு. அமைதி, பண்பு,இன்சொல் நிறைந்த அவரது உரையாடலை எரிமலை வாசகர்களுடன் எழுத்து ருவில் பகிர்ந்துகொள்வதில் நாம் சந்தோசம் அடைகிறோம்.

**நீங்க எவ்வளவு காலமா எங்கட விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து செயற்படுகிறீர்கள்?**

துளசிச்செல்வன்: 1995ம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து கிட்டத்தட்ட பத்து வருடங்களாக இந்தப் போராட்டத்தோட வேலை செய்கின்ற பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

**எங்கட விடுதலைப் போராட்டத்தில எவ்வகையான மன உந்துதலில் நீங்கள் இணைந்துகொண்டீர்கள்?**

துளசிச்செல்வன்: இது ஒரு ஆதங்கம். இதைப் பற்றி முதல் தடவையாக நீங்கள் தான் பகிரங்கமாக கேட்கின்றீர்கள். போராட்டத்திற்கு ஒரு போராளி தயாராவது என்பது ஒரு விபத்தல்ல. அது மனதில் ஏற்படும் மாற்றம்.
எங்களுடைய சூழல் போர் நடந்துகொண்டிருக்கின்ற ஒரு சூழல். யுத்தம் தானே, நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கை.
பள்ளிக்கூடத்திலும் சரி, பக்கத்து வீட்டிலும் சரி, பத்திரிகையிலும் சரி இத்தகைய சூழலுக்குள் தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.
அப்படியான சூழலுக்குள் நான் வாழ்ந்திருக்கின்றன். பசி, பட்டினி, அவலம் போன்றவற்றை பக்கத்தில பார்த்து பத்திரிகையில் படிச்சுத்தான் போராட வேண்டிய தேவை எனக்கு இல்லை. ஏனென்றால் நானே எல்லாம் அனுபவிச்சிருக்கிறன்.
நானே இடம்பெயர்ந்து கோயிலில் படுத்திருக்கிறன். கெலிக்காரன் சுடுவான் எண்டு போட்டு சேட்டை களட்டிப்போட்டு வெறும் மேலோட ஓடிப் பதுங்கிய அவமானம் அப்படியெல்லாம் இருக்கு.
ஆனால் உண்மையை மனம் திறந்து சொன்னால்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


திலீபன் அண்ணையினுடைய சாவு என்னை சின்ன வயசிலேயே பாதிச்சது. அடுத்தது தலைவரைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை, ஒரு நேர்த்தியை சின்ன வயசிலேயே அறிஞ்சிருக்கிறன். மூத்த போராளிகள் வீட்ட வந்து போவதால் அறிஞ்சிருக்கிறன். அப்பா ஒரு சரியான கொள்கையை ஆதரிக்கக்கூடிய மனிதர் என்பதால் நிறையப் போராளிகள் வந்து போவதால தலைவருடைய நேர்த்தி பிடித்திருந்து. அதோட காசி அண்ணையினுடைய பாட்டு, குறிப்பாக வந்து "மாங்கிளியும் மரங்கொத்தியும்" வந்து நான் இயக்கத்துக்கு வர முதல் அடிக்கடி பாடிக்கொண்டிருந்த பாட்டு. ஆனால் "நெஞ்சம் மறக்குமா", "எதிரிகளின் பாசறையை தேடிப் போகின்றோம்" என்ற புதுவை அண்ணையினுடைய பாட்டு இதையெல்லாம் நான் மேடை வழியிலெல்லாம் பாடியிருக்கிறன்.
அப்ப இது போன்ற தாக்கம் அப்படிக் கூட்டுச் சேர்ந்து நான் கடைசியா பதினோராம் ஆண்டு படிச்சுக்கொண்டிருக்கிறன் இனியும் அதைத் தாங்கேலாது எண்ட மாதிரி இறுதி அழைப்பு - அதாவது சந்திரிக்கா சமாதானம் தருவா என்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கேக்குள்ள ஒரு சதிய எங்கள் மீது திணிக்க வெளிக்கிடுறார் விமானத்தை அடிச்சு விடுதலைப் புலிகள் ஒரு தாக்குதலை ஆரம்பிச்சினம். இதுதான் இறுதி அழைப்பு என்கிறார்கள் யாழ்குடா நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு விடுதலைப் புலிகள் விட்டிருந்த அந்த அழைப்போட எனக்கு போராடவேண்டிய வயசெல்லையும் வந்திட்டுது என நான் நினைக்கிறன். அதுக்குப் பிறகும் இருக்கிறது பொருத்தமா தெரியேல்ல இந்த வகையில தான் நான் போராட்டத்துக்குள் என்னை இணைச்சுக்கொண்டன். மற்றும்படி நான் உந்துதல் ஒரு தாக்கம் என நினைக்கவில்லை, கருதவில்லை.

**நீங்க மண்ணில் அனுபவித்து வந்த துயரங்களுக்கும், மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட அடக்குமுறைகளுக்கும் எதிராக நீங்க போராட முற்பட்டீர்கள். நீங்க உங்களை போராட்டத்துடன் எவ்வாறு இணைத்துக் கொண்டீர்கள். உங்களுடைய கனவுகளுக்கும், சிந்தனைகளுக்கும், எண்ணங்களுக்குமான பாதையை அது திறந்துவிட்டதா?**

துளசிச்செல்வன்: போராட்ட சக்தியுடன் எங்களை இணைத்துக்கொள்வது அவ்வளவு கஸ்டமான வேலையில்லை போராட்டம் எனக்கு பக்கத்திலேயே இருக்கிறது விடுதலைப் புலிகள் எங்களோட இரண்டறக் கலந்த சூழலில் இருக்கின்றனர். எங்கட வீட்டில இருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் நடந்தால் விடுதலைப் புலிகளின் முகாம் இருக்கிறது அப்ப நாங்கள் தேடிப்போக வேண்டிய தேவை இருக்கவில்லை ஆனால், போராட வரேக்க சிந்தனை முழுதும் ஆமியைச் சுடலாம் நேர போய் களத்தில நிக்கலாம் எண்டு எல்லாரும் நினைக்கிறது போல தான் நானும் நினைச்சன்.

உடன் றெயினிங் முடிஞ்சோன்ன குப்பி, தகடு, றைபிள் தரப்படும்போய் முன்னணிக்காவலரணில் நிண்டு ஆமி வரச் சுடுகிறதுதான் வேலை வேற நிர்வாகமோ, படிப்போ அல்லது ஏனைய எந்த வேலைகளுக்கும் களம் இருக்காது எண்டுதான் நான் நினைச்சன் போராடத்துக்குள்ள இணைஞ்சவுடன் அடிப்படைப் பயிற்சி முகாமிலேயே பல்வேறு தரப்பட்ட களங்கள் இருக்கிறது படிப்பை நாங்கள் தொடர்வதற்கும், கல்வியால இந்தப் போராட்டத்துக்கு பங்களிப்பு செய்யிறதுக்கும், கலையால பங்களிப்புச் செய்யிறதுக்கும் அங்கு களங்கள் இருந்தன. அதாவது எந்த ரீதியாக இந்த போராட்டத்தைப் போராளி முன்னெடுக்க விரும்புகிறாரோ எது அவருடைய உச்ச அளவு விளைவைக் கொடுக்குமோ அதுக்கு, தலைமையும் சரி, போராட்டமும் சரி ஒரு களம் அமைச்சுத் தருவதற்குத் தயாராக இருந்தது.

அப்ப நான் நினைச்சு வந்ததிலும் பார்க்க உண்மையில ஒரு உயிரைக் கொடுக்கலாம், போனோண்ண சண்டையைப் பிடிக்கலாம், நாலு ஆமியைச் சுட்டுபோட்டுச் சாகலாம் எண்டு வேகத்தோட வந்த எங்களுக்கு, இல்லை, நாங்கள் படிச்சும் இந்த போராட்டத்தை முன்னோக்கச் செய்யலாம் என்ற நம்பிக்கையை எனக்குள் வளர்த்தது. இன்னும் ஒரு பிரச்சனையைப் பார்த்தனான் யுத்தம் செய்யிறதுக்கும் படிக்கவேணும் எண்டதை இந்தப் போராட்டம் உணர்த்தியிருக்கிறது எங்களுடைய தலைமை உணர்த்தி இருக்கிறது.

படிச்சாத்தான் யுத்தம் செய்யலாம். தந்திரங்கள், உபாயங்கள், வேற நாட்டு இராணுவங்கள் அடைந்த பின்னடைவுகள், வரலாற்று ரீதியாக நடந்த போர்கள், மற்றைய விடுதலைப் போராட்டங்கள் எப்படி நடந்தது, மற்ற நாடுகள் எப்படி விடுதலை அடைஞ்சது என்று சொல்லி எல்லாத்தையும் படிச்சு ஒரு தெளிவின் உயரத்தில் நின்று கொண்டு எங்கட விடுதலைப் போராட்டத்தை நேசிக்கிறத்துக்கு அதற்கு பணி செய்வதற்கு தலைமை ஒரு களம் அமைச்சு தந்திருக்கிறது.

உண்மையில, உறுதி என்று நாங்கள் கருதினால் அது தெளிவின்பால் புகட்டப்பட்ட ஒன்று. உணர்வின்பாற்பட்டு இந்தப் போராட்டத்துக்குள் இணைந்தாலும் அது அறிவும், உணர்வும் கலந்த கூட்டுக் கலவையாகக் கலந்து இந்தப் போராட்டத்துக்குள் நீடிக்கவைச்சிருக்கிறது. அது ஒரு மிகப் பெரிய களம். இப்ப நாங்க வெளியில இருந்து கூட படிச்சிருந்தா எனக்கு மருத்துவப் பிரிவுதான் கனவாக இருந்தது அந்த வருத்தம் சில சில நேரங்களில, போராட்டத்தின் ஆரம்பத்தில, எனக்கு வந்து பயிற்சி காம்பில தாக்கமா இருந்தது மனதுக்குள் அதை நினைச்சு அழுதும் இருக்கிறன். அதாவது பல்கலைகழகத்துக்குப் போகோணும் என்பது யாழ்ப்பாணத்தில இருக்கிற சராசரி மாணவர்களின் கனவு எனக்கும் ஆரம்பத்தில இருந்தது ஆனால், இப்ப வந்து நான் மறுவழமாக யோசிக்கிறன் கடவுளே! வெளிய ஒரு சராசரி மாணவனாக இருந்து பல்கலைக்கழகம் போய் என்ர பணிய வந்து ஒரு மருத்துவத்துக்குள்ளயோ அல்லது இன்னும் ஒரு துறைக்குள்ளயோ மட்டுபடுத்தாமல் ஒரு பரந்துபட்ட ரீதியாக செய்யிறதுக்கும், அறியிறதுக்கும் வாய்ப்பு தந்ததை இட்டு நான் உண்மையில சந்தோசப்படுகிறன்.
இனிமேல் இல்லை என்கிற அளவுக்கு ஆத்மதிருப்தி அடைகிறேன். ஒரு நாள் இந்தப் போராட்டத்துள் இணைந்து வீரச் சாவு அடைந்திருப்பினும் நான் பெருமதியாகக் கருதுவேன். ஏனென்றால் பரந்து பட்ட நோக்கில் நிறைய வேலை செய்யலாம். இருபத்தி நான்கு மணித்தியாலங்களும் வேலை செய்யலாம். போராட்டம் எமக்கு களம் அமைச்சுச் தந்திருக்கிறது.

**எங்களுடைய படையணிகள் குறித்து சொல்லுங்களேன்?**

துளசிச்செல்வன்: எங்கட படைகட்டுமானமோ, நிர்வாகக்கட்டுமானமோ அல்லது மக்கள் கட்டுமானப்பணிகளோ எதுவென்றாலும் ஒவ்வொரு அசைவிலும், அதன் உருவாக்கத்திலும் முழுக்க முழுக்க தலைவர் நிற்கிறார். தலைவர் நிற்கிற விசயத்தில சகலதும் படித்தறிந்து யோசித்து தீர்க்கமான முடிவுகளின் பாற்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகள் ஆழமான மனித நேயமும் அதில் கலந்திருக்கும். குறிப்பாக படைக்கட்டுமானம் எண்டதுக்குள்ள ஒவ்வொரு விசயமும் அதாவது ஒரு நிலையெடுத்து நாங்கள் எதிரியைச் சுடுறது என்றாலும் சரி , ஒரு காப்பரணை அமைச்சு, நாங்கள் தங்கிறதெண்டாலும் சரி, அல்லது ஒரு போராளிக்கு மருத்துவ வசதி செய்யிறதெண்டாலும் சரி, ஒவ்வொரு விசயத்தையும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தலைவர்தான் நிர்ணயிக்கிறார். தலைவர் தான் அதுக்கான கட்டளையைக் கொடுக்கிறார். ஒரு சாக்குத் தொப்பி கட்டிக்கொண்டு ஒரு போராளி சண்டையில நிக்கவேண்டும் என்பது உட்பட சகலதையும் தலைவர் தீர்மானிக்கிறார்.

அவ்வளவு தூரம் ஒவ்வொரு விசயத்தையும் வரலாறுகளிலிருந்தும், எங்களுடைய புவியியல், நாங்கள் மோதிக்கொண்டிருக்கின்ற படையணியின்ர பலம் , சகலதையும் அறிஞ்சு குறிப்பாக காலத்தையும் அறிஞ்சு திட்டமிட்டு எங்கள் படையணிகள் வளர்க்கப்படுகின்றன. இதில சகலதையும் தலைவரே நேரில் பார்க்கின்றார்.
சிவராம் அவர்கள் குறிப்பிட்டது போல ஒரு அறிவு ரீதியாக பார்த்தால், தனிய யுத்தம் என்று சொல்லி பழைய போர்குணங் கொண்ட இனங்கள் எல்லாம் வாழ்ந்ததாக இல்லை.
போர்குணம் கொண்ட இனங்கள் அழிஞ்சதாகத்தான் வரலாறு இருக்கு.வரலாற்று ரீதியாக நாங்கள் சிலவற்றை அறிகின்றோம் "Aborigènes"அபோரீஜீன் என்று சொல்கின்ற இனங்கள் வந்து தந்திரம் தெரியாமல் அதாவது துப்பாக்கியுடன் வாற எதிரிகளை இயற்கையாகக் கிடைக்கிற அம்பு, வில் போன்ற ஆயுதங்களோட எதிர்த்த வரலாறுகளை எல்லாம் நாங்கள் படிக்கிறம்.
அது போன்று இல்லாமல், எங்களுக்கெண்டு படைக்கட்டுமானத்தை, எங்களுக்கெண்டு படையணியை, எங்களுக்கெண்டு ஒரு போர் தந்திரத்தை உருவாக்கி அதை நடைமுறையில கொண்டு வாறது எங்கட படையணியின்ர சிறப்புத் தன்மையாக இருக்கிறது. இதற்கு உதாரணமாக வந்து முல்லைத்தீவிலை வைச்சு எதிரி எங்களுக்கு அடிச்சுக்கொண்டிருந்த ஆட்லறிய எடுத்து குறிப்பிட்ட காலத்துக்குள்ளேயே ஆமியின்ர தலையில செல்லடிக்கக்கூடிய அளவுக்கு ஒவ்வொரு ஆமியின்ர கெல்மற்றில செல் விழ அடிக்கக்கூடிய அளவுக்கு எங்கட துல்லியம் இருந்தது. ஜெயசிக்குறுவில வந்து எங்களுக்கு அதுவும் ஒரு பக்கபலமாக இருந்து வெற்றி பெற்று தந்தது. துல்லியமான சூடு. ஆனால் அந்த துல்லியமன சூடு 1996 ஆம் ஆண்டு கைப்பற்றின ஆட்லறிகளில இருந்துதான் எங்களுக்குக் கிடைக்கத் தொடங்கியது. அதற்கு பிற்பாடுதான் எங்கட மோட்டார் படையணியின்ர பரிணாம வளர்ச்சியை ஏற்படுத்தினனாங்கள். அப்ப அவ்வளவு தூரத்திற்கு ஒரு ஆயுதத்தின்ர அதி உச்சப் பயனைப் பெறுகிற அளவுக்கு வந்து போராளிகளிட்ட தேடலும் அறிவும் உழைப்பும் இருந்தது. அவற்றை சரியாக வழி நடத்திக்கொண்டிருப்பது தலைவர். தலைவர் ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னாலையும் வழி காட்டிக்கொண்டிருக்கிறார்.

**சமகாலத்தில் கவிதை, பாடல், சிறுகதை, மொழிபெயர்ப்பு, வரலாறு, போரியல் போன்ற துறைகளில் ஈடுபாடும் அக்கறையும் கொண்டு செயற்படுகிறீர்கள் போர் அனுபவங்கள் குறித்த கவிதைகள் ஏதேனும் எழுதி இருக்கிறீர்களா?**

துளசிச்செல்வன்: எழுதியிருக்கிறன். கவிதை எழுதி இருக்கிறன், களச் சம்பவங்கள் எழுதி இருக்கிறன், இரு குறுநாவல் எழுதி இருக்கிறன் அதாவது புத்தக வடிவாக்கப்பட்டு வெளியிடாமல் பிரதியாக இன்னும் இருக்கிறது. அதை விட பாடல்களும் எழுதியிருக்கிறன். அனேகமாக சிறுகதை எழுதியிருக்கிறன். எல்லா இலக்கிய வடிவங்களுக்குள்ளும் ஒன்றோ, இரண்டோ எழுதியிருக்கிறன். நாட்குறிப்பாகவும் எழுதியிருக்கிறன், நான் பட்ட அனுபவம் அல்லது எனக்கு பக்கத்தில் நின்ற போராளிகள் அல்லது மூத்த போராளிகள் பட்ட அனுபவத்தைக் கேட்டு எழுதியிருக்கிறன். இதில தீச்சுவாலை சண்டையைப் பற்றி ஒரு பாட்டு எழுதினனான் “இலைகள் மறந்த மரங்கள் சொல்லும் காவலரண் கதைகள் சொல்லும்” என்னுடைய பார்வையில் பன்முக அர்த்தத்தில் தான் நான் அதை எழுதியிருக்கிறன். வெளிப்படையாகவே ஒரு அர்த்தத்தை நாங்கள் பார்த்துக்கொள்ளலாம். உள்ளார்ந்தமாக இன்னுமொரு அர்த்தமும் இருக்கும். அது ஒவ்வொரு வாசகனையும் பொறுத்த விடயம். களச் சம்பவங்கள் எழுதுவது ஒரு வித்தியாசமான அனுபவம். இப்ப அரியாலைச் சண்டையெல்லாம் நேரடியாய் நாங்கள் அரியாலை, நாவற்குழியெண்டு நிண்டு நேரடியாக பிடிச்ச சண்டை. அதை ஒவ்வொரு நிமிசம், நிமிசமாக பிரித்தெழுதியிருக்கிறன். யுத்த வரலாறு என்பது கடல் மாதிரி. அதில சின்னச் சின்னத் துளிகளான விடயங்களே இதுவரை வந்திருக்கிறது என்றால் அதில் எங்களுடைய விடயங்கள் எந்தளவானதாக இருக்கும் என்று மனக் கண்ணில் பாருங்களேன்.

**உங்களுடைய பாடல்கள் மக்கள் மத்தியில் எவ்வாறு சென்றடைந்தன அவை பற்றிய கருத்துக்கள் உங்களுக்கு கிடைத்திருந்தனவா?**

துளசிச்செல்வன்: இதை வந்து நான் சொல்வது அவ்வளவு சிறப்பாக இருக்காது. இருந்தும் நீங்கள் கேட்கிறதற்காகச் சொல்கிறேன். என்ன பிரச்சனை என்றால் பாடல் என்பது ஒரு கூட்டு முயற்சி. அதில பாடலாசிரியரினுடைய பங்கு ஒரு குறிப்பிட்ட வீதம்தான். இசை, குரல், பின்னணி வாத்தியக் கலைஞர்கள், ஒலிப்பதிவாளர்கள் எனப் பல்வேறுபட்ட கலைஞர்களுடைய உழைப்பு ஒரு பாட்டின் வெற்றியில் தங்கியிருக்கிறது. இருந்தாலும் அனேகமான எனது பாடல்கள் கவிதையாக வென்றிருக்கு. அந்தப் பாட்டு நல்லா இருக்கு என்று சொல்பவர்கள் ஒவ்வொரு கவிதை வரியையும் சொல்லிக் காட்டுகிற போது நான் மகிழ்ச்சியாக இருந்திருக்கிறன். வெளியில இருந்து ஒலிப்பதிவு தொடர்பாக எமக்கு கற்பிக்க வந்திருந்த ஒருவர் ‘கிட்டு எங்கள் காலக் குழந்தை’ எனும் பாடலுக்கு கிற்றாரின் ஒரு கம்பியில் அதை வாசித்துக் காட்டுவார். தான் ஒவ்வொரு நாள் காலையிலும் அதை வாசிக்கிறதாக சொல்லுவார். கிட்டண்ணையினுடைய காலத்தில் பணி செய்த ஒரு தேசபற்றுள்ள மனிதன். அப்படி வெளியிலிருந்து வந்தவர்களும் சொல்லியிருக்கினம். போராளிகளைப் பொறுத்த அளவில் புலிகளின் குரல் வானொலி ஊடாக ஒலிக்கும் ‘அப்பாவே பாரதி போல மீசை வைச்ச அப்பாவே’ என்ற ஒரு பாடலும் அடுத்தது ‘நெஞ்சம் முழுதும் நீயே’ என்ற பாடலும் கவர்ந்துள்ளதை அறிகிறேன். மிகக் குறைந்த அளவு பாடல்கள்தான் எழுதியுள்ளேன். இவையெல்லாம் புலிகளின் குரல் வானொலியின் நேயர் விருப்பத்தில அனேகம் விரும்பிக் கேட்கப் படுவதையும் அவதானித்திருக்கிறேன்.

ஒற்றைப்பனை மரப் பாடல், ஒரு குவளைத் தேனீர் பாடல் என என்னுடைய பாட்டின் ஏதாவது ஒரு வரியைச் சொல்லி நல்லா இருக்கு என்று பாராட்டுகிற மன நிலையை வைச்சு சந்தோசப்படுகிறேன்.

**விடுதலைப் பாடல்கள் சமூகத்தில் ஆற்றுகின்ற பணியை தாங்கள் உணர்வு பூர்வமாக அறிந்து கொண்டிருக்கிறீர்களா ?**

துளசிச்செல்வன்: பாடல் என்பது ஒரு செயலை நோக்கியதாக, நோக்கத்தைக் கொண்டதாக, ஒரு இலக்கை நோக்கியதாக இருக்கும் என்பதுதான் அதன் பொதுவான விதி. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோக்கத்தில் இருக்கும். போராட்ட காலத்தில் எழுதப்படுகிற தமிழீழ இலக்கியங்களைப் பொறுத்த அளவில் தமிழ்த் தேசியம் சார்ந்ததாகவும் நடந்துகொண்டிருக்கும் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கிறதாகவும் எல்லா இலக்கியங்களும் ஒருங்குகுவிக்கப்படுவதுதான் எங்களுடைய


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பொதுவான குணம். அந்த வகையில் எங்கள் பாடல்கள் வந்து போராட்டத்திற்கு, அதாவது எங்கள் பொது நோக்கத்திற்கு, தலைவருடைய சிந்தனைக்கு எவ்வளவு செயல்வடிவம் கொடுத்திருக்கிறது. என்பதைத்தான் நீங்கள் கேட்கிறீர்கள் என நான் உணர்கிறேன். அது நிறைய நடந்திருக்கு, இப்ப ஜெயசிக்குறு களத்தில நிண்டு கொண்டிருக்கிற போது எங்களுக்கு எவ்வளவோ பாட்டு உற்சாகப்படுத்தியிருக்கு. இப்ப ஜெயசிக்குறு தொடர்பாக ஐந்து பாடல்கள் புதுவை அண்ணன் எழுதியது. அந்த பாடல்கள் வந்தன.

'சுக்கு நூறானது சிக்குறு' என்ற பாட்டு இருக்கு. மட்டக்களப்பு நோக்கிப் போகும் மேகங்களைப் பார்த்து மட்டக்களப்பு போராளி ஒருவர் பாடுற மாதிரி போராளிகளின் மனதை தெம்பு ஊட்டுவது மாதிரி ஒரு பாடல் இருக்கிறது. போராளிகளின்ர மனதை ஆற்றுப்படுத்தும் முறையிலும் அமைந்திருக்கின்றன. அதே மாதிரி காசி அண்ணையினுடைய பாட்டுகளும் வீட்டிலிருந்த காலங்களிலும் சரி, இப்பவும் சரி புது உற்சாகத்தை ஏற்படுத்தும் வகையில அந்த பாட்டுகள் அமைஞ்சிருந்தது. மக்கள் மத்தியில 'ஒவ்வொரு தமிழனும் ஒவ்வொரு தீப்பந்தம் ஓடு பகையே ஓடு' என்ற பாட்டு மற்றும் 'எடுகையில் வெடிகுண்டு புலியே நீ வாடா அட உன் மண்ணில் சிங்களவன் நாடா என்னடா உனை நினைத்தான் சிங்களவன் புழுவாய், திசையெட்டும் அதிர்கின்ற வெடியாய் நீ எழுவாய்' என்று சொன்ன அந்த பாட்டை ஒவ்வொரு வீட்டிலையும் கேட்கின்ற போது, ஒவ்வொரு நிகழ்விலும் சின்னப் பிள்ளைகள் பாடுகின்ற போதும் அந்த நிமிர்வை எங்கட இனத்துக்குரிய அந்த தனித்துவத்தை நாங்கள் அதில பார்க்கின்றோம். அப்படி நிறைய மாற்றங்கள் நிகழ்ந்திருக்கு. எங்கட இனத்தின்ர இயல்புகளில ஒரு பண்பு பாடல்களோட கூட பிறந்ததும் தான். அப்ப அந்த கூடப்பிறந்த பாட்டோடு பாட்டாக இந்தப் பாடல்களும் மாறியிருக்கிறது.

திருமண வீடுகளிலும் கூட போராட்ட பாடல்கள் ஒலிக்கின்றன. முன்பள்ளிகளில் போய் ஒரு பாடலைப் பாடச் சொல்லிக் கேட்டால் குழந்தை எங்கட பாடல்களை பாடும். அவ்வளவு தூரத்திற்கு, தன்மான உணர்வையும், நிமிர்வையும் இந்தப் பாடல்கள் கொடுத்திருக்கின்றன. மக்களை ஒன்று திரட்டி இருக்கிறது. இந்த நிலையை அடைவதற்கு புலிகளின் குரல் கணிசமான பங்கு ஆற்றியிருக்கிறது. விடுதலைப் போராட்டத்துக்கு நெருக்கடி என்பது சர்வசாதாரணம். எங்களுக்கும் நெருக்கடி வந்திருக்கிறது. வரலாற்றை நீங்கள் அறிஞ்சால் வரலாற்றூடாக பார்த்திருப்பீர்கள். அந்த வகையில் 'புலி ஒரு காலமும் பணியாது' பொன்கணேசமூர்த்தி எழுதிய பாடல். அந்தப் பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்ட விதமே ஒரு வரலாறு. யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து காட்டுக்குள்ளே ஒரு கூடாரம் அடிச்சு இருந்தனாங்கள். முல்லைத்தீவு சண்டைக்கான பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டு. அப்ப அந்த பாட்டை ஒவ்வொரு நாளும் காலையில் நாங்கள் பாடுவோம். அது எங்களுக்குள் இனம் புரியாத நம்பிக்கையை கட்டி வளர்த்தது. எல்லா வானொலிகளிலும், எல்லா ஊடகங்களிலும், ஏன் மக்கள் கூட நாங்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வந்தது பின்னடைவு எனக் குறிப்பிட்டார்கள். அப்படி நினைச்சுக்கொண்டிருக்கேக்க அந்தப் பாடல் இன்பத்தைத் தந்த பாடல்.

போராளியாக இருந்துதான் உங்களோட நான் பேசிக்கொண்டிருக்கிறன். என்னுடைய சூழல் அப்படி. கூடியபாகம் தலைவரைப் பற்றி காசி அண்ணன் எழுதிய பாடல்கள் அந்த நம்பிக்கைக்கு உரம் சேர்த்திருக்கு. அவ்வாறே அது மக்களுக்குள்ளும் இயங்கியிருக்கு. எவ்வளவோ அழுத்தம் நிறைந்த போர்ச் சுமையை எமது மக்கள் சுமக்கேக்க அந்த நிமிர்வில அவையள் அடுத்த கட்டத்திற்கு தங்களைத் தயார் படுத்தினார்கள். உதாரணமா துயிலும் இல்லப் பாடல், துயிலும் இல்லப் பாடல்களுக்காகவேண்டியே போற போராளிகள், மக்களைப் பார்த்திருக்கிறன். அழுகையோட மட்டும் அந்த வீரனுக்கு அஞ்சலி செலுத்தாமல் அந்த வீரனுடைய இறுதி வணக்கத்தில் கலந்துகொண்டு பாட்டைக் கேட்டு தான் மீண்டும் எழவேண்டும். வித்துடல் பீடத்தில் இருக்கும் போது ஒலிக்கும் பாடலாக இருந்தாலும் சரி, 'எங்கள் தோழர்களின் புதை குழியில் மண் போட்டுச் செல்கின்றோம் இவர்கள் சிந்திய குருதி தமிழீழம் மீட்பது உறுதி' என்ற அந்த நம்பிக்கையைத் தருகின்ற பாடலாக இருந்தாலும் சரி அதற்காக துயிலும் இல்லத்திற்கு போய் அஞ்சலி செலுத்தி உறுதி எடுத்து வருகிறார்கள். அந்தப் பாடல்களைக் கேட்டு போராட்டத்தில் இணைந்த நிறைய மக்களைப் பார்த்திருக்கிறன். போராட்டத்தில் இணைந்த பல போராளிகளை கேட்கேக்குள்ள காசி அண்ணையிர பாட்டுகள் அல்லது புதுவை அண்ணையினுடைய பாடல்கள் ஒரு வேகத்தை தந்தன என்பார்கள். போராட்டத்துக்குள் இணையவேண்டும் என்று பல பேருக்கு இப்ப வந்த பாடல்கள் வேகத்தை கொடுத்திருக்கு. பாடல்கள் மக்களைச் சென்று தொடுகின்றன என நான் நம்புகிறேன். குறிப்பாக கரும்புலிகள் வீரச்சாவடையேக்குள்ள உடனடியாக புலிகளின் குரல் வெளியீடாக வந்த பாடல்கள். சிட்டண்ணை வீரச் சாவடைந்த போது சிட்டண்ணை பற்றி வந்த பாடல்கள், கிட்டண்ணை வீரச் சாவடைந்த போது கிட்டண்ணையின் வீரச்சாவு பற்றிய செய்தி பாட்டோடதான் வந்தது. 'தளராத துணிவோடு படகேறினாய்'. அப்படி ஒவ்வொரு செய்தியையும் காவிக்கொண்டு வரேக்குள்ள அது சடாரென மக்களின் மனங்களில் இடம்பிடித்துக்கொள்கிறது. என்ன செய்யவேணும் என்பதையும் பாடல் ஆசிரியர்கள் குறிப்பாகச் சொல்லினம். அடுத்த கட்டம் எப்படி? எங்கட இலக்கு எது? எண்டதச் சொல்லுது, சோகத்தைச் சோகத்தோட சொல்லிப்போட்டு விடாமல் அதுக்கு ஒரு வீச்சு சோகத்துக்கு செயல்கொடுக்கோணும் என்றால் அது வீரமாக, உறுதியாக மாற்றப்படுகிற இந்த போராட்டப் பங்களிப்பில எங்கட போராட்ட பாடல்கள் செய்திருக்கிறது என்றதை நினைக்கிறன்.

போராட்டக் கவிதைகள் குறித்து அதுவும் குறிப்பாக போராளிக் கவிஞர்கள் மரங்களிலும், காப்பரண் சுவர்களிலும், இடியுண்ட சுவர்களிலும், கொட்டில்களிலும், மனங்களிலும் எழுதிய கவிதைகள் பற்றிச் சொல்ல முடியுமா? அவர்களுடைய உணர்வுகளை எழுதி மறைத்து வைத்து விட்டுக் கூடப் போயிருக்கலாம் அதை நீங்கள் அடையாளம் கண்டிருப்பீர்கள், அறிந்திருப்பீர்கள் உணர்ந்திருப்பீர்கள் என்ற வகையில் கேட்கிறேன்?

துளசிச்செல்வன்: மிக வருத்தமான கேள்வி. இந்த விசயத்தை கதைக்க வெளிக்கிட்டாலே நெஞ்சு அடைச்சுக் கொள்கிறது மாதிரியான துயரம் என்னுடைய வாழ்க்கையில் உணர்ந்திருக்கிறன். இப்ப நாங்கள் உங்களுடன் இருந்து கதைச்சுக்கொண்டிருக்கிறதும் சரி, அல்லது நாங்கள் நோர்வேயுடன் கதைச்சுக்கொண்டிருக்கிறதும் சரி எல்லாத்துக்கும் காரணம் எங்கட உயிர்த்தியாகம். இண்டைக்கு அடிமைபட்டுப் போன இனத்தை பலநூறு வருட காலமாக போர் என்ற தன்மையை மறந்து பிழையான கருத்துருவாக்கங்களுக்குள்ளால வளர்ந்து புரையோடிப்போய் எங்கட தனித்தன்மையை இழந்து போன ஒரு இனத்தை நிமிர்த்தினது என்று சொல்லிச் சொன்னால், நாங்கள் குறிப்பிட்ட காலத்துக்குள்ள முப்பது முப்பத்திரண்டு வருடங்களுக்குள் நாங்கள் அதை செய்திருக்கிறம் என்று சொல்லிச் சொன்னால் அவ்வளவு காலமும் தலைவர் அதுக்காகவேண்டி அயராது உழைச்சிருக்கிறார். அந்த தலைவற்ற உழைப்பை செயலில கொண்டுவாறத்துக்காக பலபேர் உயிரையும் கொடுத்திருக்கினம். பதினேழாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் வீரச்சாவு அடைந்திருக்கினம். நிறைய

www.tamileelamarchive.com

கரும்புலிகளும் தற்கொடையாகி இருக்கினம். அந்தளவு வீரச்சாவுக்குள்ளையும் நாங்கள் இழந்துபோன அற்புதங்கள் எவ்வளவோ. ஏன், கிட்டண்ணேயே ஒரு சிறந்த எழுத்தாளர். நான் விரும்புற, நேசிக்கிற எழுத்தாளர்களில கிட்டண்ணா முதலாவது ஆள். ஏனென்றால் எழுதுறதோட மட்டுமில்லாமல் செயலில நிண்டவர். செய்ததைத்தான் எழுதினவர். அப்படியான ஒரு மிக அற்புதமான படைப்பாளி தமிழை அல்லது ஒரு இலக்கியப் படைப்பை தன்ர உயிராலையும் எழுதக் கூடிய ஒரு தகுதியோடு எழுதின ஒரு அற்புதமான மனிதர். திலீபண்ணை ஒரு எழுத்தாளர். ஒவ்வொரு போராளிகளுமே எழுத்தாளர்தான். அவை கொப்பியில, அல்லது மைக்கை பிடிச்சு ஒரு மேடையில தங்கட திறமையை வெளிப்படுத்தாட்டியும் தங்கட துப்பாக்கியோட அந்தக் காலத்தில என்னத்தை எழுதவேண்டுமோ அதை எழுதியிருக்கினம். அந்த எழுத்துகளின்ர விளைவு நாங்கள் இப்ப கண்ணுக்கு முன்னால பார்த்துக்கொண்டிருக்கிறோம். சங்கரண்ணையின்ர சாவினை ஒரு கவிதையாக, ஒரு இலக்கியமாக அல்லது ஒரு வரலாறாக நாங்கள் பார்க்கலாம். அது ஒரு சரித்திரம். அதை அவர் எழுதி இருக்கிறார் தன்ர சாவால. ஒவ்வொரு சாவும் அப்படித்தான் நிகழ்ந்திருக்கு. திலீபண்ணை ஒரு வித்தியாசமான சரித்திரத்தை எழுதியிருக்கிறார். மில்லரண்ணா எழுதியிருக்கிறார், அன்னை பூபதி அம்மா எழுதியிருக்கிறார், மாலதி அக்கா எழுதியிருக்கிறார், அப்படி ஒவ்வொரு தொடக்கங்களும், தொடர்ச்சிகளும் ஒரு முன்னோடிகளாக, ஒரு கவிதையாக அல்லது ஒரு ஆக்கமாக, ஒருவரலாறாக, அவையன்ர செயலே ஒரு படைப்பாக வந்திருக்கு. அதுக்குள்ளையும் அந்தச் செயலை எழுதக்கூடிய திறமையோட பலர் உருவாகியிருந்திருக்கினம்.

இப்ப வானதியக்கா, கஸ்தூரி அக்கா, பாரதியக்கா, மலரவன் அண்ணை, சங்கீதன், சிட்டண்ணா, அமுதா-மாலதி படையணியிலிருந்த ஒரு போராளி. கரும்புலி நிலவன், கரும்புலி அறிவுக்குமரன் கரும்புலிகளாக இருந்து எழுதின ஆக்கள் இப்ப உடனடி ஞாபகத்தில வராத பல போராளிகள் வந்து இந்தப் போராட்டத்தோட தங்களின்ர எழுத்துத் திறமையை வெளிப்படுத்தியிருக்கினம். அவ்வளவு பேரையும் உடனே கண்ணுக்குள் கொண்டுவரமுடியாமல் இருக்கு. ஆனால் பல பேர் இந்தப் போராட்டத்துக்காகப் போராடி போட்டு தாங்கள் பிடித்தச் சண்டையை எழுதி அதை வெளியிட்ட சம்பவங்களும் நிறைய இருக்கு. கடலில வந்து, கடல் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்து போட்டு, ஈர உடுப்போடு பயிற்சி செய்துபோட்டு, ஒரு மணித்தியால இடைவேளை கிடைக்கும் போது வந்து கரும்புலி தாக்குதலுக்கான பயிற்சியை தாங்கள் செய்துகொண்டிருக்கிறம் எண்டதை கருத்தில் கொண்டு, அந்த ஈர உடுப்போட வந்து சாப்பிட்டு போட்டு, உடனடியாக ஒற்றை எடுத்துக்கொண்டு ஒற்றையைக் கீழ வைச்சு எழுதினா நனையும் எண்டத்துக்காவேண்டி தூக்கி தனது முகத்துக்கு நேரே வைத்து எழுதின கவிதை கூட தமிழீழத்தில் பிரசுரமா இருக்கு. அப்படி பல்வேறு தரப்பட்ட போராளிகளை நாங்கள் கண்டிருக்கிறம், சந்திச்சிருக்கிறம். சிலபேற்ற ஆக்கங்களைச் சந்திச்சிருக்கிறம். ஆக்கங்களைச் சந்தித்து அட இந்தக் கவிதை நல்லா இருக்கு யாரு இதை எழுதினது எண்டு கேட்டா அந்த எழுத்தாளன் ஜெயசிகுறுவில வீரச்சாவு அடைந்திருப்பான். சங்கீதன் ஒரு கவிஞன், ஒரு பாடகன் அவருடைய கவிதைகளைப் பார்க்கேக்க அவர் எங்கே எண்டு கேட்டால் அவர் வீரச்சாவு.

அறிவுக்குமரன் அண்ணர் எண்டால் அவர் ஒரு கரும்புலிவீரர், அவர் ஒரு மேடைப் பேச்சாளர், அவர் ஒரு எழுத்தாளர், பாடலாசிரியர். பல்வேறு பரிமாணங்களில் தன்னை வெளிக்காட்டிக்கொண்டிருந்த ஒரு மனிதன். அவரைப் பற்றி நாங்கள் தேடத் தொடங்க அவர் கரும்புலியாக முதலே அவருக்கும் எனக்கும் ஒரு உறவு இருந்தது. மக்கள் அவரைப் பற்றி அறிய வெளிக்கிடேக்க அவர் வீரச்சாவு. நிலவன் அப்படி தலைவர் பற்றி ஒரு அற்புதமான பாட்டை எழுதியவர். ஏராளமான கவிதை எழுதினவர். இன்னும் நிறையப் பேர் வாழ்ந்துகொண்டிருக்கினம். அப்ப மலரவன் அண்ணா கூட எங்கட போராட்டத்தில ஒரு போராளியா நிண்டு கொண்டு ஒரு போர் நாவலைப் படைச்சார். அது எங்களுக்கு ஒரு கட்டுடைச்ச செயல்பாடு. அது ஒரு புதுமை.

அப்படி தந்த மலரவன் அண்ணையே வீரச்சாவு. பாரதியக்கா, வானதியக்கா




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

"எழுதுங்களேன் எழுதாத என் கவிதைகளே
எழுதங்களேன் என்னால் எழுதமுடியவில்லை
எல்லையிலே என் துப்பாக்கி எழுந்து நிற்பதனால்
என்னால் எழுத முடியவில்லை எழுதுங்களேன்.
நான் எழுதாது செல்லுகின்ற கவிதைகளை எழுதுங்களேன்"

என்று சொல்லி ஆனையிறவுச் சண்டையில் நின்று கொண்டு வானதியக்கா எழுதிய கவிதை.
அப்படிச் சண்டையில நிற்கேக்க, மருத்துவமனையில் நிற்கேக்குள்ள, பயிற்சியில் நிற்கேக்குள்ள, நகர்ந்துகொண்டிருக்கேக்குள்ள சடாரென கவிதை வந்திடும். அப்ப நீங்கள் ஒரு படைப்பாளியா இருக்கேக்குள்ள அந்த அவஸ்த்தையை நீங்கள் உணருவீர்கள் என்று நினைக்கிறன். சடாரென ஒரு ஆக்கம் வந்தா அதை எப்படியாவது பிரசுரித்தே ஆகவேண்டும் அல்லது அது வந்து ஒரு ரண வேதனை. ஆனால் அந்த வேதனையோடு வீரச்சாவடைந்தோர் கனபேர். தங்கட கவிதை, தங்கட பாட்டு, தங்களின்ர கதை வானொலியில வாறதக்கேக்கோணும் எண்டத்துக்காக இருந்து கேட்காமல் வீரச்சாவு அடைந்தவர்களின் பெயர்கள் எனக்குத் தெரியும். அவையை நான் சந்திச்சிருக்கிறேன், அவையோடு வாழ்ந்திருக்கிறன், தங்களின்ர ஆக்கம், தங்களின்ர களச் சம்பவம் பத்திரிகையில வரவேணும் எண்டதுக்காக



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாத்துக்கொண்டிருந்து அது வரமுதல் வீரச் சாவடைந்து அது வெளிவந்த சம்பவங்களை பாத்திருக்கிறன். அப்படிப் பல்வேறு தரப்பட்ட நிலைகளில, பல்வேறு தரப்பட்ட உணர்வுகளோட வாழ்ந்த அற்புதமான எழுத்தாளர்கள் நான் மதிச்சு வாசிக்கிற எழுத்தாளர்கள், நேசிக்கிற எழுத்தாளர்கள் என்று சொன்னால் நிச்சயமாக அவர்களாகத்தான் இருக்கும். உண்மையை எழுதி, உண்மையாகவே வாழ்ந்து போன மனிதர்கள் அவர்கள். அவைகளுக்கு நாங்கள் எந்த விருதைக் கொடுத்தும் கௌரவிக்கவும் முடியாது. வேணுமென்றால் அந்த விருதுகள் தாங்கள் கௌரவப்படவேண்டும் என்று சொல்லிச் சொன்னால் ஒரு தடவை அவர்களுக்கு சமர்ப்பிச்சு அந்த விருதுகள் தங்களை கௌரவப்படுத்திக் கொள்ளலாம். எந்த பரிசாகவும் இருக்கட்டும் இலக்கியத்தில நோபல் பரிசாக இருக்கட்டும் அல்லது வேற எந்த அதி உயர் உச்சமான பரிசாக இருக்கட்டும். அவையளின்ர ஆக்கத்துக்கும், அவையளின்ர வாழ்க்கைக்கும் ஒரு இணைவிருக்கு. இரண்டையும் இணைச்ச ஒரு வாழ்க்கையையே, எழுதினதேயே செயலிலையும் செய்யக்கூடிய ஒரு மன நிலையோட எழுதின கவிஞர்கள் என்ற ரீதியான கௌரவம் அந்த மனிதர்களுக்கு இருக்கு. இப்ப நீங்கள் கேட்டியள் மரத்தில எழுதினது, தாளில எழுதினது, அந்த சம்பவம் ஏராளமா இருக்கு. நான் அந்த சம்பவங்களை கண்ணூடாக கண்டிருக்கிறன், நான் அனுபவிச்சிருக்கிறன். ஒரு தடவை நாங்கள் ஒரு சண்டைக்கான பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தனாங்கள். 'ராக்கெட்' அதாவது இலக்கு குறிப்புள்ளி ஒன்று வைச்சுத்தானே சூட்டுப் பயிற்சி செய்கிறனாங்கள். பயிற்சி முடிய அதின்ர பின்புறத்தில வந்து, கவிதை ஒன்று எழுதி வைச்ச அனுபவம் எனக்கு இருக்கு. அதே மாதிரி ஆனையிறவில, ஆனையிறவு பிடிச்சுபோட்டு நாங்கள் செம்பியன்பற்று, இயக்கச்சி பக்கத்தால வந்தனாங்கள். ஆனையிறவு என்ற அந்த மையத்தில நிக்கேக்குள்ள சடாரென கவிதை வந்திட்டுது. அப்ப எழுதிறதுக்கு அந்த இடத்தில ஒண்டுமில்லை. ஆமியின்ர ஆவணங்கள், அவன்ர விபரங்கள் எல்லாம் அங்குமிங்குமா சிந்திக்கிடந்தது. அதில ஒரு ஒற்றை எடுத்து எழுதி குறித்து வைச்சுபோட்டு பிறகு வந்து முகாமில நல்ல ஒரு கொப்பியில எழுதி வைச்ச அனுபவம் இருக்கு. 'தலைக்கவசம்' என்ற தலைப்பில அந்தக் கவிதை என்னிட்ட இருக்கு.அப்ப நானே இவ்வளவு தூரம் அனுபவிச்சிருக்கிறேன் என்றால் நாங்கள் ஒரு சாதாரண மிகக் குறைவான ஆக்கள். ஆனால் அந்த அற்புதமான மனிதர்கள் வீரச்சாவடைஞ்சவர்கள் அல்லது இன்னும் விடுதலைக்காகவேண்டி உழைச்சுக்கொண்டிருக்கிற எவ்வளவோ அற்புதமான மனிதர்கள் இன்னும் பல துன்பங்களை அனுபவிக்கலாம். இன்னும் பெறுமதியான இலக்கியங்கள் வெளிவராமல் அவர்களின் மனசுக்குள்ள அவையளோட சேர்ந்து குழிகளுக்குள்ளையும் இறங்கலாம். அல்லது இப்படி மரத்திலையும், இலைகளிலையும், கடல் கரை மணலிலும், காவலரண் சுவர்களிலையும் அந்தக் கவிதைகள், பாடல்கள் மூச்சுக் காற்றாய், இரத்தமாய் அவைகளின்ர நினைவுகளாக உறைந்து போய் இருக்கலாம். அது இல்லை என்று சொல்ல ஏலாது. வெளிவந்தது மட்டும் தான் போற்றத்தக்க இலக்கியம் என்று சொல்லி விட முடியாது வெளிவந்த இலக்கியங்களை விடவும் மேன்மையான இலக்கியங்கள் எவ்வளவோ புதைந்து போய் இருக்கலாம். வெளியில தெரிஞ்ச இலக்கியப் படைப்பாளர்கள் என்று சொன்ன அற்புதமான மனிதர்களை விடவும் எவ்வளவோ வல்லவர்கள், வித்துவான்கள், கலைஞர்கள், கவிஞர்கள் இந்த தேசியம் என்ற ஒரு இலக்குக்காக தங்கள் உயிர்களை அர்ப்பணிச்சிருக்கலாம். அவையள் தங்களின்ர செய்திகளை எழுதேல்ல. வெளியிடேல்ல. பேசேல்ல சாவின் மூலமாக அந்தச் செய்திய சொல்லியிருக்கினம், எழுதியிருக்கினம்.

எல்லாத்தையும் விட எங்கட தேசியம் முக்கியம், எங்கட நாடு முக்கியம், எல்லாத்தையும் பேணி பாதுகாக்கிறத்துக்கு எங்கட நாடு முக்கியம், அதுக்கு எங்களுக்கு வாய்த்திருக்கின்ற ஒரு தலைமை முக்கியம், தலைமையின்ர காலத்தில அதை செய்யவேண்டும் எண்டது முக்கியம். இவைதான் அவையின்ர வாழ்வு எல்லாத்துக்குள்ளையுமான ஒரு செய்தியாக இருக்கும் எண்டத நான் உணர்ந்து கொள்கிறன்.

**போராட்டத்தில் பல கள முனைகள் இருக்கிறது என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள் அந்தக் கள முனைகளில் எந்த துறையில் நீங்கள் இயங்கி வருகிறீர்கள்?**

துளசிச்செல்வன்: இதற்கு தலைவரினுடைய சிந்தனையை சொல்லலாம் என நினைக்கிறேன். "இப்ப எமது போராளிகள் போர்க் கலையை மட்டுமல்ல சகல கலைகளிலும் வல்லவர்களாக திகழ வேண்டும் என்பது எனது பெரு விருப்பம்" என தலைவர் தனது சிந்தனையில் சொல்லியிருக்கிறார். அந்த சிந்தனையோடு மட்டுமில்லாமல் பல தடவை பல சம்பவங்கள் நடந்திருக்கு. இப்ப பாருங்கோ ஒரு போராளியினுடைய நடன அரங்கேற்றம் அல்லது மிருதங்க கச்சேரியாக இருக்கட்டும், எந்த ஒரு நிகழ்வின்ர அரங்கேற்றம் என்று சொல்லிச் சொன்னாலும் அதுக்கு சமூகம் தந்து எவ்வளவோ வேலை பளுவுக்கு மத்தியிலையும் அதற்கு மதிப்பளிச்சு அந்த நிகழ்வில கலந்துகொள்பவர் எங்கட தலைவர். அந்த ஒரு நிகழ்வே காணும் நான் நீட்டி முழக்கத் தேவையில்லை. எங்கட தலைவர் இந்தக் கலையைப்பற்றி அக்கறைப்படுகிறார் என்பதை உணர்ந்து கொள்வதற்கு. இதை விடவும் நான் நேரடியாக சந்தித்த நிறைய சம்பவங்கள் இருக்கு. உதாரணமாக பயிற்சிப் பாசறையில் எங்கட முகாமில் நடந்த ஒரு நிகழ்வில தலைவரும் கலந்துகொண்டவர். அந்த நிகழ்வில நான் ஒரு நாடகம் செய்திருந்தனான் 'நாமும் நா காப்போம்' என்ற பெயரில. அதுக்கு பாராட்டி ஒரு பரிசு தந்திருந்தார். அதை விட நாங்கள் ஒரு கவிதை ஒலி நாடா ஒன்று செய்து அதை தலைவர் கேட்பதற்காக கொடுத்துவிட்டிருந்தோம். அது ஆரம்பம் அதாவது மிக கற்றுக்குட்டியள் இப்பவும் கற்றுக் குட்டிதான், இப்பவே கற்றுக்குட்டியென்டா அப்ப என்ன நிலமையில இருந்திருக்கும் எண்டத புரிஞ்சுகொள்வியள் என்று நினைக்கிறன்.

கற்றுக்குட்டியா இருக்கத்தானே வேண்டும்(சிரிப்பு)

அப்படி கவிதை என்னவென்று தெரியாத நிலமையில் இருந்த ஆக்கள் நாங்கள். ஏதோ ஒண்டை எழுதி மூன்று பேர் சேர்ந்து ஒரு கவிதை ஒலி நாடா ஒலிப்பதிவு செய்து கொடுத்திருந்ததை மூண்டு நாலு தடவை தலைவர் அதைப் போட்டு கேட்டதாக நான் அறிஞ்சன்.
என்ர முதலாவது கவிதை அதாக இருக்கும் என்று நான் நினைக்கிறன். இந்தச் சம்பவம் நடந்த நேரம் ஜெயசிக்குறு சண்டை நடந்துகொண்டிருக்கிற சூழல். இந்தச் சூழலிலையும் தலைவர் இந்த ஒலிநாடாவை மூன்று நாலு தடவைக்கு மேலே கேட்டு தன்னை சந்திக்கவாற ஆக்களுக்கும் அத போட்டுக் காட்டி அது நல்லா எழுதியிருக்கிறாங்கள் இதை மேற்கொண்டு வளர்க்க வேண்டும், நிறைய வாசிக்க வேண்டும், அவர்களுக்கு புத்தகம் எடுத்துக்கொடுக்கவேணும் என்று சொல்லி அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து ஒரு அடித்தளத்தை போட்டு, மிகுந்த அக்கறையோடு செயற்பட்டார்.

இலக்கியப் படைப்பாளிகள் என்று சொல்லி முத்திரை வந்தாப் பிறகு அவர்களை கௌரவிக்கிறது வேற, அவர்களுக்கு விருது கொடுத்து, அல்லது அவர்களின் அரங்கேற்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வது வேறு ஆனால் முதலாவது தடவை முதல்

 www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முதல் ஒரு கவிதை எழுதின ஒரு போராளிக்குக் கூட இந்த நிகழ்வு நடந்திருக்கிறது எண்டத நான் இதில சொல்லிக் கொள்ள விரும்பிறன்.

மற்றது எந்த நிகழ்வில போனாலும் ஒரு போராளி நல்லாச் செய்தா உடன கூப்பிட்டு. அந்த போராளியை நல்லா செய்திருக்கிறியள் ஆனால் என்னென்ன விசயத்தை பார்க்கோணும் அது நடிப்பெண்டாலும் சரி, கவிதையெண்டாலும் சரி, பேச்செண்டாலும் சரி அதில உடனையே கூப்பிட்டு சம்பந்தபட்ட ஆளோட பாராட்டி, கதைக்கிறத நான் பல இடங்களில கண்டிருக்கிறன். நேரடியாக நிறைய பாடகர்களுக்கு தன்ர கைபட அன்பளிப்பு அனுப்பி அவர் ஆக்க பூர்வமான கருத்தைச் சொல்லி விட்ட சம்பவம் இருக்கு. அது போராளியாகட்டும், மக்களாகட்டும், யாராயிருந்தாலும், அந்தக் கலையை வளர்க்க வேண்டும் என்பதில தலைவர் ஒரு ரசிகன். நல்ல வாசகர். எல்லாத்தையுமே ஒரு கலை நயத்தோடையும், அழகுணர்ச்சியோடையும் பார்க்கக்கூடிய ஒருவர். ஒருவருக்குமே வாய்க்க முடியாத உள்ளம் அவருக்கு இருக்கு. ஒரு சின்ன விசயத்தை நாங்க செய்தா கூட இன்னும் செய்யலாம் நிறைய எதிர்பார்க்கிறன் என்கிற ரீதியாக அவற்ர அறிவுரைகள் இருக்கும். மற்றது எப்பவுமே எங்களுடன் இருப்பது மாதிரியான உணர்வு இருக்கும். அண்ணா அதை பார்த்துக்கொண்டிருக்கிறார், அண்ணா அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அதுதான் நீங்கள் உரையாடக் கேட்டபோது உடனே எனக்கொரு தயக்கம் வந்தது. இது முதல் தடவை.
நான் ஒரு ஊடகங்களோடும் இது குறித்து இதுவரை உரையாடியதில்லை. அது எங்களுக்கு முறையுமில்லை சொல்லுக்கு முன் செயலிருக்கவேணும் எண்டத நான் நினைக்கிறன்.

செயலால வளர்ந்த பிறகு பேசவேண்டும் என்று தலைவர் சொல்கிறார்தானே.(சிரிப்பு)

நெஞ்சம் முழுவதும் நிறையக் கூடிய ஒருவராக அவர் இருக்கிறார். இசைப்பிரியனோட கதைச்சாலும் சரி, புலிகளின் குரலில் இசையமைப்பாளராக இருக்கும் செயல் வீரனோட கதைச்சாலும் சரி, அல்லது பாடிக்கொண்டிருப்பவர்களோடு இருந்தாலும் சரி, கவிதைகள், பாடல்கள் எழுதிக்கொண்டிருக்கும் வீராவுடன் பேசினாலும் சரி, எங்களுடன் கவியரங்கம் செய்த விசாலகனுடன் பேசினாலும் சரி அவர்களுக்குள்ளும் அந்த உணர்வுதான் இருக்கிறது. அப்ப எங்கள் எல்லோரையும் ஒருங்கிணைக்கிற முதல் வாசகனாக, இருந்து பார்க்கிற ஒருவர் இருக்கிறார் என்ற ஒரு மன நிலை எங்கள் ஒவ்வொருவருக்கும் பேனை எடுக்கேக்க இருக்கிறது என நான் நினைக்கிறேன்.

அண்ணை இருக்கிறார், அண்ணை பார்ப்பார், அண்ணா கருத்துச் சொல்லுவார், பிழையெண்டா பேசுவார். உரிமையோட கதைக்கும் பொழுது நீ என்னத்தை பெரிசா எழுதின நீ இப்ப வாசிச்சிருக்கிற புத்தகம் 50 எண்டா 500 புத்தகம் வாசிச்சுப் போட்டு வந்து சொல்லு அதுக்குப் பிறகு சொல்லுவன் இன்னும் ஒரு 500 வாசிக்கவேண்டும் என்று. வாசிக்கிறதும், தேடலும் எப்பவும் இருக்கவேணும். எங்களுக்குள்ள ஒரு வட்டம் போடக்கூடாது. நிலை உயர முதல் நினைப்பு உயருது என்று சொல்லுவார். அந்த வசனத்தை வைத்து நான் ஒரு கவிதையும் எழுதினனான். நினைப்பை உயர்த்திறது.
இப்ப நான் ஒரு கவிஞன், நான் எழுத்தாளன் என்ற பெரிய நினைப்பை விட்டிறவேணும் என்பார் நாங்க அவற்ற தம்பிகளா இருக்கிறதால இந்த உரிமையோட அந்தப் பேச்சையும் ஆதங்கத்தையும் சொல்லுவார். இதில சொல்ல முடியாத பல விடயங்களை மனம் விட்டு பேசியிருக்கிறார். அதுகளுக்கூடாக நாங்க பார்க்கேக்க எங்கட தலைவருக்கு அந்த ஆதங்கம், அக்கறை, அந்தத் திறமை அவரிடம் இருக்கு. தலைவர் ஒரு ஓவியர், கவிஞர், ஒரு கமராக் கலைஞர், சமையல் கலையில சிறந்த நிபுணத்துவம் பெற்றவர், போர்க் கலையில் தலைவருக்குத் தலைவரே நிகர். நீங்கள் அறிந்திருப்பீர்கள் தானே. அப்படி ஒரு கலைஞனாகவும் இருந்து இந்தப் போராட்டத்தை - எங்கட போராட்டமே ஒரு சிற்பம். அதை வந்து ஒரு சிற்பமாக செதுக்கி வைச்சிருக்கிறம். நாங்கள் காலத்தைச் செதுக்கி தேவையில்லாததை கழித்து, தேவையானதை அழகுபடுத்தி வைச்சிருக்கிறம். அதான் சிற்பத்தினுடைய வரையறை. தேவையில்லாததை கழிச்சுக்கொண்டு போகேக்குள்ள தேவையானது நிற்கிறது தான் சிற்பம். அப்ப அதைத் தலைவர் செதுக்கி வைச்சிருக்கிறார். எங்கட போராளிகளை, எங்கட மக்களை, எங்கட தமிழீழத்தை. அதை பிறகு சிற்பமாகச் செதுக்கி வைச்சிருக்கிறம். தலைவர் ஒரு சிற்பக் கலைஞன், தலைவர் ஒரு காலம் செதுக்கிய சிற்பம். அப்ப அப்படி இருக்கிறபடியால எல்லாவற்றுக்கும் ஒரு மகுடமாக, எல்லாவற்றுக்கும் ஒரு வழி சொல்லக்கூடிய தலைவராக இருக்கிறதால அவற்ர அக்கறையும், பார்வையும் சொல்லளவில் இல்லாமல், செயல்வடிவில் இருக்கிறது. அதுக்கு இப்ப புலிகளின் குரலில் போன ஒரு நிகழ்வில பாடப்பட்ட பாடல் அந்த 'நாளை மலரும் தமிழீழம்' என்ற பாடல் அந்தப் பாடலுக்குரிய பாராட்டுக்கள் வந்து புலிகளின் குரலில் கேட்டுவிட்டுத்தான் தலைவர் அவர்கள் கௌரவிக்க வேண்டும் என ஒரு ஏற்பாட்டைச் செய்தவரென்றால் தலைவர் எவ்வளவு தூரம் எங்களுடைய கலையை, எங்களுடைய மக்களை, கலைஞர்களை கௌரவிக்க அக்கறைப்படுகிறார் என்பதை சம்பவங்களுக்கூடாக இலகுவாக அறிந்துகொள்ளலாம் என்று நான் நினைக்கிறன். எது தமிழீழத்துக்குத் தேவை, எது தமிழீழத்திற்கு உற்சாகம் கொடுக்கும், புத்துயிர்ப்பை கூட்டும், அதை வளர்க்கவேண்டும் என்பதில அக்கறைப்படுபவர். திறமை சாதாரண ஒரு போராளியிடம் இருந்தாலும் சரி அல்லது ஒரு சிறுமியிடம் இருந்தாலும் சரி அல்லது யாரிடம் இருந்தாலும் சரி வேறு கலைஞர்களையும் கூட கௌரவித்த நிகழ்வுகள் அறிவீர்கள். அது தமிழீழக் கலைஞர்களாகட்டும், சிறீலங்கா எழுத்தாளர்களாகட்டும் அவர்களுக்குக் கூட மதிப்பளிக்கிறவர். தாய், ஆசான், தலைவன் என்று எல்லா வடிவங்களையும் கடந்து இந்த விசயத்தில ஒரு உற்ற நண்பனா, ஒரு வாசகனாக பக்கத்தில் இருக்கிறதாக நான் உணர்கிறன்.

**திரைப்பட மொழியாக்கப் பிரிவில் ஒரு பொறுப்பாளராக இருக்கும் நீங்கள், அது குறித்த உங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளமுடியுமா?**

துளசிச்செல்வன்: எங்கட போர் பதிவாக்கப்படாத பிரச்சனையால ஒரு மறைந்த நிலைமையை நாங்கள் களத்தில் காண்கிறோம். ஆனால் நாங்கள் போர் செய்த இனம். எங்கட இனத்துக்கு போர்க் குணமும், போர் முறையும் இருந்திருக்கு, இப்ப நாங்க அந்தப் போரைத் தொடங்கி தொடர்ந்துகொண்டிருக்கிறம். இன்றைய போர் வந்து சிறீலங்கா படையோட மட்டும் மட்டுப் படுத்தப்பட்டதா இல்லை. நாங்க சண்டை பிடிக்கேக்க பல நாட்டு இராணுவ வல்லுனர்களின்ர ஆலோசனைகள், வழிநடத்தல்கள், பல நாட்டு இராணுவங்களின்ர ஆயுத வளங்கள் என எல்லாத்தையும் எதிர்கொண்டனாங்கள். ஒரே நேரத்திலே மூன்று, நான்கு அரசோட போரிட்ட பெருமை எங்கட விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இருக்கு.
எங்களிடம் இருக்கும் போர் குணத்தையும், போர் ஆற்றலையும் மேலும் மேம்படுத்திக்கொள்வதற்காக நாங்கள் தேடல்களைச் செய்கின்றோம். காலத்துக்கு ஒத்த முறையில போர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உபாயங்களை வகுக்கிறத்துக்கு வழி செய்கிறம். அதில ஒரு கணிசமான அங்கமாக புத்தக மொழிபெயர்ப்புக்கள், திரைப்பட மொழிபெயர்ப்புக்கள் செல்வாக்குச் செலுத்தி இருக்கிறது. விடுதலைப் போராட்டம் தொடர்பான படங்கள், விடுதலைப் போராட்டத்தை நசுக்கிய அல்லது முன்னெடுத்த படங்கள், புலனாய்வு ரீதியான படங்கள், போரியல் ரீதியான படங்கள், அதாவது போரை மட்டும் மையமாக வைத்துக் கொண்டு எடுக்கப்பட்ட படங்கள், எதிர்கால போரை மையமாக வைச்சு எடுக்கப்பட்ட படங்கள் எண்டு சொல்லி அதை மட்டுப்படுத்தி அந்தத் திரைப்படங்களை போராளிகளுக்காக மொழிபெயர்ப்புச் செய்துகொண்டிருந்தோம். இப்ப மக்களுக்கு நல்ல சினிமா சென்றடைய வேண்டும் என்ற நோக்கில அண்மைக்காலமாக மக்களுடைய பார்வைக்காகவும், நாங்கள் கொண்டுசெல்கின்றோம். குறிப்பிட்ட தொகுதிப் படங்கள் மக்கள் பார்வைக்குச் சென்றுள்ளன.

**இந்திய விடுதலைப் போராட்டத்தில் சிறந்த விடுதலைப் போராட்ட வீரனாக விளங்கிய பகத் சிங் பற்றிய திரைப்படத்தை இந்தி மொழியிலிருந்து மொழிபெயர்த்து வெளியிட்டதை நான் அறிகிறேன் இத் திரைப்பட மொழிபெயர்ப்பு அனுபவ உணர்வு குறித்து அறியலாமா?**

துளசிச்செல்வன்: அந்தப் படம் எங்களுடைய மொழிபெயர்ப்பில் ஒரு மைல்கல். எங்களுக்கு அதொரு சவாலாக இருந்தது. ஹொலிவுட் படங்கள் எடுக்கும் முறையும், ஆசிய நாட்டுப் படங்கள் எடுக்கும் முறையும் வித்தியாசமானது. எங்களுடைய படங்களில் உரையாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பார்கள். வசனங்களுக்கும், நடிப்பிற்கும், ஆங்கிலப் படங்களில் இடமிருந்தாலும் கூடியபாகம் உணர்வு வெளிப்பாட்டை புலன்கள், முகபாவம் மூலம் வெளிப்படுத்தும் தன்மை இருக்கும். இந்திப் படங்களில் இந்தத் தன்மைகளை நாங்கள் பார்த்தனாங்கள்.அதை விட பாடல்கள் அமைந்திருந்தன. ஐந்துக்கும் மேற்பட்ட பாடல்கள் இருந்தன. அதுவும் இந்தி மொழியில ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்த பாடல்கள். போராளி கலையழகன் தான் பாடல்களை மொழிபெயர்த்திருந்தவர்,
அதைச் செய்து பாட்டையும் மொழிபெயர்த்து, முன்னூறு தடவைகளுக்கு மேல நாங்கள் அந்தப் படத்தை வெளியிட முதல் பார்த்திருக்கிறம். இந்தி மொழியில் இருக்கும் போதே பலதடவை பார்த்தாயிற்று. அதில் அஜய் தே கான் நடிக்கின்றார். அவர்கள் உண்ணாவிரதம் இருப்பது, அவர்கள் ஒரு நீதி மன்றத்தில தூக்குக்காக போகின்ற போது உறுதியாக பாடிக்கொண்டு போகிற பாட்டு, அவர்கள் தூக்கில தொங்கேக்க அந்த கயிற்றை முத்தமிடுகிற காட்சி என பல காட்சிகளைக் குறிப்பிடலாம். நாங்களே படம் எடுத்தது மாதிரியான உணர்வு இருந்தது. மிக உணர்வோடையும், மிகுந்த ஆர்வத்தோடையும் நாங்கள் அதில பணியாற்றினோம். குரல் வடிவத்தை அசோக் குமார் என்பவர் மாற்றி அமைத்து தந்திருந்தார்.
இந்தப் படம் எல்லாப் போராளிகளின் மனங்களையும் தொட்டசைத்திருக்கிற ஒரு பாதிப்பை ஒரு பதிவை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனென்றால் வீரத்தியாகி சர்தார் பகத் சிங் பற்றி எல்லோருமே அறிந்திருப்பினம். இந்திய வரலாறு படிக்கேக்குள்ள தலைவருக்குப் பிடித்த வீரர்களுக்குள்ள பகத் சிங்கும் ஒருவர். தலைவருடைய போராட்டச் சிந்தனைகள் செவ்விகளைப் பார்க்கிற பொழுது எங்களுக்கு பகத் சிங்கைத் தெரியும். அதற்கு பிறகு நாங்கள் பகத் சிங் பற்றி படிச்சிருக்கிறம். அப்படிப் படிச்சு ஆர்வமுற்ற எங்களுக்கு படம் கிடைச்சவுடன் அதைச் செய்தம். போராளிகள், மக்கள் மத்தியிலை நல்ல வரவேற்பு. குறிப்பாக ஒன்பதாம் மாசம் 24 ம் திகதி 2005 அந்தப் படத்தை நாங்கள் திரையிட்டனாங்கள். திலீபன் அண்ணையை அஞ்சலி செய்துகொண்டிருக்கிற காலம். அந்தக் காலத்தில இந்தத் திரைப்படத்தை வெளியிட்டது




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இன்னும் ஒரு படி வலுச்சேர்த்தது. அடிமைத்தனத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் எமது தோழர்களாக முன்னின்றார்கள். இனம் புரியாத தோழமை உணர்வு கிடைத்தது.

விடுதலைப் போராட்ட காலத்தில உங்களுக்கு மறக்க முடியாத சம்பவங்கள் நிறைய இருந்திருக்கும் அவற்றில் சிலவற்றை எம்முடன் பகிர்ந்துகொள்வீர்களா?

துளசிச்செல்வன்: எங்கட மனித இனத்துக்கே மட்டுமே கிடைத்த, எங்களுக்கே உரித்தான பகுத்தறிவிற சிந்தனைக்குள்ள ஞாபகம் வைச்சிருக்கிறதும், மறக்கிறதும் எண்டது மிகப் பெரிய கொடைதான். நாங்கள் வேண்டியதை நினைவு வைச்சிருத்தல் வேண்டாததை மறத்தல் என்பது ஒரு அளப்பெரிய கொடை. வரங்களே சிலது சாபங்களாகப் போற சம்பவங்கள் இருக்கு இந்தக் கொடை ஒரு நேரம் வரமாகவும் ஒரு நேரம் சாபமாகவும் வந்து போறதை நான் என்ர வாழ்கையில பட்டிருக்கிறன். சிலதை நாங்கள் மறக்கோணும் எண்டு நினைக்கிறம் ஏனென்றால் எங்களால தாங்கிக் கொள்ள முடியாதெண்டதற்காக. ஆனால் அது நினைக்காமல் இருக்கவேண்டும் என்று நாங்கள் நினைக்கின்ற நினைவுகளை நினைவுப்படுத்துவது கூட அவர்களின் நினைவுகள்தான். இப்ப இண்டைக்கு அருளண்ணை பற்றி நினைக்கக்கூடாது என்று நினைப்போம். ஏனென்றால் அருளண்ணையைப்பற்றி நினைக்கிறபடியாலதான். ஏனென்றால் அருளண்ணைய நினைச்சால் ஒரு வேலையுமே ஓடாது. அருளண்ணை படைப்பாளிகளுக்குள்ள ஒரு அற்புதமான படைப்பாளி, ஒரு வாசகன், ஒரு ரசிகன், பல்பரிமாணம் கொண்ட ஒரு போராளி, ஒரு ஆசிரியர், அவர் எனக்கு உற்ற நண்பன் அப்ப அவர் ஒரு கரும்புலி வீரனாக நெடுங்கேணியில வீரச்சாவடைந்தார். 04.11.1999 ஆம் ஆண்டு ஓயாத அலை மூன்றுக்காக பலம் சேர்ப்பதற்காக அந்த முயற்சிக்காக வீரச்சாவடைந்த ஒரு கரும்புலி வீரன். அந்த வீரச்சாவு சம்பவத்துக்கு நான் அருகில் நிற்கிறன். அப்படியான சொந்தங்களை நினைக்கக்கூடாது என்று சொல்லி நினைக்கிறது அவையளின்ர நினைவுகள்தான். அதச் சொல்றது கூட அவையளின்ர நினைவுதான்.

இப்ப மறக்க முடியாத சம்பவங்கள சொல்லுங்கோ என்று சொல்லி தமிழன்பன் அண்ணையும் இதில இப்ப என்னிட்ட சொல்லேக்குள்ள நான் உடனேயே அவரைக் கேட்டன் என்னத்தை மறந்தனான் என்று சொல்லி. ஒண்டையுமே மறக்கேல்ல.

மறக்க முடியாதாலதான் எங்களால இயங்கிக்கொள்ளமுடிகிறது. அவர்களின்
நினைவுகள் தான் எங்களுக்குள் எரிபொருளாக எரிந்து கொண்டிருக்கு.
அப்ப அது மறக்க முடியாது. அப்ப ஒன்றுமே மறக்க முடியாது. போராட்டத்துக்கு வெளிக்கிட்ட நாளிலிருந்து அல்லது போராட்டத்திற்கு வெளிக்கிட முதல்
இன்றுவரைக்கும் நாங்கள் எதையும் மறக்க முடியாது.

ஒவ்வொரு நாளுமே எங்களை ஆகர்சித்துக்கொண்டிருக்கு. அதில குறிப்பாக சில நாட்கள், உங்கட கேள்வியின் வரையறைக்குள் சொல்வதானால் குறிப்பாக சில நாட்களை நாங்கள் சொல்லலாம்.

நான் அறிய எவ்வளவோ போராளிகள் எனக்கு பக்கத்தில நிண்டு வீரச்சாவடைஞ்சிருக்கினம். வீரச்சாவடைந்த வித்துடல்களை நான் தூக்கிக் கொண்டு போய் விதைச்சிருக்கிறன். அல்லது வீரச்சாவு செய்தியை வீடுகளுக்குக் கொண்டு போய் இருக்கிறன். சில முக்கியமான பணிகளை வேலையைச் செய்திருக்கிறம். அப்படி வந்து பல்வேறு நிலைகளில் வாழ்ந்திருக்கிறன்.

அந்த ஒவ்வொரு நாளையுமே நாங்கள் ஞாபகத்தில் வைச்சிருக்கவேண்டியிருக்கு.
குறிப்பாக ஒரு வீட்டில வீரச்சாவு நடந்துகொண்டிருக்கு.

விசுவமடுப் பிரதேசத்தில வீரச்சாவு என்று சொல்லி ஒரு செய்தி. அப்ப நான் அந்த வீரச்சாவு வீட்டை போறன்.
ஒரு எல்லைப் படை வீரன் தான் வீரச்சாவடைந்திருந்தவர். அப்ப அங்க ஒரு அம்மாவும், ஒரு மகளும் தான் அந்த வித்துடலுக்குப் பக்கத்தில இருந்து அழுதுகொண்டிருக்கினம். ஆனால் அந்த வீட்டில ஐந்து ஆம்பிளையள் இருக்கினம்.
ஒரு அப்பா, ஐந்து சகோதரர்கள் ஏற்கனவே ஒரு போராளி வீரச்சாவு. இரண்டாவது எல்லைப் படை வீரன் வீரச்சாவு. அந்த வீட்டில இப்ப இரண்டு பேரும் தான் இருக்கினம். என்னெண்டு சொல்லி விசாரிக்கேக்குள்ள அப்பா மணலாற்றில் எல்லைப்படையில இருக்கிறார். இஞ்ச அவருடைய இன்னொரு மகன் போராளியாக மன்னார் பகுதியில இருக்கிறார்.அடுத்தவர் எல்லைக்குப் போகிறதுக்காகவேண்டி பயிற்சில நிற்கிறார். இன்னும் ஒருவர் நடத்திக்கொண்டிருந்த தையல் கடைக்கு காவலுக்குப் படுத்திருக்கிறார். என்னால வாழ்கையில மறக்க முடியாது. நாட்டின்ர எல்லைகளை காக்குறத்துக்காக நாலு பக்கமும் பிள்ளைகளை அனுப்பியிருக்கிற ஒரு வீட்டில ஒரு வித்துடலுக்குத் துணையாக இரண்டு பேர் இருந்தத என்ர வாழ்கையில் மறக்க முடியாது.

அதே போல கரும்புலி மேஜர் அருளண்ணை வீரச்சாவு, அந்த வீரச்சாவுக்கு அன்று பின்னேரம் முகாமுக்க வந்து பார்க்கேக்குள்ள அருளண்ணை களட்டிபோட்ட சேட்டில வியர்வையின் மணம். அவர் பயிற்சி எடுக்கேக்குள்ள பகல் பூராகவும் போட்டிருந்திற்று இரவு நகர்வுக்கு வெளிக்கிடேக்குள்ள மாத்தின அந்த சேட்டில அந்த வியர்வை ஈரம் காயாமல் இருந்ததை நான் எடுத்துப் பார்த்த போது அந்த ஈரத்தோட சேர்ந்த வியர்வை மணம் காற்றில் பரவிய அந்த நிமிசத்தை என்னால மறக்க முடியாது.

பிறகு, லெப்டினல் கேணல் அறிவுக்குமரன் அண்ணையினுடைய வீரச்சாவுக்கு வீட்ட போறோம்.
அறிவுக்குமரன் அண்ணையை பற்றிச் சொன்னால் அது தனிய சொல்ல வேண்டிய ஒரு வரலாறு. அறிவுக்குமரன் அண்ணா ஆனையிறவுச் சண்டைக்குள்ள போகேக்குள்ள இன்னும் ஒரு கரும்புலி வீராங்கனை காயப்பட்டு தண்ணி கேட்க அவாக்கு தண்ணி எடுக்கிறத்துக்காக வேண்டி ஒரு மறைவிடத்தில் இருத்திப்போட்டு தண்ணி தேடிப் போறார் அதற்குள்ள போராளி இருக்கிற இடத்தை ஆமி தேடி வாறான். அப்ப அந்தப் போராளி தன்னைத் தானே அழிச்சு தன்ர எதிரியை கொல்லுறா. இங்க தண்ணீயோட வந்து பார்த்தா அவா விட்டுட்டு போன இடத்தில அவாவின்ர தகடும் சில சதைத் துண்டுகளும் தான் இருந்துச்சு. அப்ப அந்த தகடை எடுத்துக்கொண்டு வைச்சு பிறகு முகாமில அவாவுக்கு ஒவ்வொரு நாளும் அந்த படத்துக்கு முன்னுக்கு ஒரு தண்ணி வைப்பார். பச்சைத்தண்ணி அவா கேட்டதெண்டு சொல்லி ஒரு மன திருப்திக்கு அப்படியான ஒரு மெல்லிய உணர்வு கொண்ட அறிவுக்குமரன் அண்ணையினுடைய வீட்டுக்கு போகேக்குள்ள அவருடைய படத்தடியில பச்சத்தண்ணி வைச்சிருந்தவ.

மதிய வேளை, போய் ஒரு வீட்டில வீரச்சாவு என்று சொல்லிச்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சொன்னால் விரும்பிய உணவை வைக்கிற பண்பாட்டுக்கமைவாக அது வைக்கப்பட்டிருக்கிறது என்றதை நான் உணர்ந்தன். அண்டைக்கு பச்சைதண்ணியத்தான் அவையால வைக்க முடிஞ்சிருக்கு. அப்ப அந்த நிலைமையில அந்த அம்மா நாங்கள் போய் இறங்கின உடனே வந்து எங்கட கையைப் பிடிச்சு இழுத்துக் கொண்டு போய் இருத்திப்போட்டு பிள்ளைகள் என்ன உங்களுக்கு சமைச்சுத்தாறது' என்று சொல்லி கேட்டத என்னால மறக்க முடியாது. கேக்கேக்குள்ள அந்த அம்மாவினுடைய ஆதங்கத்தையும், 'இல்லை அம்மா நாங்கள் சாப்பிட்டம்' என்று சொல்லிச் சொன்ன வார்த்தைக்குப் பின்னால இருந்த பொய்யை அறிஞ்சு அம்மா அழுததையும் நாங்கள் மறக்கேலாது.

தன்ர இயலாமைக்குள்ளாலையும் தன்ர அன்பை வெளிப்படுத்த முடியவில்லை என்று சொல்லி தாய் அழுதது வாழ்கையில மறக்க முடியாது.

ஒரு வீரச்சாவு அரியாலைச் சண்டையில. என்னோட பயிற்சி எடுத்த போராளி. அந்த போராளியின்ர வீட்ட போறன். நான் நினைச்சுக்கொண்டு போறன் போராளியினுடைய அம்மா ஒண்டா பயிற்சி எடுத்த ஆக்கள் என்று சொன்னவுடன எங்கள கட்டிப் பிடிச்சு அழப் போறா என்று சொல்லி மனசை இனியில்லை எண்டு கல்லாக்கிக் கொண்டு போறன். என்னைக் கண்டவுடன் அம்மா சிரிச்சு, அழுது அதாவது மூன்று நாள் வீரச்சாவு நடந்து, மூன்று நாளும் எழும்பாமல் படுத்திருந்த அம்மா ஓடிவந்து வாசல் வரைக்கும் வந்து என்னை கையைப் பிடிச்சுக் கூட்டிக் கொண்டு போய் இருத்திப் போட்டு சிரிச்சு சிரிச்சுக் கதைச்சத என்னால மறக்கேலாது. கதைச்சுப்போட்டு நான் வெளிக்கிடேக்குள்ள என்ர கையைப் பிடிச்சு 'என்ர மகன் செத்துப் போச்சு என்று தான் எல்லாரும் சொல்லினம் அவன் சாகேல்லடா நீ இருக்கிற' என்று சொன்னத என்னால வாழ்க்கையில மறக்கேலாது.

அந்த கிபிர் குண்டு வெடிக்கேக்குள்ள அப்பாவித்தனமாக விசுவமடுப் பகுதிக்குள்ள செத்துக் கிடந்த சின்னப் பிள்ளை தன்ர கையில பொம்மையை வைச்சிருந்தத என்னால மறக்க முடியாது. அல்லது யுனிசெப் கொடுத்த பாயிலேயே எங்கட வித்துடல்களை அடிக்கினதை, எங்கட பிணங்களை, மக்களின்ர பிணங்களை, சிறுவர்களின்ர பிணங்களை மந்துவிலில, நவாலியில அடுக்கிக் கிடந்தத பார்த்தத வாழ்கையில மறக்கேலாது.

கிட்டண்ண வீரச்சாவு செய்தி வந்தவுடன சின்னனில யார் என்ன என்று சொல்லத் தெரியாம, கிட்டண்ணயைப் பற்றித் எதுவும் தெரியாமல் அன்று முழுக்கச் சாப்பிடாம இருந்ததை என்ர வாழ்கையில் மறக்கேலாது.

திலீபண்ணையினுடைய வித்துடலுக்குப் போய் சின்ன வயசில அவற்ர காலைத் தொட்டுக் கும்பிட்டுட்டு பூ போட்டதை வாழ்க்கையில் மறக்கேலாது.

மில்லரண்ணேன்ர படத்தை எங்கட வீட்டை ஒட்டி வைச்சு கொப்பிக்குள்ள அவற்ர படத்தை சேகரிச்சு வைச்சு அவரை ஒரு மானசீகமான, எங்கட கதாநாயகனாக பள்ளிக்கூடக் காலத்து கதாநாயகனாக நினைச்சு அவரைப் பற்றி சொல்லித் திரிஞ்சதை வாழ்க்கையில மறக்கேலாது.

யுத்தத்தில நிக்கேக்குள்ள ஒரு இடத்தில எதிரி தாக்குதல் செய்யப்போறான் எறிகணை விழப்போகிறது 'நீங்க எல்லாரும் விலகிப் போங்கோ' என்று சொல்லிப் போட்டு அந்த இடத்திலுள்ள ஏனைய பொருட்களை எடுத்துக்கொண்டிருக்கேக்க வீரச்சாவடைந்த தோழர்களை மறக்கேலாது.

எதிரியின்ர தாக்குதலுக்குள்ளாகும் அபாயத்தோடு காவலரண்களில் நாங்கள் நிற்கிற நேரம் எங்களுக்காக சாப்பாட்டு பொதிகளை, தண்ணியை எடுத்து வரேக்குள்ள அந்த எதிரியின்ர தாக்குதல்ல வீரச்சாவடைஞ்சு அவையளின்ர இரத்தம் நனைஞ்ச உரப்பையோட இருந்த சாப்பாட்டு பார்சல்களை பிரித்துச் சாப்பிடவேண்டிய நிர்ப்பந்தம் வந்த பொழுதுகளை மறக்கேலாது.

இராணுவ காவலரண்களுக்குள் வேவுக்கு போகேக்குள்ள கடைசி நிமிசத்திலையும் நான் உன்னை நினைப்பேன் எண்டதை நீ நினைக்கவேண்டும் என்பதற்காக கழுத்தில் கட்டுகிற குப்பியை மாத்திக் கொண்டு போன போராளிகளை மறக்கேலாது.

இப்படி அடுக்கடுக்காக சொல்லிக் கொண்டே போகலாம்.

வாழ்கையில மறக்க முடியாது என்று சொல்லி எதையுமே மறக்கமுடியாது.

எல்லாத்தையும் விட கிளிநொச்சிச் சண்டை உக்கிரமாக நடந்துகொண்டிருக்கு.

சில பலமான நிலைகளை தகர்க்கிறம். நாங்கள் வழி ஏற்படுத்தி உள்ளுக்குப் போன சில இடங்களில எதிரி வழிகளை மூடிவிட்டான். அப்படியான ஒரு சூழலில கிளிநொச்சி மீட்கப்படுமா படாதா என்று சொல்லி ஒரு சந்தேகத்தோட அந்தப் பொழுதுகள் கழிஞ்சு கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில, மீட்கப்பட்ட இடத்தில இருந்து சிற்றுண்டியள், குளிர் பானங்கள் எடுக்கப்பட்ட போது தலைவருக்கு அது தெரிவிக்கப்பட்டது.

தலைவர் சொல்கிறார் 'அதை செஞ்சோலைக்கும் காந்தரூபன் அறிவுச்சோலைக்கும் அனுப்பி வையுங்கோ' என.

அப்படிச் சொன்ன அந்த மனநிலையிலுள்ள தலைவரை வாழ்க்கையில மறக்கேலாது.

கரும்புலியாப் போகிற, கரும்புலி நடவடிக்கைக்கு போற போராளிகளைப் பார்த்து, அங்க தங்கி நின்று நடவடிக்கைச் செய்கிற சூழலில போற போராளிகளைப் பார்த்து, 'நீங்கள் போகேக்குள்ள பற்பசையும் , பிறசையும் கொண்டு போங்கோ. சந்தர்ப்பம் கிடைச்சா பல்லை மினுக்குங்கோ, பல்லுச் சூத்தைப் பிடித்திரும்' என்று அக்கறைப்படும் தலைவரை மறக்கேலாது.

அப்படி இந்தப் போராட்டத்தோட நிற்கிற மக்களை, போராளிகளை, மாவீரரை, எங்கட பெற்றாரை, எங்கட நண்பர்களை, எங்களுக்கு முன்னோடிகளா இருக்கிற முன்னோடிகள், எங்கட தலைவரை, எங்கட மண்ணை, எங்கட மண்ணின்ர அழகை, குறிப்பாக எங்கட பகைவரை, யாரையுமே, எவரையுமே, எப்போதுமே மறக்க முடியாது எண்டது பொதுவானதொன்று.

தனிய ஒரு சம்பவம் தான் மறக்கமுடியாது என்றால் சில வேளை அது பள்ளிக்கூட நாட்களில் இருந்திருக்கலாம். ஆனால் இது ஒரு பரந்து பட்ட ஒரு களம். அந்தக் களத்தில ஒவ்வொரு கணமும் மறக்க முடியாததாகத்தான் நான் கழித்துக்கொண்டிருக்கிறன். இந்த நிமிசத்தில உங்களோட கதைத்துக்கொண்டிருப்பதையும் என்ர வாழ்க்கையில மறக்கேலாது. ●


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



காரை சுந்தரம்பிள்ளை

37வருடங்களுக்கு மேலாக கல்வித் துறைக்கு சேவை செய்தவர். இலக்கிய ஆக்கங்களாகத் தேனாறு, சங்கிலியம், தவம், உறவும் துறவும், பாதைமாறியபோது, காவேரி ஆகியவற்றைத் தமிழுக்கு தந்தவர். காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் சிறந்த கவிஞர், நாட்டுக் கூத்துநடிகர், ஈழத்துக் கூத்து மரபை நன்கு அறிந்தவர் நாடகக் கலையைப் பல்கலைக் கழகமட்டத்தில் கற்பித்தவர்.

கூத்துக்கள், சிறுவர் நாடகங்கள் என பல வகையான நாடகங்களை மேடை ஏற்றியவர் ஈழத்து இசை நாடக வரலாறு, இந்து நாகரிகத்தில் கலை, நடிகமணி வி.வி வைரமுத்துவின் 'வாழ்வும் அரங்கும்', சிங்களப் பாரம்பரிய அரங்கம், வட இலங்கை நாட்டார் அரங்கு, ஈழத்து மலையகக் கூத்துக்கள் என பல்வேறு ஆய்வு நூல்களையும் எழுதியவர்.

21.09.2005 அன்று அவர் காலமாகினார், அவர் பற்றிய நினைவு மலரில் கவிஞர் காசி ஆனந்தன் எழுதிய கவிதையை இங்கு நன்றியுடன் மறு பிரசுரம் செய்கிறோம்.

## பல்துறை ஆற்றலன் பாவலன் போனார்

காரை சுந்தரம் பிள்ளை
காலம் ஆனான் எனச் சொன்னார்....
ஊரை அசைத்தது செய்தி!
உள்ளம் துடித்தனர் ஆன்றோர்
நீரைச் சொரிந்தன கண்கள்!
நெருப்பில் எரிந்தது நெஞ்சம்!
ஆரை முடித்தனை சாவே?
அன்பிலாய்... என்செயல் செய்தாய்?

பல்துறை ஆற்றலன்! அறிஞன்!
பாவலன்! இலக்கியன்! ஆசான்!
சொல்வளம் மிக்கவன்! தமிழன்
சுவைதோய்ந்து நின்றவன்! கலைஞன்
தொல் தமிழ்க்கூத்தினை ஆராய்ந்தோன்
தொய்வறியாத் தமிழ்த் தொண்டன்!
நல்லவன் மடிவதோ? எங்கள்
நாடினைத் தாங்குமோ? அம்மா!

பாட்டை இயற்றினான்... ஈழம்
பற்றியே எழுதினான்.... புலிகள்
காட்டிய திசையில் நடந்தான்...
காரை சுந்தரம் பிள்ளை
நாட்டை நிமிர்த்தினான்... ஏனோ
நடுவழிப் பயணத்தில் ஓய்ந்தான்?
ஏட்டில் அடங்குமோ துயரம்?
எங்கனம் ஆறும் எம் நெஞ்சே

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மு.பொ



# மதமும் கவிதையும்
## - சில குறிப்புக்கள்

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களால் எழுதத்பட்டு அண்மையில் வெளிவந்திருக்கும் 'மதமும் கவிதையும்' என்னும் நூல் சிறியதே ஆயினும் பல விஷயங்களில முக்கியமான ஒன்றாகக் கருதத்தக்கது எனலாம்.

முனைவர் மே.து.ராசகுமார் அவர்களின் முயற்சியால் 1999டிசம்பரில் தமிழ்நாடு மக்கள் வெளியீட்டினால் வெளிக்கொணரப்பட்ட இந்நூல் 'மதமும் கவிதையும்', 'தமிழ் அனுபவம்', 'தமிழின் இரண்டாவது பக்தி யுகம்', 'திருவாசகம் காட்டும் மணிவாசகர்', 'தமிழ்ப் பண்பாட்டிற் கிறிஸ்தவம்', 'இலக்கியமாகப் பக்திப் பாடல்கள் - பின்னுரையாகச் சில குறிப்புகள்' ஆகிய ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. இந்நூலில் காண்படும் 'மதமும் கவிதையும்' - அமிழ் அனுபவம் என்னும் முதலாவது கட்டுரை மட்டும் ஒரு சில மாற்றங்களுடன் இன்னொரு நூலாக கொழும்பு தமிழ்ச் சங்கத்தினால் பிரசுரிக்கப்பட்டு அதன் பிரசுர செயற் திட்டத்தின் முதலாவது வெளியீடாக 2000ம் தை மாதம் வெளிக் கொணரப்பட்டிருக்கிறது.

'மதமும் கவிதையும் - தமிழ்அனுபவம்' என்னும் ஆய்வு சம்பந்தமாக ஆசிரியர் தனது இரண்டாவது சிறுநூலில் பின்வருமாறு கூறுகிறார்.

"தமிழ்க் கவிதை விமர்சனத்தினுள் தமிழின் உலகப் பெரும் பங்களிப்புகளில் ஒன்றான பக்திக் கவிதைகள் வராமை குறித்து நான் எப்பொழுதும் சிந்திப்பதுண்டு. அப்பாடல்களின் இலக்கியச் சிறப்பை இலக்கிய நிலை நின்று நோக்குவது அவசியம் என்றே கருதுகிறேன். அப்பொழுது தான் தமிழ் இலக்கிய விமர்சன நோக்குப் பெலிவுறும்."

"தமிழ்ப் பக்தி இலக்கியத்தின் உலகளாவிய புகழ் காரணமாக நான் சென்ற மேனாட்டுப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் Religion and poetry - the Tamil Experience என்ற தலைப்பில் விரிவுரையாற்றினேன்."

"இவ்விடயத்தை விரிவாக ஆராய வேண்டும் என்பது என் அவா. ஆனால் நம்மீது திணிக்கப் பெற்ற" 'பெயர்ச்சிகள்' காரணமாக அதனைச் செய்ய முடியவில்லை. 1998ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னை இராமநாதன் நினைவுப் பேருரையை நிகழ்த்துமாறு அழைத்த பொழுது இந்த விடயத்தையே உரைப் பொருளாகக் கொள்ள எண்ணினேன்."

இவ்வாறு 'மதமும் கவிதையும் - தமிழ் அனுபவம்' என்ற ஆய்வுக் கட்டுரையின் தோற்றத்தின் காரத்தை விளக்குகிறார் ஆசிரியர். நான் ஏற்கெனவே கூறியது போல இந்நூலின் முக்கியத்துவம் பல வகையானது. முதலாவது தமிழில் பெரிதும் பேசப்படும் பக்தி இலக்கியக் கவிதைகளான தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் ஆகியவற்றை இலக்கிய நிலை நின்று நோக்குவதும் விமர்சிப்பதும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இதுகால வரை தமிழில் இடம் பெற்றதில்லை. இதனால் இக்கவிதைகளை எழுதியவர்கள் கவிஞர்களாகப் பார்க்கப்படும் நிலை தள்ளி வைக்கப்பட்டு அவர்கள் அருளாளர்களாக கொள்ளப்படுதலே மரபாய் இருந்து வந்துள்ளது. அதனால் அவர்கள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களாகவும், இவர்கள் எழுதிய பக்திக் கவிதைகளை இலக்கிய நிலை நின்று விமர்சிப்பது ஒரு அபச்சாரமாகவும் கருதப்பட்டது எனலாம்.

இந்த ஒரு போக்கின் பிரதிபலிப்பாகவே ஆறுமுக நாவலர், வள்ளலார் பாடிய பாடல்களை நாயன்மார்களின் தேவாரங்களோடு சமமாக வைத்துப் பார்க்கத் தகுதியற்ற 'மருட்பாக்கள்' என்று சொன்னவற்றைக் கொள்ள வேண்டும்.

அதாவது தேவாரம், திருவாசகம், திருபுகழ் என்று தந்தவர்கள் இனி எவராலும் அவர்கள் எட்ட முடியாத உயரத்தில் இருக்கும் புனிதமானவர்கள் என்றும் அவர்கள் பாடிய பக்திக் கவிதைகள் எந்தவித குறைநிறைகளுக்கும் உட்படாதவை என்றும், கொள்ளுகளுக்கும் உட்படாதவை என்றும், கொள்ளுகின்ற ஒரு போக்கு.

ஆகவே இத்தகைய ஒரு போக்கை விட்டு அவற்றையும் ஒரு இலக்கியப் படைப்பாகப் பார்க்க வேண்டும் என்று சொல்வதோடு, அதை ஓரளவுக்கு செய்து காட்டுவதற்கு அடித்தளம் இடும் முதல் நூலாக 'மதமும் கவிதையும்' என்னும் இந்நூலைக் கொள்ளலாம்.

மேலும் இந்நூல் தமிழில் உள்ள பக்திக் கவிதைகள். இந்து சமய வழிபாடு சமஸ்கிருதத்தின் செல்வாக்கிற்கு உட்படாது வெளியே நிற்கும் சுதேச மொழிப் பாடல்களாகும் என்ற உண்மையையும், ஏ.கே ராமானுஜனின் ஆய்வை நினைவு படுத்தி உறுதி செய்கிறது.

அடுத்து சித்தர்களின் பாடல்கள் பற்றிச் சொல்லும் இடத்து இந்நூல் Metaphysical poetry அல்லது Mystical poetry என்று சொல்கின்ற இயற்கை அதீத அனுபவக் கவிதைகள் பற்றியும் பேச முயல்கிறது. அதாவது வார்த்தைகளால் கூற முடியாது 'சொற்பதம்' கடந்தவற்றை சொல்ல முயலும் புதுவார்த்தைப் பிரயோக கவிதைகள் பற்றிய பிரஸ்தாபமும் இதில் இடம் பெறுகிறது. இதுவும் இந்நூலின் முக்கியமான அம்சமென்றே கருத வேண்டும்.

Metaphysical poetry பற்றி தமிழில் அருந்தலாகவே எழுதப்பட்டுள்ளன என்றே சொல்ல வேண்டும். எனது 'யதார்த்தமும் ஆத்மார்த்தமும்' என்னும் நூலில் இது பற்றி இலங்கைக் கவிஞர்களை ஒப்பிட்டு ஓரளவு விரிவாக எழுதியுள்ளேன். ஆயினும் இது பற்றி வேறு விரிவான ஆய்வுகள் இடம் பெறவில்லை என்றே கூற வேண்டும்.

மேலும் 'மதமும் கவிதையும்' என்னும் நூலில் காணப்படும் ஏனைய கட்டுரைகளான 'தமிழின் இரண்டாவது பக்தியுகம்'. 'திருவாசகம் காட்டும் மணிவாசகர்', 'தமிழ்ப்பண்பாட்டியற் கிறிஸ்தவம்', 'இலக்கியமாகப் பக்திப் பாடல்கள்' ஆகியவையும் பக்திப் பாடல்களை இலக்கிய நிலை நின்று பார்ப்பதன் வெவ்வேறு வெளிப்பாடுகளே.

இச்சிற்றாய்வு நூலைப் படிப்பவர்கள் இந்த வழிநின்று மேலும் பல ஆய்வுகளைத் தரத்தூண்டப்படுவார்கள் என்பதே இந்நூலின் சிறப்பாகும். அதேவேளை ஏனைய சமயத்தோரின் தமிழ் இலக்கியத்துக்கான பங்களிப்பு பற்றிய விரிவான ஆய்வுகள் இடம் பெறாதது இதன் குறைபாடென்பதை நாம் சுட்டலாம். இதை இந்நூல் ஆசிரியரும் ஒப்புக்கொண்டுள்ளார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சாண்பிள்ளையானாலும்...

வேணி கிருபாகரன்- ஜேர்மனி

நேரம் மதியத்தைக் கடந்துவிட்டிருந்தது. “ஏன் இன்னும் புறோக்கர் கந்தசாமியைக் காணவில்லை” அன்னம்மாவின் விழிகள் படலையையும், பனை மட்டை வேலி இடுக்குகளால் தெரிந்த மணல் ஒழுங்கையையும் ஒரு கணம் உற்றுப் பார்த்தன.

கந்தசாமியின் வருகையைப் பார்த்துத்தான் அறியவேண்டுமென்றில்லை.

தார் றோட்டிலிருந்து இறங்கி இந்த மணல் ஒழுங்கைக்குள் அவரது சைக்கிள் நுழையும் போதே அன்னம்மாவுக்கு அவர் வருவது தெரிந்துவிடும்.

கடகடவென்ற சைக்கிளின் சத்தம். அதைவிட வாய்க்குள் போட்ட வெற்றிலையைக் காறித்துப்பும் செருமல்.

பூவரசம் மரத்துடன் துருப்பிடித்த அந்தச் சைக்கிளைச் சாற்றிவிட்டு அவர் வீட்டிற்குள் வருவதற்கிடையில் அன்னம்மா அவருக்காக அடுப்பில் வைத்த தேநீர் கொதிக்கத் தொடங்கிவிடும்.

ஒன்றா இரண்டா எத்தனை வருடங்களாக அவரும் அவள் வீட்டிற்கு வருகின்றார். அடுப்பில் கொதித்த தேநீரைக் கலந்து கொண்டு வந்து அவருக்கருகில் வைத்து விட்டு “என்ரை பிள்ளைக்கு எப்பிடியெண்டாலும் ஒரு மாப்பிள்ளையைச் சரிப்படுத்திப்போடு கந்தசாமி”

என அவளும் எத்தனை தடவை சொல்லியிருக்கின்றாள்.

ஆனால் எதுவும் நடக்கவில்லை.

காலங்கள் போய் சந்திராவுக்கு - அவள் மகளுக்கு வயது முப்பத்தைந்தைக் கடந்தும்விட்டிருந்தது.

இனி சந்திராவுக்கு திருமணம் நடக்குமா?

அன்னம்மா நம்பிக்கை இழந்து விட்டிருந்தபோதுதான் புறோக்கர் கந்தசாமி அந்தச் சம்மந்தத்தைக் கொண்டு வந்தார்.

“இந்த மாப்பிள்ளைக்கு செல் விழுந்ததிலை ஒரு கால் இல்லை. காலில்லாதபடியால் மற்றவை மாதிரிக் கனக்கச் சீதனம் கேக்கமாட்டினம். கவலைப்படாதை. இந்தக் கலியாணத்தைச் சரிப்படுத்திப் போட்டு பிறகு வாறன்” என்றபோது அவளுக்குள் மீண்டும் நம்பிக்கை துளிர்த்தது.

“ஒரு காலை இழந்தவனா?”

மனதுள் சற்று நெருடல் ஏற்பட்டாலும் அன்னம்மாவுக்கு அது பெரிய பிரச்சினையாகத் தெரியவில்லை.

முன்பெல்லாம் சந்திராவுக்கு நல்லதொரு மாப்பிள்ளை கிடைக்க வேண்டுமென அவள் ஆசைப்பட்டதென்னவோ உண்மைதான்.

நல்லவனாக -
படித்தவனாக - உத்தியோகம் பார்ப்பவனாக.... இப்படி எத்தனையோ தகுதிகளோடுதான் ஆரம்பத்தில் அவளும் சந்திராவுக்கு மாப்பிள்ளை தேடினாள். சாதகம் பார்த்து, பொருத்தம் பார்த்து, குடும்பம் பார்த்து, பெண் பார்த்து எல்லாமே சரி வந்தபிறகு எல்லாக் கலியாணமுமே சீதனத்தில் குழம்பிப்போன பிறகுதான் அன்னம்மா உண்மையைப் புரிந்து கொணடாள்.

அரசாங்க உத்தியோகம் பார்ப்பவனுக்கு ஐம்பது இலட்சம். சாதாரண வியாபாரம் செய்பவனுக்கு இருபது இலட்சம். வெளிநாட்டுக்காரனுக்கு பத்து இலட்சம் என மாப்பிள்ளைகளின் விலைகள் பேரம் பேசப்பட்டபோதுதான் அன்னம்மா தன் தகுதிக்கு மீறி ஆசைப்படுவதை விட்டுவிட்டாள்.

அவளிடம் என்ன இருக்கின்றது?

இடப்பெயர்வுக்கு முன் அவளுக்கும் வீடு, காணி, வருமானம் என வசதிகள் இருந்தன. ஆனால் குண்டு வீச்சுக்கு இலக்காகி அவள் கணவன் இறந்த பிறகு, பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து யாழ்ப்பாணத்தில் வாழத் தொடங்கியபோது இரண்டு பிள்ளைகளைத்தவிர அவளிடம்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வேறெதுவும் இருக்கவில்லை. பிள்ளைகளின் சாப்பாட்டுக்கும், படிப்பிற்கும் செலவளிப்பதே அவளுக்குப் பெரிய பிரச்சனையாக இருந்தது. தோட்ட வேலையும் கூலிவேலையுமாய் பாடுபட்டு உழைத்து பிள்ளைகளை எப்படியோ வளர்த்து விட்டிருந்தாள். அதற்குமேல் சீதனமோ சொத்தோ சேர்க்க அவளால் முடியவில்லை. இந்த நிலையில் சந்திராவின் திருமணமும் இலட்சக்கணக்கான சீதனமும் அவளுக்குக் கனவாகவே இருந்தன.

* * * * *

"அம்மா நேரம் இரண்டு மணியாகுது சாப்பிடவாங்கோ......"

மகள் சந்திரா சாப்பாடு போட்டுவிட்டு அழைத்தாள்.

பசி, சாப்பாடு, தூக்கம் எல்லாவற்றையும் அன்னம்மா மறந்து எத்தனையோ வருடங்களாகி விட்டன.

தொண்டைக்குள் முள்ளாய் சந்திரா.....

கன்னம் இடிந்து, கண்கள் குழிவிழுந்து, தலையில் நரைமுடிகளுடன் சந்திரா.....

அன்னம்மாவுக்கு பசிக்கவில்லை. சாப்பிடவேண்டுமென்றும் தோன்றவில்லை.

"அம்மா சாப்பிடுங்கோ. இந்தக் கலியாணம் அக்காவுக்கு எப்பிடியும் சரிவந்திடும். கவலைப்படாதேங்கோ......"

மகன் சந்திரனின் வார்த்தைகள் புண்பட்ட அவள் மனதிற்கு ஒத்தடமாய் இருந்தன. இப்போதெல்லாம் சந்திராவின் திருமணத்தில் பாதிச் சுமையைச் சந்திரன் ஏற்றுவிட்டிருந்தான். மாப்பிள்ளை தேடி திருமணம் செய்து வைக்கின்ற அளவுக்கு அவனுக்கு வயதில்லைத்தான். இன்னும் இருபத்துமூன்று வயது நிரம்பாதவன். படித்து விட்டு பல்கலைக்கழகப் படிப்பிற்காகக் காத்திருப்பவன். வீட்டுக் கஸ்டத்தை உணர்ந்து பிரத்தியேக வகுப்பென்றும், தனியார் வகுப்பென்றும் நாள்முழுவதும் படிப்பித்துக்கொண்டிருப்பவன். ஆனாலும் சந்திராவின் திருமணத்தை எப்படியாவது நடத்திவிடவேண்டுமென்று அவன் பாடுபட்டான். சந்திராவை எண்ணி அன்னம்மா கவலைப்படும்போதெல்லாம் "அம்மா கவலைப்படாதேங்கோ அக்காவுக்கு எப்பிடியும் கலியாணம் சரிவந்திடும்" என அவளைத் தேற்றுவான்.

இன்றைக்கும் அவளுக்கருகில் அமர்ந்து கொண்டு "அக்காவுக்கு இந்தக் கலியாணம் எப்பிடியும் சரிவந்திடும்............. சாப்பிடுங்கோ அம்மா....." என்ற போது அவள் விழிகள் கலங்கிப் போகின்றன.

அவள் பிரார்த்தனையும் இதுதான்.

இந்தத் திருமணமாவது சந்திராவுக்குச் சரிவந்துவிடவேண்டும்.

"மற்றவை மாதிரி இவை கனக்கச் சீதனம் கேக்கமாட்டினம். காசைவிட மனிசரைத்தான் பெரிசெண்டு நினைக்கிற ஆக்கள். நல்ல குடும்பம். எப்பிடியும் இந்தக் கலியாணம் சரிவந்திடும்" என புறோக்கர் கந்தசாமி கூறியவற்றை நினைத்துப் பார்த்தாள் அன்னம்மா.

"மருதடி முருகா......... இந்தக் கலியாணம் சரிவந்தால் உனக்குக் கற்பூரச்சட்டி எடுப்பன்" மானசீகமாய் முருகனைப் பிரார்த்தித்துக் கொண்டாள் அவள்.

இப்படி எத்தனை பிரார்த்தனைகள்? எத்தனை வேண்டுதல்கள்?

"அன்னம்மாக்கா........ இன்னும் உன்ரை பெட்டைக்குக் கலியாணம் சரிவரேலையே....."

"முப்பத்தைஞ்சு வயசெண்டா இனி எங்கை மாப்பிள்ளை தேடுறது....."

"காலில்லாதவனைக் கட்டிப்போட்டு அவள் கஸ்டப்படுறதை விட இப்பிடியே இருக்கட்டும். ஏன் பாழுங் கிணத்திலை தள்ளுறாய்" என ஊராரின் விசாரிப்புக்கள்.

"கடவுளே இந்தக் கலியாணம் சரிவந்திடவேணும்" அன்னம்மா கண்மூடிப் பிரார்த்தித்தாள்.

தார் ரோட்டில் கடகடவென்ற சைக்கிள் சத்தம்.

அன்னம்மாவின் பார்வை படலையையும் தாண்டி பனைமட்டை வேலி இடுக்குகளால் தெரிந்த மணல் ஒழுங்கையை ஆவலோடு பார்க்கின்றன.

புறோக்கர் கந்தசாமிதான்.

மணல் ஒழுங்கைக்குள்ளால் சைக்கிளை உருட்டிக்கொண்டுவந்து, பூவரசம் மரத்துடன் சாற்றிவிட்டு உள்ளே வருகின்றார் கந்தசாமி. அவசர அவசரமாக அடுக்களைக்குள் புகுந்து தேநீரைக் கலந்துகொண்டுவந்து பக்கத்தில் வைத்துவிட்டு அவர் முகத்தை ஆவலாய்ப் பார்க்கின்றாள் அன்னம்மா.

அவர் முகத்தில் ஏன் இந்தச் சோர்வு?

வெற்றிலையைத் துப்பிவிட்டு சின்னச் சிரிப்புடன் தேனீரை உறிஞ்சிக் குடிக்கின்ற அவர் ஏன் இன்று தலைகுனிந்து இருக்கிறார்?

"சந்திரா என்ரை பிள்ளை மாதிரி....... உன்னை விட அவளுக்குக் கலியாணம் செய்து வைக்கிறதிலை எனக்கு கூட அக்கறை இருக்குது. இந்த வருசத்துக்குள்ளை அவளுக்கு மாப்பிள்ளை கொண்டு வாறனோ இல்லையோ எண்டு இருந்து பார்.........." என வீரம் பேசுகின்றவர் ஏன் மௌனமாக இருக்கிறார்?

அப்படியானால்............ அப்படியானால்............. இந்தக் கலியாணமும் சரிவரவில்லையா?

அவர்களும் இலட்சக்கணக்கில் சீதனம் கேட்டுவிட்டார்களா?

அன்னம்மா இடிந்து போனாள்.

கந்தசாமி நிமிர்ந்து அவளைப் பார்க்கின்றார்.

"ஐந்து இலட்சம் காசும், பதினைஞ்சு பவுண் நகையும் தரவேணும். சீதனம் கேக்க எங்களுக்கும் விருப்பமில்லைத்தான். ஆனாலும் மாப்பிள்ளைக்கு ஒரு தங்கச்சி இருக்குது. அவளுக்கும் நாளைக்கு சீதனம் கொடுக்கத்தானே வேணும்......." என மாப்பிள்ளையின் பெற்றோர் கூறியதையும்

?

?

"தகப்பனில்லாத பிள்ளை............ பலாலியிலை இருந்து இடம்பெயர்ந்து வந்து இஞ்சை இருந்து கஸ்டப்படுதுகள்............ காசைக் கொஞ்சம் குறையுங்கோ............ உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்......." என மாப்பிள்ளை வீட்டில் தான் கெஞ்சியதையும் நினைத்துப் பார்த்தார் அவர்.

ஐந்து இலட்சத்தை மூன்று இலட்சமாகக் குறைக்க முடிந்ததே தவிர அவரால் அதற்கு மேல் எதுவும் செய்ய முடியவில்லை.

"மூண்டு இலட்சம்.......... பதினைஞ்சு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பவுண் நகை..........” அன்னம்மாவின் இதழ்கள் மெதுவாக முணுமுணுத்தன.

முடியுமா அவளால்?

வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சீட்டுப்பிடித்து வைத்திருக்கின்ற ஒரு சில ஆயிரங்கள். காதிலும் கழுத்திலுமாய் இருக்கின்ற நான்கோ ஐந்தோ பவுண்கள்.

ஈடு வைப்பதற்கோ விற்பதற்கோ ஒரு துண்டு காணிகூட இல்லாத நிலைமை.

இதற்கு மேல் மூன்று இலட்சம் பணம், பதினைந்து பவுண் நகை...........

முடியுமா அவளால்?

கந்தசாமிக்காக அன்னம்மா கலந்து கொண்டுவந்து வைத்த தேநீர் ஆறிப்போய்விட்டிருந்தது. அதைக் குடிப்பதற்கு அவருக்கு மனம் வரவில்லை.

தொழில்முறையையும் தாண்டி அன்னம்மாவின் குடும்பத்தின்மேல் அவர்காட்டிய அக்கறை. அந்தக் குடும்பத்தின் வறுமையைக்கண்டு ஏற்பட்ட பரிதாபம். சந்திராவின் திருமணத்திற்காக செய்த முயற்சிகள்.

அத்தனையும் வீண்தானா?

“இந்த வருசத்துக்கிடையிலை உன்ரை பிள்ளைக்கு கலியாணம் செய்து காட்டுறன்” என வீரமாய்ப் பேசியதெல்லாம் பொய்யாகிவிட்டதா?

இனிமேல் அவருக்கு அங்கு என்ன வேலை?

கந்தசாமி எழுந்தார். பூவரசம் மரத்துடன் சாற்றிவிட்டிருந்த அந்தத் துருப்பிடித்த சைக்கிளை உருட்டிக்கொண்டு படலையை நோக்கி நடந்தார்.

சந்திரா.........கலியாணம்........... மாப்பிள்ளை பார்ப்பது.......... எல்லாவற்றுக்கும் இன்றோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு நடந்து போகின்ற கந்தசாமியை வேதனையோடு பார்க்கின்றாள் அன்னம்மா.

முப்பத்தைந்து வயதாகிவிட்ட சந்திரா......

தலையில் நரைமயிர்களுடன் ஒட்டிய கன்னமும், குழிவிழுந்த கண்களுமாய் சந்திரா.......

திருமணமாகாமல் காலம் முழுவதும் கன்னியாய் பெருமூச்சுவிட்டுக் கொண்டு சந்திரா.........

‘கலியாணம் கட்டாத குமர்’ என ஊராரால் பழிக்கப்படுகின்ற சந்திரா........

முடியாது.

சந்திராவுக்கு எப்படியாவது திருமணம் செய்து வைக்க வேண்டும்.

திருமணம் செய்து அவள் சந்தோசமாக வாழ்வதை அன்னம்மா பார்க்கவேண்டும்.

?

“கந்தசாமி.....”

அன்னம்மா உரத்த குரலில் கந்தசாமியை அழைத்தாள். சைக்கிளை உருட்டிக்கொண்டு படலையைத்திறக்கப் போன கந்தசாமி அன்னம்மாவின் குரலைக்கேட்டு திரும்பிப்பார்த்தார்.

“பத்து இலட்சம் காசோடை முப்பது பவுண் நகையோடை சந்திரனுக்கு எங்கையெண்டாலும் ஒரு பொம்பிளை பார் கந்தசாமி”

அன்னம்மா கூறியதைக்கேட்டு கந்தசாமி திடுக்குற்றுப் போகின்றார்.

சந்திரனுக்கா? திருமணமா? இன்னும் இருபத்திமூன்று வயது கூட நிரம்பாதவனுக்கு பெண்பார்ப்பதா?

கந்தசாமி அன்னம்மாவை புரியாமல் பார்க்கின்றார்.

“ஆம்பிளைப் பிள்ளையிட்டை சீதனம் வாங்கி பெட்டைக்குக் குடுக்கப் போறன் கந்தசாமி. இதைத் தவிர எனக்கு வேறை வழி தெரியேலை”

அன்னம்மாவின் கண்களிலிருந்து நீர் வழிகின்றது.

கந்தசாமி திகைத்துப் போகின்றார்.

படலையைத் திறந்து கொண்டு மணல் ஒழுங்கையைத்தாண்டி தார் றோட்டுக்கு வந்த பிறகும் அன்னம்மாவின் அழுகையொலி கந்தசாமியின் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. ■




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தாவித் கனடா

# ஒரு விடுதலைப்பறவையின் நாட்குறிப்பு

வியட்னாம் போரில் பங்கு பற்றி நாடு திரும்பிய முன்னாள் அமெரிக்கப் படை வீரரொருவர், 35 வருடங்களாகத் தான் பேணிப் பாதுகாத்த ஒரு இளம் வியட்கொங் பெண் மருத்துவப் போராளியின் நாட்குறிப்பை அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைத்திருக்கிறார். ஆழமான உணர்வுகளோடு எழுதப்பட்ட அந்த நாட்குறிப்பு இன்று வியட்னாமில் மீண்டும் ஒரு தேசப்பற்று அலையை எழுப்பியிருக்கிறது. பல முன்னாள் வியட்கொங் போராளிகளை, பொதுமக்களை மட்டுமல்லாது, அமெரிக்கப் படை வீரர்களை, அவர்களுடன் இணைந்து செயற்பட்ட வியட்கொங்கின் எதிர் முகாமினரை எனப் பல தரப்பட்டவர்களையும் வரலாற்றின் நினைவுகளில் மூழ்கடித்திருக்கிறது. தூய்மையும் மண்மீது, மக்களின் மீது தாய்மை நிறைந்த நேசமும் வழிகின்ற வரிகள் நிறைந்த அந்த நாட்குறிப்பு, ராஜதந்திர ரீதியாக, அரசியல் நகர்வுகள் வாயிலாக இணைக்கப்பட முடியாதிருந்த இருநாடுகளின் பிளவினை மேடுறுத்திப் பாலமிட்டிருக்கிறது.

நாற்பதுகளில் நிகழ்ந்த யூதப்படுகொலைகளின்போது ஆன் பிராங் என்னும் யூதச்சிறுமியின் நாட்குறிப்பு வெளிவந்து உலகை உலுக்கியது போல, டாங் துவி த்ராம் என்ற இந்த வியட்னாமியப் போராளியின் நாட்குறிப்பும் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. வியட்னாமில் இதுவரை 300,000 பிரதிகள் விற்றுவிட்ட நிலையில் யப்பானிய மொழியிலும் பிரெஞ்சு மொழியிலும் வெளியாகியிருக்கிறது. ஆங்கிலத்திலும் கொரியமொழியிலும் மொழிபெயர்ப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நாட்குறிப்பின் ஆங்கில மூலத்தை இணையத்தளத்தில் நான் பார்க்க நேர்ந்தபோது எனக்கேற்பட்ட உணர்வுப்பதிவுக்கூடாக வாசகர்களிற்கும் இதனை அறிமுகப்படுத்த விழைகிறேன்.

ரஷ்யப் புரட்சியாளனும் எழுத்தாளனுமான என்.ஏ. ஒஸ்ரோ ஸ்கியின் வாசகம் ஒன்று நாட்குறிப்பின் முகப்பையும் இப்போராளியின் இலட்சியத்தையும் துலக்கமாய் வெளிப்படுத்துகின்றது.

"வாழ்க்கை மனிதனுக்கு வாய்த்த அதியுன்னதமான பொருள். நாம் ஒருமுறை தான் வாழ்கிறோம். மாதங்களையும் வருடங்களையும் வீணடித்துவிட்டோமே என்று கவலைப்படாதபடிக்கு, மாதங்களையும் வருடங்களையும் வீணடித்துவிட்டது குறித்து வெட்கப்படாதிருக்கும் படிக்கு, எமது கண்கள் மூடும்போது, கைகள் சோர்ந்து வீழும்போது எமது வாழ்வு முழுமையையும் எமது பலம் முழுமையையும் உலகிலேயே மிக உயர்ந்ததும் மிக அழகியதுமான பணியான மக்கள் விடுதலைக்கான போராட்டத்துக்கென அர்ப்பணித்திருக்கிறோம் என்று சொல்லும்படிக்கு வாழ்வோமாக"

"வாழ்க்கையில் மிகப்பெரிய புயல்களினூடாக ஒருவன் பயணம் செய்தாக வேண்மெனினும் புயலின்முன் அவன் தலை தாழ்த்தவே கூடாது" இந்தவாசகங்களின் வாசல் கடந்து நாட்குறிப்பின் பக்கங்களுள் நுழைவோம்.

ஏப்ரல் 8, 1968

குடல்வால்அழற்சிக்கான அறுவைச் சிகிச்சை ஒன்றைப் போதுமான மருந்துகளின்றி செய்தாகவேண்டியிருந்தது. சொற்ப அளவிலான நோவோகெய்ன் ரியூப்புகளே கைவசம். ஆனாலும் அந்த இளம்போராளி ஒருபோதும் அழவோ கூச்சலிடவோ இல்லை. என்னைத் தைரியப்படுத்துவதற்காக அவன் தொடர்ந்து புன்னகைக்கிறான். அவனது உலர்ந்த உதடுகளிலே வலிந்து வரவழைக்கப்படுகிற புன்னகையைக் காணும்போதெல்லாம் அவனது உடற்சோர்வை நான் உணர்கிறேன். அவனுக்காக நான் வருத்தப்படுகிறேன். அவனது வயிற்றில் தொற்று ஏற்பட்டிருக்கிறது. அது குடல்வால் வெடித்ததால் ஏற்பட்டதல்ல எனினும் ஒரு மணிநேரமாக முயன்றும் காரணத்தை அறியமுடியவில்லை. எனவே ஏற்புநீக்கி கொடுத்து வயிற்றை மூடித்தைத்து ரத்தச் சுற்றோட்டத்தை மீளச்செய்தேன். காயமுற்ற அந்தப் போராளியின் மீதான கவலையும் நேசமும் என்னை நிலைகொள்ளாது தவிக்க வைத்தன. அவனது தலையை மென்மையாக வருடினேன். "உன்னைப்போல, என்னால் குணப்படுத்தமுடியாமற்போன நோயாளிகளால் எனக்கு மிகுந்த கவலை ஏற்படுகிறது. என் ஆயுள் முழுதும் உங்கள் ஞாபகங்கள் மறையாது" என அவனுக்குச் சொல்லவிரும்பினேன்.

இவ்வாறு இந்த நாட்குறிப்பில் காயம்பட்ட போராளியொருவனைக் குறித்துக் கவலையுடன் பதிகிற இந்த டாங் துவி த்றாம் வடக்கு வியட்னாமின் ஹனோய் நகரில் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தவர். ஹோசிமின் தலைமையில் வடக்கு வியட்நாமினை ஆக்கிரமித்திருந்த பிரெஞ்சுப்படைகளை எதிர்த்துப் போராடி, தீன் பீன் பூவில் இடம்பெற்ற உலகப்புகழ் பெற்ற முற்றுகைத்தாக்குதலில் அவர்கள் முகத்தில் கரி பூசி வெளியேற்றி, வியட்னாமியர்கள் வெற்றிகரமான கம்யூ



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

னிஸ அரசொன்றை வட வியட்னாமில் நிறுவிய காலம், தென் வியட்னாமில் அமெரிக்கப்படைகள் காலூன்றினர். தென் வியட்னாமை விடுதலைசெய்ய வியட்கொங் கெரில்லாக்கள் புறப்பட்டனர். அப்போது அலையலையாகப் போராட்டத்தில் இணைந்துகொண்ட ஏழை இளைஞர் யுவதிகள் மத்தியில், பூர்ஸ்வாக்கள் எனக் கம்யூனிஸ்ட்டுகளால் அழைக்கப்படும் படித்த செல்வந்தக்குடும்பத்திலிருந்து இணைந்து கொண்டவர் த்றாம். ஹனோய் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டப்படிப்பை முடித்தவர்.

'எம்' என நாட்குறிப்பிலே புதிராக குறிப்பிடப்படும் தன் காதலனைப் புரட்சிக்காக விடை கொடுத்தனுப்பிவிட்டு அவனது காதலுக்காக ஏங்குகிற வளரிளம் பருவத்திலிருந்து, புரட்சியை நேசித்துத் தனது இறுதி மூச்சும் காதலையே சுவாசிக்கும் என உறுதி கொண்டு தாய்மண்ணை மனதில் வரித்தபடி மானிட விடுதலை நோக்கி நகர்ந்த அவரது பயணத்தை இந்த நாட்குறிப்பு பதிவுசெய்கிறது. ஆம், தன்னைச் சுற்றிக் கட்டப்பட்ட சிறைகளை மெல்ல மெல்ல உடைத்து ஒரு கூட்டுப்புழு தன் அழகிய காதற்சிறகடிப்பில் வண்ணத்துப்பூச்சியாக விண்ணுயர்ந்து அதன் சிறகுகளின் கீழ் விரிந்த மண்ணை நேசிக்கத் தொடங்குகிறது. புரட்சியை த்றாம் மிக ஆழமாக நேசித்தார் என்பதை இந்த வரிகள் விளக்குகின்றன. "புரட்சிக்கு உண்மையாக வாழவேண்டுமென்பதற்காகத் தம் வாழ்நாள் முழுதையுமே அர்ப்பணிக்க மக்களால் எப்படி முடிகிறது என்பதை இப்போது நான் உணர்ந்துகொண்டேன். புரட்சியானது மக்களை மேன்மையானவர்களாக, அழகியவர்களாகப் பயிற்றுவிக்கிறது. ஒருமித்த கருத்துடையவர்களை ஒன்றாகப் பிணைப்பதன் மூலம் உலகின் வேறெந்த சக்தியையும் விடப் பலமான சக்தியாக மாற்றுகிறது. இத்தகைய புரட்சியாளர்களின் குடும்பத்தில் ஒரு அங்கமாக இருப்பதைவிட கௌரவம் வேறேது" ஹோ சிமினினதும் லெனினினதும் வார்த்தைகளை அடிக்கடி நினைவுகூரும் த்றாம் "ஒரு புரட்சியாளன் என்பவன் அன்பினால் நிறைந்து செழுமையான இதயம் கொண்டவன் என்பார்கள். நான் அவ்வாறு ஆகிவிட்டேன்" என்கிறார்.

அமெரிக்கப்படைகளின் அட்டூழியங்களின் கொடூரத்தால், போராட்டத்திலிருந்து விலகிச் செல்வதற்குப் பதிலாக வியட்னாமிய மக்கள் மேலும் மேலும் போராட்டத்துடன் தம்மை இறுகப் பிணைத்துக்கொண்டதைக் கண்ணுற்ற த்றாமின் விடுதலை அவா மேலும் உறுதியாகிற்று. அவர் எழுதுகிறார்: "இந்தச் சிறிய நாட்குறிப்பின் பக்கங்கள் முழுதும் தொடர்ந்தும் குருதியால் நிறைகின்றன. ஆனாலும் என் இனிய த்றாம், 20 வருடங்களாக இழந்த எம் மக்களின் குருதியும் எலும்பும் வியர்வையும் கண்ணீரும் போதுமானதல்ல என்பதைக் குறித்துவை. வாழ்வு அல்லது சாவு என்பதைத் தீர்மானிக்கும் யுத்தத்தின் இந்த இறுதி நாட்களில் ஒவ்வொரு தியாகமும், பாதையின் முடிவில் பிரகாசமான வெளிச்சமாகத் துலங்குகிறது. இன்று நாங்கள் ஏறத்தாழ வென்றுவிட்டோம். எமது இலக்கை அடைய இன்னும் சிறிது தூரமே உள்ளது."

இந்தப் போராளி இடர்நிறைந்த களங்களிலெல்லாம் கெரில்லாக்களினதும் ஏழைமக்களினதும் துயர்துடைக்கும் பணியில் ஆத்மார்த்தமாக உழைத்தவர். அந்தப் பணியில் தன் உயிரையும் அவர் பொருட்படுத்தவில்லை என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன: "சிலவேளைகளில் நான் எதிரியைச் சந்திக்க நேரிடலாம், என் கரங்களில் செஞ்சிலுவையிட்ட முதலுதவிப்பெட்டியை அணைத்தபடி நான் சாவைத் தழுவ நேரலாம், அப்போது கனவுகள் நிறைந்த தனது இளமையைப் புரட்சிக்காகக் கொடுத்த இந்த இளம் பெண்ணை எண்ணி மக்கள் கலங்கிநிற்கக் கூடும்."

நாட்குறிப்பின் பல பக்கங்களில் அவரது உள்ளத்து உணர்வுகள் கலப்படமின்றிப் பதிவாகுகையில், ஒரு அழகிய துன்பியற் கவிதை ஒன்றை வாசிக்க நேர்ந்ததாய், அல்லது வாழ்வின் உண்மைகளாலுருவான குறும்படம் ஒன்றைப் பார்க்கநேர்ந்ததாய் மனது உருகிப் போகிறது: "நவம்பர் 30, 1969: இராணுவ நடவடிக்கைகளுக்கான பாதை எப்போதுமே இடர் மிகுந்தது. குறிப்பாக அமெரிக்கத் துருப்புகள் உலவுகின்ற இடங்களில் களப்பணி செய்வது மிகுந்த ஆபத்தானது. போநோ கிராமத்தினூடாக நான் பயணிக்கிறேன். ஆளரவமற்று, வீடுகள் வெறிச்சோடிக்கிடந்தன. பல வீடுகளில் மூங்கிலிலான தூண்கள் ஆவிகளின் நிழல்கள் போலும் தீயின் தழல்களால் எரிந்து கொண்டிருந்தன. ராணை(ஒரு போராளி) நான் ஏன் மிகவும் நேசிக்கிறேன் என்றோ அவனைப் பிரிந்த துயர் என்னை வாட்டுவது ஏனென்றோ எனக்கு விளங்கவில்லை. "ரான் இதுதான் நீ பிறந்த கிராமமா? ஏன் உனது கிராமம் ஊமையாகிப்போயிற்று? வெறுமையாகிப் போன தோட்டங்களில் நிறைந்திருக்கும் ஊதாநிறப் பூக்கள் ஒரே சமயத்தில் மகிழ்வையும் வருத்தத்தையும் நிறைக்கின்றன. குனிந்து ஒரு பிடி ஊதாநிறப்பூக்களை அள்ளுகிறேன். சுழித்தோடும் பென் பே நதியில் அவற்றை மிதக்க விடுகிறேன். ஓர் ஆயுட்கால நண்பனின் எளிமையும் ஆழமானதுமான நினைவுகளை மறக்கவேமுடியாது"

ஆதிக்கப்பேய்களின் செந்தழல் நாக்குகள் தின்று தீர்க்கின்ற காடுகள், நஞ்சூட்டப் பட்டதால் நெருப்பின் நிறமேறிச் செத்துக்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கொண்டிருக்கும் காடுகள், சிகரட் மூட்டியபின் ஏழைகளின் குடிசைகளையும் மூட்டி கெக்கலி கொட்டும் ஆக்கிரமிப்பாளன் இட்ட தீயாற் சிவந்த கிராமங்கள், மலைச்சரிவுகளில் குழி பறிக்கும் பாரிய குண்டுகளால் அதன் பசிய புற் போர்வை பிய்த்தெறியப்பட, செந்நிறமண் தெறித்த மலைகள் என நெருப்பின் வெம்மை கொண்டு விரிகின்ற நாட்குறிப்பின் பக்கங்கள், போரின் கொடூரமுகத்தைச் சொல்லாமற் சொல்கின்றன.

"இந்தப் போராளி எனது எதிரி எனினும், அவரது வார்த்தைகள் எவரது இதயத்தையும் உருக்கும்" என்கிறார் இந்த நாட்குறிப்பை எரிக்காது இத்தனைநாள் பாதுகாத்த (F)பிறெட் வைற்ஹேஸ்ட். தனது 27வது பிறந்த நாளுக்கு சிலநாட்கள் முன்னதாக வீரச்சாவைத் தழுவிய டாங் துவி த்றாம் சம்பவதினமன்று 5 காயப்பட்ட போராளிகளை அமெரிக்கக் குண்டுகளுக்குப் பலி கொடுக்கநேர்ந்தது. எஞ்சிய காயப்பட்டவர்களையும் தாதிமாரையும் பாதுகாப்பான நிலைகளுக்கு நகர்த்தி விட்டு அவர்களைக் காக்கும் உயிர்வேலியாக நின்று, நவீன ஆயுதங்கள் தாங்கிய அமெரிக்கப்படைகளை தன்னந்தனியே பழைய சீனத் தயாரிப்பான ஒற்றைச்சூட்டுத்துப்பாக்கியையும் தளராத மன உறுதியையும் கொண்டு போராடி மடிந்தார். அப்போது (F)பிறெட் வைற்ஹேஸ்ட் 22 வயது நிரம்பிய ஒரு புலனாய்வு அதிகாரி. (F)பிறெட்டின் பணி, மீட்கப்பட்ட எதிரியின் ஆவணங்களை ஆய்வு செய்வது. ஒரு சிகரட் பக்கற் அளவேயான, மேலோட்டமான பார்வைக்குப் பெறுமதியற்றதாகத் தெரிந்த அந்த நாட்குறிப்பை அவர் எரிக்க முற்பட்டபோது கூடவந்த மொழிபெயர்ப்பாளர் தடுத்தார். "(F)பிறெட், இதனை எரிக்காதே. இதற்குள்ளே ஏற்கனவே ஒரு நெருப்பு இருக்கிறது" என்றார் அந்த மொழிபெயர்ப்பாளர். அக்கினிக் குஞ்சொன்று தனக்குள் அடங்கிக் கிடந்ததை எதிரிக்கும் கூட உணர்த்தமுடிந்தது தான், இந்தப் படைப்பு காலத்தைவென்று எழும் தருணத்தை நிதர்சனமாக்கியிருக்கிறது.

வியட்னாமின் குவாங்னாய் மாகாணத்தின் மிகப் பரந்த பிரதேசமெங்கும், ராம் கொப் மலைகளிலிருந்து போபிங், போத்றாங், அன்கே ஏரி வரை அர்ப்பணிப்புடன் இந்த மருத்துவரின் பாதங்கள் நடந்தன. அமெரிக்கப் படைகளின் முற்றுகைக்கு ஆளாகும் அபாயத்தையும் அலட்சியப்படுத்தி, துன்பப்படுபவர்களின் இல்லக் கதவுகளை இந்த மருத்துவரின் கரங்கள் தட்டின. இப்படிப்பட்ட உணர்வாளர்களின் பணியை, குரலை, மூச்சை நிறுத்த ஆக்கிரமிப்பாளர்கள் என்ன விலை கொடுத்தும் முயல்வார்கள் என்பது வரலாறு கண்ட உண்மை. அமெரிக்கப்படைகளும் த்றாமின் மூச்சை நிறுத்தப் பணத்தை அள்ளி வீசினர். பல தடவைகள் த்றாமின் நடமாடும் மருத்துவப்பிரிவை முற்றுகையிட முயன்று தோற்றிருக்கிறார்கள். அமெரிக்கக் காலாட்படையின் 4வது டிவிஷன், 11வது பிரிகேட், 23வது காலாட்படை டிவிஷன், 101வது டிவிஷன் எனப் பல படைப்பிரிவுகள் இப்பிரதேசமெங்கும் தூர் வாரியும் த்றாமின் குழுவைக் கைப்பற்றமுடியவில்லை. ஒரு கட்டத்தில் அமெரிக்கப்படைகளின் தன்மானப்பிரச்சினையாக அது மாறிற்று. விலைபோகாத மக்கள்கூட்டமும் இலட்சிய உறுதி கொண்ட விடுதலைப்படையும் இலகுவில் வென்றுவிடமுடியாத தென்பதை ஆக்கிரமிப்பாளர்கள் அதிக விலை கொடுத்துத்தான் படிக்கவேண்டியிருந்திருக்கிறது.

டாங் துவி த்றாம் வீரச்சாவடையச் சில நாட்களுக்கு முன்னதாக தனது நாட்குறிப்பில் எழுதிய இறுதிக்குறிப்புகள், தாங்கமுடியாத அன்பின் ஏக்கத்தை வெளிப்படுத்தும் கனம் கொண்டு வாசிப்போரைத் தாக்குகின்றன. "நான் முதிர்ச்சி பெற்றுவிட்டேன். இடர்களைப் பலத்துடன் எதிர்கொள்ளக் கற்றுவிட்டேன். ஆயினும் இந்த நிமிடத்தில், இப்போது, ஒரு தாயின் கரம் என்னை அரவணைக்க வாராதா என அல்லது ஒரு நெருங்கிய தோழமையின் கரம், குறைந்தது எனக்குத் தெரிந்த ஒரு மனிதனின் கரமாவது வாராதா என ஏன் இவ்வளவு தூரம் ஏங்குகிறேன்? தயவுசெய்து என்னிடம் வாருங்கள், நான் மிகுந்த தனிமையில் வாடும் போது வந்து என் கரங்களைத் தாங்கி என்னை நேசியுங்கள், என்முன்னே விரியும் பாதையின் இடர்களூடாக நான் பயணம் செய்ய எனக்குப் பலத்தைத் தாருங்கள்"

இத்தனை வருடகாலமும் இந்த நாட்குறிப்பை காத்துவைத்திருந்த அமெரிக்கப் படைவீரர், வியட்னாம் காலத்திலிருந்து இன்று வரை உலகம் எவ்வளவு தூரம் மாறியிருக்கிறது என்றால் வேதனை தான் மிஞ்சுகிறது என்று தனது ஆதங்கத்தினை வெளிப்படுத்துகிறார். "ஒரு நாள் த்றாமின் தாயாரைப் போல், ஈராக்கியத் தாய்மாரது நிலையும் மாறலாம். ஈராக்கிலே ஏன் நாம் நிற்கிறோம் என்று எனக்குத் தெரியவில்லை. போரின் வக்கிரமும் குரூரமும் நீ அதில் ஈடுபடும்வரை, உன் நண்பனின் குருதி உன்னில் பட்டுத் தெறிக்கும் வரை உன்னால் அறியமுடிவதில்லை" என்கிறார்.

மனிதர்கள் பாகுபாடுகளை மறந்து, பகைமைகளை மறந்து கை கோர்த்துக் கொள்ள ஒருதுளி அன்பு போதுமானது என்பதை இந்த நாட்குறிப்பு கூறுகிறது. உலகந் தழுவிய மானுட விடுதலையின் குரலாக ஒலித்த இந்த வியட்கொங் விடுதலைப் பறவையின் குரலை ஒரு கழுகின் கரங்கள் பொத்திக் காத்த அதிசயம் எங்ஙனம் சாத்தியமானது, அன்பினாலன்றோ. விடுதலையை நேசிக்கும் சுவாசிக்கும் மக்கள் கூட்டமான நாமும் அந்த அன்பின் பறவையின் பாதச்சுவடுகளைத் தொடர்வோம். வெந்து தணிந்த வியட்னாமியக்காடுகளின் சாம்பலிலிருந்து மீண்டெழுந்த அந்த பீனிக்ஸ் பறவை தன் சிறகுகளின் கீழ் விரிந்த மண், சுதந்திரம் தந்த துடிப்புடன் இயங்குவதைக் கண்டு பூரிப்படையட்டும்.



மனிதர்கள் பாகுபாடுகளை மறந்து, பகைமைகளை மறந்து கை கோர்த்துக் கொள்ள ஒருதுளி அன்பு போதுமானது என்பதை இந்த நாட்குறிப்பு கூறுகிறது. உலகந் தழுவிய மானுட விடுதலையின் குரலாக ஒலித்த இந்த வியட்கொங் விடுதலைப் பறவையின் குரலை ஒரு கழுகின் கரங்கள் பொத்திக் காத்த அதிசயம் எங்ஙனம் சாத்தியமானது, அன்பினாலன்றோ. விடுதலையை நேசிக்கும் சுவாசிக்கும் மக்கள் கூட்டமான நாமும் அந்த அன்பின் பறவையின் பாதச்சுவடுகளைத் தொடர்வோம். வெந்து தணிந்த வியட்னாமியக்காடுகளின் சாம்பலிலிருந்து மீண்டெழுந்த அந்த பீனிக்ஸ் பறவை தன் சிறகுகளின் கீழ் விரிந்த மண், சுதந்திரம் தந்த துடிப்புடன் இயங்குவதைக் கண்டு பூரிப்படையட்டும்.

www.tamileelamarchive.com



# சமரும் மருத்துவமும்

■ தூயவன்

அருகில் இருப்பதையே அவதானிக்க முடியாத அந்த கார்இருள், அதற்கு வலுச் சேர்ப்பதற்காக வானத்து நட்சத்திர ஒளி வருகைக்குத் தடைவிதிக்கும் மழை மேகங்கள் அவை தெளிக்கும் நன்னீர்த் துளிகள் உடலைக் குளிர்விக்கும் நேரம், தங்கள் பாதம் பதியும் அன்றி மூச்சு விடும் ஓசையோ அவர்கள் செவிகளையே சேரக்கூடாக அவதானத்துடன் கரும்புலிகள் அணியொன்று ஆனையிறவுத் தளத்தை ஊடறுத்துச் செல்கின்றது. அவர்களின் இதய ஓசை மட்டும் அவரவர் செவிப்பறையை அதிர்விக்கிறது. தங்கள் சிறு அவதானமின்மையும் எதிரியை உசாரடையச் செய்து விடலாம். காரணம் தப்பினால் மரணம் என்பது இவர்களுக்கு மட்டுமன்று இவர்களால் பெற்றுக் கொடுக்கப்பட்ட இருக்கும் வெற்றி தேவதைக்கும் என்பது அனுபவங்களின் பாடம்.

மேற்படி எண்ணங்களால் சூழப்பட்ட வண்ணம் அவ்வணி நகர்கிறது. அப்பொழுது அவர்களின் ஒருவர் காலில் பாம்பு ஒன்று தன் பல்வரிசையைப் பதிக்கிறது. பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பர் ஆனால் இவர்களிற்குப் பயம் மறந்து பல காலம் ஆகிவிட்டது. எதிர்பார்க்கப்பட்ட ஆபத்துக்களை எதிர்கொள்வது ஒப்பீட்டளவில் இலகுவானதே இதற்கமையப் பாம்பினால் கடியுண்டவர் களமருத்துவர் ஒருவருடன் இணைந்து இருவருமாகப் பற்றையொன்றினுள் புகுந்து பதுங்கிப் பாதுகாப்பாக தம்மை உருறைத்துக் கொள்கின்றனர்.

தரைவாழ் பாம்பினங்களில் 70%ஆனவை நஞ்சற்றவை. எனவே கடித்த பாம்பு ஆபத்தற்றதாக இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம் ஆயினும் அதனை உறுதிப்படுத்தல் வேண்டும் நஞ்சினால் நரம்பு மண்டலம் தாக்கப்படவில்லை என்பதை மேலெழுந்தவாரியாக உறுதி செய்யலாம். இதனைச் செய்வதற்கு வெளிச்சம் வேண்டும் எதிரியின் குகையினுள் ஏற்படுத்தப்படும் சிறு வெளிச்சமும் மலைமேல் விளக்காகும். கற்பனை கடந்த ஆபத்துக்களை கண் எதிரே கொண்டுவரும் எனினும் செயற்பட்டே ஆகவேண்டும். ஒருவாறு மெல்லிய ஒளிக்கதிரின் உதவியுடன் நாளமொன்றிலிருந்து வெளியெடுக்கப்பட்ட குருதியானது உறைவிடப்படுகிறது. கடித்த பாம்பு நஞ்சற்றது என்பது உறுதி செய்யப்படுகிறது. மேற்படிக் கரும்புலியின் பலம் மீளவும் உறுதி செய்யப்படுகிறது. இதனால் இவ்வணி தனது தாக்குதலிலக்கை வெற்றிகரமாக நிறைவேற்றி இழப்புக்கள் எதுவும் இன்றி மீள்கின்றது. ஓயாத அலை - 2 வெற்றி எமதாகின்றது.

01.02.1998 அதிகாலை அம்மருத்துவ முகாம் மிகத் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. முதல் நாள் இரவு கிளிநொச்சி இராணுவத்தளம் மீதான வலிந்த தாக்குதலின் போது காயமுற்றவர்களுக்கு அவசர சிகிச்சைகள் அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. விரைந்து வரும் வாகனங்களில் இருந்து இறக்கப்படுவர்களுக்கு முதலுதவியளித்தல் சிறு சிறு சத்திர சிகிச்சை செய்தல், குருதி திரவ ஊடகமம் ஏற்றுதல், அவர்களை உடனுக்கடன் இடம் மற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் வேகமாக இடம் பெற்றவண்ணமுள்ளன. குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல் விட்டு விட்டுத் தரையையும் வானையும் அதிர்விக்கின்றது. இம் முகாம் தாக்கப்படலாம் எனும் ஐயம் எழுகின்றது. உடனேயே எல்லோரும் காயமடைந்தவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றவும் நிலக்கீழ்ப்பதுங்குழியினுள் கொண்டு செல்லவும் முயற்சிக்கின்றனர். அதற்கு போதிய அவகாசம் இல்லாமலேயே மருத்துவ முகாம் வான் தாக்குதலிற்குள்ளாகின்றது. இதன் போது பூநகரி வெற்றித் தாக்குதல் முதல் இன்று வரையிலான சமர்களில் பல போராளிகளின் உயிர் காத்த இராணுவ மருத்துவர்களான மேஜர் சுசில், மேஜர் ரோகினி மற்றும் களதள மருத்துவப் பொறுப்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாளர்களான மேஜர் திவாகர், மேஜர் எஸ்தர் உட்பட 43 பேர் வீரச்சாவடைகின்றனர். மேற்படி கசப்பான அனுபவங்கள் தொடராமல் இருப்பதற்காகத் தொடர்ந்த தாக்குதல் திட்டமிடல்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இது ஓயாத அலை - 2இல் வெளிப்பட்டது.

'ஆகாயக் கடல் வெளி'த் தாக்குதல், 'தவளைப் பாய்ச்சல்' தாக்குதல் போன்ற சமர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் காயமடைந்தனர். அவர்களைத் தன்னுள் அரவணைத்துக் காத்தது யாழ் போதனா வைத்தியசாலை. இதன்போது பணியாற்றிய நூற்றிக்கு மேற்பட்ட மருத்துவர்களும் ஆயிரத்துக்கும் அதிகமான பணியாளர்களும் தங்கள் உயிர் காக்கும் பணிக்குச் சிகரம் வைத்தனர். இவ்வளம் எம்போரிடும் ஆற்றலிற்கும் பெரும் வலுச்சேர்த்துச் கொண்டிருந்தது. இதனையும் இது போன்ற ஏனையற்றையும் இல்லாதொழிப்பதற்கு எதிரி தன்னால எல்லாவற்றையும் செய்வான் என்பதில் ஐயம் இருக்கவில்லை. இதற்கான மாற்றீடுகளை பெறுவற்காக தலைவர் அவர்களின் திட்டங்கள் சில வருடங்களுக்கு முன்னரேயே செயல் வடிவம் பெறத் தொடங்கியிருந்தது.

1993ல் மணலாற்றில் நடைபெற்ற கொக்குத்தொடுவாய்த் தாக்குதலின்போது களமுனையிலிருந்து யாழ் மருத்துவமனையினை சென்றடைவதற்கு பல பத்து மைல் பயணிக்க வேண்டியிருந்தது. இதன்போது காப்பாற்றக் கூடியவர்கள் எனக் கணிக்கப்பட்டவர்கள் வீரச்சாவடைந்தமை பாதிப்பிற்குள்ளான குருதிக்கலன்கள் காலதாமதம் காரணமாக திருத்தமுடியாமல் போனதால் பலர் தம் அங்கங்களை இழந்தமை பயண இடர்களின்போது அவர்கள் அனுபவித்த மேலதிக வேதனைகள் என பல காரணிகள் எம் மனங்களை உறுத்தின. பலமாகச் சிந்திக்க வைத்தன. நாங்கள் போர்ச் சத்திர சிகிச்சை செய்வதில் கணிசமான அளவு முன்னேறுவோமாயின் மேற்படி பின்னடைவுகளைத் தவிர்க்கலாம் என உணர்ந்தோம்.

முல்லைச்சமரில் விழுப்புண்ணடைந்த போராளி ஒருவர் தனது எண்ணவோட்டங்களைப் பின்வருமாறு கூறினார். "நாங்கள் பிரச்சினையில்லாமல் நகர்ந்து எங்களுக்குரிய இடங்களில் நிலையெடுத்து விட்டோம். மற்ற இடங்களும் குழம்பின மாதிரித் தெரியவில்லை. அதனால் இத்தாக்குதுலில் பூரணமாக வெல்லுவோம். அதில் சந்தேகம் இருக்கவில்லை. ஆனால் காயமடைந்தால் என்ன செய்யிறது முந்தியெண்டாலும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிருந்தது. பலநூறு போராளிகள் காயமடைவர் என்பது வெளிப்படையானது. இதனால் இப்படியான மனநிலை அவர்களுக்கு ஏற்படுவது தவிர்க்கவியலாதது. முதல் இரண்டு நாட்களிலேயே ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இதன்போது ஏற்பட்ட மருத்துவப் பளுவிற்கு வெற்றிகரமாக முகம் கொடுத்தோம் இதனால் மருத்துவம் தொடர்பாக எம்மவர் மத்தியில் இருந்த சந்தேகம் தீர்க்கப்பட்டது. இது அவர்களுக்கு மேலதிக உளவியல் பலத்தை கொடுத்தது.

இச் சமரினைத் தொடந்து 'சத்ஜய', 'ஜசிக்குறுய்' சமர்களில் ஏற்பட்ட அனுபவங்களின் விளைவான சிறப்புத் தேர்ச்சி எம் இராணுவ மருத்துவர்களின் செயற்பாட்டில் வெளிப்பட்டது. இது எம் போரிடும் ஆற்றலின் பரிமாண வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. உதாரணமாக வேவுப் புலிகளுடன் இராணுவ மருத்துவர்களும் நகர ஆரம்பித்தனர் பல நாட்களாக எதிரியின் பிரதேசத்தினுள் தங்கி நின்று வேவு எடுத்தல், சிறு சிறு அதிர்ச்சியூட்டும் பதுங்கித் தாக்குதல்களைச் செய்தல், இராணுவப் பொறுப்பதிகாரிகளைத் தேர்ந்து கொல்லுதல் போன்ற உப சமர்ச் செயற்பாடுகளின்போது பல போராளிகள் காயமடைவர். இவர்களை உடனடியாக எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் கொண்டு வருவது என்பது முயற்கொம்பாகும் அவர்களின் உயிரைத் தக்கவைக்க வேண்டுமாயின் எதிரியின் தளங்களினுள் வைத்தே சிகிச்சைகள் மேற்கொள்ளல் வேண்டும் மேற்படி போராளிகளுக்கு வனமரங்களின் மறைவில் பாதுகாப்பின்மையிலும் பாதுகாப்பை உணர்த்தல் வேண்டும் இப்பணிக்காக சிறு சத்திரசிகிச்சைக் கூடமொன்றையே தம்தோள்களில் சுமந்தவண்ணம் காடுகளில் திரிந்தார்கள் எம் இராணுவ மருத்துவர்கள். இவ்வாறான பணியில் ஈடுபட்டிருந்தவேளை 10.11.1997 அன்று மேஜர் சந்திரன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

சமரும் மருத்துவமும் எனக் கருத்துக்களைப் பகிர்கையில், எம் மக்களின் மகத்தான பங்களிப்பைக் குறிப்பிடல் அவசியமாகின்றது. சமர்கள் விரிவடைந்த போதெல்லாம் இவர்கள் காலமறிந்து. தேவையறிந்து செய்த உதவிகள் ஞாலமறிந்தவை. சொற்களினால் ஏற்படுத்தப்படும் விபரிப்பு வரையறையைத் தாண்டியவை பொருளாதாரத் தடை, மருத்துவத் தடை எனப் பல தடைகளின் பாதிப்பைத் தாண்டி தம் போராளிகளுக்காக இரத்த தானம் செய்தனர். மேலும் அறுசுவை உணவுகளைப் பதமறிந்து செய்து தருதல். இரகசிய பாதுகாப்பிற்கு ஒத்துழைத்தல் சொந்த பந்தங்களைத் துறந்தவர்கள் விழுப்புண் வேதனையில் துடிக்கையில் தாதியாய் பராமரித்து தாயாய் பாசமழை பொழிந்து அவர்தம் வேதனையைக் குறைக்க உதவியமை எனப் பட்டியல் விரிக்கலாம். இத்தனைக்கும் மேலாய் இவர்தம் சொந்தப் பாதுகாப்பைக் கவனத்திற் கொள்ளாமை எமை மெய்சிலிர்க்க வைத்தது. வாகனச் சாரதிகளாக வந்தவர்கள் எறிகனை மழையிலும் வான் தாக்குதலுக்கு இடையேயும் தம் வாகனங்களை லாவகமாகச் செலுத்தியமை எமக்கு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்தது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலர் தங்கள் உயிரை சமர்த்தேவதைக்கு அர்ப்பணித்தமையும் குறிப்பிடத்தக்கது.

10.06.1998 காலை சுதந்திரபுர கிராமம் வழமைபோலவே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. திடீரென வான்பரப்பை ஆக்கிரமித்த கிபீர் குண்டுவீச்சு விமானங்கள் மக்கள் குடிமனைகளை துவம்சம் செய்கின்றன. ஆனையிறவு இராணுவமுகாமில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறிகளும் துணையாகச் சேர்ந்து கொள்கின்றன. விளைவு பல பொதுமக்கள் உடல்கள் சின்னாபின்னமாகச் சிதம்பிக் கிடக்கின்றன. இன்னும் பலர் படுகாயமடைந்து ஈனக்குரல் எழுப்புகின்றனர். தாக்குதல் சிறிது ஓய்ந்தவுடன் மீட்புப் பணியில் பொதுமக்களும் போராளிகளும் ஈடுபடுகையில் மீண்டும் அக்கிராமம் வான் எறிகணைத் தாக்குதல்களினுள் சிக்கிக் கொள்கின்றது. வானையும் மண்ணையும் புகைமண்டலம் இணைந்திருக்க இதனூடு மீட்கப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பொதுமருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர் பெருமளவில் மக்கள் காயமடைந்தனர். எல்லோருக்கும் சிகிச்சையளிக்க போதிய வசதி அம்மருத்துவமனையில் இருக்கவில்லை. அதனால் அவர்களில் பலர் விடுதலைப் புலிகளின் சத்திர சிகிச்சை கூடங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர். அவசர அவசரமாக உயிர் காத்தலுக்கான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இவ்வாறு எதிரி பெருமெடுப்பில் எம் மக்கள் மீது திடீரெனத் தாக்குதல் தொடுக்கும்போது பெரும் எண்ணிக்கையில் மக்கள் காயடைவர். மேலும் விரைவான உறுதியான வெற்றிகள் வேண்டி இராணுவ விஞ்ஞானத்தினுள் இதுவரை இணையாத பல முறைகளில் எதிரி மீது தாக்குதல் தொடுக்கும்போது ஒருசில மணிகளினுள் பலநூறு போராளிகள் பலவகைக் காயங்களுக்கு உள்ளாவர். இதன்பொழுது இவர்களிற்கும் உயிர்காத்தலுக்கு முன்னுரிமை கொடுத்து சிகிச்சை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. எங்களின் மருத்துவ மற்றும் ஏனைய வளங்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் ஒவ்வொருவருக்கும் நீண்டகால நோக்கில் பூரண திருப்தி தரக்கூடிய வகையில் சிகிச்சை செய்ய முடியவில்லை. இதனால் பொருந்தும் என்புகளில் ஒழுங்கின்மை , அறுந்த நரம்புகள் சீரிய முறையில் பொருத்தப்படாமை, முகம் போன்ற பகுதிகளில் அவலட்சணம் தரும் தோற்றங்கள் காணப்படுதல் போன்ற பாதிப்புகள் பலரில் தொடர்கின்றன. இவ்வாறான பாதிப்புக்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கு துறைசார் நிபுணத்துவ உதவி தேவைப்படுகின்றது. மேற்படி செய்தியை போர்ச்சிலுவை சுமக்கும் மக்கள் சார்பில் உலகெங்கும் பரந்து வாழும் எம்மினிய உறவுகளின் கவனத்திற்கு கொண்டுவர இவ்வேடு முனைகின்றது.

நன்றி: சமரும் மருத்துவமும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக்காப்பகம்

# போராளி கீதனுடன் ஓர் உரையாடல்

கீதனுடன் உரையாடுகின்ற வாய்ப்பின் மூலம் நாம் பல புதிய செய்திகளை அறியக் கூடியதாக இருந்தது. அவர் ஒரு விடுதலைப் போராளி. போராளிகளுக்கான கல்விப் பிரிவிலும் இயங்கிவருகிறவர். பல கள முனைகளில் நின்று களமாடிய வீரன். மாவீரர்கள் பற்றி நெஞ்சு கனக்கும் கதைகளைச் சுமந்து திரிகிறவர். விடுதலைப் போராளிகளின் இடத்தில் கலை இலக்கியச் செயற்பாடுகள் வளர்ந்து வருகிறதாக சொல்கிறார். கலை இலக்கியச் செயற்பாடுகள் மூலமும் தாம் சமூக விழிப்புணர்வை ஊட்டப் பாடுபடுவதாகச் சொல்கிறார். விடுதலையின் தரிசனர்களாகபோராளிகள் திகழ்கிறார்கள், உண்மையை அவர்கள் தேடிப் பயணப்படுகிறார்கள், நல்ல மனிதர்களாக இருக்கின்றார்கள்.

அத்தகைய பண்புகள் நிறைந்த போராளிகளில் ஒருவரான கீதனிடம் நாம் பல கேள்விகளைக் கேட்டோம். மாவீரர்கள் பற்றியும் அவர் கதை கதையாகச் சொன்னார். அவற்றையெல்லாம் இங்கு பதிந்துவிட முடியவில்லை எதிர்காலத்தில் அவற்றைப் பதிவாக்க முயல்வோம். பல வேலைப் பளுக்களுக்கு மத்தியிலும் நீண்ட நேரமாக சமூக மானுட விடுதலை குறித்து அவர் உரையாடினார். அத்தகைய உரையாடலின் ஒரு பகுதியையே இங்கு தருகிறோம்.



**போராளிகளுக்கான கல்விச் செயற்பாடுகள் பற்றிச் சொல்லுங்கள்?**

கீதன்: எங்கட விடுதலைப் போராட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் போராளிகளுக்கு விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து உள்ள வரலாறு பற்றியும் விடுதலைப் போராட்டம் பற்றியும் கற்பிக்கப்படும். அதை வழி நடத்திக்கொண்டிருக்கும் தேசியத் தலைவர் அவர்களுடைய வரலாறு குறித்தும் சொல்லப்படும். சண்டைக் களங்களிலும், சமர்க்களங்களிலும், யுத்தங்களிலும் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்கள் குறித்த முழுமையான வரலாற்றைக் கற்பிப்பதுமாக இக்கல்விச் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. 'வரலாறுதான் வழி காட்டி' எனத் தலைவர் சொன்னதற்கமைய உலகத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் பற்றியும், அந்த விடுதலைப் போராட்டங்கள் நகர்ந்த விதங்கள் பற்றியும் மக்களும் போராளிகளுமாக எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதுபற்றியும் அறிவதாக இது அமைந்திருக்கிறது. உலகில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் இராணுவ ரீதியாக, அரசியல் ரீதியாக எவ்வாறு இயங்கின என்பவற்றையும் போராளிகளுக்கு கற்பிப்போம்.

இதை விட தமிழர்களுடைய வரலாறு, சிங்கள பௌத்த பேரினவாதத்தினுடைய வரலாறு, அண்டை நாடுகளின் வரலாறு என்பன கற்பிக்கப்படும். மேலும் தமிழ் மக்கள் மீது காலம் காலமாக அடக்கு முறையைப் பிரயோகித்து வரும் வரலாறு குறித்தும் தமிழ் மக்களுடைய வாழ்வியல் உரிமைகளும், அரசியல் உரிமைகளும் எவ்வாறு பறிக்கப்பட்டன என்பது குறித்தும், பேரினவாதத்தினுடைய அடிப்படைச் சிந்தனை உளவியல் குறித்தும் கல்வி கற்பிக்கப்படுகிறது.

எங்களுடைய பணிகள் தொடர்பான கல்வி ஊட்டலும் நடைபெறுகிறது. சமர்க்களங்களில் போராளிகளின் செயற்பாடுகள் நிர்வாகத் துறையில் போராளிகளின் செயற்பாடுகள் என பரந்துபட்டதாக முன்னெடுக்கப்படுகிறது.

**லெப்டினன் கேணல் ராஜன் கல்விப் பிரிவு பற்றியும் அது மேற்கொண்டு வரும் முயற்சிகள் பற்றியும் குறிப்பிடுங்கள்?**

கீதன்: லெப்டினன் கேணல் ராஜன் அண்ணன் அவர்கள் பல சமர்க்களங்களில் நின்று சமராடியவர். நீண்ட போரிடும் ஆற்றலும் அனுபவமும் கொண்ட ஒருவர். களத்தில் பல வெற்றிகளை ஈட்டித் தந்தவர். அவர் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப்படையின் தளபதியாக இருந்தவர். எமது விடுதலைப் போராட்டத்தின் மூத்த தளபதி ச.பொட்டம்மான் அவர்கள் எழுதிய கட்டுரையில் சிறப்பாக அவர் பற்றி எழுதுகிறார். சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையின் 'நெருப்பாற்றின் நீச்சலில் பத்தாண்டுகள்' என்ற நூலில் அவர் தொடர்பான கட்டுரைகளை நீங்கள் படிக்கலாம்.
எங்கட விடுதலைப் போராட்டத்தில் முதன்முதலாக போராளிகளுக்கான அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி நடத்தப்பட்டது. அக்கல்லூரியின் பொறுப்பாளராக ராஜன் அண்ணனே இருந்தார்.


www.tamileelamarchive.com

போராளிகளை ஆளுமையும், அறிவும், பலமும், உறுதியும், திடமும் மிக்கவர்களாக வளர்ப்பதில் அவர் காட்டிய அக்கறை, அவரின் வழி நடத்தல் போன்ற பல்வேறு விடயங்களைக் கருத்தில் கொண்டே அவரது பெயரில் லெப்டினன் கேணல் ராஜன் கல்விப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

போராளிகளின் கல்வி சம்பந்தமான விடயங்களிலும் அறிவு மேம்பாட்டு விடயங்களிலும் அக்கறை கொண்டு செயற்படும் அமைப்புத்தான் லெப்டினன் கேணல் ராஜன் கல்விப் பிரிவு. போரினால் பாதிக்கப்பட்ட மாணவர் சமூகத்தை அடுத்த நிலைக்குக் கொண்டுசெல்வதற்காக பலதரபட்ட செயற்பாடுகளில் ஆழமாக அது இயங்குகிறது.

சிறீலங்கா பேரினவாத அரசால் தயாரிக்கப்படுகின்ற பாட நூல்கள் தான் எமது மாணவர்களுக்கான பாட நூலாக இருக்கிறது என்றால் யோசித்துப் பாருங்கள், நிலைமை எவ்வாறு இருக்குமென்று. யாழ் பொது சன நூல் நிலையத்தை எரியூட்டி அழித்தவர்கள் எமது இனத்தின் வரலாற்றுச் சுவடுகளையே அழித்துவிட முயன்றிருக்கிறார்கள்.
அந்த வரலாற்றுச் சான்று நூல்களை அழித்துவிட்டு தமது வரலாறுகளை எம் மீது திணிப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கையாக அதனைப்பார்க்கலாம்.
கந்தளாய் குளத்தை குளக் கோட்ட மன்னன் கட்டினான் என்பது வரலாறு. சிங்கள வரலாற்றுப் பாட நூல்களில் அதைச் சிங்கள மன்னனே கட்டினான் என ஒரு பொய்ப்புனைவை கட்டி எழுப்புகிறார்கள். வரலாறு என்பது கற்பனையான ஒன்றல்ல. அது உண்மைகளின் விரிவு. இந்த நிலையில் எங்களுடைய வரலாற்றை நாங்களே எழுதுதல் என்பதும் எமது கடமைகளுள் ஒன்றாகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்துதல் வகுப்புக்கள் நடாத்துதல் என பணிகள் விரிந்துகிடக்கிறது. உண்மையில் ஒரு நாடு நாடாக இருக்கவேணும் என்றால் ஒரு இனம் இனமாக இருக்கவேண்டும் என்றால், இரண்டு விடயங்களை முக்கியமானதாகக் கருதுகிறேன். ஒன்று வீரம், இரண்டு அறிவு வீரத்தையும் அறிவையும் ஒருங்கிணைத்து பலம் கொண்ட சக்தியாக வளரும் பொழுதுதான் ஒரு நாடு யாருக்கும் அடிமைப்படாமல் இருக்க முடியும். இந்த இரண்டு விடயங்களைக் கட்டி வளர்த்துச் செல்வதும் எமது கல்விப் பிரிவின் பிரதான நோக்கங்களாக இருக்கின்றன.

'அறிவாற்றலை வளர்ப்போம் அவனியில் உயர்வோம்' இதுவே கல்லூரியின் பிரதானமான கோஷமாக, தாரக மந்திரமாக இருக்கிறது.

**மகாவம்சம் போன்ற புனைவுகளை வரலாற்று ஆதாரமாக சிங்கள பேரினவாதம் கொண்டுள்ளமை குறித்து...**

கீதன்: சிங்கள பேரினவாதம் என்பது அடிப்படையில் ஒரு கற்பனையான கதையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. திட்டமிட்டு திரித்து எழுதப்பட்ட மகாவம்சத்தினுடைய அடிப்படையில் அது இயங்குகிறது. தமிழ் மக்களுடைய வாழ்வை, தேசியப் பண்புகளை திட்டமிட்டு அழிக்கவென்றே புனையப்பட்ட மிகப் பிரமாண்டமான ஒரு பொய் மூட்டையின் கட்டுத்தான் இந்த மகாவம்சம். அந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே சிறீலங்கா பேரினவாதம் இயங்கிக் கொண்டிருக்கிறது.
மகாவம்சம் என்ன சொல்கிறதென்றால்
இலங்கைத் தீவில் 'வாழப் பிறந்தவனும் ஆளப் பிறந்தவனும் சிங்களவனே' இலங்கைத் தீவென்பது ; ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மதம், ஒரு மொழி, ஒரு அரசு, ஒரு ஆட்சி என்கிற அம்சங்களுக்குள்தான் இருக்க முடியும் என அது சொல்கிறது. அதைச் சிங்கள மக்களிடையே ஆழமாகப் போதித்துக் கொண்டும் வருகிறது. அதற்கூடாக காலம் காலமாக தமிழ் மக்கள் மீது அநீதியான போரையும் கட்டவிழ்த்துவிட்டு வருகிறது.

நாங்கள் ஒரு தேசிய இனம். எங்களிடம் பூர்விக நிலங்கள் உள்ளன. பாரம்பரியமான மொழி இருக்கிறது. தனித்துவமான கலை பண்பாடு இருக்கிறது. நீண்ட வரலாறு இருக்கிறது. தனித்து வாழக் கூடிய பொருளாதாரம் இருக்கிறது. ஒரு தேசிய இனத்துக்கு இருக்க வேண்டிய அனைத்துப் பண்புகளும் எங்களுடைய இனத்துக்கு இருக்கிறது.

எங்களுடைய பாரம்பரியமான வாழ் நிலங்களை திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் ஊடாக சிங்கள அரசு நிலப்பறிப்பு செய்து வந்தது, வருகிறது. 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்தே தமிழர்களின் குடியியல் வாழ்வுக்கு பெரும் தொல்லை இழைப்பதாக அது இயங்கி வருகிறது. எங்களுடைய நிலங்களை அழிக்க வெளிக்கிட்டது. எங்களுடைய நிலங்களை பறிக்க வெளிக்கிட்டது. எங்கட மக்களை மண்ணில் இருந்து அடித்து விரட்டி அகதியாக்கியது சிங்கள பேரினவாதம். அடையாள அழிப்புக்கள், நிலப் பறிப்புக்கள், மொழி அழிப்புக்கள், பண்பாட்டு சிதைப்புக்கள், பொருளாதார சிதைப்புக்கள் போன்றவற்றுக்கூடாக தமிழர் வாழ்வை சீரழித்து தமிழர்கள் ஒரு தேசிய இனம் அல்ல என்பதை நிறுவமுயன்றது.

**இனவாத அரசின் அடக்குமுறை சட்டங்கள் தமிழ் மாணவர் சமூகத்தை எவ்வாறு சீரழிக்கத்தொடங்கியது?**

கீதன்: கல்வி ரீதியான அடக்குமுறைச் சட்டங்களில் மொழி முக்கியமான இடத்தை வகித்தது. 1956ம் ஆண்டுகளிலிருந்தே தமிழ் மொழி அழிப்புத் தொடர்பான செயலில் சிங்கள அரசாங்கம் திட்டமிட்டு இயங்கத்தொடங்குகிறது. தனிச்சிங்கள சட்டமூலத்தை கொண்டுவந்ததன் மூலமும் 1961 ம் ஆண்டு நீதிமன்ற மொழி சட்ட மூலத்தைக் கொண்டுவந்ததன் மூலமும் அது தனது அழிப்பு நடவடிக்கையை தொடங்கிவிட்டது. நீதி மன்றங்களில் சிங்கள மொழியில் தான் வழக்குகள் நடைபெறும் என்பதாக அந்தச் சட்ட மூலம் இருந்தது.
1970 ம் ஆண்டுகளில் தரப்படுத்தல் சட்டம் என்று சொல்லி தமிழ் மாணவர்களுடைய கல்வித் தரத்தை, தமிழ் மாணவர்களுடைய மேன் நிலை அடைகிற சூழலை புறக்கணித்து ஒரு கீழ் நிலைக்குத் தள்ளும் முயற்சிகளைத் தொடங்கிற்று.
ஆரம்ப காலங்களில் தமிழ் மொழி அழிப்பு நடவடிக்கையை சட்ட திட்டங்கள் மூலம் முயன்ற பேரினவாதம்
யுத்த காலத்திலோ ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கை மூலம் அழிக்கும் நடவடிக்கையில் இறங்கியது. பாடசாலை மாணவர்களைச் சிறைப்பிடித்தது. அவர்களைக் கொன்றொழித்தது. பாடசாலைகள் மீது விமானங்கள் குண்டுவீச்சு தாக்குதல்களை நிகழ்த்தியது. வெள்ளைச் சீருடையுடன் போன பள்ளி சிறார்களை இரத்த வெள்ளத்தில் மிதக்க வைத்தது. பாடசாலைக்கான வளங்களை பல தடைகளுக்கூடாகத் தடுத்து நிறுத்தியது. இடங்களைப் பிடிச்சு எங்கட மக்களை அகதிகளாக்கி மாணவர்களின் கல்வியைச் சிதைத்த பிறகு நேரடியான யுத்தத்துக்கூடாகவும் ஆக்கிரமிப்புக்கூடாகவும் கல்வியை மாணவர் சமூகத்தை காலம் காலமாக திட்டமிட்டு சிங்களப் பேரினவாதம் அழித்தே வருகிறது.

**சிறீலங்கா பௌத்த பேரினவாத அரசு, தமிழ் மாணவர்களுடைய கல்வியை திட்டமிட்டுச் சீரழித்து வந்திருக்கும் இந்த நிலையில் தமிழ் சிறார்கள் மீது அக்கறைப்படுவதாக காட்டிக்கொள்ளும் அதன் உளவியல்**


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குறித்து பேச முடியுமா?

கீதன்: காலம் காலமாக எங்கட மாணவர் சமூகத்தை, இளம் சமூகத்தை, துடிப்புள்ள தேசத்தை அடுத்தகட்டத்திற்கு வளர்த்துச்செல்கிற எங்கட சமூகத்தை, சிறீலங்கா அரசாங்கமும் அதன் ஆக்கிரமிப்புப் படைகளும் அழித்த வரலாற்றை நீங்கள் ஆழமாக அறிந்திருப்பீர்கள்.
இப்பேற்பட்ட சிறீலங்கா பேரினவாத ஆட்சியாளர்கள், சிறுவர்களைப் பற்றி அக்கறை கொள்வதாக சர்வதேச சமூகத்திடம் கதை அளந்துகொண்டிருக்கின்றனர்.
இவர்கள் செய்த கொடூரங்களைச் சொல்வதென்றால் சொல்லிக் கொண்டே போகலாம்.

1958 ம் ஆண்டு கட்டவிழ்த்துவிடப்பட்ட இன கலவரத்தின் போது, பிறந்து கிடந்த குழந்தையை இரண்டாகக் கிழித்துக் கொன்றவர்கள். கொதிக்கும் தார்ப் பீப்பாவுக்குள் குழந்தையைத் தூக்கி எறிந்து கொன்றவர்கள். ஒரு தமிழ் குழந்தை பிறந்து வளர்ந்து வரக்கூடாது என்பதற்காக பிறப்பிலேயே அழித்தவர்கள். கருவிலேயே அழித்தவர்கள். வயிற்றுக்குள்ளேயே அழித்தவர்கள். அப்படி நிகழ்ந்த கதைகளும் இன்றும் வரலாறுகளாக உள்ளன.
அப்பேர்ப்பட்ட சிங்களப் பேரினவாத அரசாங்கம் இன்று தமிழ் சிறார்கள் மீது அக்கறை கொள்வதாக காட்டிக்கொள்கிறது. நவாலிப் படுகொலையாக இருக்கலாம், புதுக் குடியிருப்பில் நடைபெற்ற மண்டுவில் படுகொலையாக இருக்கலாம், தென் தமிழீழத்தில் நடைபெற்ற படுகொலைகளாக இருக்கலாம், எல்லாம் அவர்களின் மனித விரோத செயற்பாடுகளின் உச்சங்களாக விளங்குகின்றன. பாடசாலைக்குப் போன பிள்ளைகளின் சடலங்களே வீட்டுக்குத் திரும்பி வந்த வரலாறுகள் இன்னும் அழிந்து விடவில்லை. இளம் மாணவ சமுதாயத்தை அழித்துக்கொன்ற வரலாற்றின் ஈரம் இன்னும் காய்ந்துபோகவில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான தொழில்நுட்பக் கல்லூரியை புனர்வாழ்வுக் கழகம் நடத்தி வருகிறது. அவர்களிடம் நீங்கள் சந்தித்துப் பேசினால், சிங்களப் பேரினவாதத்தால் அவர்களுடைய கல்வி எவ்வாறு பாதிப்புக்குள்ளாகியது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். அண்மைக் காலச் சம்பவங்களைக் கூட நான் உங்களுக்கு சொல்லலாம். அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபரும் கோப்பாய் எழுச்சிப் பேரவைச் செயலாளருமான திரு.நடராஜா சிவகடாட்சம் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார். இராணுவப் புலனாய்வு அமைப்பும் அவர்களோடு சேர்ந்து இயங்குகிற ஒட்டு அமைப்பும் சேர்ந்தே இந்தப் படுகொலைகளைச் செய்திருக்கிறது.

அதிபர்கள், மாணவர்களைக் கல்வியிலும் கலை பண்பாடுகளிலும் தேசிய உணர்விலும் விடுதலை உணர்விலும் கட்டி வளர்க்கும் நோக்குடன் உன்னதமாகச் செயற்பட்டு வருபவர்கள். அவர்களை ஏன் சுட்டுக்கொன்றது என்றால் மாணவர் சமூகத்தை இக்கட்டான சூழலுக்குள் தள்ளுவதற்குத் தான். எழுச்சி கொண்ட, அறிவுகொண்ட, ஆற்றல் கொண்ட சமூகமாக தமிழ்ச் சமூகம் வளரக்கூடாது என்பதற்காக, வழி நடத்துகிற முதல்வரை ஆற்றலுள்ளவரை இந்தச் சமாதான காலத்திலே, அதுவும் தமிழர் படை, தமிழர் தேசம் உயர்ந்து நிற்கிற நேரத்தில இண்டைக்கும் இதைச் சிறீலங்கா அரசாங்கம் செய்துகொண்டுதான் இருக்கு.

எங்களுடைய விடுதலைப் போராட்டம் சர்வதேச மயப்பட்ட நிலையில் சர்வதேசக் கவனத்தை ஈர்த்த நிலையில் இருக்கிறது. அவுஸ்ரேலியப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அண்மையில் தமிழீழத்திற்கு வந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும், தேச கட்டுமானங்களையும் பார்வையிட்டார். அவர் அவுஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது "நான் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் தேசப் பகுதிகளைப் பார்த்தேன். விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தமிழர்களுடைய தாயகப் பகுதியையும் பாரத்தேன். அவர்களுடைய தேசக் கட்டுமானங்களையும் பார்த்தேன். அத்தோடு தமிழீழத்தில் ஒரு நடைமுறை அரசு இயங்கிவாறதைப் பார்த்தேன். தமிழ் மக்களுடைய தாயகத்தை, தன்னாட்சி உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்கவேணும் அல்லது தமிழர் தாயகத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்கவேணும்" என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

எங்கட உண்மை நிலைகளும், எங்கட செயற்பாடுகளும், எங்கட உன்னதமான பக்கங்களும் சர்வதேசத்திற்கு புரிந்திருக்கிறது. எங்களுடைய மாணவர்களையும், மக்களையும், கல்விச் சமூகத்தையும் அழிப்பதற்கும் ஆக்கிரமிப்பதற்கும் சிறீலங்கா பேரினவாத ஆட்சியாளர்கள், அவர்களுக்குச் சேவகம் செய்கின்ற கனவான்கள், அதன் பிரமுகர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி வந்தனர். அவதூறுகளையும், பொய்ப் பிரச்சாரங்களையும் பரப்பி வந்தனர். விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக சித்தரிக்க முயன்றனர். உண்மைக்கு புறம்பான பொய் பரப்புரையை மேற்கொண்டு தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தை திணிப்பதே அதன் முழு நோக்காக இருந்து வந்தது. வெளிநாடுகளின் ஆயுத உதவியையும், பண உதவியையும் பெற்று எமது பாடசாலைகள் மீதும் எமது வாழ்விடங்கள் மீதும் குண்டுகளைப் பொழிந்தது. சர்வதேச சமூகத்திடம், எமது மக்கள் தம் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகளுக்காகவும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்காகவும் குரல் எழுப்பினார்கள்.
"எங்களுக்கொரு நீதியில்லையா, எங்களுக்கொரு நியாயம் இல்லையா" என அவர்கள் கேட்டார்கள். "உண்மையை உணரமாட்டீர்களா எங்களை பார்க்க மாட்டீர்களா" என கத்திக் கத்திக் கேட்டார்கள். உலகத்திலிருக்கிற எந்த மனித நேய அமைப்புக்களும் செவிமடுக்கவில்லை.
இந்த நேரத்தில், எங்களுடைய தேசத்தின் மீது யார் அவலத்தை விதைத்தானோ அவனுக்கே அந்த அவலத்தை திருப்பிக் கொடுத்தோம். எதிரியின்ர முதுகெலும்பை நாங்கள் உடைத்தோம். எங்களுடைய போரிடும் சக்திக்கூடாகவே சர்வதேசம் எங்களைத் திரும்பிப் பார்த்தது. எங்களுடைய நிலைப்பாட்டைத் திரும்பிப் பார்த்தது. பலம் கொண்ட சக்தியாக நிமிர்ந்து நின்ற பொழுதுதான் சர்வதேசம் தலையிடும் சக்தியாக மாறியது. இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகத்துக்கும் எங்களுக்குமிடையில் ஒரு உறவு நிலை வளர்ந்தது. விடுதலைப் போராட்டத்தினுடைய பிரதிநிதிகள், வெளிநாடுகளுக்கு வந்ததும் எமது பிரச்சனையை எடுத்துச் சொன்னதும் இதன் அடிப்படையில் தான். அங்கிருந்தும் பலர் வந்தார்கள் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டார்கள். இவ்வளவு மாவீரர்கள் ஏன் மடிந்தார்கள். தலைவர் பிரபாகரன் ஏன் இந்த விடுதலைப் போரை முன்னெடுத்துச் சென்றுகொண்டிருக்கிறார். போன்ற விடயங்களை அவர்கள் உணரத்தொடங்கினார்கள். சிறீலங்கா அரசாங்கத்தின் சதி முயல்வுகள் அம்பலமாகத் தொடங்கின.
சிறீலங்கா அரசாங்கத்தின் பேரினவாத முகத்திரையை எமது செயற்பாடுகளும், எமது போராட்டமுமே கிழித்துக்காட்டின. இந்த நிலையில் இன்றும் சர்வதேச ரீதியாக எம் மீது பயங்கரவாத முத்திரையை குத்தும் நோக்கில் அவர்கள்செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.
சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்ட பிரச்சாரத்துக்கான காரணிகளை அவர்கள் தேடுகிறார்கள் . அப்படியான காரணிகள் இல்லாத போது பொய்யான குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து


www.tamileelamarchive.com



முன்வைத்துக்கொண்டே இருக்கிறார்கள். அதில் ஒன்றுதான் இந்த சிறார்கள் பிரச்சனையும். தோல்வியைத் தழுவும் சிங்கள தேசத்தின் ஆற்றாமையின் வெளிப்பாடும்தான் இது.

**சமர்க் களங்களை, கல்வி நிலையில் எவ்வாறு பதிவாக மேற்கொள்கிறீர்கள்?**

கீதன்: சண்டைக்களங்களில் நின்று செயற்படும் பொழுது கூட பலதரபட்ட வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும். சண்டைக் களங்களில் பதுங்கு அகழிகளுக்குள் இருந்து நூல்களை வாசித்துக்கொண்டிருப்போம். ஒரு மகிழ்ச்சியான சூழலில் இருப்பதை போன்றே நாம் அங்கும் இருப்போம். புளியங்குளத்தில் நடந்தது எல்லாம் எனக்கு ஞாபகம் இருக்கு. ஒரு போராளி காவலுக்கு நிற்க ஏனைய போராளிகள் பதுங்கு அகழிகளுக்குள் இருந்து புத்தகங்களை வாசிப்போம். கடந்த கால வரலாறுகளை பற்றி, போராட்ட வரலாறுகளை பற்றி, தலைவரைப் பற்றி, விடுதலையைப் பற்றி நாங்கள் படித்துக்கொண்டிருப்போம். அல்லது இதில் ஆற்றல் மிக்க போராளி ஒருவர் வகுப்பெடுத்துக்கொண்டிருப்பார். பத்திரிகைகள் படித்துக்கொண்டிருப்போம். எங்களுக்கென வரும் துண்டு பிரசுரங்களை வாசிப்போம். வானொலி கேட்போம்.
எமது பணிகளில் முக்கியமானது, ஒரு சமர் நடந்துகொண்டிருக்கிறது என்றால் அச்சமர் பற்றிய முழு விபரங்களையும் பதிவாக்குவது.
எதிரி எப்படி முன்னேறுகிறான், எத்தனை படை வீரர்களோடு எத்தனை மணிக்கு முன்னேறுகிறான், என்னென்ன படைக் கலங்களோடு முன்னேறுகிறான், எந்தளவிற்கு உச்சமான தாக்குதலை அவன் தொடுக்க முனைகிறான் என எதிரி பற்றிய முழு விபரங்களையும் நாங்கள் துல்லியமாக பதிவோம். அன்றைய நாளின் அவனது முழு நடவடிக்கைகளையும் நாம் பதிவுக்குள்ளாக்குவோம்.
எங்களுடைய போராளிகள் எவ்வாறு இயங்குகிறார்கள் என்பது பற்றி அவர்களுடைய அர்ப்பணிப்புக்கள் அவர்களுடைய தியாகங்கள் பற்றி பதிவோம். புளியங்குளத்தில் போராளிகள் சொல்லிக்கொண்டிருப்பார்கள் "நாங்கள் உயிரோடு இருக்கும் வரையும் புளியங்குளத்தை நெருங்கேலாது. எதிரி பிடிக்கிறது என்று சொன்னால் எங்கட உடலைத்தாண்டித்தான் போய் பிடிக்கலாமே ஒழிய மற்றும்படி நடக்காது" புளியங்குளத்தில ஒரு போராளி கண்களில் காயப்பட்டுவிடுகிறார். கண்களில் இரத்தம் வழிகிறது. அவர் இரண்டு கண்களும் பார்வையை இழந்துபோன சமயத்திலும், அய்யோ எனக்கு கண் தெரியவில்லை என்று கதறவில்லை. தனது "ஆயுதம் எங்கே" என்று கேட்டதைத்தான் எங்களால் கேட்க முடிந்தது. அவரின் அழுகையை அவர் அந்த நேரத்திலும் வெளிப்படுத்தவில்லை. அவ்வளவு உறுதியும், உரமும் மிக்க போராளியாக எம்முன் நின்றார். எமது மக்களின் விடுதலைக்காகவும் உரிமைக்காகவும் அவர்கள் தங்கள் உயிரை துச்சம் என மதித்து நிற்கும் பண்புகளையும் பதிவாக்குவோம். பிறகு அந்த சமர் பற்றி போராளிகளுக்கு கற்பிப்போம். எமது பணிகள் எல்லாவற்றையும் இவ்விடத்தில் பகிர்ந்துகொள்ளமுடியாதிருக்கிறது.

**சமூக விடுதலைக்கான கல்வியும் கற்பிக்கப்படுகிறதா?**

கீதன்: மானிட வாழ்க்கை என்பது குடியியல் வாழ்க்கையையும் அரசியல் வாழ்க்கையையும் கொண்டது. குடியியல் வாழ்க்கை என்றால் ஒரு மனிதன் ஒரு வீட்டைக் கட்டி நாளாந்தம் தன் சீவியத்தை தனது வாழ்க்கையை வாழ்ந்துகொள்வதாக சொல்லலாம்.
அரசியல் வாழ்க்கை என்றால் எங்கட இடத்தில நாங்கள் வாழவேண்டும். எங்கட மொழியைப் பேசவேண்டும். எங்கட கலைபண்பாட்டை நாங்கள் பின்பற்றவேண்டும். எங்கட கலைபண்பாட்டுக்கேற்ற மாதிரி நாங்கள் வாழவேண்டும். எங்கட வரலாற்றை நாங்கள் படிக்கவேண்டும். எங்கட வரலாற்றுக்கேற்றமாதிரி எங்கட வாழ்க்கையை நடத்தவேண்டும். எங்கட பொருளாதார பலத்தில் நாங்கள் நிமிர்ந்து நிற்கவேண்டும். இதுதான் எங்கட அடிப்படை அரசியல் உரிமைகள். இப்படி ஒரு வாழ்க்கையை ஒரு காலத்தில நாங்கள் வாழ்ந்தோம். எங்கட சமூகமும் சிறப்புற இருந்தது. யாருக்கும் அடிமைப்படாத வாழ்க்கையை வாழ்ந்தது.

ஆனால் ஒரு கால கட்டத்துள் சாதியம், சமயம், சீதனம், பிரதேசவாதம், பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கைகள் என எல்லாம் புகுந்து எமது சமூகத்தை சிதைத்தது.
அதனால் ஒரு கட்டத்தில எங்கட மக்களுக்குள் ஏற்பட்ட உடைவுகளாலும் பிரிவுகளாலும் நாங்கள் பின்தங்கி போக நேர்ந்தது. இதன் காரணமாகவும்தான் நாம் எமது அரசியல் உரிமைகளையும் இழக்க நேரிட்டது. தமிழர்கள் வீரமுள்ளவர்களாக இருந்தார்கள். தமிழர்கள் அறிவுள்ளவர்களாக இருந்தார்கள்.
உலகத்தில ஒரு இனம் எப்படி வாழக்கூடாதோ அப்படி வாழ்ந்தோம். உலகத்தில் ஒரு இனம் எப்படி சாகடிக்கப்படக்கூடாதோ அப்படி சாகடிக்கப்பட்டோம். அடிமைப்பட்ட மக்களாய் போனோம். மற்றவர்களால் சுரண்டப்பட்டோம். அப்போ எங்களுக்கொரு தலைவர் இருக்கவில்லை எங்களுக்கொரு படை பலமும் இருக்கவில்லை. தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுத்தார். தேசிய உணர்வை கட்டி எழுப்பினார். அவரே மக்களின் விடுதலைக்கான மக்கள் படையைக் கட்டி எழுப்பினார்.
சமூக விடுதலையையும் அரசியல் விடுதலையையும் ஒரு சேர இணைத்தே இந்தப் போராட்டத்தை தலைவர் வழி நடத்திச் செல்கின்றார். இவை பற்றியும் போராளிகளுக்கு விரிவாக கற்பிப்போம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஐ.நா மனித உரிமை உப- ஆணைக்குழுவின் 57 வது கூட்டத்தொடர்

**ஐக்கிய நாடுகள் சபையின் 57வது கூட்டத்தொடர், கடந்த யூலை 25ம் திகதியிலிருந்து ஆகஸ்ட் 12ம் திகதிவரை ஜெனிவாவில் நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் சிந்தனையாளர் எனக்கருதப் படும் இவ் உப ஆணைக்குழு, 26 சுதந்திரமான நிபுணர்களைக் கொண்டது என கூறப் பட்ட பொழுதிலும் இதில் பல நிபுணர்கள் மனித உரிமை மீறல்களை கடுமையாக மேற் கொள்ளும் நாட்டின் பிரதி நிதிகளாகவே செயல்படுகின்றனர் என்பது குறிப்பித்தக்கது.**

இவ் உப - ஆணைக்குழு 1998ம் ஆண்டுக்கு முன்னர் உலகில் சகல அரசினுடைய மனித உரிமை மீறல்களை, கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றும் அதிகாரத்தை பெற்றிருந்தது. 1983ம் ஆண்டு யூலை மாதம் இலங்கைத் தீவில் தமிழ்மக்கள் மீது நடாத்தப்பட்ட கொலையை இவ் உப-ஆணைக்குழு அவ் வேளையில் கண்டித்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது இவ் ஆணைக்குழு நாடுகளுக்கு எதிராக கண்டனங்களை நிறைவேற்ற முடியாமல் இருந்த பொழுதிலும் உலகில் சகல பாகங்களிலும் இடம் பெறும் மனித உரிமை மீறல்களை, அரச சார்பற்ற அறிக்கையாக மனித உரிமை ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிப்பது வழக்கமாகி வருகிறது.

இந்த ரீதியில், மிக நீண்ட காலமாக இவ் உப - ஆணைக்குழுவுக்கு, தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசினாலும் அதன் அரச படைகளினாலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் பயங்கரவாத செயல்களை மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சமர்பித்து வருகின்றனர்.

கடந்த யூலை, ஒகஸ்டில் நடைபெற்ற 57வது கூட்டத்தொடரிலும் பல அரச சார்பற்ற பிரதிநிதிகள் தமிழீழத்தின் தற்போதைய நிலைமைகளை எடுத்து கூறினர். வழமை போல் தமிழர் மனித உரிமை மையத்தினால் 57வது கூட்டத் தொடரின் தலைவர் திரு.விளடிமீர் கட்டஸ்கினிடம் வடக்குகிழக்கு பிரதேசங்களில் தற்போதைய நிலைமைகள் எடுத்துக் கூறப்பட்டது. மனு சமர்பிக்கப்பட்டது. இதே வேளை இக் கூட்டத் தொடரின் பொழுது ஜெனிவா ஐ.நா. கட்டடத்தில் நடைபெற்ற வேறு பல அரச சார்பற்ற கூட்டத்தொடர்களிலும் தமிழர் மனித உரிமை மைய பிரதிநிதிகள் உரையாற்றினார்.

தற்பொழுது ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்படும் சீர்திருத்த நிகழ்ச்சியின் கீழ் ஐ.நா. மனித உரிமை செயற்பாடு முறைகளில் பெரும் மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ரீதியில் ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் பெயர் மாற்றமும் அதேவேளை மனித உரிமை உப-ஆணைக் குழுவின் செயற்படுகள் செயலிழந்து போகலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஐ.நா.மனித உரிமை ஆணைக் குழுவில், தமிழீழ மக்களின் அரசியல், பொருளதார, சமூகப் பிரச்சினைகள் பற்றி ஆற்றப் பட்ட உரைகள் சில பின்வருமாறு:

அமெரிக்காவை தளமாக கொண்டு இயங்கும் சர்வதேச கல்வி நிறுவனத்தின் சார்பில் உறையாற்றிய சர்வதேச சட்டத்தரணி திருமதி கரன் பார்க்கர் உப ஆணைக்குழுவில் கூறிய தாவது "கடந்த பல வருடங்களாக எமது அமைப்பு ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிலும் உப-ஆணைக்குழுவிலும் சிறீலங்கா நிலைமைகளை தொடர்ந்து வலியுறுத்திவருகிறது. தற்பொழுது அங்கு சமாதான பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுள்ளன. இதே வேளை சிறீலங்கா இராணுவமும் அதன் கூலிப்படைகளும் அங்கு ஒர் நிழல் யுத்தத்தை நடத்திவருகின்றனர். இருபது வருடகால யுத்தத்தினால் பதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் அண்மையில் ஏற்பட்ட சுனாமினாலும் பாதிக் கப்பட்டுள்ளனர். ஆனால் சிறீலங்கா அரசு சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்தவித சர்வதேச நிவாரணமும் பெற முடியாத வகையில் தடைசெய்துள்ளது. நாளுக்கு நாள் சிறீலங்கா அரசு மீது இருந்த நம்பிக்கை தமிழ் மக்களுக்கு குறைந்து வருவதுடன் அங்கு எவ்வேளையிலும் யுத்தம் மீண்டும் ஆரம்பமாகக் கூடிய நிலை உருவாகியுள்ளது. ஆகையால் உடனடியாக நோர்வேயின் மத்தியஸ்தினாலான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். இவ் உப ஆணைக்குழு இவ்விடயத்தில் அக்கறை செலுத்தவேண்டுமென கேட்டுக்கொள்ளும் அதேவேளை இவ் உப ஆணைக்குழு மற்றைய ஐ.நா.அமைப்புகளுடன் இத்தகவலை பாரிமாற வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

இதனை தொடர்ந்து சுவிசைத் தளமாக கொண்டு இயங்கும் சர்வதேச சர்வ நம்பிக்கை என்ற அமைப்பின் சார்பில் உரையாற்றிய திருமதி டியெற்றி மக்கோணல் கூறியதாவது:

"இலங்கைதீவின் சுதந்திரத்தை தொடர்ந்து தமிழ் தேசிய இனத்தின் அரசியல் உரிமைகள் குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை, நிலவுரிமை போன்றவை படிப்படியாக சிங்கள ஆட்சியாளரினால் பறிக்கப்பட்டு இறுதியில் சம கல்வியுரிமையும் பறிக்கப் பட்டது. அரசியல் அமைப்பிலிருந்த ஒரு சில பாதுகாப்புகளும் 1972ம் ஆண்டு குடியரசு யாப்பு மூலம் பறிக்கப்பட்டுள்ளது. இந்த ஐ.நா.மனித உரிமை உப-ஆணைக்குழுவில் கடந்த காலங்களில் இவ்விடயம் சம்பந்தமாக பல பல கண்டன அறிக்கைகள் பலவிதப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களினால் கொண்டு வரப்பட்டது மட்டுமல்லாது பல விதப்பட்ட ஐ.நா.மனித உரிமை நிபுணர்கள் கண்டன


www.tamileelamarchive.com

அறிக்கைகளையும் சிறீலங்கா மீது வெளியிட்டிருந்தது.

ஆனால் சிறீலங்காவில் தமிழ் மக்கள் அரச மன்னிப்புடன் தொடர்ந்தும் அரச படைகளினாலும் அதனுடன் இயங்கும் கூலிப்படைகளினாலும் கொன்று குவிக்கப்படுகின்றனர். ஆனால் சிறீலங்கா அரசோ இவற்றை தெரியாதது போல் அலட்சியம் செய்வதுடன் அதனுடைய நிதித்துறை தமிழ்மக்களுக்கு நடைபெறும் சம்பவங்களுக்கு எவ்வித நீதியும் வழங்குவதில்லை. தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பல படுகொலைகள் சம்பந்தமாக இனம் காட்டப்பட்டு கைது செய்யப்பட்ட பல அரச படையின் அங்கத்தவர்கள் எந்தவித தண்டனையுமில்லாது சிறீலங்காவின் நீதித்துறையினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறீலங்காவின் நீதித்துறை, அரச படைகளும் ஒரு பட்சமாக இயங்குவது வெளிப்படையாக தெரிகிறது. அண்மையில் திருகோணமலையில் வைக்கப்பட்ட புத்தர் சிலையும் அதன் பின்னணிகளும் அதற்காக கொடுக்கப்பட்ட நீதியும் எதை எமக்கு கூறுகின்றன இப்புத்தர் சிலையை யார் அங்குபாதுகாக்கிறார்கள் இப்புத்தர் சிலை திருகோணமலையில் தமிழ் மக்களையும் அவர்களது பூர்வீக நிலத்தையும் அபகரிப்பதற்காகவே நிறுவப்பட்டுள்ளது.

நாம் இங்கு ஒன்றை மனதில் நினைவு படுத்தி கொள்ளவேண்டும். இலங்கை தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இரண்டில் மூன்று பகுதியில் ஓர் நல்ல நீதித்துறையும், காவல்துறையும் கடந்த பதினைந்து வருடங்களாக மக்கள் ஆதரவுடன் தமிழீழ விடுதலைப்புலிகளினால் நடத்தப்படுகின்றது. அங்குள்ள தமிழீழச் சட்டக்கல்லூரியில் ஏறக்குறைய நூற்று இருபது வழக்கறிஞர்களும் இருபத்து ஆறு நீதவான்களும் படித்து பட்டம் பெற்றுள்ளார்கள்.

ஆகையால் இங்கு தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ் 57வது மனித உரிமை உப-ஆணைக்குழு, இலங்கைதீவின் உண்மைநிலைகளை கணக்கில் கொண்டு அத்த யதார்த்த நிலைக்கு ஏற்றது போல் சிறீலங்கா அரசு மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வேண்டிக்கொண்டார்.

உப ஆணைக்குழுவின் நிபுணர்களில் ஒருவரான தென்கொரிய நாட்டுப் பெண் மணியான திருமதி சிங்-சுங் சங் தனது உரையில் "சிறீலங்காவில் சுனாமிப் புனர்நிர்மாண நிவராண வேலைகளுக்கான ஒப்பந்தம் சிறீலங்காவின் மேல் நீதி மன்றத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது" எனச் சபையில் கூறினார்.

திருமதி சிங்-சுங் சிங்கின் உரையை கேட்டு கலக்கமுற்ற சிறீலங்காப் பிரதிநிதி திருமதி சரல பெர்ணன்டோ சபையில் நிலைமையை சமாளிக்க முற்பட்டு கூறியதாவது "சுனாமி ஏற்பட்டு ஏழு மாதங்களாகியும் இன்னும் சிறீலங்காவில் புனர்நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றன. சுனாமி ஒப்பந்தத்தில் கைச்சாத்தாளர்கள் மேல் நீதி மன்ற உத்தரவுக்காக பொறுத்திருக்கிறார்கள். சுனாமி ஒப்பந்தம் மேல் நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, ஆனால் அதன் சில சாரங்களை மட்டுமே மேல் நீதி மன்றத்தின் பரிசீலனைக்கு உள்ளாகியுள்ளது சிறீலங்கா அரசு என்றும் மேல் நீதி மன்றத்தின் பரிசீலனைக்கு அப்பாற்பட்ட ஒப்பந்தத்தின் சாரங்களை நடைமுறைப்படுத்த ஆவலாக உள்ளது" எனக் கூறினார்.

> "வடக்கு - கிழக்கில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ் கழகம் புலம் பெயர் வாழ் தமிழர்களின் உதவியுடன் உடன் நிவராண உதவிகளை செய்தார்கள். ஆனால் சிறீலங்கா அரசு வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் சிங்கள மக்கள் அல்ல என்ற ஒரே காரணத்திற்காக இவர்களுக்கு கிடைக்கவிருந்த சர்வதேச நிவாரணங்களை தடுத்து நிறுத்தியிருந்தார்கள்."



திரு.கோல்டன் லம்பட்

இவ் உப ஆணைக்குழுவில் பிரித்தானியாவை தளமாக கொண்டு இயங்கும் விடுதலை என்ற அமைப்பின் சார்பில் உரையாற்றிய திரு.கோல்டன் லம்பட் கூறியதாவது:

"எமது அமைப்பு இவ் உப-ஆணைக் குழுவில் சிறீலங்காவில் தமிழ் மக்களுடைய தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கில் சிறீலங்கா அரசினாலும் அரச படைகளினாலும் மீறப்பட்டுள்ள சமூக, பொருளாதார, கலாச்சார உரிமைகள் பற்றி கூறவிரும்புவதாகவும் இதில் முதலாவதாக சிறீலங்கா அரசினாலும் அது சார்ந்த பிரிவுகளினாலும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு சர்வதேச சமுதாயந்திடமிருந்து கிடைக்கவிருந்த நிவராணங்களை தடுத்து நிறுத்தியுள்ளார்கள்" என்று கூறினார்.

திரு லம்பட் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

"வடக்கு - கிழக்கில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ் கழகம் புலம் பெயர் வாழ் தமிழர்களின் உதவியுடன் உடன் நிவராண உதவிகளை செய்தார்களென்றும் ஆனால் சிறீலங்கா அரசு வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் சிங்கள மக்கள் அல்ல என்ற ஒரே காரணத்திற்காக இவர்களுக்கு கிடைக்கவிருந்த சர்வதேச நிவாரணங்களைதடுத்து நிறுத்தியிருந்தார்களென்றும் சர்வதேச நிறுவனங்களினால் அனுப்பப்பட்ட நிவாரண உதவிகளை தொடர்ந்து அரசு கட்டுப்பாட்டில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை சென்றடையவிடாது தடுத்துள்ளார்றென்றும். இதே வேளை சர்வதேச அழுத்தம் காரணமாக சிறீலங்கா அரசினால் கைச்சாத்தான சுனாமி புனர்நிர்மாண நிவராண ஒப்பந்தம் சிறீலங்காவின் மேல் நீதிமன்றத்தினால் தற்பொழுது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசினதும் சிங்கள தீவிரவாதிகளினதும் அழுத்தத்தினால் ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம் திரு கோபி ஆனான் கூட வடக்கு கிழக்கில் சுனாமி அனர்த்தங்களை சென்று பார்வையிடமுடியாது தடுத்து நிறுத்தப்பட்டார்.

மறுபுறம் தமிழர்களின் தாயக பூமியான திருகோணமலையில் பௌத்த சிங்களவர்களினாலும் புத்தர்சிலை ஒன்றை இரவோடு இரவாக நிறுவி ஆயுதபடைகளினால் புத்தர் சிலையை அரசு கவனமாகக் காப்பாற்றி வருகிறது. இன்னுமொருபுறம் அரசபின்னணியினால் சிங்களக்குடியேற்றங்கள் தமிழர்களின் பிரதேசங்களான திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை பிரதேசங்களில் இடம்பெறுகின்றன அரசபடைகளினால் தமிழ்மக்கள் இவர்களது தாயக பிரதேசத்தை விட்டு விரட்டப்படுகிறார்கள்.

ஆகையால் இவ் உப-ஆணைக்குழு உடனடியாக சிறீலங்கா அரசு மீது முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழ்மக்களுடைய சமூக,பொருளாதார, கலாச்சார உரிமைகளை அவர்களது தாயக பிரதேசத்தில் பேண வழிவகுக்கவேண்டும்" என வேண்டிக்கொண்டார். ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# மக்கள் சக்தி

ந.கிருஷ்ணசிங்கம் நோர்வே





www.tamileelamarchive.com

தமிழ்ழ ஆவணக் காப்பகம்

வேந்தன் அதிகாலையிலேயே எழுந்திருந்து கருமுகில்கள் நிறைந்த வானத்தைவெறித்துப் பார்த்து அலுத்துக் கொண்டான்.

இண்டைக்கு வெதர் சரியில்லை எண்டு சொன்னவன்கள் சரியாத்தான் போச்சு!

பெருமூச்சோடு அவன் வெளிப்படுத்திய வேதனையின் ஆதங்கம் அவனின் தந்தையாருக்கு வேடிக்கையாக இருந்தது.

எடயப்பா! ஒருகிழமைக்குரிய வெதரை அவன்கள் எதுக்குச்சொல்லிறவன்கள். எங்கடை அலுவல்களை திட்டம்போட்டுச் செய்யிறதுக்குத்தானே! நீங்கள் என்னண்டால்.

அவரின் அலட்டலை கேட்காதவன்போல வேந்தன் வெளிப்பட்டு நடந்தான். பொங்குதமிழ் ஊர்வலத்துக்கான அறிவிப்பு வெளியாகி நாட்கள் நகர்ந்தநிலையில், அதற்குரிய ஆயத்தங்கள் அனைத்தும் முடிவடைந்தநிலையில், இன்று பிற்பகல் ஒஸ்லோநகரம் அதிரும் வண்ணம் எமது விடுதலைமுழக்கம் வெளிப்படும் என்ற களிப்போடு காத்திருந்த வேளையில்.

இந்த நாசம் கட்டின மழைவந்து குழப்பும்போலை! மழைவந்தால் எல்லாம்போச்சு! இது சினோகொட்டத் துவங்கிற மாதம்! உப்பவே கடும்குளிர் வந்திட்டுது! நான் நினைக்க இல்லை சனம்பெரிசா வரும்மெண்டு.

நிலைமையைப் பார்த்து வேதனைப்பட்ட தொண்டர் ஒருவர் தனது வயிற்றெரிச்சலை உரத்ததொனியில் கொட்டினார்!

ஏதேதோ புறுபுறுப்புகளோடு அங்கு இயங்கியவர்கள், நம்பிக்கையின் முனைமுறிந்தவராய் வெம்பல் பெருத்த வேதனை மனத்தினராய் வேலைகளில் ஈடுபட்டு தமக்குள் சினந்துகொண்டு நின்றனர்.

அது ஒஸ்லோநகரத்தின் மத்திய தொடருந்து மையம். எந்நேரமும் சனசந்தடி நிறைந்தபகுதி. தொடருந்து நிலையத்தின் நுளைவாயிலுக்குச் செல்லும் அந்த பரந்தபடிக்கட்டின் மத்தியில் எமது தேசியத் தலைவரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பாரியதட்டியை நிறுத்திவைக்கும் முயற்சிநடக்கவே, வேந்தனும் அங்குசென்று அவர்களுக்கு உதவினான்.

சிவப்பு மஞ்சல்நிற பலூன்களால் கலைத்துவம் துலங்க தூண்களைப்பின்னி நிமிர்த்துவதில் வல்ல அனுபவஸ்த்தர்கள் அந்தப்படிக்கட்டுகளில் நின்று முயன்று கொண்டிருந்தார்கள்!

சற்றுநேரத்துக்கெல்லாம் அந்த மையம் உற்ற எண்ணப்படி எங்கள் தேசத்தின் உன்னதத்தை சொல்லும் வண்ணஅழகோடு வடிவமைக்கப்பட்டு விட்டது.

சிவப்பு மஞ்சள்நிறக்கொடிகள் சில்லிடும் குளிர்காற்றில் அசைந்த ஆனந்தத்தோற்றம் எவரையும் நின்றுபார்க்கத் தூண்டின! சிலர் எதற்கு என்ற கேள்வியை எழுப்பி பதிலைஅறிந்து சென்றனர். எமது புலிக்கொடி இன்று பாரெங்கும் பிசித்தமான தொன்றாகிவிட்டதால் அதைப்பார்த்தவர்கள் அனேகர் நிகழ்வைப் புரிந்துகொண்டது அவர்களின் முகங்களில் தெரிந்தன!

எல்லாம் சரியடாப்பா!... மழைதான் நம்பேலாமற் கிடக்கு. அதுவும் இண்டைக்கு வேலைநாள் சனம் வருமே...

இனியன்தான் அப்படிக்கேட்டான். தான் ஒரு தமிழன் என்பதை மறந்து இதுவரை காலமும் திரிந்த இவனை, ஆழிப்பேரலை தந்ததுயரம் தமிழனாக்கிவிட்டது. அப்போது தெருவேறி நிதிதிரட்டும்பணியில் ஈடுபட்டு தொண்டாற்றிய தொகையானோரில் இந்த இனியனும் ஒருவனாய் நின்று தீவிரம்காட்டியவன். இவனின் நொஸ்க் இனக் காதலியான காரினும் அந்த அரும்பணியில் ஈடுபட்டு உழைத்தவள். இன்றைய நிகழ்வுக்கு வந்து சேர்பவர்களிடையே முதல் வெள்ளைக்காரியாய் அவள் அங்குநின்றிருப்பது தெரிந்தது.

மாலை ஐந்துமணி. நிகழ்ச்சி ஆரம்பமாகும் நேரம். குளிர்வேகக்காற்றோடு தூறலாய்த் தோன்றியமழை பொழியத் தொடங்கியது! நின்றவர்களின் முகங்களில் ஈயாடவில்லை. நிறுத்திவைக்கப்பட்ட அலங்கார வளைவுகள் ஆடத்தொடங்கின! அந்த அகலித்த அவலத்தின் தோற்றத்தால் அனைவரும் மனம்இடிந்துபோயினர்.

மனப்பழுவின் பாரத்தை சற்று இறக்கும் நோக்கத்தால், இனியன் சிகரற்றை மூட்டத்தேடியபோது அது முடிந்திருந்ததை உணர்ந்து சினந்தவனாகி, காரியின்தோளில் கைபோட்டபடி கடையைநோக்கி நடந்தான்.

வேந்தனோ தொப்பியால் வழிந்த நீரை தட்டியவாறு அங்குமிங்கும் தவிப்போடு அலைந்து திரிந்தான். ஆனாலும் ஒலிபெருக்கியில்கேட்ட விடுதலைப்பாடல்கள் அவனின்மனதில் நம்பிக்கையுணர்வை நிரப்பத்தவறவில்லை!

சுரங்கத்தொடருந்துகளாலும், மகிழுந்துகளாலும், பேருந்துகளாலும் வந்த சனங்கள் அங்கே குவியத்தொடங்கினர். சில நூறாவதுசேரும் என்ற நிமிர்வோடு நிகழ்வு ஆரம்பித்தது.

மழையின்சீற்றம் முடங்கித் தொலையும் என்ற எதிர்பார்ப்பை மறுதலித்து அது மேலும் வலிமைபெற்று பொழியத் தொடங்கியது. காற்றின் குளிரம்புகள் பட்டு குழந்தைகள் அலறினர். இருந்தபோதும் அங்கே சனத்திரள் என்று குறிப்பிடத் தகும்வண்ணம் நிமிடத்துக்கு நிமிடம் தொகைவளர்ந்து திடல்துலங்கியது!

உரைகளை ஆற்றிக்கொண்டு நின்றவர்கள் இதனால் உற்சாகம் கொண்டார்கள். தமிழில் மொழியப்பட்ட தரவுகள் இழையோடிய எடுத்துக்காட்டல்கள் போன்று, ஆங்கிலத்திலும் உரைகள் நிகழ்ந்ததால் மாற்றுமொழியினரும் விழங்கித்தெளிந்தனர். கையொலியும், ஆதரவுமுழக்கமும் அங்கே அடிக்கடிகேட்டன!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உணவுவிடுதியில் இருந்து காரிகையைப் பற்றியபடி ஓடிவந்த இனியன், உற்சாகத்தோடு வேந்தனைத் தேடிப்பிடித்து அவனின் முதுகில்த் தட்டினான்!

மச்சான்! டே! இந்தளவு? ஆயிரக்கணக்காய் இந்தக்கொட்டும் மழையிலை சனங்கள் திரளும் எண்டு நினைச்சும் பாக்கஇல்லை! எடே! புறோக்கிறாம் புள் சக்ஸ்ஸஸ்!!

ஆனந்தமிகுதியினால் அவன் ஆடவும், அங்கே பொங்குதமிழ்ப் பாடல்கள் இசைக்கத் தொடங்கவும் நேரம்சரியாக அமைந்தது.

மழை தொடர்கதையாய்த் தூறிக்கொண்டே இருந்தது. இசைமழையும் பெருகிக்கொண்டே போனது! கைதட்டல்கள், ஆரவாரஒலிகள், களிப்பின் எல்லையைத் தொட்ட நிறைவு அங்கே களைகட்டிக்கொண்டது! சிகப்பு மஞ்சள்நிற உடையணிந்து ஆடிய கலைஞர்களோடு இணைந்து, இளைஞர் யுவதிகள் உட்பட்ட அனைவரும் ஈரஆடைகளோடுநின்று ஆடிய ஆக்ரோச எழுச்சியின் உயற்சி எவரையும் அதிசயிக்கவைத்தது! இரண்டு மணிப்பொழுது எப்படிக்கழிந்தது என்பதை எவரும் உணரவில்லை! ஆடல்பாடலோடு அனைவரும் ஒன்றிக்கலந்து மழையைமறந்து நின்றனர்!

இசைத்தொடர் நிகழ்வின்முடிவில் பொங்குதமிழ்த் தீர்மானம் மொழியப்பட்டு,.. அது எல்லோராலும் மேலானதொனியில் மீழ உரைக்கப்பட்டன! அதன்பின் எமது விடுதலையின் ஆர்வித்த வியூகத்தின் தோற்றுபொருளென விளங்கவென தீப்பந்தங்கள் ஏந்திய ஆயிரமாயிரம் கையினராய் நோர்வேயின் பாராளுமன்றத்தைநோக்கி தீஆறென மக்கள் நகரத்தொடங்கினர்.

ஒஸ்லோவின் அந்த நீளவீதியில் எழுந்து நடந்த பொங்குதமிழ் எழுச்சியைக்கண்டவர் எல்லோரும், கைதட்டி தங்களின் ஆதரவை வெளிப்படுத்திய அந்த அன்புணர்வு துலங்கிய மனிதம் மறக்கமுடியாதது!

அங்கே மகிழ்வுணவு விடுதிகளின் கதவுகள்யாவும் அகலத்திறந்தே கிடந்தன! வர்த்தகநிலையங்களும் அப்படியே!... தீயேந்தியகையினராய் ஒருபெரும் மனிதஆறு வருகின்றதே என்று யாரும் அன்று அஞ்சவில்லை! ஈழத்தமிழரின் இயல்பித்த சாத்வீகத்தில் நோர்வேஜியர் கொண்டிருக்கும் நம்பிக்கையை இந்நிகழ்வின்மூலம் கண்டுகொள்ள முடிந்தது!

வீதிமருங்குகளில் நின்று ஊர்வலத்தைக் கண்டுகளித்தவர்கள் கைதட்டி ஆரவாரிக்கவே இனியன் தன் வெள்ளைத்தோழியோடு ஓடியோடி அறிந்தோருக்கு நன்றிசொல்லி நடந்தமுறைகண்டு வேந்தன் வாய்விட்டுச் சித்துக்கொண்டான்.

என்னடா மச்சான்! இப்பிடி உணர்ச்சிவசப்பட்டு அவள்பெட்டையையும் இழுத்துக்கொண்டு பெரும் குசியாட்டமாய் என்னடாப்பா நடந்தது...

வேந்தன்! டே! நீ நினைச்சியோ இந்தக்குளிருக்க விடாமழையுக்க இந்தளவு தொகைசனம் வருமெண்டு!... வந்திருக்கு மச்சான் அந்தமாதிரி! பாரடாப்பா! கைக்குழந்தையளோடை தள்ளுவண்டிலுகளையும் தள்ளிக்கொண்டு அங்கைபாரடா!... வயதுபோன ஆச்சியப்புமாரை இந்தத் துருவக்குளிருக்க இந்தராவிலை நனைஞ்சபடி எவ்வளவு பெரியவிசயமிது! சா!..

எடுத்தகதையை முடிக்கமுடியாது இனியன் நொக்ஸ்மொழிகலந்து கதைக்கத் தொடங்கவே அந்த மெய்மறந்த சந்தோசம் உந்திய உணர்வைக்கண்டு வேந்தன் மகிழ்ந்தான்.

எட இனியன்! நீ ஆழிப்பேரலை அள்ளித்தந்த முத்தடா எங்களுக்கு!

என வேந்தன் சொன்னதை விழங்காதவனாய் விழித்தவன், எமதுதரப்பின் நியாயித்த கோரிக்கைகள் அடங்கிய கோவையை நோர்வே பிரதமரிடம் எமது பிரதிநிதி கையளிக்கும் அந்த நிகழ்வை நோக்கியவாறு, தனது காதலிக்கு அதுகுறித்து விளக்கிக்கொண்டு நின்றான்.

வேந்தன் இருக்கும் மாடிவீட்டுக்கு முன்னுள்ள அழகிய தனிவீட்டில் வசிக்கும் அந்த தொங்கிய மீசைக்கார வெள்ளைமுதியவர் அங்கு அவனைக்கண்டு முறுவலிடவே, அவரை இனியனுக்கு சுட்டிக்காட்டியவன்.

இவர் பெரிய யேனலீஸ்ட்! இராணுவஆய்வாளர்! பார் மச்சான் தண்ணிஒழுக குடையும் இல்லாமல் அந்தாள் எங்கடை இந்த எழுச்சிநிகழ்வை பாத்துக்கொண்டு நிக்கிறதை!

என்று வேந்தன் சொல்லிமுடிக்குமுன் குறுக்கிட்ட இனியன்

உந்த யூறோப்யூனியனுக்கு இவங்கள் தான்ராப்பா எடுத்துச்சொல்லும்படியா எழுதவேணும்! ஆனா இவன்களிலை எத்தினைபேர் நீதி நியாயமா எழுதுவாங்களோ ஆர்கண்டது.

என புறுபுறுத்துக் கொண்டவன். தீப்பந்தங்களைச் சனங்களிடமிருந்து மீளப்பெற்று அவற்றை அணைத்துக் குவிக்கும் பணியில் முனைந்தவர்களோடு இணைந்துகொண்டான்.

அங்குவந்த அந்த நொஸ்க் ஊடகர் வேந்தனின் கையைப் பற்றிக்குலுக்கியவாறு, சிரித்த முகத்தோடு சொன்னார்.

மகன்! உந்தநிகழ்வு உங்களுக்கு பெரியவெற்றி! நோர்வேஜியர்களே வீட்டுக்க சுருண்டுபடுக்கிற இந்தக்கடும் குளிருக்க, இந்தக் கொட்டுமழையுக்க குழந்தைகுட்டியோடை இவ்வளவு தொகையான சனங்கள் வந்திருக்கு! இது என்னத்தைக்காட்டுது தெரியுமே?

நிச்சயம் நீங்கள் உங்கடை நாட்டை மீட்டுவிடுவியள்! ஓம்! எந்த இராணுவ வலிமையும் மக்கள் சக்திக்குமுன் நிண்டுபிடிக்க ஏலாது!

என்றவர் வேந்தனிடம் விடைபெற்று, தனது நெடியபாதங்களை வீசிநடந்தவாறு விலகிப்போனார். அவர் ஊன்றிய கருத்தின்முனை அவனின் மனஆழத்தில் சென்றுபதிந்து அவனை மேலும் நிமிரவைத்தது!


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




பொங்குதமிழ் - நோர்வே




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# குடியியல் உரிமைகளின் தாய்

## றோசா பார்க்ஸ்





"சகமனிதனுக்கெதிராக
மனிதனால்
இழைக்கப்படும்
அநீதிகள் தொடரும்வரை
நாம் போராடியே
ஆகவேண்டும்"

……. றோசா பார்க்ஸ்

அமெரிக்காவின் குடியியல் உரிமைகளுக்கான இயக்கத்தின் தாய் என அறியப்பட்ட றோசா பார்க்ஸ் தனது 92வது வயதில் மறைந்திருக்கிறார்.

1955 இல் அலபாமா மாநிலத்தின் மொண்காமறி நகரின் பேருந்தொன்றில் ஒரு வெள்ளையனுக்கு அவர் எழுந்து இடம் கொடுக்க மறுத்து ஒத்துழையாமை இயக்கத்திற்கான முதல் வித்தை ஊன்றி வரலாற்றில் இடம்பிடித்தார் இந்தக் கறுப்பினப் பெண் றோசா பார்க்ஸ். அவர் இருக்கையை விட்டு எழ மறுத்ததால் ஒட்டுமொத்த கறுப்பின மக்களும் அடிமைமனப்பான்மை உதறி வெகுண்டெழுந்தனர். அன்றிலிருந்து 1964இல் குடியியல் உரிமைகள் சட்டம் அமுலுக்கு வந்து, கறுப்பர்கள் மீதான அடக்குமுறைகளைச் சட்டங்கள் மூலம் நியாயப்படுத்தும் போக்குக் களையப்படும்வரை - ஒரு தசாப்தகாலம், உரிமைப்போராட்டத்தை ஏனைய கறுப்பினத்தலைவர்களுடன் இணைந்து றோசா பார்க்ஸ் வழிநடத்தினார்.

1955இல் பார்க்ஸ் பேருந்தில் வெள்ளையர் ஒருவருக்கு எழுந்து இடம் தரமறுத்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். "ஏன் எங்களை இவ்வாறு கீழ்த்தரமாக நடத்துகிறீர்கள்" என்று காவலரை அவர் கேட்டபோது "சட்டத்தைத் தான் நாங்கள் அமுல்படுத்துகிறோம். நீர் சட்டத்தை அவமதித்ததால் உம்மைக்

தாவித்
- கனடா


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கைதுசெய்கிறோம்" என்றார் அந்தக் காவலர். தங்களுடைய கௌரவத்தை இழந்து சுயமதிப்பினை இழந்து கறுப்பின மக்கள் கூனிக்குறுகிப் பயணம் செய்வது தன்னுடன் முடிவடையவேண்டும் என்று அன்றே தான் உறுதிபூண்டதாக றோசா பார்க்ஸ் கூறினார். நான்கு நாட்களின் பின்னர், சட்டத்தை அவமதித்ததாக குற்றம் சுமத்தப் பட்டு 14 டாலர் அபராதம் அவருக்கு விதிக்கப்பட்டது. அதே நாளில் கறுப்பின இளைஞர்கள் சிலர் மக்களெழுச்சி, கறுப்பர்களைப் பிரித்துத் தனிமைப்படுத்தும் சட்டங்களுக்கு மிகப் பெரிய வெற்றிகரமான சவால்களுள் ஒன்றாய் அமைந்தது.

மார்ட்டின் லூதர் கிங்கை குடியியல் உரிமைகளுக்கான இயக்கத்தின் முன்னரங்குக்கு கொண்டுவந்ததும் இந்த எழுச்சிதான்.

1956 நவம்பர் 13 இல் கறுப்பர், வெள்ளையர் எனப் பிரிக்கப்பட்ட உழைத்தவர். தனது கணவருடன் இணைந்து றோசா அன்ட் றேமண்ட் சுயவளர்ச்சிக்கல்விமையத்தை நிறுவி, இளைஞர்கள் கல்விக்கான வாய்ப்புக்களைத் தேடவும், வாக்களிக்கும் உரிமையின் இன்றியமையாமையை வலியுறுத்தி அவர்கள் வாக்காளர் பட்டியலில் தம்மை இணைத்துக்கொள்ள ஊக்குவிக்கவும், இனங்களுக்கிடையிலான சமாதான சகவாழ்வை நோக்கி அவர்கள்



மார்ட்டின் லூதர் கிங்குடன்
றோசா பார்க்ஸ்



சேர்ந்து மொண்கொமறி முன்னேற்றச் சங்கம் என்ற ஒன்றை உருவாக்கினர். அப்போது தேவாலயம் ஒன்றின் இளம் பாதிரியாராக இருந்த மார்ட்டின் லூதர் கிங் அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த அமைப்பின் தலைமையில் மொண்கொமறி நகரக் கறுப்பின மக்கள் பொதுப்போக்குவரத்துச் சேவையை முழுமையாகப் புறக்கணித்துப் போராட்டம் தொடங்கினர்.

இந்தப் போக்குவரத்துப் புறக்கணிப்பு, முன்னூற்றியெண்பத்தொரு கடினமும் இடரும் நிறைந்த நாட்கள் நடந்தது. இறுதியில் மொண்கொமறி நகரப் பேருந்துச் சேவையின் மொத்தப் பயணிகள் தொகையின் மூன்றில் இரண்டு பகுதியினரான கறுப்பின மக்கள் சேவையைப் புறக்கணித்ததால் ஏற்பட்ட நட்டத்தினை ஈடு செய்யமுடியாமல் பேருந்துச் சேவை இழுத்துமூடப்பட்டது. இந்த மாபெரும் பகுதிகளைக் கொண்ட நகரப் பேருந்துச்சேவை அரசியல்யாப்பிற்கு முரணானது என அமெரிக்க உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதேபோல 1957ல் றோசா பார்க்ஸ் மேற்கொண்ட சட்டமறுப்பு நடவடிக்கைகளால் மொண்கொமறி கல்வித்திணைக்களத்திற்கெதிராக உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, பொதுப்பாடசாலைகளில் கறுப்பின மாணவர்களை தனிமைப்படுத்தும் நடைமுறைக்குச் சாவுமணி அடித்தது.

இவ்வாறாகத் தனது அமைதியான சட்டமறுப்பு நடவடிக்கைகளால் றோசா பார்க்ஸ கறுப்பின மக்களின் உரிமையை மெல்லமெல்ல வென்றெடுத்தார். "சகமனிதனுக்கெதிராக மனிதனால் இழைக்கப்படும் அநீதிகள் தொடரும்வரை நாம் போராடியே ஆகவேண்டும்" என்று கூறும் றோசா பார்க்ஸ் தன் மக்களின் மேம்பாட்டுக்காக வாழ்நாள் முழுதும் செயற்படவும் பாடுபட்டார்.

தனது முதுமைக் காலத்திற் கூட குடியியல் உரிமைகள் பற்றிய விரிவுரைகளை ஆற்றுவதில் உற்சாகமாக இருந்தவர் பார்க்ஸ்.

1996 இல் சுதந்திரத்துக்கான ஜனாதிபதி பதக்கம், 1980 இல் அமெரிக்க காங்கிரஸ் தங்க பதக்கம் உட்பட பல விருதுகள் இவருடைய பணிகளைக் கௌரவித்து வழங்கப்பட்டிருக்கின்றன.

போதைப்பொருட் பாவனை, சீரழிக்கும் வறுமை, குழும வன்முறை, ஆயுதக் கலாசாரம் என்பவற்றால் நலிவுற்றிருக்கிற இன்றைய அமெரிக்கக் கறுப்பின இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக வாழ்ந்துகாட்டிய றோசா பார்க்ஸின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சூழலியல் விழிப்புணர்வும் கூட்டுச் செயற்பாடும்

அருள்

[...] காற்றே வா
[...] மழைக் காலம்.
மாலை நேரம்.
குளிர்ந்த காற்று வருகிறது.
நோயாளி உடம்பை மூடிக்கொள்கிறான்.
பயனில்லை-
காற்றுக்கு அஞ்சி உலகத்திலே இன்பத்துடன் வாழ
முடியாது.
பிராணன் காற்றாயின் அதற்கு அஞ்சி வாழ்வதுண்டோ?
காற்று நம்மீது வீசுக.
அது நம்மை நோயின்றிக் காத்திடுக,
மலைக் காற்று நல்லது.
கடல் காற்று மருந்து.
வான் காற்று நன்று.
ஊர்காற்றை மனிதர் பகைவனாக்கி விடுகின்றனர்-
அவர்கள் காற்றுத் தெய்வத்தை நேரே வழிபடுவதில்லை.
அதனால் காற்றுத் தேவன் சினமெய்தி அவர்களை அழிக்கின்றான்.
காற்றுத் தேவனை வணங்குவோம்.
அவன் வரும்வழியில் சேறு தங்கலாகாது.
நாற்றம் இருக்கலாகாது:
அழுகின பண்டங்கள் போடலாகாது:
புழுதி படிந்திருக்கலாகாது.
எவ்விதமான அசுத்தமும் கூடாது.
காற்று வருகின்றான்.
அவன் வரும் வழியை நன்றாகத் துடைத்து நல்ல நீர்
தெளித்து வைத்திடுவோம்
அவன் வரும் வழியிலே சோலைகளும் பூந்தோட்டங்களும்
செய்து வைப்போம்.
அவன் வரும் வழியிலே கர்ப்பூரம் முதலிய நறும் பொருள்களை
கொளுத்தி வைப்போம்.
அவன் நல்ல மருந்தாக வருக
அவன் நமக்கு உயிராகி வருக
அமுதாகி வருக[...]

- பாரதியார்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





சூழலியல் என்ற சொல்லை தமிழ்நாட்டில் இன்றைய தினத்தில் சூழலியல் என்று புதிய சொல்லாக்கியிருக்கிறார்கள். மனித இருப்புடன் சூழ உள்ள காற்று, நீர், நிலம், காடு, பூக்கள், மனிதர்கள் இயற்கைச் செல்வங்கள் அனைத்தும் இணைந்த இயக்கத்துடன் தான் சூழலியல் பேசப்படுகிறது.

எமது மண்ணில் இயற்கை வளங்கள் பேணப்படமுடியாமல் போகிற அளவிற்கு எதிரியானவன் திட்டமிட்ட வகையில் பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறான். காற்றும், கடலும், காடும், பனை, தென்னை வளங்களும், பயிர்செய் நிலங்களும் திட்டமிட்டே சிதைக்கப்பட்டன. இதனால் சொல்லொணாத துன்பங்களை எம் மக்கள் இன்றும் அனுபவிக்கிறார்கள். எதிரியால் மட்டுமல்ல எம்மவர்களாலும் தான் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன.

'பிளாஸ்டிக், அஸ்பெஸ்டஸ், ஈயம் கலந்த மின் கலங்கள் போன்றவற்றால் இயற்கை மாசடைகின்றது. செயற்கை உரப்பாவனை, கிருமி நாசினிப் பாவனை, அதிகளவு நீர்ப்பாவனை போன்றவற்றாலும் நமது இயற்கைச் சூழல் அழிகின்றது.

இது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். அவை பற்றிய கருத்துக்களை மக்களுக்கு ஒரு கூட்டுச் செயல் முறை மூலம் எடுத்துச் சொல்லுவது மிகச் சிறந்த வழிமுறையாகும். அந்த வகையில் புரட்டாதி 1 ம் திகதியிலிருந்து 7 ம் திகதி வரை சர்வதேச சூழலியல் வாரச் செயற்பாடு தமிழீழ பிரதேசம் எங்கும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

கிளிநொச்சியில் சூழலியலைப் பாதுகாப்பதற்கான சூழல் நல்லாட்சி ஆணையத்தின் செயற்பாடுகளும் அதன் பங்களிப்புகளும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. துப்புரவுப்பணிகள் தான் அன்று அனேகமாக எல்லோருடைய பணியாகவும் இருந்தது. எல்லோருமே களத்தில் இறங்கிச் செயற்பட்டனர்.

www.tamileelamarchive.com







மக்கள், போராளிகள், தமிழீழ காவல் துறையினர் ஆகியோர் இச் செயற்பாடுகளில் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர். சூழலியல் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்குகள் பரவலாக நடைபெற்றது. சூழலியலைப் பாதிக்கும் சகல விடயங்கள் பற்றியும் மக்களுக்கு தெளிவூட்டப்பட்டது. மர நடுகைகள் குறித்தும், வேலைத்திட்டங்கள், முன்னெடுக்கப்பட்டுள்ளது. இப்படி ஒவ்வொரு நாளும் குப்பை எடுத்து சுத்தமாக இருந்தால் நாமும் ஐரோப்பா மாதிரி சுத்தமாக நகரங்களை, கிராமங்களை வைத்திருக்கலாம் என மகிழ்வாக இருந்தது என நண்பர் ஒருவர் ஆதங்கப்பட்டுக்கொண்டார். மக்கள் ஒன்று கூடி செயலாற்றும் சிரமதானப் பணிகள் மூலம் இத்தகையச் செயற்பாடுகள் எம்முடன் ஒரு மரபாக முன்னெடுக்கப்பட்டு வந்தது, வருகிறது. குளங்களை தூரெடுத்து ஆழப்படுத்தி இருக்கிறோம், விளையாட்டு மைதானங்களை உருவாக்கி இருக்கிறோம், வெள்ளம் வழிந்தோடுகின்ற வாய்க்கால்களை சீராக்கியிருக்கிறோம், மரங்களை நாட்டியிருக்கிறோம், ஊரே கூடி உரிமையுடன் பணிபுரிந்திருக்கிறோம். இன்றும் இது எமது மண் என்ற உரிமை உணர்வுடன் சூழல் பற்றிய விழிப்புணர்வும் இணைந்துகொள்ள, இரட்டிப்பான பலத்துடன் மக்கள் இறங்கி வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த பண்பாட்டுத் தொடர்ச்சி மீளவும் புதிய உத்வேகத்துடன் எமது மண்ணில் மலரத்தொடங்கியிருக்கிறது. ■


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மணலாறு விஜயன்

# புனானைப் படுகொலை

மட்டக்களப்பு கோரளைப்பற்று மேற்கில் அமைந்துள்ள வளமான கிராமம் மயிலந்தனைக்கிராமம். புனானையிலிருந்து வாகரைவரை எந்தப்பக்கம் திரும்பினாலும் பசுமையான வயல் வெளிகள் காட்சிதரும். வடக்குப்பக்கம் வாகரைநோக்கி மட்டுமல்லாது. தெற்குப்புறமாக குடுமிமலைவரையும் வயல்வெளிகள் பரந்துகிடக்கும் விளைச்சல் நிலங்கள் மட்டுமன்றி மேச்சல் நிலங்களும் செறிந்து காணப்படுவதால் பசு மாடுகள் பல்லாயிரக்கணக்கில் இக்கிராமத்து மக்களால் வளர்க்கப்பட்டன. கால்நடை அபிவிருத்தி பண்ணையொன்று இதற்கென அமைக்கப்பட்டுள்ளது. 1500 ஏக்கர் நிலப்பரப்பு இதற்கென ஒதுக்கப்பட்டிருந்தது. வாழைச்சேனைக் கடதாசி உற்பத்தி ஆலைக்குரிய உற்பத்திக்கென இதில் ஒருபகுதி ஒதுக்கப்பட்டிருந்தது.

மகாவலி கழிவுநீர் பாய்ந்து கலக்கும் மாந்தையாறு (மாதுறுஒயா) பெருக்கெடுத்துப் பாய்ந்து. இக்கிராமத்துக்கான வளத்தை அள்ளி ஒதுக்கியது. இதனால் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கென கால்நடைப் பண்ணையிலிருந்த நிலத்திலிந்து ஒரு பகுதி ஒதுக்கி கொடுக்கப்பட்டது. வளமான தமிழ்க்கிராமத்தை கூறுபோட்டு தமிழர்களை இல்லாதொழிக்கும் திட்டம் மெதுமெதுவாக நிறைவேறத்தொடங்கியது. மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமமாக மட்டுமல்லாமல் செல்வச்செழிப்பு குன்றாத தமிழ்க்கிராமமாகவும் இது விளங்கியதால் சிங்களவர் ஒருபுறமாகவும் முஸ்லீம்கள் ஒருபுறமாகவும் இக்கிராமத்தை ஆக்கிரமிக்கத்தொடங்கினர். பொலநறுவை மாவட்டத்தோடு இக்கிராமத்தின் பெரும் பகுதியை இணைக்கும் முயற்சியில் சிங்களவர் முயற்சிக்க, முஸ்லீம்கள் வகைதொகையின்றி குடியேறி முஸ்லீம் கிராமமாக்கும் முயற்சி இன்னுமொருபக்கமாக நடந்தேறியது.

500 ஏக்கர் நிலத்தை சிங்களவர் அபகரிக்க 650 ஏக்கரை முஸ்லீம் குடும்பங்கள் இன்னுமொருபக்கத்தால் குடியேறி நிலத்தைப்பிடித்தனர். இன்று முஸ்லீம்களுக்கு அங்கு தனிமையான கிராமசேவகர் பிரிவு வேண்டுமென்று கேட்குமளவிற்கு இக்கிராமம் பறிபோய்விட்டது.

1990ம் ஆண்டு இங்கிருந்த கடைகளையும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தையும் கால்நடை அபிவிருத்திப் பண்ணையினையும் சுற்றி வளைத்துக்கொண்ட இராணுவத்தினர் அங்கிருந்த எல்லாப் பொருட்களையும் கொள்ளையிட்டு கட்டிடங்களையும் இடித்துத்தள்ளினர். இங்கிருந்த இருநூறுக்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் உயிர்க்காப்புத்தேடி கல்லடி வெட்டைப்பக்கமாக ஓடினார்கள். வளமும் எழிலுமிக்க தங்கள் கிராமத்தை எதிரியிடம் பறிகொடுக்கக் கூடாதெனக் கருதிய மக்களில் பலர் (36 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்) மீண்டும் தங்கள் கிராமக்துக்கு வந்து வீடுகளைத் திருத்தியமைத்து வாழத்தொடங்கினார்கள்.

ஓட்டமாவடியிலிருந்து புனானை, மயிலந்தனை வரை தனிமுஸ்லீம் பிரதேசமாக்க வேண்டுமென்று முஸ்லிம்கள் திட்டமிட்டனர். அதனால் சிங்கள இராணுவத்தினருடன் சேர்ந்து புனானை மயிலந்தனை தமிழர்களைக் கொல்வதிலும் உடமைகளைக் கொள்ளையிடுவதிலும் ஈடுபட்டார்கள். காமினி திசாநாயக்க மகாவலி அபிவிருத்தியென்ற பெயரால் இக் கிராமத்தில் சிங்களவர்களைக் குடியேற்றத்தொடங்கினான்.

பன்சல (பாஞ்சால) ஒன்றை இக்கிராமத்தில் கட்டி சித்தபுர என மயிலந்தனை என்ற கிராமத்தை சிங்களப்பெயராக மாற்றினான். முனியாண்டிக்கட்டை ஏத்தத்திற்கு நிவிதன என சிங்களப் பெயர் மாற்றம் செய்தனர். அன்றிருந்த தமிழ் பாராளு மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் இதில் பாராமுகமாகவேயிருந்தனர். இக்கிராமத்து மக்கள் இதனை எதிர்த்தெழுந்தனர்.

தமிழர்களின் எதிர்ப்பை அடக்கவும் அவர்களை கொன்று குவிக்கவும் கருதிய சிங்கள் ஏகாதிபத்திய அரசு மிகப்பெரிய இராணுவமுகாம்களை இங்கு நிறுவியது. கரடிவச்சகுளத்தில் ஒரு பெரும் படைமுகாம் நிறுவப்பட்டது. வாகனேரி, நாவலடிக் கிராமங்களிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. சிறப்பானதும் தரமானதுமான புகையிரத நிலையமொன்று புனானையில் அமைந்துள்ளது. இரவுபகல் போக்குவரத்து வசதிகள் கொண்ட இக்கிராமத்தில் ஆடு, மாடுகள் மாத்திரமன்றி மேட்டு நிலப்பயிர் செய்கையில் விளைவிக்கப்படும் மரக்கறி வகைகள் கொள்வனவு செய்யப்படக்கூடிய இடமாகவும் விளங்கியது. உடலுழைப்பால் உயர்ந்து விளங்கிய இக்கிராமத்தை சிங்கள இராணுவத்தினர் முற்றாக அழிக்க முடிவெடுத்தனர், முஸ்லீம்களும் இதற்குத்துணைநின்றனர். 1992ம் ஆண்டு ஆவணித்திங்கள், 9ம் நாள் அத்துயரம் நடந்தேறியது. 36 (முப்பத்தியாறு)பொதுமக்கள் வெட்டிக்ககொல்லப்பட ஏனையோர் நாலாபுறமும் சிதறி ஓடி தப்பிக்கொண்டனர். ஓடித்தப்பிய இக்கிராமமக்கள் இன்றுவரை தமது கிராமத்துக்குத் திரும்ப முடியவில்லை.

நியாயத்தைத் தேடித்தர யாருமின்றி




மௌனப் புதைகுழிக்குள்

www.tamileelamarchive.com

நிர்க்கதியாய் நிற்கின்ற இக்கிராமமக்களில் பொன்னையா-யோகராசா, பொன்னைய்யா - தெய்வநாயகம் காளிமுத்து - குணசீலன் ஆகிய மூவரையும் சந்தித்து இக்கிராமத்தில் நடந்துமுடிந்த படுகொலையின் விபரங்களை கேட்டறிந்தேன். தங்கள் கிராமத்தைப் பறிகொடுக்காது மீண்டும் அங்கு செல்லத்துடிக்கும் இவர்கள் தங்கள் கண்முன்னே நடந்த படுகொலைபற்றி சொல்லிக் கண் கலங்கினர்.



கரடிவச்சகுளத்தில் ஆமி காம்ப்பண்ணின உடன கிராமத்துக்குள்ள ஒருநாள் வந்தாங்கள். நாங்கள் பயந்து ஓட வெளிக்கிட்டம். ஒருத்தரும் ஓட வேண்டாம் ஏன் பயப்படுறியள் பயப்படவேண்டாம். நாங்கள் ஒண்டும் செய்யமாட்டம் எண்டு சொல்லீட்டுப் போட்டாங்கள். நாம் பயத்தில ஏற்கனவே மூண்டு இடத்தில கிட்டக்கிட்ட வாடியளப்போட்டீட்டு ஒண்டாய் இருந்தம். ஏதும் பிரச்சினை எண்டால் ஒண்டாய் தப்பிப் போகலாமென்று நினைச்சம்.

ஆமிவந்து பயம்வேண்டாம் நாம் ஒண்டும் செய்கிறதில்லை என சொல்லிப்போட்டு போட்டான். மறுகா மூன்றுநாள் கழிச்சுப் பார்த்தால் ரெண்டு லைனில வாறாங்கள். தலையை மூடி சறத்தால கட்டிக்கொண்டு வாறாங்கள். மதியம்1.30மணி இருக்கும் சாப்பிடுற நேரம் வெயிலுக்காக தலையை மூடிட்டு வாறாங்கள் என நினைச்சம் எங்கட பொம்பிளையள் பலர் உரலும் உலக்கையுமாய் அடுப்படியும் சமையலுமாய் இருந்தாங்கள் அவர்கள் சாப்பாட்டு ரைமைப்பாத்து வந்ததுக்குக் காரணம் வயலுக்கு தோட்டத்திற்கு போன ஆம்பிளையள் சாப்பிட வருவாங்களெண்டுதான்.

றோட்டால வாறாங்கள் எங்கையோ போப்போறாங்களென நினைச்சம். மறுகாப்பாத்தால் நேரவாறாங்கள். வந்தவங்கள் எல்லா வீட்டிற்கும் போய் எல்லாரும் “நடவுங்கோ பெரியதுரை உங்கள வரட்டுமாம் விசாரிச்சுப்போட்டு விடுவார்” எனச் சொல்லிச்சொல்லி கூட்டிட்டு வாறாங்கள். வாறப்போ வீடுகளில கிடந்த அலவாங்கு கோடாலிகளை கையில தூக்கீட்டு வாறாங்கள்.

எங்கட இடத்திலதானெண்டு நினைச்சம். ஒரேநேரத்தில மூண்டு இடத்தில் இருந்த மக்களையும் சுத்திவளைச்சுப் பிடிச்சாங்கள். எல்லாரின்ர வீடும் எங்க இருக்குதெண்டு அறியத்தான் மூண்டு நாளைக்கு முதல் வந்தவனெண்டு அப்பதான் விளங்கிச்சுது. எல்லாரும் வந்துகுந்தியிருந்த உடன் எங்க ஆம்பிளையெளெல்லாம் போட்டாங்கயா? எனக்கேட்டான். எல்லாரும் வயலுக்க போட்டாங்கள் இன்னும் வரல்ல எனச்சொன்னம். சொல்லிக்கொண்டிருக்க ஒரு வெடிச்சத்தம் கேட்டுது. கேட்ட உடன சடாரென்று எல்லாரையும் வெட்டத் துவங்கினாங்கள் வெட்டுவிழத்துவங்கின கையோட எல்லாரும் எழும்பின பக்கமாய் சிதறி ஓடினாங்கள். ஓடத்துவங்கினதும் படபடெண்டு ஓடுறாக்களுக்கு சுட்டாங்கள். நானும் பிள்ளையள் ரெண்டையும் இழுத்துக் கொண்டுட பசுமாடுகள் நிக்கிற பக்கமாய் ஓடினன். ஓடிப்போகேக்க பாத்தா இரண்டுபேர் வயல்ப்பக்கம் நிண்டாங்கள். ஓடிவாருங்கோ ஓடிவாருங்கோ என அவங்கள கூப்பிட துரைவரட்டுமாம் வாறம் எண்டு சொன்னாங்கள்.அந்தப்பக்கம் பாத்தா அங்க நிண்ட ஆமி என்னையும் கையைக்காட்டிக் கூப்பிடுறான். மறுகா திரும்பி ஓட படபடெண்டு எனக்கு வச்சான் வெடி. நம்மட மனிசிக்கும் வெடி வச்சிருக்கிறான் ஒருவெடி கன்னத்தையும் இன்னொருவெடி தலை ஓட்டையும் மெல்லிசாய் கிழிச்சு கொண்டுபோட்டுது. ஓடினால்ப்போல மனிசியையும் பிள்ளையையும் கைபறிய விட்டிட்டன். காட்டால ஓடி கல்லடி வெட்டைக்கு போய்ச்சேர்ந்தம் போனகையோட விதானையாரிட்ட நடந்ததைச்சொன்னம்.

அடுத்தநாள் செஞ்சிலுவைச்சங்க ஆட்கள் வந்தாங்கள் யாராவது ஒராள் வாருங்கோ கிராமத்துக்க போய்ப்பாத்திட்டு வரலாமென கேட்டார்கள். எல்லாரும் பயத்தில மாட்டனெண்டு சொல்லிவிட்டாங்கள். அப்புறம் நான்போக வெளிக்கிட என்னையும் போகவிடாமல் கையில் பிடிச்சு இழுத்தாங்கள். இனி நம்மட மனிசிபிள்ளைகளுக்கு என்னநடந்ததெண்டு அறியோணும் மற்ற


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆக்களுக்கு என்ன நடந்ததெண்டு பாக்கோனும் எல்லாரும் பின்னடிச்சால் சரிவராதெண்டு நான் ஏறிட்டன்.

கிராமத்துக்குள்ள போய்சேரேக்க பாத்தா றோட்டில ஒரு லொறியும் ஜீப்பும் றோட்டுக்கரையில் நிக்குது. அதில பெரியவன் நிண்டுசொன்னான் இப்ப ஊருக்க போகேலாது அங்க பாதுகாப்பில்லையெண்டு செஞ்சிலுவைச்சங்க ஆள் சொன்னார் பாதுகாப்பில்லாட்டிப் பறவாயில்ல நாங்கள் போய்ப்பாக்கத்தான் போறம். என வாக்குவாதப்பட்டு வாகனத்துக்க கிடந்த வயலஸ்சில ஏதோ கதைச்சார். கதைச்சிட்டு உடன வாகனத்தில ஏறி ஊருக்க போனம்.

ஊருக்க போய்ப்பத்தா ஒருத்தரையும் காணல்ல. எல்லாரையும் கூப்பிட்டு இருத்தின இடங்களில் ரத்தம் வெள்ளமாய் உறைஞ்சு போய்க்கிடக்குது. திரும்பி வந்தம் வரேக்க றோட்டில நிண்ட ஆமிப் பெரியவன் சொன்னான் "ஊருக்க ஒருத்தரும் இல்ல ஆரைப்பார்க்க வந்தனிங்களெண்டு" கேட்டான். நான் சொன்னன் நம்மட மனிசிபிள்ளைகளைப்பார்க்க வந்ததாய். அவன் லொறியைக் காட்டி அதுக்குள்ள கிடக்கிறதில உம்மட மனிசி பிள்ளையள் கிடந்தா தேடிப்பாருமென சொன்னான்.

லொறிக்குள்ள ஏறிப்பாத்தா கைகால்கள் வெட்டுப்பட்டபடி 36 சவங்கிடக்குது. எல்லாத்தையும் புரட்டிப்புரட்டி பாத்தன். அடையாளம் தெரியாமல் எல்லாம் ஊதி நீலம் பாஞ்சுபோய்க்கிடக்குது என்னையறியாமலே பெரியசத்தமாய்க் கத்தினன். என்ர மனிசி பிள்ளையள் அதுக்க இல்லையெண்டது மட்டும் தெரிஞ்சுது. லொறியால இறங்கினன்.

றோட்டைப்பாத்தா கரடிவச்ச குளத்திலயிருந்து கவேட் வருது அதில நீதவானும் வந்திறங்கினார். வந்து கேட்டாரு கிராமத்தாக்கள் யாராவது நிக்கியளாவெண்டு. நான் நிக்கிறதாய்ச் சொன்னன். பயப்பிடாத மகன் என்னோடவா என கூட்டீட்டுப்போய் உங்கட ஆரார் இல்ல ஆரார் செத்துக் கிடக்கிறாங்க எண்டு பாத்துச் சொல்லுமகன் என் நீதிபதி சொன்னார். என்ர அண்ணன்மார் ரெண்டுபேர் என்ர மனிசி ரெண்டுபிள்ளைகள் ஒருத்தருமில்ல எண்டு சொன்னன். செத்துக்கிடக்கிற எல்லாருமே நம்மட உறவுகள்தானெண்டு சொன்னன். லொறிக்குள்ள கிடந்த சவத்தெயெல்லாம் கரடிவச்சகுளம் காம்பில இறக்கினாங்கள். நம்மட சீனியப்பாட மகளொராள வெட்டிப்போட்டு கொழுத்தியிருக்கிறாங்கள். அது பாதியுடம்பு கருகி பாதியுடம்பு அப்படியே கிடக்குது. நீளக்கூந்தலும் வெள்ளவெள ரென்ற வடிவான முகமும் பாதி அப்படியே கிடந்தது.

சின்னக் குழந்தைகள் கொஞ்சப்பேரை இன்னொரு பக்கமாய் எடுத்துப்போட்டாங்கள் அதுக்குள்ள நம்மட பிள்ளையள காணல்ல. சத்தி எடுத்தெடுத்து ஒரு சாதியாய் கத்தினன். நீதவான் பெரியவனக் கூப்பிட்டு ஏதோ கதைச்சார். அவன் சொன்னான் பொலநறுவை ஆஸ்பத்திரியில கொஞ்சப்பேரை கொண்டுபோய் போட்டிருக்குதெண்டு. காயப்பட்டாக்கள் ஒன்பதுபேர் அங்க இருப்பதாக சொன்னார்.

வொடியெல்லாத்தையும் கொண்டுபோகப்போறியளோ மகன் என்று நீதவான் கேட்டார். நான் சொன்னன் அங்க கொண்டுபோய் ஒண்டும் செய்யேலாதய்யா. எல்லாம் அங்கங்கு அகதியாய் ஓடிட்டாங்கள் நீங்களே ஏதாவது செய்யுங்க என்று எல்லாரையும் மளமளவெண்டு லொறியில ஏத்திக்கொண்டுபோய் புல்டோசரால கிண்டிப்போட்டு எல்லாரையும் தூக்கிப்போட்டிட்டு புல்டோசரால மண்ணொதிக்கி மூடினாங்கள்.

நான் என்ர மனிசி பிள்ளையனத்தேடி பொலநறுவை ஆஸ்பத்திரிக்குப் போனன். போய் எல்லா வாட்டிலேயும் தேடிப்பாத்தன். ஒரு இடத்திலேயும் ஒருத்தரையும் காணல்ல. அங்க நிண்ட சிங்கள நேஸ் பேசினாள். ஒரு ஐம்பது ருபாயை கையுக்க வச்சன். யாரைப் பாக்க வந்ததெண்டு கேட்டாள். பிள்ளையளயும் மனிசியையுமெண்டு சொல்லி நடந்த சம்பவத்தையும் சொன்னன். மளமளவெண்டு குழந்தைப்பிள்ளை வாட்டுக்குள் கூட்டிக்கொண்டு போனாள். அங்க போனால் கட்டிலொண்டில என்ர பிள்ளையள் ரெண்டுமிருந்து பிஸ்கற் சாப்பிட்டுக் கொண்டிருக்குதுகள். பயந்து ஏம்பளிச்சு கதைக்க முடியாமல் என்னைக் கண்டதும் விம்மிம்மி அழுதார்கள்.

பிள்ளையள தூக்கீட்டு தாயைத்தேடினன் கொஞ்சப்பேரை பேராதனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியாச்செண்டு அந்த நேஸ் சொன்னாள். பேராதனைக்குப் போய்தான் என்ர மனிசியைக் கண்டுபிடிச்சன். பதின் நாலு நாளாய் அலைஞ்சுதான் கண்டுபிடிக்க முடிஞ்சது. பேராதனை ஆஸ்பத்திரியிலேயும் வெட்டுக்காயத்தோட வந்த ரெண்டுபேர் செத்திட்டாங்கள். என பொன்னையா யோகராசா சொல்லிக்கொண்டிருந்தார்.

எங்களையெல்லாம் ஒருத்தரையும் மிஞ்சாமல் வெட்டிறது தான் அவன்ர பிளான். வெட்டிமுடிய தாங்கள் வெட்டிக்கொல்லேல்ல எண்டு மறைக்க நல்லபிளானாய் செய்தான். கரடிவச்சகுளத்தில இருக்கிற பெரிய காம்ப்காரன்தான் பிளான் குடுத்திருப்பான். புனானை ரெயில்வேஸ்ரேசன் காம்பிலயிருந்து வந்த ஆமி வெட்டிப்போட்டுப்போக வெட்ட வந்தவர்களை விரட்டியடிக்கிற மாதிரி இலுக்குப்பாம் காம்பில் இருந்து கவேட்வேக்கிள் அடிச்சுக்கொண்டு வந்தது. பின்னால படபடெண்டு ஆமியெல்லாம் சுட்டிட்டு வந்து கிராமத்துக்க புகுந்து மிச்சமாய்க் கிடந்த வீடெல்லாம் கொழுத்தினாங்கள். கொழுத்தி முடிய கரடிவச்சகுளம் காம்பில இருந்துவந்த லொறியில வெட்டினாக்களின்ர சவத்தையெல்லாம் தூக்கி ஏத்தீட்டுப்போனாங்கள். நாங்கள் தப்பி ஓடிப்போய் ஒழிச்சிருந்து எல்லாத்தையும் பாத்தம். என்னமாதிரி பிளான்பண்ணி செய்தாங்கள் பாவிகள் என காளிமுத்து குணசீலன் என்பவர் கோபம் பொங்கக்கூறினார்.

ஒன்பது ஆண்டுகளாகியும் கொலைசெய்யப்பட்ட இந்த மக்களுக்கும் இந்த மக்களது உறவுகளுக்கும் எந்த நீதியும் கிடைக்கவில்லை. நீதவானுடைய முயற்சியில் அடையாள அணிவகுப்பு கரடி வச்சகுளம் காம்பில நடந்தது. அந்த அணி வகுப்பில் 24 இராணுவத்தினர் கொலையில் சம்பந்தப்பட்டவர்களாக மக்களால் இனங்காட்டப்பட்டனர். இனங்காட்டப்பட்டும் எந்த நடவடிக்கையினையும் இந்த இராணுவத்தினர் மீது எடுக்கவில்லை. மின்னேரி, மட்டக்களப்பு என விசாரணைக்குரிய நீதிமன்றங்கள் மாற்றப்பட்டு இறுதியில் கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. வறுமைப்பட்டு நொந்து கெட்டு நிர்க்கதியாய் நிற்கும் மக்களால் கொழும்புக்குச் செல்ல முடியுமா இராணுவத்தினரைத் தப்பவைக்கும் முயற்சியில் சிங்கள அரசு வெற்றிகண்டுள்ளது. ஆனால் புனானை - மயிலந்தனையில் வெட்டிக்கொல்லப்பட்ட மக்களின் கதையும் காயங்களோடு தப்பியோடிய மக்களுக்கான நீதியும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது. தங்கள் கிராமத்திற்கு மீண்டும் சென்று வாழவிரும்பும் மக்களுக்கு அதற்கான எந்த உதவிகளும் செய்யவில்லை. ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




- இயக்குனர்: ஹனி 'அபு அசாத்.
- நேரம்: ஒரு மணி 27 நிமிடங்கள்.
- மொழி: அரபு. (பலஸ்தீனம்.)

# Paradise Now

## அல்லது ஒரு தற்கொலைப் போராளியின் உருவாக்கம்

■ க.வாசுதேவன்

ஹனி அபு அசாத்தின் இரண்டாவது முழுநீளச்சித்திரம். அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் பலஸ்தீன விடுதலைப் போராட்டப் பின்னணியைப் பின்புலமாகக் கொண்ட கதையாக்கம்.

ஒரு போராட்டத்தின் அரசியல் அதன் உளவியல் எனபவற்றால் துல்லியமாகப் பின்னப்பட்டுள்ள இந்தத் திரைப்படம் அனைத்திற்கும் முதலில் ஒரு போராட்டத்தின் தொடர்ச்சியாகவும் அதன் பகுதியாகவும் அமைந்துள்ளது. பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பே அனைத்திற்கும் ஆரம்ப காரணமானது, இந்த ஆரம்பக் காரணத்திற்குத் தீர்வு எட்டப்படாதவரையிலும் அதன் பக்கவிளைவுகளைப் பற்றிய அரசியல், சமூக, அல்லது ஒழுக்கவியல் சார்ந்த தீர்ப்புகள் எல்லாம் வெறும் பிதற்றல்களே என்பதை மிகவும் தெளிவாகவும் நாசூக்காகவும் இயக்குனர் இத்திரைப்படத்தினூடக முன்வைத்துள்ளார்.

ஹாலெத்தும், சயிட்டும் இரண்டு பால்ய நண்பர்கள். இருவரும் ஒரு கராஜ்ஜில் வேலை செய்பவர்கள். அதே நேரத்தில் இருவரும் இரகசியமாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு பலஸ்தீன போராட்ட அமைப்பின் உறுப்பினர்கள். இங்கு அவர்கள் சார்ந்த அமைப்பின் பெயர் குறிப்பிடப்படவில்லையெனினும், அவர்களது அமைப்பு இஸ்லாமிய மதக் கோட்பாட்டின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் தென்படுகின்றன. இவ்வமைப்பின் பொறுப்பாளர் ஒருவர் இவர்களை அணுகி அடுத்து வரும் இருபத்தி நான்கு மணிநேரத்தில் அவர்கள் ஏற்கெனவே விருப்பம் தெரிவித்ததற்கமைய தெல் -அவி நகரத்திற்குச் சென்று தற்கொலைக் குண்டுதாரிகளாக வெடிப்பதற்குத் தெரிவாகியிருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறார்.

இந்நேரத்தில் அந்நிய நாட்டில் வளர்க்கப்பட்ட, விடுதலைப் போராளி ஒருவரின் மகளான சுஹா பலஸ்தீனத்திற்குத் திரும்பி வந்த பின்னர் அவளுக்கும் சயிட்டுக்கும் இடையில்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





காதலுறவு உருவாகும் வாய்ப்பு உள்ளபோதும் அதற்கான சந்தர்ப்பங்கள் முழுதாக கூடிவரவில்லை. சுஹா மேற்கத்தைய நாகரீகத்தையும் சிந்தனை விதத்தையும் கொண்டவள். அவள் தற்கொலைப்போராட்டம் கைவிடப்படவேண்டியது எனும் கருத்துடையவள். அவள் தற்கொலை தவிர்ந்த வேறு வழிகளில் மட்டுமே போராட்டம் முன்னெடுக்கப்படவேண்டும் எனும் நிலைப்பாட்டை வலியுறுத்துகிறாள்.

தற்கொலைப் போராட்டம் சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாதது. மனிதாபிமானத்திற்கு முரணானது. ஆனால் மனிதக்குண்டு என்னும் ஆயுதம் வேறெந்த ஆயுதமுமற்ற பலஸ்தீனர்களின் இறுதி ஆயுதம் என்பதையும் மறுக்க முடியாது. இம்முரண்பாடான நிலைகளில் ஏதேனுமொன்றைக் கூட உயர்த்தி நிறுத்தாது ஒன்றுக்கொன்று முரணான இரண்டு நிலைப்பாடுகளைக் கத்தி விளிம்பில் நடப்பது போன்ற சமநிலையுடன் வெளிக்கொணர்வதற்கான ஒரு காரணியாக இக்கதையில் சுஹாவின் பாத்திரம் அமைகிறது. சுஹாவினூடாக தற்கொலைத்தாக்குதலின் மீதான கொடூரத்தை முன்வைக்கும் இயக்குனர் தற்கொலைப்போராளிகளினூடாக அது எவ்வாறான சூழ்நிலைகளில் தவிர்க்கமுடியாத ஆயுதமாகிறது என்பதையும் முன்வைக்கிறார். தற்கொலைப் போராட்டத்தின் கோட்பாடு, அதன் நடைமுறைப்படுத்தல், அதில் பங்கு கொள்பவர்களின் உளவியற்பாங்கு, அதன் மூல நியாயங்கள்போன்றவற்றை குறைகூறமுடியாத ஒரு நடுநிலையுடனும், நேரடிப்பங்கெடுப்பில்லாத பாணியிலும் மிகவும் இயல்பான கதையசைவினூடாக இயக்கி ஹனி அபு அசாத் வெற்றி கண்டுள்ளார் என்பது கண்கூடு.

தற்கொலைத் தாக்குதலுக்குப் புறப்படுமுன் தற்கொலைப்போராளியின் இறுதிப் பிரகடனம் வீடியோவில் பதிவாக்கப்படுவது ஒரு முக்கிய காட்சியாக அமைகிறது. இறுக்கமான சூழ்நிலையில் படமாக்கப்படும் இக்காட்சியில் படம்பிடிப்பவர்களும் பொறுப்பாளர்களும் நடக்கவிருக்கும் துன்பியலுக்கும் தமக்கும் இடையில் எவ்வித உணர்வு பூர்வமான உறவுகளும் இல்லாதவர்கள் போலும், தற்கொலைப் போராட்டத்தில் ஈடுபடப்போகின்றவர்கள் வெறும் ஆயுதங்களாக அவர்களுக்குத் தோன்றுவது போலவும்கூடத் தென்படுகிறது.

வாழ்வின் மீது சாமான்யர்கள் கொண்டிருக்கக்கூடிய அர்த்தத்திற்கும் 'விரும்பி' ஏற்கப்பட்ட மரணத்திற்குமான இடைவெளியால் உருவகம் கொள்ளும் கொடூரம் பலஸ்தீன மக்களின் இருத்தலைச் சூழ்ந்து இறுக்கமாகப் படிந்துள்ள வெறுமையை பார்வையாளர்களின் அகத்தில் நுணுக்கமாகத் திணித்து விடுகிறது. தற்கொலைப் போராளிகள் பிரத்தியேகமான துணிவுள்ளம் கொண்ட உயர்மானிடர்கள் என்றல்லாது அவர்கள் சாதாரண மனிதர்களாகவும் ஆனால் சூழ்நிலையால் அசாதாரணமான மனோநிலையைப் பெற்று அவர்கள் தம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்கு அவற்றை ஆயுதங்களாக மாற்றும் நிலைக்கு இட்டுச் செல்லப்படுகிறார்கள் எனும் யதார்த்தத்தை இத்திரைப்படம் பிரயத்தனமின்றி முன்வைக்கிறது.

'நீங்கள் தேசிய வீரர்கள். உங்களின் பலம் எதிரியை நடுங்கவைக்கும் பலம். மரணத்திற்கு அஞ்சாதவர்கள் மரணிப்பதில்லை, நீங்கள் மரணத்திற்கு அஞ்சுபவர்களுக் கெதிராக வெற்றியை மட்டுமே காணமுடியும். நீங்கள் மட்டுமே அவர்களின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள். அவர்களால் உங்களை ஒன்றுமே செய்யமுடியாது. நீங்கள் ஏற்கெனவே மரணித்தவர்கள்' என்றவாறு அமைப்பாளர் தற்கொலைப் போராளிகளுக்குச் செய்யும் உபதேசம் அவர்கள் முகங்களில் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தாதிருப்பதானது அவர்கள் ஏற்கெனவே மரணித்தவர்கள் எனும் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பது போலுள்ளது.

வீடியோப் பதிவை அடுத்து, அமைப்பாளர்களும் தற்கொலைப்போராளிகளும் அமர்ந்திருந்து உணவருந்துகிறார்கள். இவ்விடத்தில் மிகவும் வலிமைபொருந்திய ஒரு குறியீடு முன்வைக்கப்படுகிறது. இக்காட்சி யேசு கைது செய்யப்படுவதற்கு முன்னான பந்திப் போசனத்தைத் தவிர்க்கமுடியாதபடி மனத்தில் பரவவிடுகிறது. வரலாறெனும் சிலுவையில் அறையப்பட்டுத் தன்னை மற்றவர்களின் விடுதலைக்காக அர்ப்பணிக்கப்போகும் போர்வீரர்கள் யேசுவுக்கு ஒப்பானவர்கள் எனும் படிமம் இங்கு இயல்பாக இழையோடிக்கிடக்கிறது.

இதன்போது ஹாலெத்திற்குத் தன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





குடும்பம் பற்றிய உணர்வு தோன்ற அவன் அமைப்பாளரிடம் தனது குடும்பத்திற்கு உதவிசெய்யுமாறு கேட்கிறான். அமைப்பாளர் அவனது குடும்பம் தேசியக் குடும்பம் என்றும் தாம் முழுமையாக அவர்களுக்கு உதவுவோம் எனவும் பதிலளிக்கிறார்.

அதன்பின்னர் அமைப்பின் காணற்கரிய பெருந் தலைவருடனான சந்திப்பு நிகழ்கிறது. அவர் தற்கொலைப் போராளிகள் எத்தனை தூரம் தமது தேசியப்போராட்டதின் பெருமைக்குரிய சின்னமாக இருக்கிறார்களெனவும் உலகம் தம்மைப்பற்றி அறிந்து கொள்வதற்கான வழிவகையாக தற்கொலைத் தாக்குதல்கள் நடாத்தப்படவேண்டுமெனவும்கூறி விடைபெறுகிறார்.

அமைப்பாளர் போராளிகளை இஸ்ரேலிய எல்லைக்கு அழைத்துச் செல்லும்போது ஹாலெத்திடமிருந்து கேள்விகள் எழுகின்றன.

நாம் வெடித்துச் சிதறுவோம் அதன் பின்னர் என்ன நடக்கும் ?

"தேவர்கள் வந்து உங்களைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வார்கள்.

இங்கு உங்களது புகைப்படங்கள் சுவர்களெங்கும் ஒட்டப்பட்டு நீங்கள் தேசிய வீரர்களாகப் பிரகடனப்படுத்ப்படுவீர்கள்"

இறுதியாக, தற்கொலைப்போராளிகள் இருவரும் கம்பி வேலிகளைத்தாண்டி இஸ்ரேலிய எல்லைக்குள் நுழைய முற்படும்போது இராணுவ வாகனம் ஒன்று அவர்களின் திட்டத்தை முறியடிக்கிறது. அவர்கள் இருவரும் மீண்டும் பலஸ்தீன எல்லைக்குள் ஓட்டம் பிடிக்கவேண்டிய நிலை. ஹாலெத் தப்பியோடி தம்மவர்களிடம் மீண்டு விட்டபோதும், சயித் உடலைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் குண்டுகளுடன் அலையவேண்டியேற்படுகிறது.

ஒரு கட்டத்தில் பஸ் நிலையமொன்றிற்கு சயித் தற்கொலைப்போராளியாக அணுகுகிறான். அங்கு இஸ்ரேலிய யூதக்குடிமக்கள் நிற்கின்றனர். அரபு எனத் தன்னை அடையாளம் காணாதபடி எடுப்பாக உடையணிந்து திருமணத்திற்குச் செல்பவன்போல் சயித் நிற்கும்போது அவன் மனத்தில் போராட்டம் நிகழ்கிறது. அவன் விரும்பியிருந்தால் அந்த பஸ்ஸில் ஏறிப்பயணித்து தன்னை வெடிக்க வைத்திருக்கலாம்ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. கூடிநின்றவர்கள் மத்தியில் கைக் குழந்தையுடன் ஒரு தாய் நிற்பது அவனைப் பின்வாங்கவைக்கிறது. அவனின்றி பஸ்பயணிக்கிறது.

இறுதியில் ஹாலெத்தின் பகீரதப் பிரயத்தனத்தினால் சயித் கண்டுபிடிக்கப்பட்டு போராளிகள் மறைந்திருக்கும் இடத்திற்குக் கூட்டிவரப்படுகிறான். அமைப்புத் தலைவரால் விசாரணைக்குட்படுத்தப்படும் சயித்தின் உரையாடல் அவன் தனது இலக்கில் எத்தனை உறுதியாக இருக்கிறான் என்பதைத் தெளிவு படுத்துகிறது.

சயித்தின் தந்தை இஸ்ரேலியர்களுடன் ஒத்துழைத்ததால் பலஸ்தீனர்களால் மரணதண்டனை வழங்கப்பட்டவர். அவர் ஒரு துரோகி. இனத்திற்குப் பங்கம் விழைவித்த இழிநிலை மனிதராக அவர் கருதப்படுகிறார் என்பது சயித்திற்குத் தெரியும்.

"அவர்கள் எம்மை இழிநிலை மக்களாகவே கருதுகிறார்கள். அவர்களிடம் வெல்லப்படமுடியாத இராணுபலம் உண்டு. அவர்கள் அரசியல் ரீதியாகவும் பலமடைந்து விட்டார்கள். தம்மைப் பலியானவர்களாக உலகிற்குக் காட்டிக்கொண்டே, எம்மைத் தங்களை அழிக்க எண்ணும் பயங்கரவாதிகளாகவும் காட்டுகிறார்கள். பலவீனமானவர்கள் எங்கும் இருக்கிறார்கள். எம்மில் பலவீனமானவர்களை அவர்கள் இலகுவாகப் பயன்படுத்தி எங்களைத்தொடர்ந்து சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள்" என சயீத் அமைப்பின் தலைவருடன் உரையாடும்போது தன் தந்தை செய்த தவறுக்குப் பரிகாரமாக தான் தன் உடலை வழங்கி தற்கொலைப்போராட்டத்தில் ஈடுபடுகிறானோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

"நான் ஒரு அகதிமுகாமில் பிறந்தேன். அகதிமுகாமிலேயே வளர்ந்தேன். எனது வாழ்க்கை ஒரு சிறை. சர்வதேச சமூகம் போக்கிரித்தனமானது. அதற்கு எம்போராட்டத்தின் நியாயம்தெரியும். எமது மக்கள் படும் துன்பம் தெரியும். ஆனாலும் அது கோழைத்தனமாக கொடூரமான அநீதியை அனுமதித்துக் கொண்டிருக்கிறது. எமது போராட்டம் இடைநிறுத்தப்படமுடியாதது. எம்மிடம் இருக்கும் ஆயுதங்கள் எமது உடல்கள். எம்மை அவர்கள் இழிநிலை மனிதர்கள் எனக் கருதுகிறார்கள். ஆனால், மரணத்தில் நாம்அவர்களுக்குச் சமமானவர்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும்" எனும் சயித்தின் உரையாடல் அவனது அரசியல் பிரக்ஞையை, தனது போராட்டத்தின் அரசியல் பரிமாணத்தை அவன் எத்தனை தூரம் புரிந்து கொண்டிருக்கிறான் என்பதைப் புலப்படுத்துகிறது. இஸ்லாமிய மதக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கோட்பாடுகளுக்குள் சிக்குண்டு, 'மூளைச் சலவை' செய்யப்பட்டு தற்கொலைப் போராளிகள் உருவாக்கப்படுகிறார்கள் எனும் கருத்து நிலையை ஆட்டங்காணச் செய்கிறது இவ் வுரையாடல்.

மீண்டும் திட்டமிட்டபடி இருவரும் இஸ்ரேலிய எல்லைக்குள் நுழைந்து தெல்-அவி ற்குச் செல்கிறார்கள். அவர்களைத் தடுப்பதற்குச் சுஹா மேற்கொண்ட பிரயத்தனங்கள் எவையும் பலனற்றவையாகி விடுகின்றன. ஆனால் ஆரம்பத்தில் மிகவும் மன உறுதியும் கொள்கைப்பிடிப்பும் உள்ளவனாகத் தன்னைக்காட்டிக் கொள்ளும் ஹாலெத் துணிவிழந்து பின்வாங்குகிறான். சயித் தனது திட்டத்தை நிறைவேற்றுகிறான்.

எவ்வித வன்முறைச் சம்பவங்களும் இத்திரைப்படத்தில் இல்லை. வன்முறைகளின் சுவடுகள் கதையோட்டத்தின் பின்னணியெங்கும் இருந்தபோதும் படத்தின் வெற்றிக்கு அதன் இலக்கிற்கு வன்முறையைப் படமாக்கும் அவசியமில்லாமல் கதையோட்டம் அமைந்திருக்கிறது.

உண்மையில் பலஸ்தீன விடுதலைப்போராட்டத்தை நியாயப்படுத்தும் முயற்சி அர்த்தமற்றது. ஆக்கிரமிக்கப்பட்ட தங்கள் நிலத்தை மீளப்பெறவும், தமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும், சியோனிச அழிப்பிலிருந்து தப்பிவாழவுமாக அவர்கள் அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக முன்னெடுக்கும் போராட்டத்திற்கான நியாயம் உலகம் முழுவதினாலும் ஏற்கப்பட்ட ஒன்று.

ஆனால், போராட்ட வழிமுறைகள் சம்பந்தமாக சில நியாயப்படுத்தல்களை அவர்கள் முன்னெடுக்க வேண்டியுள்ளது. மேலெழுந்தவாரியாக தற்கொலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று ஒற்றைச் சொல்லில் வர்ணித்துவிடும் 'சர்வதேச சமூகம்' அதன் சிக்கலான உருவாக்க நியாயங்களின் மீது பாரா முகமாய் இருந்து வருவதை இத்திரைப்படம் நகைப்பிற்கிடமானதாய் ஆக்கிவிடுகிறது.

'ஜனநாயகம்', 'மனித உரிமைகள்' என்றெல்லாம் தனக்கு வசதிப்பட்ட நேரத்தில் பிதற்றும் 'சர்வதேசச் சமூகமும்' அதன் வழியொற்றிகளும் தமது பொருளாதார, அரசியல் நலன்களுக்கு குந்தகம் விளையும் நிலையில் தாம் நம்பும் அனைத்துப் பெறுமானங்களையும் தயவு தாட்சண்யமின்றி குப்பையில் விட்டெறிவதுபற்றி வரலாறு இடைவிடாது சாட்சியம் கூறிக்கொண்டேயிருக்கிறது.

ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உயிர்வாழ்வதற்கான போராட்டத்தில் தவிர்க்கமுடியாதபடி மேற்கொள்ளும் போராட்ட முறைகளைப் பற்றிய 'ஒழுக்கவியற்' தீர்ப்புகளை வெட்கமின்றி வழங்கிக்கொண்டேயிருக்கிறது.

நவதாராளவாதப் பொருளாதார வியாபகத்தையும் உலகமயமாக்கலையும் மட்டும் இலக்காக வரித்துக்கொண்ட மேற்குலக நியாயப்பாடுகளும் அவர்களின் சொல்லாடல்களும் அடக்குமுறைக்கெதிராகப் போராடும் மக்களுக்கும் அதற்கு எதிராகப் போராடுபவர்களுக்கும் எவ்விதத்திலும் பயனளிக்கக் முடியாதவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

ஆகமொத்தத்தில், பலஸ்தீன மக்களின் போராட்டத்தின் நியாயப்பாடுகளை வெளிப்படையாக ஏற்றுக்கொண்ட போதிலும் அதற்கான தீர்வொன்றைக் கண்டடைய முடியாத 'சர்வதேச சமூகம்' தன் நயவஞ்சகத்தை மறைப்பதற்கு அவர்களின் போராட்டமுறைகளைப் பற்றித் தீர்ப்பு வழங்கிக் கொச்சைப்படுத்துவது அதன் அயோக்கியத்தனத்தையே வெளிப்படுத்துகிறது.

போராட்டத்தின் மூலகாராணத்தை இல்லாமற் செய்துவிட்டால் போராட்டம் முடிவடைந்து விடும். இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிலிருந்து பலஸ்தீன நிலம் விடுபாடடைந்தால் பலஸ்தீனர்களின் போராட்ட முறைபற்றிய நியாயத் தீர்ப்பிற்கான அவசியமே இருக்காது.

ஆனால் 'சர்வதேச சமூகமும்' அதன் சொல்லாடல் வலைக்குள் அகப்பட்டவர்களும் அதன் வழியொற்றிகளும் விடுதலைப் போராட்டக்காரர்களின் சொல்லாடல்களையும் அவர்களின் நியாயங்களையும் கொச்சைப்படுத்துவதுடன் தம்மை நாகரீகமானவர்களாகவும் மனித உரிமைப் போராட்டக்காரர்களாகவும் காட்டிக்கொள்வதில் மட்டுமே அக்கறையுடையவர்களாக இருக்கிறார்கள். ஜனநாயகம், மனிதஉரிமைகள் போன்ற பெறுமானங்கள் தங்களது தனிப்பட்ட பொருளாதார அரசியல் நலன்களில் மட்டுமே அக்கறை கொண்ட இவர்களின் சாதாரண முகமூடிகளே.

பாரிஸ் கம்யூன் புரட்சியின் போது, புரட்சிக்குழு எதிரிக்கெதிராக பெண்களினாலும், குழந்தைகளினாலும் கூட உபயோகிகக்க கூடிய அழிவு ஆயுதங்களைத் தயார் செய்யும் தீர்மானத்தை எடுத்தது. எம் நகரம் இடிந்து வீழ்ந்தால் இடிபாடுகளுள் நெரிந்து இறப்போமே தவிர எதிரிகளிடம் சரணடையமாட்டோம் என செவ் வறிக்கையில் முழக்கமிட்டது. இதுபற்றி இன்றைய மேற்குலகப் புத்திஜீவிகளிடமும் அவர்களின் வழியொற்றிகளிடமும் ஒழுக்கவியற் தீர்ப்புக் கேட்போமேயானால் நாம் ஆச்சரியமடைய நேரிடும்.

காரண - காரியத் தொடர்பின்றி, சூழ்நிலையின் மீதான பாரதுாரமான பார்வையின்றி பலஸ்தீனர்களின் போராட்ட வழிமுறைகளைப் பற்றி சர்வதேச சமூகம் முன்வைக்கும் ஒழுக்கவியற் தீர்ப்புகள் எத்தனை தூரம் அபத்தமானவை என்பதைப் "Paradise Now" எனும் இத்திரைப்படம் தெளிவாகக் கூறி நிற்கிறது.

(25 ஒக்டோபர் 2005)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சுந்தர ராமசாமி (Sundara Ramaswamy), (30 மே,1931 - 14 அக்டோபர்,2005) நவீன தமிழ் இலக்கியத்தின் மிகச் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர் ஆவார். இவர், இந்தியாவின் நாகர்கோவில் அருகே உள்ளே தழுவிய மகாதேவர் கோவில் என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் ஒரு நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர் மற்றும் கவிஞர் என்று பல பரிமாணங்களைக் கொண்டவர். பசுவய்யா (Basuviah) என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதுபவர். இவரது எழுத்துக்கள் நவீனத் தமிழ் இலக்கியத்தில், தமிழ் மொழியினை பல்வேறு பரிமாணங்களில் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியது.

# விரிவும் ஆழமும் தேடிப் பயணித்தவர் பற்றிய கலைச்சுவட்டுக் குறிப்புக்கள் சில

சுந்தரராமசாமி ஒரு ஆழ்ந்த கலைநோக்குடைய அற்புதமான கலைஞன். அழியாத சோகத்தை உள்வாங்கிக் கொண்ட கண்களோடு அவர் எம்மிடம் இருந்து விடைபெறுகிறார். ஆழ்ந்த பார்வையின் அவரது கலைச்சுவடுகள் ஒளிர்ந்துகொண்டிருக்கின்றன. மனித வாழ்க்கையினுடைய அற்புதமான ஆழமான விரிந்த பக்கங்களை தேடித் தேடி சதா அலைந்து கொண்டு திரியும் கலைப்பயணி.

'வாழ்க்கை தெளிவற்றும் குழப்பமாகவும் என்ன எது என்று தெரியாமலும் இருக்கிறது. இதனால் வாழ்ந்து கொண்டிருப்பது மட்டுமே போதுமானதாகவில்லை'. இதுவே அவருடைய தேடலுக்கான உண்மையை நோக்கிய பயணிப்பதற்கான பாதையை அகலிக்கவைக்கிறது. உண்மையைக் கண்டடையும் ஓயாத பயணம் அவருடையது. மனிதனுடைய வாழ்க்கையை அவரால் மேம்போக்காக பார்க்க முடியவில்லை. எல்லாவற்றுள்ளும் ஆழ்ந்த பொருள் இருப்பதாக அவர் கருதினார். இந்த முயற்சிகளின் போது மனிதனை மூடி வீழ்ந்து கிடக்கின்ற பல்வேறான திரைகளை அகற்றுவதற்காக அவர் கடுமையாக முயன்றார். சுந்தர ராமசாமி பல கேள்விக்கணைகளால் துளைக்கப்பட்டவர். அந்தக் களத்தில் அவர் சில வேளைகளில் மௌனமாகவும் அமைதியாகவும் இருந்து பதிலளித்திருக்கிறார். ஒரு காய்த்த மரம் கல்லெறி படுவது போன்ற நிலையிலும் அவர் இருந்திருக்கிறார். தமிழில் விமர்சனப் பாங்குகள் சரியாக இன்னும் வளரவில்லை என்கிற கவலை அவருக்குள் ஆழமாக குடிகொண்டிருந்தது. அவை பற்றிய விமர்சனங்களும் கருத்துக்களும் பகிர்ந்துகொள்ளுதலுக்கான களமாக இந்தக் கட்டுரை விரியும் நோக்கற்றது. இது அவருடைய கலைச்சுவட்டின் சில தெறிப்புக்களை பற்றிய சில நினைவுக்குறிப்புக்களை பதியும் நோக்கிலானது. 'பேருறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் தமிழ் சமூகத்தை தட்டி எழுப்பவேண்டும்' என்கிற பயணத்தில் அவர் கலையை ஒரு ஆயுதமாக எடுக்கின்றார். அதாவது 'கற்காலத்து மனிதன் அவனுடைய வாழ்க்கையை புரிந்துகொள்ள கலைகள் படைத்தான். நான் என்னுடைய சிக்கலான வாழ்க்கையை புரிந்துகொள்ள கலைகளை படைக்கிறேன். படைக்க முயல்கிறேன்'. அதிலிருந்தே அவரது கலைப் பயணம் தன் திசைகளை எட்டும் சுவடுகளை எறியத்தொடங்குகிறது. அவ்வாறு அவர் ஆரம்பித்த பயணத்தில் மனித வாழ்வை கலைகளினூடாகப் பிரதிபலிக்கச்செய்யும் முயல்வாக கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புக்கள் விவாதங்கள், மதிப்புரைகள் என விரிந்துசெல்கிறது. கலையின் பேரிகை முழக்கோடு.

ஊரில் புளிய மரங்களை காணுகின்ற பொழுதெல்லாம் புளிய மரத்தின் கதையும் தனது ஞாபகங்களை மெல்ல உதிர்க்கும். மரத்தைச் சூழவும் நாம் இருப்பது போலவும் அவர் நம்முடன் தாடியை தனது கைகளால் நீவிக்கொண்டு பேசுவது போலவும் தரும் தோற்றம் எழும். அவ்வாறுதான் அவரது கலைப்படைப்புக்கள் காலப் பரப்பில் தம்மை துடிப்போடு இயங்கவைக்கின்றன. அதனால் தான் காலங்களைக் கடந்து பயணிப்பவராகவும் எம்முடன் தனது எழுத்துலகின் மூலம் வாழவும் தொடங்குகின்றார்.

'புளியமரத்தின் கதை' தமிழ் நாவற் பரப்பில் ஒரு மைல் கல்லாக இருக்கிறது. அவருடைய வாழ்க்கையில் அவர் பலவித கஸ்டங்களை அனுபவித்தவர். கேரளாவில் கோட்டையம் என்ற இடத்தில் அவருடைய குடும்பத்தினருடன் அவர் இருந்தார். அங்கு அவருக்கு தமிழ் படிக்க வசதி இருக்கவில்லை. ஆரம்ப பள்ளிக்கூடத்தில் அவர் படித்த மொழி மலையாளம். தான் பதினேழு வயது காலத்தில்தான் அவர் தமிழை ஓரளவுக்கு வாசிக்கவும் எழுதவும் தெரிந்துகொள்கிறார். சிலேட்டில் தமிழை எழுதத் தொடங்கிய அவரது பயணம் இறுதியில் அவரைத் தமிழில் மிகப் பெரிய நாவல் ஆசிரியராக முன் நிறுத்தியது. பெரும் பாய்ச்சலை நிகழ்த்திய படைப்பாக அவரது ஜே.ஜே சில குறிப்புக்கள் மிளிரத்தொடங்கியது. அது எம்மை உண்மையில வியப்பில் ஆழ்த்துகிற விடயமாகவே எமக்கு இருக்கிறது. மலையாள எழுத்துக்கள் மீதான வாசித்தலும் அந்த மண்ணிலிருந்து இருக்காத நிலையில் ஏற்படுகிற உணர்வு நிலையிலுமாக இந்தப் படைப்பு எழும்புகிறது. கனவும் கற்பனைகளும் புகுந்து கொள்ளும் இடம் தனக்குக் கிடைத்ததாகவும் இந்த நிலையும் கோணமும் படைப்புக்கு மிக ஏற்றதாக இருந்தது என அவர் குறிப்பிடுகிறார். தமிழ் இலக்கியத்தின் மீது தனக்கு இருந்த கோபமும் வருத்தமும் அவருடைய காலத்தை பற்றியும் அதன் கோலங்கள் பற்றியும் பேசவேண்டும் என்ற துடிப்பும் ஒரு கலைஞனின் தாகமும் வெளிப்பாடுமாக அந்த நாவல் எழுந்தது. தன் மொழியையும் தன் கலாச்சாரத்தையும் மேலெடுத்துச் செல்லவேண்டும் என்ற பயணத்தின் வெளிப்பாடாகவே அவரது கலை எடுத்துக் காட்டல்கள் மிளிரத்தொடங்கின.

வர்த்தக ரீதியிலான ஜனரஞ்சக தளங்கள் கொண்ட எழுத்துத் துறையில் அவர் ஒரு படைப்பாளி தோல்வியடைவதை ஒருபோதும் தோல்வி என கருதியவர் அல்ல. அதற்கு எதிரான ஓட்டத்தில் அவர் வெற்றிக்கம்பங்கள் நாட்டிச்சென்றிருக்கிறார். சமரசம் எனும் போக்கிற்கு அவர் தன்னை ஒரு போதும் வழிநடத்திச் சென்றவரில்லை. அவருடைய அந்த நிமிர்வு எம்மை பெருமிதத்தில் ஆழ்த்துகிறது. அதனால் எட்டு இதழ்களை மட்டுமே அவரால் காலச்சுவடாக எம்மிடம் விட்டுச்செல்ல நேர்ந்தது என்பது ஒரு நிகழ்த்திக் காட்டுதலாக இருக்கிறது. தமிழ் சமூகத்தின் செல் திசை அறிதலின் போக்கை அறிவித்தது. பின்னர் காலச்சுவட்டை இவர் வெற்றிகரமானதாக


www.tamileelamarchive.com

வணிகரீதியாக கண்ணன் போன்றவர் எடுத்துச் சென்றது வேறானது. தமிழ் சமூகத்தினுடைய சிந்தனை தளத்தில் மாற்றத்தை நிகழ்த்தவேண்டும் என்கிற நோக்கிலேயே அவர் மொழிபெயர்ப்புகளிலும் ஈடுபட்டவர். மலையாளத்திலிருந்து தகழி சிவசங்கரப் பிள்ளையினுடைய செம்மீன் நாவலையும் தோட்டியின் மகன் எனும் நாவலையும் தந்தார். அவை அந்த மாபெரும் கலைஞனினுடைய கலைச் சுவடுகள். அவை தமிழ் கூறும் உலகில் என்றும் நிலைத்து நிற்கப் போகின்றவையே. தமிழ் சினிமா குறித்தும் அதன் பிற்போக்குத் தனங்கள் குறித்தும் தனது விமர்சனங்களை முன்வைத்தார். மிகவும் காட்டமாக வைத்தார். தமிழில் வணிக சினிமாவே கோலோச்சுகின்றது அமுக்கப்பட்ட பாலியல் உணர்வுகளுக்கான வடிகால்களாக இருக்கின்றன அதையே நமது மக்கள் சினிமா என கொண்டாடுகிறார்கள் என்ற கருத்தை முன்வைத்தார். நல்ல சினிமாவுக்கான கருத்தாடல் களங்களை திறந்து வைத்தார். அவர் முன்னின்று நிகழ்த்தினார். பெண்களின் விடுதலை பற்றி பேசினார். இசை குறித்து பேசினார். இளையோர்கள் குறித்துப் பேசினார். படைப்பாளிகள் குறித்துப் பேசினார். உலக மயமாதல் குறித்துப் பேசினார். சமூகம் குறித்துப் பேசினார். கலைகள் குறித்துப் பேசினார். உலகப் படைப்பாளிகள் பற்றியும் எங்களுக்கு அறிமுகம் செய்தார். ஒரு அயராத பணியாளனாக ஒரு அசுர உழைப்பாளியாக அவர் விளங்கினார். அவர் முன்வைத்த கருத்துக்கள் விதைகளாக வீழ்ந்திருக்கின்றன. அவை வீழ்ந்த பரப்பளவு சிறிதாக எல்லையிடப் படலாம். ஆனால் அவை காலப் பரப்பில் ஆழமும் விரிவும் கொண்டு தேடலுடன் பயணித்த பயணியின் கதைச் சுவடுகளே. அந்தக் கலைச்சுவடுகள் உண்மையைத் தேடி ஓயாது பயணிக்கும் பயணிகளுக்கான வழிகாட்டிக் குறிப்புக்களாகவும் விளங்கும். பசுவய்யா என்ற பெயரில் அவர் நிறையக் கவிதைகள் எழுதியிருக்கிறார். கவிதை இயக்கத்தில் நாம் நீண்ட தூரம் பயணம் செய்து தேக்க நிலையைத் தகர்த்தோம் என்று பிரகடனம் செய்கிறார். இனி வரும் கவிஞர்களுக்கான மிகப் பெரிய திடலைத் திறந்துவைத்திருக்கிறோம் என அவர் குறிப்பிட்டார்.

'கவிதை குறித்து அவர் நீண்ட விவாதங்களை நிகழ்த்தினார்'. கவிதையில் தனது பயணப் பாதையின் கலைக் கோடுகளை அவர் எமக்கு அடையாளமிட்டுக் காட்டினார். எல்லா மனிதர்களிடமும் கவித்துவம் இருக்கிறது என நம்புகிறவர்களில் அவரும் ஒருவராக இருந்தார். கவித்துவத்தினுடைய நுட்பமான மேல் நிலை வடிவமே கவிதை என்று அவர் கூறினார். கவிதையின் மேல் நிலை எழுச்சியைக் காண விரும்பும் கவிதை நேசிகள் எப்பொழுதும் சமூகத்தில் இருந்துகொண்டிருப்பார்கள் மனிதர்களிடம் உள்ளாந்திருக்கும் கவிதை மனிதருக்கு வாழத் தேவையானது அதை தக்கவைத்துக்கொள்ள விரும்பி அதன் வீச்சை உம் மொழியில் காண அவன் பயணம் செய்துகொண்டிருக்க வேண்டும் எனச் சொல்லும் அவரது குரல் கால வெளியில் ஒலித்துக்கொண்டே இருக்கும் .

ஈழத்து இலக்கியம் குறித்தும் ஈழத்துக் கவிதைகள் குறித்தும் அவர் எங்களுடன் பேசினார். ஈழத்து படைப்பாளிகளுடனும் அவர் ஒரு மேலான உறவைப் பேணினார். மு.த எனும் கலை தரிசனனோடு அவரது மெய்யுள், போற்பறை என்ற கலை உன்னதங்களூடாக அவர் அவருடன் உரையாடினார். 'உள்ளடக்கம் அனுபவ வீச்சாக மாறாதவரையிலும் பிரதிபலிப்புக்கள் நிகழத்தும் பாதிப்புக்கள் குறையானவை என்று சிந்திக்கத் தொடங்கியவர் தளையசிங்கம். வாழ்க்கையின் முழு வீச்சைக் கலையில் வெளிப்படுத்தக் கனவு கண்டவர் கலைப்பார்வைக்கும் வாழ்க்கைக்குமான இடைவெளியை ஆத்மார்த்தத்தில் நிரப்பிய லட்சியவாதி' என அவரைக் கண்டு கொள்கிறார்.

அவ்வாறு அந்த ஆத்மார்த்தப் பிணைப்பினூடாக அவர் ஈழத்துக்கான பயணப் பாதையை அகங்களூடாக திறந்துகொள்கிறார். அப்போது ஈழத்து படைப்பாளர்களையும், கவிஞர்களையும், விமர்சகர்களையும் காண்கிறார். ஈழத்துக் கவிஞர்கள் இன்று உலகக் கலைகளோடு நெருக்கமான உறவை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் அதுவும் அவர்களது படைப்பை ஆழப்படுத்தவும் வீச்சுப் படுத்தவும் உதவும் என நம்புகிறவராகவும் கட்டியம் கூறுகின்றவராகவும் அவர் இருந்தார். கடல் கடந்து வாழும் தமிழர்கள் குறித்து பேசும் பொழுது அவர்கள் கடந்த காலப் பெருமைகளை பாராட்டிக்கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள். கடந்த கால பெருமைகளின் போதைக்குள் இருக்கிறார்கள் என வேதனை பட்டுக் கொண்டிருந்தார். கலாச்சார பயணம் என்பது சேலை கட்டுதல், பொட்டு வைத்தல், சாமி கும்பிடுதல், கோலம் போடுதல், தீபாவளி கொண்டாடுதல் என்ற விடயங்களால் நிகழ்ந்து விடக்கூடியதல்ல அது விரிவும் ஆழமும் கொண்ட தமிழ் சிந்தனையின் தளத்தில் நிகழவேண்டும் என குரல் எழுப்பினார். குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர், பாரிஸ் அமெரிக்கா, கனடா எனப் பயணம் செய்த அவர் தமிழ் மக்களைச் சந்தித்தார். மக்களின் வாழ்நிலை போக்குகளை அவதானிக்கின்ற ஒருவராக அவர் இருந்தார். இயந்திர வாழ்வியலில் சிக்குண்ட மனிதர்கள் சந்தோசத்தை தேடி அலைபவர்களாக அவர் கண்களில் நிழலாடினர். எல்லாம் இருந்தும் அமைதியைக் காண முடியாது சந்தோசத்தைக் காண முடியாது அலையும் மேற்குலக மனிதன் அவருக்குள் ஒரு மிகப் பெரிய ஆமான கேள்வியை எழுப்புபவனாக இருந்தான். வாழ்வைச் செழுமைப்படுத்தவும் உயரிய உன்னதமான கலை வீச்சுக்களை நிகழ்த்தவும் எம்மால் முடியும் என்ற நம்பிக்கைச் சுவட்டை அவரும் ஆழமாக எம்மிடம் விட்டுச்சென்றிருக்கிறார். அந்தச் சுவடுகளைத் தெளிவுறக் காணும் போதும் தமிழ் உலகில் பல கலை உன்னதங்கள் நிகழும்.

● தா.பாலகணேசன்

## என் நினைவுச் சின்னம்

நான் விடை பெற்றுக் கொண்டுவிட்ட
செய்தி
உன்னை வந்து எட்டியதும்
நண்ப
பதறாதே
ஒரு இலை உதிர்ந்ததற்கு மேல்
எதுவும் அதில் இல்லை

இரங்கற் கூட்டம் போட
ஆட் பிடிக்க அலையாதே
நம் கலாச்சாரத் தூண்களின்
தடித்தனங்களை எண்ணி
மனச்சோர்வில்ஆழ்ந்து கலங்காதே

நண்ப
சிறிது யோசித்துப் பார்
உலகெங்கும் கணந்தோறும்
இழப்பின் துக்கங்களில்
ஒரு கோடிக் கண்கள் கலங்குகின்றன
ஒரு கோடி நெஞ்சங்கள்
குமுறி வெடிக்கின்றன

நண்ப
நீ அறிவாயா
உன் அடிச்சுவடு ஒவ்வொன்றிலும்
அழிகின்றன ஒருகோடி உயிர்கள்

இருப்பினும்
நண்ப
ஒன்று மட்டும் செய்
என்னை அறியாத உன் நண்பனிடம்
ஓடோடிச் சென்று
கவிதையை எழுப்ப
முயன்று கொண்டிருந்தவன்
மறைந்துவிட்டான் என்று மட்டும் சொல்.
இவ்வார்த்தைகளை நீ கூறும் போது
உன் கண்ணீர்
ஒரு சொட்டு
இந்த மண்ணில் உதிரும் என்றால்
போதும் எனக்கு.

கொல்லிப்பாவை-1987
பசுவய்யா (சுந்தரராமசாமி) -107
கவிதைகள் தொகுப்பிலிருந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# விருட்சம்

நந்தினி சேவியர்

பின் முன் சடைத்து பரந்து கிளைவிட்டிருந்த மாமரம் பிஞ்சும் காயுமாக நின்ற அந்த நாட்களில் நவுக்கிரிமா, சாக்காய்ச்சல் காய்த்ததாக அம்மம்மாவின் மரணத்திற்கு வந்தவர்கள் பேசிக்கொண்டதை அம்மா அடிக்கடி நினைவு கூர்ந்திருந்தார்.

வேதக்கோவில் சூழலை நிறைத்திருந்த நாவல் மரங்களும், தாமரைக் குளத்தடி மருதமரங்களும், நெல்லிமரம் சாட்சியாக நினைவில் நிற்கும் பள்ளிக் கூடமும் இவனுக்கு ஞாபகம்.

முனியப்பர் கோவிலில் விழுதோடு பரவி நிற்கும் ஆலமரம் பணிக்கர் கோயிலடி வாகை மரங்கள், நாச்சிமார் கோயிலடி அரசமரம், இவை யாவும் இவனுக்கு காலகாலம் இளைப்பாற்றிக் கொடுத்த விருட்சங்கள்.

வீட்டின் மேற்குப்புற ஒழுங்கையும் வெள்ள வாய்க்கால் சந்தியும் இணையும் மூலையில் ஒரு பெரிய இலுப்பை மரம் நின்றதும் அந்த மரத்தின் கீழ் ஏதோ ஒரு குடும்பப் பகைமை காரணமாக கடைக்காரத் துரைச்சாமி உலக்கையால் பிடரியில் அடித்துக் கொல்லப்பட்டுக் கிடந்தமையும் இவனுக்கு மெல்லிய சலனமாக அடிக்கடி நினைவில் தென்படும்.

கேரளத்து மனிதர் ஒருவர் இவனது வளரிளம் பருவத்து பாடசாலை ஆசிரியாராக இருந்திருக்கிறார். பல கணித பாடநூல்களும் இரசாயன நூல்களும் எழுதிய அவ்வாசிரியர் இவனுக்கும் இவனது சகமாணவர்களுக்கும் விஞ்ஞானம் கற்பிக்க பாடசாலைக்கு அருகில் இருந்த வேப்பமரத்தின் கீழ்... “ஞான் இப்பொழுது கேள்வி கேட்கும். நீங்கள் சரியாக சொல்லாமல் விட்டால் ஞான் உங்களுக்கு அடிக்கும்” என்று கூறிக்கூறி விஞ்ஞான பாடத்தை ஊட்டியமை பற்றியும் இவன் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.

மரங்களின் தொடர்பு இவனுக்கு எப்போதும் இருந்திருக்கிறது. மரங்களைப் பார்க்கும்போது இவனுக்கு ஏற்படும் ஏதோ ஒருவகை பரவசம் தனக்கு மட்டும்தானா, அல்லது எல்லோருக்கும் இப்படித்தானா, என்று இவன் யோசிப்பான்.

விருட்சங்களின் பெயர்களே ஊர்களுக்கும், இடங்களுக்குமாக நுட்பமாக நிலைத்துவிட்டமை பற்றியெல்லாம் இவன் சிந்திப்பதுண்டு. அரசடி, புளியடி, நெல்லியடி, பூநாறிமரத்தடி இப்படிக் கணக்கற்ற அடையாளங்கள்.

பெயரே இல்லாத மரம் ஒன்றுக்கு ‘பெயரில்லா மரம்’ என்ற பெயர் வந்து பஸ்பிரயாணிகள் இறங்குகின்ற தரிப்பிடத்திற்கு ‘பெயரில்லா மரத்தடி’ என்கின்ற பிரபல்யமான ஒரு பெயராக நிலைத்துவிட்ட தன்மையும் இவனறிவான்.

சந்நிதி கோவில் சுற்றாடல் மரங்கள், வல்லிபுரக்கோயில் சூழலை செழுமைப்படுத்துகின்ற பெருவிருட்சங்கள் சுட்டிபுரத்து அம்மன் கோயில் மரங்கள்,


www.tamileelamarchive.com

கரிக்கோப்புச் சுடலையின் சவுக்குமரங்கள் யாவுமே இவனுக்கு அற்புதமானவை.

நண்பர்களின் உறவுபோல தனிமையின் சுகானுபவத் திளைப்பிற்கு மரங்களே இவனுக்கு தஞ்சமாகிய காலம் ஒன்று முன்பு இருந்தது.

வாழ்வின் சலிப்பு சிலவேளைகளில் தன்னையே அன்னியமாக்கி பிறரால் அன்னியமாக்கப்பட்டு சர்வமும் ஒடுங்கி தனிமைப்பட்டுப்போன காலங்களில் மரங்களின் நிழல்களே இவனுக்கு ஆதரவு தந்திருக்கின்றன.

பெரும் புயலொன்றில் மறவன்புலப்பிள்ளையார் கோவில் முன்றலில் நின்ற ஆலமரம் வேரோடு சரிந்தமை இவனுக்குள் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது.

அந்த ஆலமரத்தின் கீழ் புதுவருடப்பிறப்பன்று போர்த்தேங்காய் அடியில் எத்தனையோ காலிக்கையான்கள் சிதறுண்டமையும் இவனுக்கு ஞாபகத்திலிருக்கிறது.

பூமாஞ்சோலையிருந்துவரும் வெடிப்பொன்னப்பா தன் கைபடச் செய்த பீரங்கி வெடி ஒன்றைக் கொழுத்தி போர்த்தேங்காய் அடியை ஆரம்பித்து வைப்பதுவும், அதே வெடிப்பொன்னப்பா விபத்தொன்றில் தனது வெடிகளினாலேயே போர்த்தேங்காய்போல சிதறுண்டு போனமையும் இவனுக்கு நினைவிலுண்டு.

செல்லடி, ஆட்டிலறித்தாக்குதல், கெலித்தாக்குதல் போன்ற சம்பவங்கள் சாஸ்வதமாகியப்போய்விட்ட இன்றைய சூழலில் வெடிப்பொன்னப்பாவின் விபத்து மரணம் மிகமிகச் சாதாரணமாகிப் போய்விட்டாலும் அன்று அது மிக ஒரு ஆச்சரியமானதும் அதிசயமானதுமான ஒரு நிகழ்வேதான்.

வெடிப் பொன்னப்பாவின் வீட்டின் வாசலில் பெரியதொரு கொய்யாமரம் நின்றதுவும் வெடி விபத்தோடு அந்த மரம் செத்து போனமையும் பெரியதொரு துன்பியல் நிகழ்வாகவே இவனுக்குத் தெரிந்தது.

இவனும் செல்வம், நவம், ராசமூர்த்தி ஆகியோரும் அந்தக் கொய்யா மரத்தில் பல நாட்கள் பல மணித்தியாலங்கள் செலவிட்டமையையும் இவனால் மறக்க முடியாதிருந்தது.

இவனது பாலிய கால நண்பன் ஜெயக்கொடி மூன்று நாள் காய்ச்சலில் மரணித்துப்போனமைக்கு பொடுங்கர் வளவு விளாத்திமரத்தில் குடிகொண்டிருந்த ஊத்தைக்குடியன் பேயின் வேலைதான் காரணம் என்ற கசமுசப்பு. கேட்ட காலமொன்றும் இவனுக்கு சித்தித்திருந்தது.

காலா காலம் மரங்களோடு சம்பந்தப்பட்டதாகவே இவனது வாழ்வு கழிந்திருந்தது.

விசுவமடு காணிப்பட்டாளத்துக்குக் காப்பில் கடமையாற்றியபோதுதான் வீரை மரங்களும் பாலை மரங்களும் அறிமுகமாகின. நண்பனொருவனின் பிரிவாற்றமையைத் தாங்கிக்கொள்ள முடியாலேயே இவன் காணிப்பட்டாளத்தில் தன்னை இணைத்துக்கொண்டான்.

கல்லூரிப்படிப்பின் முற்றுப்பெறுகையின் வெறுமை, தொழில் தேடலில் காணிப்பட்டாளமே கைகொடுத்து, ஒட்டு சுட்டான், விசுவமடு என இருகாம்புகளில் பல நண்பர்கள் இணைந்துகொள்ள ஒரு மழை நேரத்து மதிய வேளையில் கூப்பன் அடிக்கட்டையுடன் பஸ்சேறி பரந்தன் சந்தியால் திரும்பி கண்டாவளை கடந்து கட்டிமுடிக்கப்படாத நெத்திலியாற்றுப் பாலத்தின்கீழாக பெருமரங்கள் சூழப்பெற்ற விசுவமடு காம்ப் வாசலில் இறங்கி.... பைஜாமா போட்ட ஓ.ஐ.சி. யின் முன் நின்றது இப்போதும் நினைவில் பசுமையாக உள்ளது.

ஒரு காலம் கல்லூரியின் சாரணர் படையில் சேர்ந்து காக்கி உடுப்புப் போட்டதன் பின்னர் காணிப்பட்டாளத்திலே தான் காக்கி அணியும் சந்தர்ப்பம் கிட்டியது. சிவப்பு நிற கன்வஸ் சப்பாத்து, இரண்டு கால் சட்டை, கோல்டல் வைத்த இரண்டு சேட், ஒரு பிரம்புக்கூடை, மண் அள்ளும் தாச்சி, மண்வெட்டி ஒன்று, சாப்பாட்டுத் தட்டு ஒன்று. தேனீர் குடிக்கும் கைபிடி அலுமினியக் குவளை ஒன்று என்பன கையொப்பமிட்டு இவனால் பொறுப்பேற்கப்பட்டன.

அதிகாலை எழுந்து தேனீருக்காக வரிசையில் காத்து நின்று புறப்படும் உழவு இயந்திரத்தில் தொற்றி ஏறி தொலைவில் கீப் கணக்கில் மண்வெட்டி கைகளில் கண்டல், கொப்புளங்கள் ஏற்பட்டு மாணிக்கப்பிள்ளையார் ஆற்றில் குளித்து சிவப்பு நிறப் பீற்றூட்டுடன் சோறும் பாணும் சாப்பிட்டு..... இந்த வாழ்க்கை ஒரு மூன்று மாதங்களே நீடித்தது.

இன்று கப்டன், மேஜர், லெப்டினன்ட கேணல் என்று பல மாவீரர்களைப் விதைத்தாகிவிட்டது. இவனோடு இருந்த காணிப்பட்டாளக்காரர்கள் சிலரும் இதில் அடங்கலாம்.

பாலை மரங்களின் கீழ்.... வீரை மரங்களின் கீழ் சிநேகித பாவத்துடன் இவனோடு.... உணவருந்திய... பட்டாளத்துப்பொடியள் பலரை போர்கோலத்தில் இவன் கண்டிருக்கிறான், தென்பகுதியிலும் '71' ன் ஆரம்ப காலத்தில் கிளர்ந்த ஒரு சம்பவத்தில் கணிசமாக இணைந்தவர்களும், இறந்தவர்களும் இவனைப் போல் காணிப்பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதையும் இவன் அறிவான்.

அப்போது வன்னியின் பெருவிருட்சங்கள் எதிர்காலத்தில் போர்கருவிகளாக மாறும் சாத்தியம் ஏற்படும் என்பதை இவன் கிஞ்சித்தும் யோசித்திருக்கவில்லை. பெரும் பெரும் விருட்சங்கள் நிழல் தந்த காலம் போய் இளையோர்களைத் தாங்கி நின்று போர் புரிந்தமை உண்மையில் அதிசயமான ஒன்றுதான்.

அமைதியும் சாந்தமும் சிநேகமும்... மனிதமும்... நிறைந்த மக்கள்... தமது குணாதிசயங்களிலிருந்து விடுபட்டுப்போக ஏதுவான நிர்ப்பந்தம் போலவே, விருட்சங்களுக்கும் நேர்ந்தமை தவிர்க்க முடியாத துன்பமாக இருந்தது.

யாழ்ப்பாணத்தின் பழைய பஸ் நிலைய சூழலும் பெருவிருட்சங்களும் இளைப்பாற்று மண்டபமும், சிவசக்தி கூல்பாரும். சருகுத்தாளில் சுற்றப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அப்பிள் பழங்களும், கொத்துக்கொத்தாகத் தொங்கும் முந்திரிப்பழங்களும், குருவிச் சாத்திரக்காரரும், வடைவிற்போரும், நாய்க்குட்டி விசரியும் இவனுக்கு ஞாபகம் வருவதுண்டு.

புதிய பஸ் நிலையம் இடம் பெயர்ந்த பின் கொழுத்தும் வெயிலும், தகரக்கொட்டகையும், அக்காலத்திலேயே பழைய பஸ் நிலையத்தின் நிறைவை அடிக்கடி நினைக்கத் தூண்டுவதுண்டு.

இப்படியேதான் பருத்தித்துறை பஸ் நிலையமும் சந்தையும், புளியமரங்களின் நிழலும், சடுதியென ஏக்கத்துடன் மாறிப்போனமை கவலை தருவதாய் நிகழ்ந்தது.
காணிப்பாட்டாளக்காலம்போய் சிவப்பு அரசியல் சிந்தனைக்காட்டப்படுவதற்கு சிலகாலம் முன்னர் விரும்பியோ விரும்பாமலே நண்பர் சிலருடன் போதைவஸ்துவைப் பரிசோதிக்க விளைந்து துன்னாலை மண்பிட்டி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அரசமரம், புத்தரின் ஞான தீட்சையை நினைவு கூரத்தக்க அனுபவத்தை ஏற்படுத்தியமையும் இவனால் மறக்கமுடியவில்லை.

வாழ்வனுபவ விரக்தியின் எல்லைதொட்டு தற்கொலை செய்யும் மனோபாவத்தை நிராகரித்து ஒரு துறவு வாழ்வுச் சூழலில் கழிந்த காலங்களில் ஆனைவிழுந்தான் சுடலையின் சவுக்கு மரங்களும் கிளைப்பனைகளும், மணற்குன்றுகளும், உறவுகளாகியமையும் இவனுக்கு நினைவிலுண்டு.

பனிகொட்டும் இரவில் போர்வையற்று வெற்றுடம்புடன் மரங்களின் கீழ் மெய்மறந்து இவன் தூங்கியிருக்கிறான். அந்த நாட்கள் என்றும் இனிமையானவை. இன்றுபோல் அல்லாது அன்று எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம் மட்டுமே மனதை நிறைத்திருந்த தருணங்கள் அவை.

"கந்தையற்றை பொடியனுக்கு மூளை மாறாட்டம்"

ஊரில் இப்படி ஒரு கிசுகிசுப்பு அப்போது இருந்தது. அதையும் மீறி அவனது தீவிர சிந்தனைத் தெளிவு பின்னர் அவனுக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட ஏதுவாகியது.

போர்க்குணாம்சம், எதையும் தீவிரத்துடன் சீர்தூக்கிப் பார்த்தல், தவறு கண்டு கொதிக்கும் போக்கு, இவை இவனுக்கு எதிரிகளைவிட தோழர்களையே கூடுதலாக்கியது.

கஸ்தூரியார் வீதியில் ஒரு வானொலிப்பெட்டித் திருத்தகத்தில், இருபாலையில் ஒரு மில்லில், மட்டக்களப்பில் ஒரு தனியார் நிறுவனத்தில், மன்னாரில் ஒரு மீன்வாடியில் கொழும்பில் ஒரு ஏற்றுமதி நிறுவனத்தில் மூன்று மாதம், நான்கு மாதம் என நிலைத்திருக்காமைக்கு இவனது நேர்மையும் விட்டுக்கொடுக்காத்தன்மையும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

மன்னார் பழைய பாலத்தில் ஒரு மீன் வாடியில் இருந்தபோது வள்ளங்களில் ஏறிப்பயிற்சி பெறச் சென்றவர்களை இவனே வழியனுப்பி வைத்திருக்கிறான். ஒரு விருட்சத்தின் கிளைகளை இவையென இவன் எண்ணிய எண்ணம் பின்னர் பொய்த்துப்போயிற்று.

அம்மாவும், அப்பரும் இறந்துபட்ட பின்னர் ஏதோ ஒரு விபத்துப்போல திருமலை வந்து திருமணமாகி அமைதிப்படை, அதிரடிப்படையாகி, பின்னர் அக்பர் கப்பலில் அவர்கள் இந்திய திரும்பிய பின்னர், திருமலையில் நிகழ்ந்த குழப்பத்தில் கால் நடையாக மனைவியுடன் நடந்து பெருவிருட்சங்களின் கீழ் சமைத்துச் சாப்பிட்டு உறங்கி, வள்ளத்தில் ஏறி செம்மலையில் இறங்கி கிட்டத் தட்ட முப்பது இரவுகளையும் பகலையும் மரங்களின் கீழேயே கழித்திருக்கிறான்.

இன்று இவனுக்கு ஒரு மகனும், மகளும். மகன் பிறந்தகாலத்தில் திருமலையில் இருந்து வன்னிப் பாதையூடாக யாழ் சென்று கிளாலியூடாக திரும்ப தாமதப்பட்டு வேலையிழந்த நாட்களில் வல்லிபுரக் கோவில் விருட்சங்களே இவனுக்கு ஆறுதலாயிற்று. ஆகாயத் தாக்குதல்கள் வலுப்பெற்றிருந்த அந்த நாட்களில் வைரவர் கோவில் வேப்பமரத்தின் கீழ் உள்ள பதுங்குகுழியுள் இவனது மனைவியும், மகனும் இவனுமாக பல தடவைகள் வியர்த்து விறுவிறுத்தமையும் இவனுக்கு நினைவிலில்லாமலில்லை.

"இனிக்காணும் எப்பிடியாவது ஊருக்குப் போகவேணும்"

மனைவியின் பிடிவாதம் வென்று திருமலை திரும்பிய அந்த நாட்களும், வேலையற்று வீதியில் திரிந்த அந்த நிலமையும் இன்று மீள வேலை பெற்று இயந்திரமாகிவிட்ட நிலையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட தொடர்நிகழ்ச்சியாக இவனுக்குள் இன்னும் இருக்கிறது. திருக்கோணமலை 3ஆம் கட்டை திருச்சிலுவை வயோதிபர் மடமும் அதன் மருங்கில் நிற்கும் அரச மரங்களும் பழைய எழுத்தாளர் ஒருவர் அங்கு அகதியாக மரித்ததுவும் பெருஞ்சோகமாக அவனுள் இன்னமும் கலந்து கிடக்கிறது. பின்னர் அடித்த புயலொன்றில் சர்வோதய நிலைய வெளிவாயிலுக்கு அருகாமையில் நின்ற ஆல விருட்சம் வேரோடும், வேரடி மண்ணோடும் சரிந்து விழுந்தமையும் இவனால் மறக்கமுடியாதவை. யாழ்ப்பாணத்துக்காக பயணிக்கும் பலர் இவனிடம் இளைப்பாற்றி பெற்று பயணப்பட்ட காலம் போய் இன்று அரைநாள் பயணத்தில் யாழ்செல்லும் காலம் கனிந்திருக்கிறது. சகபயணிகளை ஒற்றராகக் கருதிப் பயணப்படும்போது பயமுறுத்தி நின்ற விருட்சங்கள் இன்று இலையடைச்சு வரவேற்பதுவும் விடை கொடுத்தனுப்புவதுமான நல்நிலையும் சித்தித்திருக்கும் சூழ்நிலை ஏதோ ஒருவகை உடன்பாடும் இசைவும்கொண்டு பேசி உறவுகொண்ட நண்பர்கள் இரத்த உருத்துக்கள் வித்தாகிப்போய் விதைக்கப்பட்ட சூழ்நிலையில் இன்னதுதான் என எதிர்பார்க்காத ஒரு பேரமைதி.... இது நிலைக்குமா.... நிலைக்கவேண்டும்.....

இவனது திருக்கோணமலை வீட்டின் பின்புறமான வேலியின் நடுவே பெரியதொரு மாமரம் நின்றது இவனுக்குத் தெரியும்....

மூன்றுவருட அகதி வாழ்க்கை முடிந்து திரும்பியபோது நிழலும்... காயும் கனியும்... எல்லையுமாக நின்ற அந்த மரம் இருந்த இடமே தெரியாது அயலகத்தவரால் வேரோடு பிடுங்கப்பட்டு.... எல்லையும்.... காணியும்... அபகரிக்கப்பட்டிருந்தது.....

வீட்டின் முன்பக்கமாக நின்ற கத்தாப்பு மரம் மட்டும்... தனித்து விடப்பட்டது. சிதைந்தழிந்து விட்ட வீடும்... வளவும் அடையாளம் காணப்பட.... கத்தாப்பு ஒன்றே.... காரணமாயிற்று....

போர்க்காலத்திற்கு முன்னர்.... ஊரின் பெருவிருட்சங்கள் பல சிறு கோயில்களாக சூலங்களுடன்... நின்ற நிலமை மாறி... ஆக்கிரமிப்பின்.... இன அடையாளங்களாக அரசமரங்களும் அதன் கீழ்... புத்தர் சிலைகளும்.... உருவாகி விட்டமையை இவன் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு......

விருட்சங்களே..... இன அடையாளங்களா.....?

இவனது காரியாலய களஞ்சியத்தின் முன்பாக பெரும் அரசமரம் ஒன்றும்.... சிவப்புக் காவிக்கோடு போட்ட சிறு பிள்ளையார் கோவிலொன்றும்.... வெய்யிற் காலத்தின் மதியவேளைகளில் அவை இரண்டுமே ஊழியர்களுக்கு ஆறுதல் தருவதும் இவனுக்குத் தெரியும்.....

ஏதோ ஒரு எதேச்சையான துரித நடவடிக்கை மூலம்.....காரியாலய ஊழியர்களே..... அப்பிள்ளையார் கோவிலை உருவாக்கியதாக இவன் பின்னர் அறிந்து கொண்டான்.

சுற்றிலும் உள்ள பௌத்தர்கள் கூட பிள்ளையார் கும்பிட்டுப் போவதை இவன் அவதானித்துள்ளான்.

அரசரமரம்... காப்பாற்றப்பட்ட ஆச்சரியம்... எப்போதுமே.... இவனுக்குள் இருந்துள்ளது.

அந்த விருட்சத்தின்... கிளைகளில் வெசாக் கூடுகள்... வருடத்தில் ஒருமுறை... தொங்குவதும்... பின்னர் அகல்வதும்... பிள்ளையாரை எவ்விதத்திலும்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாதிக்கவில்லை. அவரது இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதுமில்லை.....

திருக்கோணமலையின்.... வெம்மைக்கு ஆறுதலாக இவ்வகை விருட்சங்களே இருந்துள்ளன.

நண்பர்களோ சந்தோசமாக உரையாடுவதற்கு.... இம்மரங்களும் ஒரு காரணமாக இருக்கலாம்.....

தோப்பாக விரிய வேண்டிய உணர்வுகள்... சுருங்கி தனிமைப்பட்டுப் போய் நத்தையாக ஊரும்.... உணர்வுகள்... ஆயினும்... அவற்றையெல்லாம் மீறி எங்கெங்கோ தனிமைப்பட்டுப் போனாலும்... நோக்கத்தில் ஒன்றுபட்டுப்போன... எண்ணங்களுடைய இளைய தலைமுறை வேரும்... விருட்சமாக.

காரியாலய முன் வாயில் அரசமர இலைகள் மென்காற்றில்... சலசலத்து ஓய்கின்றன.....

புகை போக்கிகளுடன் கம்பீரமாக சூழலை மாசுபடுத்தி நிற்கும் தனியார் நிறுவனம் சூழலைப் பாதுகாப்பதற்கு மரங்களை நாட்டுங்கள்... என விழித்து எழுதிய ஸ்ரிக்கர்... இவனது காரியாலய மேசைக்கு எதிர்ப்புறக் கண்ணாடியில்.....

இவனுக்குள் மெல்லிய புன்னகையும்... எரிச்சலும்......

சமீப நாட்களாக காரியாலயம் கைமாறப்போவதாகவும், இடம்மாற்றம் வரப்போவதாகவும், எழும் சர்ச்சைகள்.....

காரியாலத்தைப் பொறுப்பேற்பவர்கள்.... பிள்ளையாரையும், அரசமரத்தையும்... இவர்கள்போல் பேணுவார்களா....?

விடைகாண ஏங்கும் பல வித கேள்விகள்....?

இடம்மாறிப்போகும் காரியாலயத்தைச் சுற்றி பெருவிருட்சங்கள் நிற்குமா....?

இதேபோல் அரசரமரம்... ஒன்று... நிற்பதற்கு பாத்தியதை இல்லை....வேப்பமரங்கள்... நிற்கலாம்....? நிற்காதும் போகலாம்....

ஆயினும்... என்ன....? விருட்சங்கள்...எங்குமே உள்ளன... அவற்றின் கீழ் இளைப்பாற யார் தடுப்பார்.....?

இவனின் அம்மாவும்.... அப்புவும்... அடக்கம் பண்ணப்பட்ட சவக்காலை... பழங்கோவிலடி என்னும்... வேப்பமரங்கள் சூழப்பட்ட ஒரு ஒதுக்குப்புறக் கிராமத்தைச் சேர்ந்தது.

இவனது அண்ணன் மின்சாரம் தாக்கி மரணப்பட்டபோது அடக்கம் பண்ணப்பட்டது. பழங்கோவிலடியிலதான்.

ஒப்பிரேசன் லிபரேசன் காலத்தில் எத்தனையோ வீட்டின் பின்புறங்களும், வீதிகளும் மயானங்களாகின......

பூவரச மர விறகுகள் தேவைப்படாது... பழைய ரயர்களில் எரிந்தவர்கள்... எத்தனையோபேர்....

இப்போது இவனுள் ஒரு பெருவிருப்பு.....

அம்மாவின், அப்புவின் ... அண்ணாவின் பக்கத்தில்... தானும் புதைக்கப்படவேண்டும்....

பெருவிருட்சங்கள் சூழப்பெற்ற பழங்கோவிலடிச் சவக்காலையில் அடக்கம் பெறவேண்டும்.....

இவனுள்....எப்போதும் போல... சலனமற்ற சிந்தனைகள்....

மகன் இயக்கத்துக்குப்போய்விட்டதாக எழுதும் தங்கையின் கடிதம்.

மகன் வெள்ளைக்காரியைக் கல்யாணம் முடித்து விட்டமைக்காக கவலைப்படும் நண்பனொருவனின் தொலைபேசி... முனகல்.... ஊர்திரும்பும் ஆசையில் ஏக்கப்படும் வெளிநாட்டு வாசியாகிவிட்ட ஆசிரியர் ஒருவரின் புலம்பல்.

விரும்பாமலேயே வலிந்து விமானமேற்றி அனுப்பப்படும் அகதிப் புலம்பெயர் குடும்பங்கள்....

நண்பர்களாய்... தோழர்களாய்... அன்போடு பழகியவர்களின் இழப்புகளும்... பிரிவுகளும்....

நண்பர்.... சிவராசா, நண்பர் சிவஞானம்......

ஆயினும் வாழ்வு, நம்பிக்கை வேரூன்றி கிளைத்து விருட்சமாகவே நிற்கிறது.

காலம் மாறிப் பெய்யப்போகும் மழை நேரத்து அறிகுறி....

துளிர்விட்டிருக்கும் அரசமரத்தின் இலை, அசைவு.

சென்ற வருடத்திற்கு முந்தைய வருடம் வீசிய புயலில் வேரோடும் வேரடி மண்ணோடும் புரட்டப்பட்ட விருட்சங்கள்போல்... இவ்வருடமும் புயல் வீசுமா... மரம்....சரியுமா.....?

நிகழலாம்... நிகழாதும் விடலாம்....

இவன் மனம் இலேசியாகியது... யாழ்ப்பாணம்... புலம்பெயர்ந்து வன்னிக்கு வந்தபோது... மனிதர்களுக்கு ஆறுதல் தந்தவை விருட்சங்கள் மட்டுமே.....

மழை வெய்யில்.... பின்... குளிர் மனிதர்களுக்கு... ஆறுதல் இறைப்பாற்றி...
எல்லாமே.....விருட்சங்கள், விருட்சங்கள் மட்டுமே நெஞ்சுக்குள்..... இனம் தெரியாத சுகம்.....

பழங்கோவிலடியின் வேப்பமரங்கள்... முனியப்பர் கோவில்... ஆலமரம்.... ஆனைவிழுந்தான்.... கிளைப்பனைகள்... வீட்டின் மேற்குப்புற இலுப்பைமரம்... வேதக் கோவில் நாவல் மரங்கள்... பணிக்கர் கோவிலடி வாகை மரங்கள், பூதாத்தை வெட்டையின் புளியமரம்....

விருட்சம் என்னவோ இங்குதான்.... வேர்கள் மட்டும்.......



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக்காப்பகம்



### தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள்

10 ஒக்ரோபர் 2005

இந்திய - புலிகள் யுத்தத்தின் போது களப்பலியான விடுதலைப்புலிகளின் பெண்கள் படையணியின் முதல் மாவீரர் 2ம் லெப். மாலதியின் 18ம் ஆண்டு நினைவு நிகழ்வும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வும் மன்னார் ஆண்டான் குளத்தில் 10.10.2005 அன்று எழுச்சி பூர்வமாக நடைபெற்றது.



### தமிழீழத் தேசிய மாநாடு திருகோணமலை

22 ஒக்ரோபர் 2005

தமிழ் மக்களின் ஒருமித்த எழுச்சியக 22.10.2005 அன்று தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு. திருகோணமலையில் பல்லாயிரக்கணக்கான மக்களின் எழுச்சியுடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் மதத்தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

### தமிழீழத் தேசிய துணைப்படையின் 4வது அணியின் பயிற்சி நிறைவு

24 ஒக்ரோபர் 2005

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி லெப்டினன்ட் கேணல் கங்கை அமரன் துணைப்படை பயிற்சிக் கல்லூரியில் இருந்து தமிழீழத் தேசியத் துணைப்படையின் நான்காவது படையணி தனது பயிற்சியை நிறைவு செய்து 24.10.2005 அன்று வெளியேறியது.



### கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது 'எழுக தமிழில்' பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்று உரிமை முழக்கம்

24 ஒக்ரோபர் 2005

ஐரோப்பிய ஒன்றியத்தின் விடுதலைப் புலிகளை தமது நாடுகளில் வரவேற்பதில்லை என்ற முடிவை மீளப்பெறவேண்டும் என வலியுறுத்தி புலம்பெயர் வாழ் மக்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது பெல்ஜியத்தின் பிரசெல்ஸ் நகரிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் முன்பாக 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணியை நடாத்தியுள்ளனர். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து இரு நூற்றிற்கும் அதிகமான பேருந்துகளில் வந்து பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்ஸில் ஐரோப்பிய ஒன்றிய தலைமைச் செயலகத்தின் முன்றலில் ஒன்று திரண்ட புலம்பெயர் தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாக தமது கோரிக்கைகளை முன்வைத்து குரல் எழுப்பினர். கடும்மழை பெய்து கொண்டிருந்த நிலையிலும் மக்கள் இந்த எழுச்சியில் கலந்து கொண்டிருந்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் தம் தாயக விடுதலைக்கான கோரிக்கையை முன்வைத்து இந்த எழுச்சியில் பங்காற்றினர். ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் முன்றலில் இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழக விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் பொதுச் செயலர் திரு. தொல். திருமாவளவன் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செ.கஜேந்திரன் ஏற்றி வைத்தார்.



### வவுனியா தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு

27 ஒக்ரோபர் 2005

வவுனியாவில் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு வவுனியா நகரசபை விளையாட்டரங்கில் 27.10.2005 அன்று பேரெழுச்சியுடன் நடைபெற்றுள்ளது. 27.10.2005 அன்று மாலை 3.00 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு 'வவுனியா பிரகடனத்திற்கு' வலுச் சேர்த்துள்ளனர். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கரங்களைப் பலப்படுத்தி சர்வதேச சமூகத்திற்கு வவுனியா மக்கள் முழுமையாக அணிதிரண்டு பிரகடனப்படுத்தினார்கள்.


www.tamileelamarchive.com



### புத்தூரில் பெண்ணொருவர் மீது படையினர் பாலியல் வன்புணர்வு முயற்சி: படையினரின் செயலைக் கண்டித்து மக்கள் போராட்டம்

28 ஒக்ரோபர் 2005

28.10.2005 அன்று அதிகாலை புத்தூரில் வீடொன்றிற்குள் புகுந்த ஸ்ரீலங்காப் படையினர் அங்கிருந்த பெண் ஒருவர் மீது பாலியல் வன்புணர்வு முயற்சியில் ஈடுபட்டதைக் கண்டித்து அப்பகுதி மக்கள் படையினருக்கு எதிராக பாரிய எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

### இராணுவப் புலனாய்வுத்துறை தலைமை அதிகாரி சுட்டுக்கொலை

29 ஒக்ரோபர் 2005

ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையின் தலைமை அதிகாரி கேணல் ரிஸ்வி மீடின் 29.10.2005 அன்றிரவு கிரிபத்தொட பகுதியில் உள்ள அவரது வீட்டிற்கு அருகில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிறீலங்கா இராணுவ புலனாய்வுத்துறையின் தலைமை அதிகாரிகளில் ஒருவராக விளங்கிய இவர், முன்பு கொழும்பின் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### யாழ்.கந்தர்மடத்தில் கைக்குண்டு வீச்சு: காவல்துறையினன் பலி

31 ஒக்ரோபர் 2005

யாழ்ப்பாணம் கந்தர்மடப்பகுதியில் 31.10.2005 அன்று இரவு ஏழு மணியளவில் பலாலி வீதிக்கு அண்மையில் வந்து கொண்டிருந்த ஸ்ரீலங்கா காவல்துறையின் ஜீப் வண்டி ஒன்றின் மீது கைக் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலினால் ஊர்தியை ஓட்டிவந்த வந்த காவல்துறையினன் கொல்லப்பட்டதுடன் மேலும் மூன்று காவல்துறையினர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப் பாணம் யாழ். அரசினர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டுள்ளனர்.





### ஒட்டுசுட்டானில் ஓயாத அலைகள் 03 வெற்றி விழா

02 நவம்பர் 2005

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலை கள்-03 பாரிய படைநடவடிக்கையின் 06ம் ஆண்டு வெற்றி விழா 02.11.2005 அன்று ஒட்டிசுட்டானில் சிறப்புற நடைபெற்றுள்ளது. இந் நிகழ்வில் கட்டளைத் தளபதிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

### சமாதான காலத்தில் ரணிலின் சதிகள் - மிலிந்த மொறகொட ஒப்புதல்

08 நவம்பர் 2005

அமைதிப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் விடுலைப்புலிகளுக்கிடையில் பிளவுளை உருவாக்கியது. புலிகளின் வர்த்தகக் கப்பல்களை இடைமறித்து தாக்கியளித்தது நாம் தான் என்றும் சர்வதேச நாடுகளின் புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் இதை நாம் செயற்படுத்தினோம் எனவும் கொழும்பு டெய்லி மிரருக்கு அளித்த நேர்காணலில் ஒப்புதல் அளித்துள்ளார். அமைதிப்பேச்சுவார்த்தையில் அரச பிரதிநிதியாக இவர் பங்கேற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழீழ கடற்படை துணைப்படை 3வது அணி பயிற்சி நிறைவு

09 நவம்பர் 2005

லெப்- கேணல் நாவரசன் தமிழீழத் துணைப்படைப் பயிற்சி நிறைவு நிகழ்வு 09.11.2005 அன்று நடைபெற்றது. 120 பேர் கொண்ட அணி தனது பயிற்சிகளை நிறைவு செய்தது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான வினாயகம் சிறப்புரை ஆற்றினார். அவர் தனது உரையில் இனி நாம் நடத்தப் போகும் யுத்தம் மாதக்கணக்கிலோ, வருடக்கணக்கிலே இருக்கக்கூடாது எனவும் எதை யும் எதிர்கொள்ள கடற்படை தயாராக உள்ளது எனவும் தெரிவித்தார்.



### தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

10 நவம்பர் 2005

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் 10.11.2005 அன்று அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களை கிளிநொச்சியில் சந்தித்து உரையாடினர். சுமார் 3 மணிநேரம் நடைபெற்ற சந்திப்பின் பின் ஊடகவியலாளருக்கு பதிலளித்த இரா.சம்பந்தன் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்த லில் தமிழ் மக்கள் அக்கறைகாட்டத் தேவையில்லை எனத் தெரிவித் தார். தொடர்ந்து பத்மின் சிதம்பரநாதன் கருத்துக் கூறுகையில். சிங்கள தேசத்திற்கான தேர்தலில் தமிழ் மக்கள் குழம்பிக் கொள்ளத் தேவை யில்லை எனவும் தெரிவித்தார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## ஏழாலை இராணுவ காவலரணுக்கு அண்மையில் எலும்புக்கூடுகள்

10 நவம்பர் 2005

யாழ்ப்பாணம் ஏழாலை மத்திய மகாவித்தியாலயத்திற்கு அண்மையாக உள்ள இராணுவக் காவலரண் அமைந்திருந்த காணிக்குள் இருந்து இரண்டு எலும்புக் கூடுகள் காணி உரிமையாளரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்கள் படையினின் ஆக்கிரமிப்பிலிருந்த காணியிலிருந்தே இந்த மனித எழுப்புக்கூடுகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

## அரசு தலைவர் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்களின் நிலைப்பாட்டின்படியே விடுதலைப் புலிகள் செயற்படுவார்கள் - தமிழ்ச்செல்வன்

11 நவம்பர் 2005

ஸ்ரீலங்காவின் அரசு தலைவர் தேர்தல் தொடர்பில் மக்களின் அபிலாசைகள், உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் தீர்மானத்துக்கு பக்கபலமாக இருப்பதாகத் தீர்மானித்திருக்கின்றோம் என தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.



## சிறப்புற யாழில் நடைபெற்ற தமிழ் மாணவர்களின் எழுச்சி மாநாடு

11 நவம்பர் 2005

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக மாணவர்களின் பிரச்சனைகளை ஆராய்வதற்கான எழுச்சி மாநாடு 11.11.2005 அன்று காலை 10.15 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மிகவும் எழுச்சிகரமாக தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் சி. குணேந்திரன் தலைமையில் நடைபெற்றுள்ளது. மாநாட்டின் தொடக்கத்தில் தமிழீழ தேசியக் கொடியினை யாழப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் சிவகுருநாதன் ரங்கேஸ்வரன் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரினை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணை வேந்தர் சு. மோகனதாஸ் மானிப்பாய் உயரப்புலம் வித்தயாலய அதிபர் திருமதி சண்முகரெத்தினம் யாழ்ப்பாணம் கல்வியற் கல்லூாரி துணை பீடாதிபதி க.தனபாலன வேம்படிமகளிர் கல்லூரி மாணவி ஆகியோர் ஏற்றி வைத்தார்கள். வாழ்த்துரைகளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணை வேந்தர் சு.மோகனதாஸ் வணிகபீடத் தலைவர் க.தேவராசா ஆகியோர் வழங்கினார்கள்.

## திருநெல்வேலியில் துப்பாக்கிச் சூடு: காவல்துறையினன் பலி

11 நவம்பர் 2005

யாழ். திருநெல்வேலிச் சந்தியில் 11.11.2005 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்களினால் ஸ்ரீலங்கா காவல் துறையினன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூடு பட்டு படுகாயமடைந்த நிலையில் காவல்துறையினன் உடனடியாக யாழ். மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார். ஆனால் சிகிச்சை பயனளிக்காமல் அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.



## சிறப்புடன் நடைபெற்ற பூநகரிச் சமரின் 13ம் ஆண்டு வெற்றி விழா

12 நவம்பர் 2005

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றினார், தமிழீழ தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி செந்தாளன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து கரும்புலி மேஜர் கணேஸின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையை மன்னார் மாவட்ட சமாசங்களின் பொறுப்பாளர் அச்சுதன் அணிவிக்க ஈகைச்சுடரினை கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூரணி, மற்றும் மேஜர் கணேசின் தாயார் ஆகியோர் ஏற்றி வைத்தனர். மேஜர் கோபியின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையை மன்னார் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தமிழன் அணிவிக்க, ஈகைச்சுடரினை போராளி சிவநாத், பூநகரி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். நினைவு தூபிக்கான மலர் மாலையை நாசிக்குடா காவல் துறைப் பொறுப்பாளர் குகநாதன் அணிவித்தார். முழங்காவில் இந்து ஆலயங்களின் ஒன்றிய தலைவர் இ.குவேந்திரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது நினைவுரைகளை பூநகரி பிரதேச செயலர் திரு சிறிஸ்கந்தராசா, பூநகரி சமாச தலைவர் திரு பிரான்சிஸ், பூநகரி, முழங்காவில் பிரதேச காவல்த்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் என பலர் வழங்கினர். சிறப்புரையினை கடற்புலிகளின் தளபதிகளின் ஒருவரான திரு.விநாயகம் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் போராளிகள் மக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com